
தாண்டவம்
கோட்டயம் புஷ்பநாத்
தமிழில்: சிவன்

# 1

ஹரிகிருஷ்ணன் நிலவிளக்கின் திரியைச் சற்றுத் தூண்டி விட்டான். விளக்கொளி மேலும் பிரகாசம் அடைந்தது. ''என்ன ஹரி... அதையெல்லாம் படிச்சு முடிச்சிட்டியா? இந்தா... இதையும் படி!'' - மிகவும் பழைமையான ஓலைச்சுவடி ஒன்றை அச்சுதன் நம்பூதிரி, மருமகனின் கையில் கொடுத்தார்.

கிருஷ்ண மங்கலத்துத் தறவாட்டின் (பரம்பரையின்) இப்போதைய காரணவர் (குடும்பத் தலைவர்)தான் அச்சுதன் நம்பூதிரி. வயது எழுபதைக் கடந்தும் இன்னும் கட்டுவிடாத ஆரோக்கியமான - திடகாத்திர உடம்பு.

ஒரு காலத்தில் எல்லா வகையிலும் மிகவும் மேம்பட்ட குடும்பமாக இருந்தது அது. ஆனால், காலத்தின் சோதனை, அந்தக் குடும்பத்தையும் பாதிக்கவே செய்தது.

இப்போது குறிப்பிட்டுச் சொல்லுமளவு அந்தக் குடும்பத்துக்குச் சொத்துகள் எதுவுமில்லை. ஏறத்தாழக் குடும்பம் சாப்பிடுவதற்கான நெல்லும், சொந்த உபயோகத்துக்கான தேங்காயும் கிடைக்கிறது. இதை விட்டால் குறிப்பிட்டுக் கூறும்படியான வருமானம் எதுவும் அந்தக் குடும்பத்துக்கு இல்லை!

சமீப காலமாக அந்த நிலைமையிலும் ஒரு சிக்கல். விவசாயம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. அந்தக் குடும்பத்தின்தற்போதைய உறுப்பினர்கள் மொத்தம் மூன்று பேர்தான். காரணவர் அச்சுதன் நம்பூதிரி, அவர் தங்கை பார்வதி அந்தர்ஜனம் (வீட்டை விட்டு வெளியேறாத, நம்பூதிரி குலத்துப் பெண்களை அந்தர்ஜனம் என்று குறிப்பிடுவது மலையாள மரபு), பார்வதியின் மகன் ஹரி கிருஷ்ணன்.

ஹரிகிருஷ்ணனின் அப்பா கேரளத்தின் வடபகுதி யான மலபாரைச் சேர்ந்த ஒரு நம்பூதிரி. அவர் 'தேவ பிரஸ்னத்தில்' மிகவும் புகழ்பெற்ற ஜோதிடரும் கூட.

ஒரு தடவை அந்த கிராமத்துக் கோயிலில் தேவ பிரஸ்னம் (சோழி போட்டுக் கணக்கிடும் ஒரு வகை சோதிடம்) பார்க்க வந்தபோது, கிருஷ்ண மங்கலத்து மனையில்தான் தங்கினார்.

அப்போது பார்வதி அந்தர்ஜனத்துக்குப் பதினேழு வயது.

அது வரை திருமணம் செய்யாதிருந்த தேவதத்தன் நம்பூதிரி, பார்வதிக்குப் புடவை கொடுத்தார் (திருமணம் செய்து கொண்டார்).

இந்தத் தம்பதிக்குப் பிறந்த ஒரே மகன் ஹரி கிருஷ்ணன். அவனுக்கு ஐந்து வயதானபோது தேவதத்தன் காசிக்குப் போனார். புறப்படும்போது, 'திரும்பி வர மாட்டேன்!' என்று சொல்லியிருந்தார். இதுவரை வரவு மில்லை.

ஆனால், தேவதத்தன் ஊரை விட்டுப் புறப்படுவதற்கு முன்பாக, அவர் சேமித்து வைத்திருந்த ஏராளமான ஓலைச் சுவடிகளை உரிய பருவத்தில் மகனிடம் ஒப்படைக்குமாறு கூறி மனைவியிடம் கொடுத்திருந்தார். ஹரிக்கு

இருபத்தைந்து வயதாகும்போது அவற்றை அவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது, அவர் விதித்த நிபந்தனை.

அந்த ஹரிகிருஷ்ணனுக்கு இப்போது வயது இருபத்தைந்து. அவனுடைய அந்தப் பிறந்த நாள் பரிசாக, அப்பா கொடுத்திருந்த ஓலைச் சுவடிகளை மகனிடம் கொடுத்தாள் பார்வதி.

இயல்பாகவே புத்தக வாசிப்பில் அதிக ஆர்வமுள்ளவனும், புராதனப் புத்தகங்கள் என்றால் உயிரை விடக் கூடியவனுமான ஹரி, அந்த ஓலைச்சுவடிகளை மிகுந்த ஆர்வத்துடன் கவனமாக வாசிக்கத் தொடங்கினான்.

அந்தக் காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்ததும், புராதனமானதுமான கோயில்கள் மற்றும் காவுகள் (காடுகளிலுள்ள பாம்புக் கோயில்கள்) குறித்தும், அவை தொடர்பான ஐதீகங்களையும் அந்தச் சுவடிகள் விளக்கின.

ஹரிகிருஷ்ணன் ஆரோக்கியமான - திடமான உடல் வாய்ந்த இளைஞன். நல்ல உயரம். தேவ களையுள்ள முகம். பத்தாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்திய ஹரி, சிறுவயதில், தான் பாதியில் விட்ட சம்ஸ்கிருத வேதங்களைப் படிப்பதற்காக தேர்ந்த குரு ஒருவரிடம் சீடனானான். மேற்கொண்டு கல்லூரிப் படிப்பு என்றெல்லாம் அவன் மனம் ஆசைப்படத்தான் செய்தது. இருப்பினும் ஏனோ ஆர்வம் இதில் அதிகமாகத் திரும்பியது. நடுவே பெண் வீட்டார் சிலர் திருமண விஷயமாகவும் அவனை அணுகினர். ஆனால், ஹரி அதையெல்லாம் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை!

கடந்த ஒரு வார காலமாக ஹரி, அப்பா தந்துவிட்டுப் போன ஓலைச்சுவடிகளைப் படிப்பதிலும், அதிலிருந்து குறிப்புகள் எடுப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தான்.

புராதனமான இந்தத் தகவல்கள் மொத்தத்தையும் தொகுத்து ஒரு புத்தமாக வெளியிட வேண்டுமென்பது அவனது லட்சியம்!

கோயில்களும், கோயில் சார்ந்த கலைகளும், அவற்றின் ஐதீகங்களும் என்பது புத்தகத்தின் உள்ளடக்கம். அதையும் பிரமாண்டமான புத்தகமாக உருவாக்க வேண்டும் என்பது அவனது திட்டம்.

குறிப்பு எடுக்கும் வேலை ஏறத்தாழ முக்கால் பகுதி முடிந்து விட்டது. அந்த நேரத்தில்தான், இது வரை அவன் வாசித்த எல்லா ஓலைச்சுவடிகளை விடவும் மிகப் பழைமை வாய்ந்த சுவடி ஒன்றை மாமா, அவனிடம் கொடுத்தார்.

காலம் அந்த ஓலைச்சுவடியின் விளிம்புகளை அரித்து, இற்றுப் போகச் செய்திருந்தது. மிகுந்த பவ்வியத்துடன் அதைப் பெற்றுக் கொண்ட ஹரி, எச்சரிக்கையுடன் அதில் பார்வையை ஓட்டினான்.

அன்று அமாவாசை முடிந்த மூன்றாவது நாள் இரவு. சுற்றுப்புறம் மொத்தமும் இருட்டில் குளித்திருந்தது.

நிலவிளக்கிலிருந்து புறப்பட்ட ஒளி, அதிகத் தொலைவு செல்லாமல் வீட்டின் மரச் சுவர் மற்றும் முற்றப் பகுதிகளில் ஒட்டியிருந்தது. படிப்புரை எனப்படும் தெரு வாசல் பகுதியில் வெளிச்சம் உள்ளதா... இல்லையா என்று தெரியாத தெளிவற்ற நிலை. யாராவது அங்கு வந்து நின்றால் கூட, அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அரண்ட வெளிச்சம்.

துளசிமாடத்தின் நிழலும் தெருவாசற்புறத்தை மறைத்துக் கொண்டிருந்தது.

கடிகாரத்தில் மணி பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது.

கடிகாரம் உள்ளறையில் இருந்தது.

அம்மாவும் மாமாவும் இந்நேரம் தூங்கி விட்டிருப்பார்கள்.

மாமா, தென்புறமுள்ள மேற்குப் பார்த்த அறையில் படுத்திருப்பார்.

அம்மாவும், வேலைக்காரியும் வடக்குப் புறமுள்ள அறையில் படுத்திருப்பார்கள். தனியாகப் படுப்பதென்றால், அம்மாவுக்கு பயம்!

பத்து வயது வரை ஹரிகிருஷ்ணன் அம்மாவுக்குத் துணையாகப் படுத்திருந்தான்.

இப்போது அந்த நாலுகெட்டில் (நடுவில் திறந்த வெளி முற்றமும் நான்கு புறமும் அறைகளும் உள்ள வீடு) விழித்திருப்பது ஹரிகிருஷ்ணனும், நிலவிளக்கின் ஒளியால் கவரப்பட்டுப் பாய்ந்து வரும் விட்டில் மற்றும் பூச்சிகளைப் பிடிப்பதற்காகத் தருணம் பார்த்துக் காத்திருக்கும் பல்லிகளும் மட்டும்தான்.

எங்கும் அமைதி நிலவியது.

நடுநடுவே எங்கிருந்தோ நாய் ஒன்று குரைத்து, அமைதியைக் கிழிக்கும். மறுபடியும் நீண்டு தொடரும் மயான அமைதி.

இலைகள் கூட அசையாமல் இருக்கும் அந்தச் சூழ்நிலையில், காதைத் துளைக்கும் சுவர்க்கோழியின் ரீங்காரம் கூட பீதியளிப்பதாக இருந்தது.

என்ன காரணத்தாலோ உறக்கம் ஹரிகிருஷ்ணனை ஒதுக்கி விட்டிருந்தது. சாதாரணமாகப் பன்னிரண்டு மணியாகி விட்டால், அதுவரை வாசித்த பகுதியில் அடையாளம் வைத்து விட்டு மூடி விடுவான்.

ஆனால், சற்று நேரத்துக்கு முன்னால் அவன் மாமா கொடுத்த பழைய ஓலைச்சுவடி ஹரிகிருஷ்ணனை தூங்க விடாமல் செய்தது.

எழிமலைக்காவு பகவதி கோயில்!

சுவடியின் ஒவ்வோர் ஓலையின் மேற்புறத்திலும் அந்தந்தக் கோயிலின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. சில ஓலைகளில் அந்தப் பகுதி மட்டும் இற்றுப் போயிருந்தன.

சுற்றிலும் மலைகள் உயர்ந்து நிற்கும் எழிமலை கிராமத்தின் மையப் பகுதியிலிருந்தது கோயில்.

'... பகுதியிலிருந்தது கோயில்' என்ற எழுத்துகள் தான் அவனைச் சிந்தனைக்குள் வீழ்த்தியதும், உத்வேகம் கொள்ள வைத்ததும்!

இது வரை வாசித்த எந்தவொரு சுவடியிலும் இப்படியோர் உணர்வு தோன்றியதில்லை. அவையெல்லாம் இப்போதிருக்கும் கோயில்களை பற்றியதாக இருந்ததுதான் காரணம்.

ஆனால், எழுநூறு வருடங்களுக்கு முன்னால் இருந்ததாக இந்த ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ள கோயில், அதற்கும் முன்பாகச் சுமார் முன்னூறு வருடங் களுக்கு முன்னால் கட்டப்பட்டது என்றும் அது குறிப்பிட்டது.

ஹரிகிருஷ்ணன் யோசனையில் ஆழ்ந்தான்.

பெரும்பாலான கோயில்களைப் பற்றி வாசித்தாகி விட்டது. அவற்றை இன்றும் காணலாம். ஆனால், எழி மலைக்காவு பகவதி கோயில் என்ற ஒன்று இன்று எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில் கட்டப்பட்ட கோயில், எப்படி இன்று இல்லாமல் போயிருக்கும்?

எப்படி இருந்தாலும் வாசித்துப் பார்க்கலாம் என்ற முடிவுக்கு வந்தவனாக, ஓலையின் மீதுள்ள எழுத்துகளில் கண்களை மேய விட்டான்.

ஒரு காலத்தில் அபாரமான சக்தியைப் பொழிந்து கொண்டிருந்த கோயில். அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது பகவதியை. அது சுயம்புவான விக்கிரகமும்கூட.

சாக்ஷாத் மகேஸ்வரனின் திருக்கண்ணிலிருந்து பிறந்த பத்ரையின் அம்சம் கொண்ட பகவதி!

கோர ரூபினி.

அந்தக் கோயிலைப் பற்றிய எத்தனையோ கதைகள் அந்தச் சுவடியில் இருந்தன.

ஒரு தடவை காகம் ஒன்று அசுத்தமான மாமிசத் துண்டு ஒன்றை அலகில் கொத்திக் கொண்டு வந்தது. மற்றொரு காகம் அதைத் துரத்தி வந்தது.

துரதிர்ஷ்டவசமாக மாமிசத் துண்டைச் சுமந்து வந்த காகம் கோயிலின் மேற்புறமாகப் பறக்க, அதே நேரம் மற்ற காகங்கள் அந்த மாமிசத் துண்டை அதனிடமிருந்து பிடுங்குவதற்காகச் சண்டையிட...

அந்த மாமிசத் துண்டு எந்த நேரத்திலும் கோயில் கருவறையின் மேற்புறம் விழலாம் என்ற நிலை...

சட்டென்று கருவறைக்கு உள்ளிருந்து ஒரு பெரிய நெருப்பு ஜுவாலை மேற்புறமாக உயர்ந்தது.

கண் மூடித் திறப்பதற்குள் மாமிசத் துண்டைப் பிடித்திருந்த அத்தனை காகங்களும் எரிந்து சாம்பலாயின. அந்தச் சாம்பல் துகள்களில் ஒன்றுகூட கருவறையின் மீது விழவில்லை. எங்கிருந்தோ சட்டென்று வீசிய சூறைக்காற்று அந்தச் சாம்பலை அப்படியே வாரிக் கொண்டு போனது.

இது போல் இன்னும் எத்தனையோ கதைகள்!

அந்தக் காலத்தில் அந்தக் கோயிலின் எல்லாக் காரியங்களையும் கவனித்து வந்தவர் எண்ணெய்க்காட்டு மனையைச் சேர்ந்த திருமேனிகள் (நம்பூதிரி போன்ற உயர்ந்த இனத்தாரைக் குறிப்பிடும் சொல்).

ஒரு கட்டத்தில், எண்ணெய்க்காட்டு மனையைச் சேர்ந்த அந்தர்ஜனம் ஒருத்திக்கு, அந்த மனையின்

காரியஸ்தரான இரவிக் குறூப்பு மூலம் குழந்தை ஒன்று பிறந்தது.

திருமணமான அந்தர்ஜனத்தின் வயிற்றில் வளர்ந்த குழந்தை, பிறந்த பிறகு அந்த வீட்டுத் திருமேனியின் குழந்தையாகவே வளர்ந்தது. யாருக்கும் இது குறித்து எந்த விதமான சந்தேகமும் எழவில்லை.

வளர்ந்த குழந்தை, பூஜை செய்வதற்காக ஒரு தடவை கோயிலுக்குள் நுழைந்தது.

அசைவ உணவுக்காரரான இரவிக் குறூப்பின் வாரிசு, கோயில் கருவறைக்குள் நுழைந்த மறு விநாடி... பயங்கரமான இடி இடித்தது... மின்னல் மின்னியது!

ஆயிரமாயிரம் பாம்புகளைப் போல் மின்னல்கள் ஆகாயத்தில் நெளிந்தன.

கோயில் குடிகொண்டிருந்த பகுதி முழுவதிலும் பூகம்பம் ஏற்பட்டது. சுற்றிலும் நின்றிருந்த மலைகளின் அடிப்பகுதி அசையத் தொடங்கியது.

எண்ணெய்க்காட்டு மனையைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் ஒருவர்கூட மீதமில்லாமல் பூண்டோடு அழிந்தார்கள். ஆனால், குறிப்பிட்ட அந்தர்ஜனமும், இரவிக் குறூப்பும் மட்டும் அன்று இரவோடு இரவாக ஊரை விட்டே கிளம்பினர்.

அதன் பிறகு அந்தக் கோயிலைப் பற்றி, அந்த ஓலைச் சுவடியில் எந்த விதமான செய்தியும் இல்லை.

மேற்கொண்டு என்ன செய்வது?

ஹரிகிருஷ்ணனுக்கு ஏமாற்றமாக இருந்தது. விளக்கில் எரியும் திரி மங்கலடையத் தொடங்கியது. ஹரிகிருஷ்ணன் கையை நீட்டினான் - திரியைத் தூண்ட... ஆனால், பாம்புக் கடியேற்றது போல் சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்தான்.

அதோ-

நிலவிளக்கை ஒட்டி...

மிக நெருக்கமாக...

ஒரு கை!

நீண்டு மெலிந்த அழகான அந்தக் கையில், பழங் காலத்தைச் சார்ந்த பாலைக்கா மோதிரங்கள்!

அழகு வழிந்தொழுகும் அந்தக் கைத்தண்டையில் வலம்புரிச் சங்கில் வடித்தெடுத்த நண்டு வடிவ வளையல்...

அதன் சுண்டு விரலும், பெருவிரலும் இணைந்து சேரும் இடத்தில் ஓர் ஓலைச்சுவடி!

பாலைப்பூ (கப்பல் அலரி, மோகினிகள் இந்த மரத்தில் குடியிருப்பதாகக் கேரளாவில் ஓர் ஐதீகமுண்டு) வின் மணம் சட்டென்று அந்த வீடு முழுக்கப் பரவியது.

ஹரிகிருஷ்ணனின் உடலிலிருந்த மயிர்க்கால்கள் சட்டென்று குத்திட்டு நின்றன. அவன் தலை உயர்த்திப் பார்த்தான்!

## 2

ஹரிகிருஷ்ணன் திடுக்கிட்டுப் பின்வாங்கினான். தெளிவற்ற அந்த வெளிச்ச வட்டத்தில் மற்றவை எல்லாம் சூன்யமாகத் தெரிந்தன.

அதுதான் அவனை அதிகமாக பயப்படச் செய்தது. அங்கு ஓர் உருவம் தென்பட்டிருந்தால் கூட அவன் பயப்படாமல் இருந்திருப்பான்!

கண்ணுக்குத் தெரிந்தது முழங்கை வரையிலான ஒரு பகுதி மட்டுமே. அதைத் தாண்டி எதுவுமே இல்லை!

''இதை வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்புவது இதற்குள் இருக்கிறது!'' மிக அருகிலிருந்து யாரோ மந்திரிப்பது போல் பேசினார்கள்.

அது ஒரு பெண் குரல்!

அதுவும் ஒரு கட்டளை மாதிரி ஒலித்தது.

மட்டுமின்றி, அந்தக் குரல் கவர்ச்சிகரமாகவும் இருந்தது.

நடுங்கும் கைகளுடன் ஹரிகிருஷ்ணன் அந்த ஓலைச் சுவடியை வாங்கினான். ஓலை அவன் கைக்கு வந்தவுடன் அதை வழங்கிய கை சட்டென்று மறைந்தது!

கடிகாரத்தில் மணி ஒன்று! அப்படியானால், இதெல்லாம் கடந்த அரை மணி நேரத்துக்குள் நடந்து முடிந் திருக்கிறது.

வியப்புக்குரிய வகையில் கைக்கு வந்த அந்த ஓலைச் சுவடியை ஹரிகிருஷ்ணன் ஒரு கணம் உற்றுப் பார்த்தான். சரியாகப் பார்ப்பதற்கு விளக்கின் வெளிச்சம் போதாது என்று தோன்றவே திரியை மேலும் உயர்த்துவதற்காக வலக் கையின் சுட்டுவிரலை நீட்டியபோது, திரி தானாகவே முன்பைவிடப் பிரகாசமாக ஒளிரத் தொடங்கியது.

மனம் முழுவதும் வியப்பு படர்ந்திருக்கும் அந்தச் சூழ்நிலையில் ஹரிகிருஷ்ணன் ஓலைச்சுவடியைப் பரிசோதித்தான்.

சுவடியின் மேற்புறத்தில் 'எழிமலைக்காவு பகவதி கோயில்!' என்று பொறிக்கப்பட்டிருந்தது. சற்று நேரத்துக்கு முன்புதான் அந்தக் கோயிலைப் பற்றி வாசித்து வாலும் தலையும் புரியாமல் தவித்தான். அப்போதுதான் இந்த ஓலை கிடைத்தது. அவனையும் அறியாமல் மனசுக்குள்ளேயே மந்திரித்தான்: ''பகவதி!''

அவன் வாசிக்கத் தொடங்கினான்.

அந்தக் கோயிலை அடைவதற்கான வழி அதில் விளக்கப்பட்டிருந்தது. பஸ் இறங்க வேண்டிய இடம், அங்கிருந்து நடந்து செல்ல வேண்டிய பாதை, பாதை வந்து சேரும் முக்கூட்டுச் சந்திப்பு... பிறகு எழிமலைக்காவு கோயிலுக்குக் கொண்டு சேர்க்கும் பாதை. அத்துடன் ஒரு வீட்டின் பெயர்.

வலியகுளத்து மனை. எதற்காக அந்தப் பெயர் இந்தச் சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது குறித்து எவ்வளவோ யோசித்தும் எதுவும் புலப்படவில்லை அவனுக்கு.

கடைசியாக அவனுடைய சிந்தனையில் ஒன்று தட்டுப்பட்டது. ஒருவேளை கோயிலின் சுற்றுப்புறத்தை அடைந்தால், தங்க வேண்டிய இடமாக இருக்குமோ அது? அங்குதான் தங்க வேண்டும் என்பது தேவியின் கட்டளையோ என்னவோ? அப்படித்தான் இருக்க வேண்டும்!

மறுநாள் காலையிலேயே ஹரிகிருஷ்ணன் பயணம் மேற்கொண்டான்.

அவன் கையில் எழிமலைக்காவு கோயிலைக் குறித்து விளக்கும் முந்தைய சுவடியுடன், புதிதாகக் கிடைத்த சுவடியும் இருந்தன. ஒருவேளை அதிக நாட்கள் தங்கியிருக்க நேரலாம் என்ற எதிர்பார்ப்பில் தேவையான துணிமணி களையும் ஜோல்னாப் பைக்குள் திணித்து, அதைத் தோளில் போட்டிருந்தான்.

அங்கிருந்து பஸ் ஏறி நகரத்தை அடைந்த பிறகு மதிய உணவை முடித்த பின், மற்றொரு பஸ்ஸில் ஏறி உட்கார்ந் தான். அது கோயில் வழியாக, கோயிலைத் தாண்டிச் செல்லும் பஸ்.

பாதி தூரம் பயணமாவதற்குள்ளேயே நிழல்கள் கிழக்குப் புறமாக நீண்டு பொழுது சாயத் தொடங்கியதை உணர்த்தியது.

அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பவர், அவன் மாமாவின் வயதுள்ள மனிதர். மரியாதைக்கு உரியவராகத் தெரிந்தார். தலைமுடியும் தாடி - மீசையும் ஏராளமாக வளர்ந்திருந்தன. அவை கறுப்பும் வெள்ளையுமாகக் கலந்து தென்பட்டன. நரைத்த முடிகள் வெள்ளிக் கம்பிகளைப் போல் அவ்வப்போது பளபளத்தன.

''தம்பி எங்கே போகிறீர்கள்?'' பெரியவர் கேட்டார்.

''எழிமலைக்காவு கோயிலுக்கு!'' ஹரிகிருஷ்ணன் பதிலளித்தான்.

பெரியவர் வியப்புடன் அவனை உற்றுப் பார்த்தார். அந்தக் கண்கள் சுருங்குவதை, ஹரிகிருஷ்ணன் கவனிக்கத் தவறவில்லை.

''அப்படியொரு கோயில் இப்போது இல்லையே தம்பி?''

''உண்மைதான்... ஆனால், அது எங்கேயோ மறைந் திருக்கிறது!''

''நானும் அப்படித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களுக்குத் தெரிந்தவர்கள், உறவுக்காரர்கள் என்று யாராவது இந்த ஊரில் இருக்கிறார்களா?''

''வலியகுளத்து மனை என்ற குடும்பத்தை எனக்குத் தெரியும்.''

பெரியவர் வியப்புடன் அவனைப் பார்த்தார்.

''அந்த வீட்டைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'' ஹரி கேட்டான்.

பெரியவர் நெற்றி சுளித்தார். ''அங்குதான் தங்கப் போகிறீர்களா?''

''ஆமாம்!'' சற்றும் தாமதிக்காமல் பதிலளித்தான் ஹரி.

''உங்களது வீட்டைப் பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா?''

''கிருஷ்ணமங்கலம்!''

''ஓகோ... கிருஷ்ணமங்கலத்து வீட்டுப் பையனா நீங்கள்! அப்படியானால், இதைக் கையில் வைத்துக் கொள்ளுங்கள்.'' பெரியவர் தன் புஜத்தில் கட்டியிருந்த தாயத்து ஒன்றைக் கயிறுடன் அவிழ்த்து அவன் வலதுக் கையில் வைத்தார். பிறகு தொடர்ந்தார்.

''நீங்கள் அங்குதான் தங்கப் போகிறீர்கள் என்றால்... உங்களுக்கு உதவ மனிதர்கள் யாரும் அங்கு இருக்க மாட்டார்களே!''

''நீங்கள் இப்படிச் சொல்லக் காரணம்?''

''அதெல்லாம் போகட்டும்... ஒரு தீர்மானத்தோடு வந்திருப்பதால், அப்படியே செய்யுங்கள்!''

ஓரிடத்தில் பஸ் நின்றவுடன் பெரியவர் இறங்கினார். அவர் பஸ்ஸின் எதிர்ப்புறமாக நடக்கத் தொடங்கினார்.

ஹரிகிருஷ்ணன் பெரியவர் கொடுத்த தாயத்தை ஒரு தடவை உற்றுப் பார்த்துவிட்டு, உள்ளங்கைக்குள் அடக்கிக் கொண்டு, வெளிப்புறமாக வேடிக்கை பார்க்கத் தொடங்கினான்.

மாலை நேரம் முதிர்ந்து விட்டிருந்தது.

கிழக்குப் புற மலைகளின்மீது பூசியிருந்த சிவப்பு வெளிச்சம் சுத்தமாக மறைந்தது.

பஸ் ஒரு பெரிய ஆல மரத்தைச் சுற்றி வந்து நின்றது. அங்கு இறங்குவதற்கு ஹரிகிருஷ்ணன் என்ற பயணி மட்டுமே மீதமிருந்தான். அவன் இறங்கியதும் பஸ் வந்த வழியே திரும்பிச் செல்லத் தொடங்கியது. அதன் பின்புறம் தெரிந்த சிவப்பு வெளிச்சம் ஒரு வளைவில் திரும்பி மறைந்தது.

ஓலைச்சுவடியில் குறிப்பிட்டிருந்தபடி ஹரிகிருஷ்ணன் வலப் புறமாகத் திரும்பி நடக்கத் தொடங்கினான்.

நிமிடத்துக்கு நிமிடம் இருள் அதிகரித்துக் கொண்டு வந்தது. எதிரே தெரிந்த ஒற்றையடிப் பாதை, வளைந்து வளைந்து ஒரு நூல் போல் இருளில் ஒன்றியிருந்தது.

மலையின் மேற்புறம் நிலா உதித்தது. அதன் மஞ்சள் நிற வெளிச்சம் எங்கும் பரவியது. அமைதியான சுற்றுப் புறத்தில், அந்த வெளிச்சம் பயமேற்படுத்தக் கூடியதாக இருந்தது.

சுற்றுமுற்றும் பார்த்தபோது கண்ணுக்கெட்டிய தொலைவு வரை வேறு உருவங்கள் எதுவும் தட்டுப்பட வில்லை. அவனை அறியாமலேயே ஒரு வித பயம் மனத்தை ஊடுருவியது.

சற்றுத் தொலைவு நடந்தபோது பாதை புதர்களும், சற்று உயரமான மரங்களும் நிறைந்த பகுதியானது. அந்தப் பகுதியில் கால் வைத்தபோது, தனக்கு முன்னால் எவரோ நிற்பது போல் தோன்றியது.

''யாரது?'' ஹரிகிருஷ்ணன் கேட்டான்.

''இங்கேயே குடியிருக்கிறவர்கள்தான்.''

''வலியகுளத்து மனை பக்கத்தில்தானே உள்ளது!''

''ஆமாம். உங்களை அங்கு அழைத்துச் செல்வதற்குத் தான் வந்திருக்கிறேன்.''

''நீங்கள் யார்?''

''நான் அந்த வீட்டின் காரியஸ்தன். பெயர் கோமக் குறுப்பு!'' என்று சொல்லியபடி அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றார் அவர்.

பஸ்ஸில் சந்தித்த பெரியவர் சொன்னதற்கு எதிராக - விபரீதமாக அல்லவா ஒவ்வொன்றும் நடக்கின்றன?

பெரியவர், யாருமே இருக்க மாட்டார்கள் என்றல்லவா சொன்னார். யோசித்தவாறு நடந்தான்.

அதன் பிறகு பாதை முழுவதும் கும்மிருட்டாக இருந்தது. இருப்பினும் கோமக்குறூப்பு உடன் வந்ததால், ஹரிகிருஷ்ணனுக்குச் சற்று தைரியமாக இருந்தது.

இருண்டு கிடந்த ஒரு பெரிய சுவரில் - எதிரில் தெரிந்த பூட்டிய வாசற்படியுடன் அவன் பயணித்த ஒற்றையடிப் பாதை முடிவடைந்தது.

''இதுதான் வலியகுளத்து மனை!''

ஹரிகிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான். அங்கு எவரும் இல்லை. இதுவரை தன்னுடன் வந்தவரைக் காணவில்லை. எல்லாம் குழப்பமாகத் தெரிந்தன. 'எப்படி இருந்தாலும் நினைத்த இடத்தை அடைந்து விட்டோமே...' என்கிற நிம்மதியுடன் கதவின் மீது கை வைத்தான்.

படபடவென்ற சத்தத்துடன் கதவுகள் இரண்டும் அப்படியே உட்புறமாகப் பெயர்ந்து விழுந்தன. கறையான் கதவை அரித்து, பலவீனப்படுத்தியிருந்தது.

அது வரை டார்ச் லைட்டை பையிலிருந்து எடுக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. முன்னரே வெளியே எடுத்திருந்தால், கோமக்குறூப்பையாவது பார்த்திருக்கலாம். டார்ச் லைட் பட்டனை அழுத்தி, அதன் தலைப்பகுதியை எரியவிட்டபடி முற்றப் பகுதிக்கு வந்தான்.

முற்றப் பகுதியில் அறுகம் புல்லும் நெருஞ்சிச் செடிகளும் செழித்து வளர்ந்திருந்தன. துளசி மாடத்தில் செடி உலர்ந்திருந்தது. ஹரிகிருஷ்ணன், தோள்பையை கண்ணில் தென்பட்ட இளந்திண்ணைப் பகுதியில் வைத்தான். அப்படியே உட்கார்ந்தான். 'நேராக இந்த இடத்துக்கு வந்தது ஒருவேளை தவறோ? இடையில் சட்டென்று வெளிப்பட்ட கோமக்குறூப்பு ஏமாற்றி விட்டாரோ?'

டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் எத்தனையோ நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த அந்த மனையின் நிலை வாசற்படியருகே தேய்க்காமல், பச்சைக் நிறக் களிம்பேறி யிருந்த நிலவிளக்கு ஒன்று இருப்பதை கவனித்தான்.

ஆனால், வியப்புகுரிய ஒரு விஷயம் என்னவெனில் அதில் பாதியளவு எண்ணெயும், அணைக்கப்பட்ட ஒரு திரியும் இருந்ததுதான். ஹரிகிருஷ்ணன் தீப்பெட்டியை எடுத்து விளக்கை ஏற்றினான். ஒரு தடவை சோம்பலுடன் மங்கலாகக் கண் திறந்த திரி, பிறகு பிரகாசமாக எரியத் தொடங்கியது. இருப்பினும் அந்த வெளிச்சம் முற்றப் பகுதியை எட்டவில்லை. நீண்ட அந்த இளந்திண்ணையின் இரு முனைகள் கூட இருட்டாக இருந்தன.

சற்று நேரத்துக்குள் எவரோ நடந்து வரும் காலடி யோசை கேட்டது. மிகவும் சன்னமான சத்தம். கூடவே கால் சலங்கையின் ஒலி.

திண்ணையின் வடக்குப் பகுதியிலிருந்து ஏற்றிய தூண்டாமணி விளக்குடன் பெண்ணுருவம் ஒன்று ஹரிகிருஷ்ணனை நெருங்கியது. விளக்கை வாசற்படியருகே வைத்தவள், அதன் அருகில் உட்கார்ந்தாள்.

ஏதோ ஒரு விதமான புதுவாசனை அப்போது காற்றில் பரவியது. அவளது வருகைக்குப் பிறகு சந்தனமும் கற்பூரமும் கலந்த ஒரு வித மணம்.

''காலையிலேயே வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டீர்கள் இல்லையா...''

''ஆமாம்.''

''எனக்குத் தெரியும்!''

''இங்கு யாருமே இருக்க மாட்டார்கள் என்றுதான் கேள்விப்பட்டேன்?''

''அப்படியெல்லாம் சிலர் சொல்வார்கள். எல்லாவற்றையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அந்த அளவுக்கு கவனத்துடன் சுவடிகளை வாசித்திருக்க வேண்டாமா...''

''எனக்குப் புரியவில்லை!''

''கோமக்குறுப்பை நடுவழியில் பார்த்தீர்கள் இல்லையா?''

''பார்த்தேன்...''

''அப்படியானால், அதுவே போதுமே எனது வார்த்தைக்கு ஆதாரம்!''

ஹரிகிருஷ்ணன், அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

ஒரு தேவகன்னிகை மாதிரி அவள் பேரழகியாகத் தெரிந்தாள். அளவெடுத்து வடித்தெடுத்த சிலை மாதிரி கச்சிதமாக - கலையழகுடன் இருந்தாள். வளைந்து மெலிந்த இமைகளும், வரைந்து வைத்தது போன்ற கண்களும், எடுப்பாக உயர்ந்த மூக்குப் பகுதியும், சிவந்த பூவிதழ் போன்ற அதரங்களும் சாமுத்திரிகா லட்சணங்களின்படி துல்லியமாக விளங்கினாள்.

அவள் ரவிக்கை அணிந்திருக்கவில்லை. மாறாக மிக உயர்ந்ததும், சரிகை வேலைப்பாடுகள் அமைந்ததுமான அகலத் துண்டு ஒன்றால் மார்புப் பகுதியைக் கட்டி மறைத்திருந்தாள். புராதன கால உடை!

''என்னமோ கோமக்குறுப்பைப் பற்றிச் சொன்னீர்கள். எனக்கு எதுவும் விளங்கவில்லை...'' ஹரிகிருஷ்ணன் கேட்டான்.

''கோமக்குறுப்பை நீங்கள் பார்த்ததும்... அவருடன் பேசியதாகக் குறிப்பிட்டதும் - இந்த இரண்டுமே அதிசயமான விஷயங்கள் ஆயிற்றே!''

''அப்படியென்றால்...''

ஹரிகிருஷ்ணன் வியப்பால் விரிந்த விழிகளால் அவளைப் பார்த்தவாறு கேட்டான்.

''கோமக்குறூப்பு இறந்து போய் தற்போது எழுநூறு வருஷங்களுக்கு மேலாகிறது. யானை மிதித்ததால், நசுங்கி இறந்து போனார். எழிமலைக்காவு கோயில் யானைதான் அப்படிச் செய்தது!''

அதைக் கேள்விப்பட்ட ஹரிகிருஷ்ணன், அப்படியே அசைவற்றுப் போய் உட்கார்ந்திருந்தான்!

# 3

வீட்டிலிருந்து கிளம்பியது முதல் எதிர்ப்படும் நம்ப முடியாத சம்பவங்கள்... வழியில் கண்ட வயோதிகர்... சந்தேகத்திற்குரிய அவரது பார்வை... இறந்துபோன கோமக்குறூப்பின் வழிகாட்டுதல்... அதே போல் தனக்கு முன்பாக அமர்ந்திருக்கும் இளம்பெண்... மிகவும் லாகவமாகச் சொல்கிறாள், கோமக்குறூப்பின் மரணத்தை!

''உங்களுக்குப் பசிக்கவில்லையா?'' அவள் கேட்டாள்.

''ஆமாம் பசிக்கிறது. மதியம் சாப்பிட்டது - அதுவும் ஓட்டலிலிருந்து. அதன் பிறகு பச்சைத் தண்ணீர்கூட பல்லில் படவில்லை!'' ஹரிகிருஷ்ணன் கூறினான்.

''ராத்திரியில் நீங்கள் சூடான கஞ்சிதானே குடிப்பது வழக்கம்! பொரித்த அப்பளமும் மாவடுவும் உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும் இல்லையா?''

'என்ன ஓர் அதிசயம்! இதையெல்லாம் இந்தப் பெண் எப்படித் தெரிந்து வைத்திருக்கிறாள்?' யோசித்தான். ஆனால், கேட்கவில்லை.

''வாருங்கள் சாப்பிடலாம். கை கால் கழுவ அதோ அந்தப் பக்கத்தில் கிணறு இருக்கிறது!'' இடப் புறத்தைச் சுட்டிக்காட்டியபடி கூறினாள்.

அந்த நாலுகெட்டின் கன்னிமூலைப் பகுதியில் கிணறு தட்டுப்பட்டது. இரும்புக் கப்பிக்குப் பதிலாக மர உருளையும், மரத்தொட்டியும் இருந்தன. உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்த ஹரி, கிணற்றை நோக்கி நடந்தான்.

சன்னமான நிலா வெளிச்சம் தரையைத் தொட்டுக் கொண்டிருந்தது.

மர உருளை கடகடவென்ற சத்தத்துடன் உருண்டது. குழந்தைப் பருவத்தில் கேட்ட மர உருளைச் சத்தம்! இப்போது சொந்த வீட்டில் இரும்புக் கப்பியும் கயிறும்தான் பயன்படுகின்றன!

கைகால் முகம் அலம்பி விட்டுத் திரும்பி வந்தான். அவள், அவனை வீட்டின் உட்புறம் அழைத்துச் சென்றாள்.

தூணின் மீது செருகி வைக்கப்பட்டிருந்த கோல் விளக்கின் (கடப்பாரை போன்ற கம்பியின் அடிப்புறம் கூர்மையாக, செருகி வைக்க வாகாக இருக்கும். மேற்புறம் வளைந்து அகல்விளக்குப் போல மடிந்திருக்கும். இதை தரையில் கூட குத்தி நிறுத்தி வைக்க முடியும்.) வெளிச்சத்தில் ஆவி பறக்கும் சூடான கஞ்சி மற்றும் மாவடு.

சாப்பிட்டபோது, சொந்த வீட்டின் ஞாபகம் இயல்பாகவே எழுந்தது. மாவடு கூட அவனது வீட்டில் பதப்படுத்துவது போலவே இருந்தது!

சாப்பாடு முடிந்து அவன் திரும்பி வந்தபோது, அவள் பேசினாள்: ''நீங்கள் கொண்டு வந்த பையைத் தென்புற அறையில் வைத்திருக்கிறேன். உடை மாற்றிவிட்டு வாருங்களேன். இந்தத் திண்ணையில் உட்கார்ந்தபடி பேசலாம். பேசுவதற்கு நிறையவே இருக்குமே!''

'உண்மைதான். தான் மனத்தில் நினைத்ததை அவள் சொல்கிறாள்!' அவன் நினைத்துக் கொண்டான்.

அவன் தென்புற அறைக்குள் நுழைந்தபோது, அங்கு ஒரு வெண்கல விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அணிந்திருக்கும் உடையை வந்தவுடனேயே மாற்றியிருக்க வேண்டும்... முடியவில்லை. லுங்கியை மட்டும் உடுத்திக் கொண்டு அவன் மீண்டும் இளந் திண்ணைக்கு வந்தபோது, அவள் அதே நிலையில் நிலவிளக்கின் அருகில் அமர்ந்திருந்தாள்.

ஹரி தூணில் சாய்ந்து உட்கார்ந்தான்.

''இங்கு வர வேண்டுமென்று இப்போதாவது உங்களுக்குத் தோன்றியதே?'' அவள் பேசத்தொடங்கினாள்.

''அதென்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்! இவ்வளவு நாளும் இப்படி ஓர் இடம் இருப்பது எனக்குத் தெரியாதே!''

''ஓலைச் சுவடியைப் படித்தபோதுதான் தெரிந்தது... இல்லையா?''

''ஆமாம்!''

''நல்ல வேலை செய்தீர்கள். வர வேண்டிய சரியான நேரத்துக்கு வந்திருக்கிறீர்கள். வர வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றியதே பெரிய விஷயம்தான்!''

''அப்படியும் இருக்கலாம். நான் எதற்காக வந்திருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரிந்திருப்பதால் கேட்கிறேன். இந்தக் கோயிலுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு?'' ஹரி கேட்டான்.

''நல்ல கேள்வி! நான் எதிர்பார்த்த கேள்வியும் கூட. சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள்!'' என்றபடி அவள் தொடர்ந்தாள்.

ஹரி தனது பூணூலில் விரலை அளைந்தபடி அவளையே கவனித்துக் கொண்டிருந்தான். நிலவிளக்கின்

ஒளியில் அவள் உடம்பு சந்தனம் போல் துலங்கியது. புதிதாக அரைத்தெடுத்த சந்தனம். சரிகை உடையையும் சந்தன உடலையும் பிரித்தறிய முடியாத நிலை. அவளின் மார்பிடங்கள் கூட அளவெடுத்துச் செதுக்கியவை போல் கோயில் சிற்பங்களில் இருப்பதுபோல், திண்மையாகத் தெரிந்தன.

''ஒரு சின்னச் சந்தேகம். உங்களை நான் எப்படி அழைப்பது?'' ஹரி கேட்டான்.

''கோபிகா என்று கூப்பிடுங்கள். உங்களது பெயர் எனக்குத் தெரியும்'' பேசியவாறே வலக் கை விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி, விளக்கின் திரியைத் தூண்டி விட்டாள். வெளிச்சம் அதிகமாகியது.

சட்டென்று ஹரிக்குள் ஒரு சந்தேகம் பொறி தட்டியது. 'தனக்கு முன்பாக அமர்ந்திருக்கும் கோபிகாவுக்கு ஏன் நிழல் விழவில்லை?'

'விளக்கின் திரியை உயர்த்துவதற்காக வலக் கையை உயர்த்தினாள். அதுவும் தனக்கு நேராக. அப்போது கூட அவள் கையின் நிழல் தன் உடல் மீது விழவில்லையே? ஒருவேளை தனக்கு அப்படித் தோன்றுகிறதோ என்னவோ!' என்று நினைத்தவன் உடனே, அந்த நினைப்பை மறந்தான்.

''நான் பேச வந்ததை விட்டுவிட்டேன்'' என்றவாறு தொடர்ந்தாள்:

''வலியகுளத்து மனைக்கும் எழிமலைக்காவு கோயிலுக்கும் உள்ள தொடர்பை முதலில் நான் சொல்லி விடுகிறேன். ஒரு காலத்தில் இந்த மனையில் ஒரு காரணவர் இருந்தார். அவர் பெயர் விஷ்ணு நம்பூதிரி. அவர் பாண்டிய நாட்டுக்கு ஒரு தடவை பயணம் போனார். திரும்பி வரும்போது அவருடன் ஒரு பெண் இருந்தாள். அவள் சாதாரணமான பெண் அல்ல; சாட்ஷாத் பகவதிதான் என்பது

அவருக்குப் புரிந்தது.'' பேசியவாறே அவள் சட்டென்று வெளி வாசலைப் பார்த்தாள். அவள் கண்கள் சுருங்கின.

''யாரது?'' அந்தத் திசையை நோக்கிக் கேட்டாள்.

சட்டென்று யாரோ அங்கிருந்து ஓடுவது போல் ஒரு சத்தம் கேட்டது.

''இப்படி ஓடினால், ஓடும்போது விழுவீர்கள். விழுந்தால், எழுந்திருக்க முடியாது என்பது ஞாபகமிருக்கட்டும்!'' உரத்த குரலில் கூறினாள் கோபிகா.

''நீங்கள் பேசுவதெல்லாம் புதிர் மாதிரி இருக்கிறது...'' ஹரி இடை வெட்டினான்.

''இங்கு வந்திருக்கிற மூன்றாவது நபர் யாரென்று தெரிந்து கொள்வதற்காகப் பார்த்தேன். சரி, அதை விடுங்கள். அந்த பகவதியை, திருமேனி (விஷ்ணு நம்பூதிரி) ஓர் ஆலமரத்தின் அடியில் பிரதிஷ்டை செய்தார். அதற்குப் பிறகு கோயில் கட்டினார். அதன் பின்னர் தொடர்ந்து நாடுகளுக்கு நடுவில் ஏற்பட்ட சண்டைகளால் கோயில் ஊருக்கு ஒதுக்குப்புறம் போல் ஆகிவிட்டது!''

''அங்கு இப்போது யாருமில்லையா?''

''யாருமில்லை. அந்த மனையே இற்றுப் போய் விட்டது. காரணம் தேவியின் கோபம். கறையான் அரித்தே அந்த நாலுகெட்டு சிதைந்து அழிந்தது!''

''ஏன்? கோயிலைப் புனருத்தாரணம் செய்ய யாரும் முன் வரவில்லையா?''

''ஒவ்வொன்றுக்கும் ஒரு காலம் உண்டு. எல்லாம் நாம் நினைக்கிறபடியா நடக்கின்றன?'' அவள் ஒரு பெருமூச்சுடன் பதிலளித்தாள்.

''இப்போது கோயில் எங்கே இருக்கிறது என்றாவது உங்களுக்குத் தெரியுமா?''

''அதைக் கண்டுபிடிக்கத்தானே வந்திருக்கிறீர்கள்?'' சிரித்தபடியே கூறினாள்.

''உண்மைதான்! கோயில் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடித்து விட்டாலும் கூட, மீண்டும் அதை எப்படி அதன் பழைய நிலைக்குக் கொண்டு வருவது?''

''இதெல்லாம் கொஞ்சம் கடினமான பணிகள்தான். ஒவ்வொன்றையும் தொடங்கும்போது அதனதன் வழியில் இடர்ப்பாடுகள் வரத்தான் செய்யும். எல்லாவற்றையும் நேரிடும் தைரியத்தோடுதானே வந்திருக்கிறீர்கள்!''

''ஆமாம்!''

''ஆமாம்... நீங்கள் ஏன் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?'' - அவள் கேட்டாள்.

''என்ன காரணமோ தெரியவில்லை... இதுவரை அப்படியோர் எண்ணமே எழுந்ததில்லை!''

''அது சரியில்லை. ஒவ்வொன்றும் அது நடக்க வேண்டிய காலத்தில் நடக்க வேண்டும். இல்லா விட்டால், வாழ்க்கை என்பது முழுமையடைவதில்லை. எல்லாவற்றுகும் கடைசியாக வரும் கட்டம்தான் சன்யாசம்.''

''நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்.''

''இன்னும் ஒரு விஷயம்...''

''கேளுங்கள்...''

''நேரடியாக விஷயத்துக்கு வருகிறேன். என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' அவள் ஹரியின் கண்களைப் பார்த்தபடி கேட்டாள்.

அந்தக் கண்களில் ஏதோ ஒரு பிரத்தியேகத் தன்மை; ஒரு வித தாகம்.

அவளின் மூக்கு நுனியில் வியர்வை மணிகள் பூத்திருப்பது போல் தோன்றியது.

உதடுகளில் பளபளப்பான ஈரப்பதம்.

''அப்படியே உட்கார்ந்திருங்கள். இதோ வந்து விடுகிறேன்!'' என்றவாறு எழுந்து உட்புறம் போனாள் கோபிகா.

ஹரிக்குச் சந்தேகம் தோன்றியது.

'கோமக்குறூப்பு இறந்து விட்டதாக அவள் சொன்னாள். அதுவும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு!

அது மட்டுமின்றி, நான் இங்கு வந்தபோது இந்த மனை கூட மூடித்தான் கிடந்தது. அதுவும் இற்றுப் போனது மாதிரி. அதனால் கை வைத்தவுடனேயே கதவுகள் மல்லாந்து விழவும் செய்தன.'

எல்லாமே வியப்பாக இருந்தன. 'இதெல்லாம் என்னை ஏதாவது தொல்லைக்குள் ஆழ்த்திவிடுமோ? போதாக் குறைக்கு என்னைப் பற்றிய எல்லா விவரங் களையும் அவள் தெரிந்து வைத்திருக்கிறாள்!'

நிலவு, நடுவானத்துக்கு வந்திருந்தது. முற்றப் பகுதியில் நிலவொளி தெளிவாக விழுந்திருந்தது. துளசி மாடத்தில் இருந்த உலர்ந்த துளசி, பசுமையின் ஈரம் பூண்டது போல் தெரிந்தது. நிலவொளியில் அங்கிருந்த மரமும் பளபளப்பாகத் தெரிந்தது.

வேலி மதிலுக்கு மறுபுறம் ஒரே இருளாக இருந்தது. தெரு வாசலுக்கு வெளியே பிரமாண்டான மரம் ஒன்று படர்ந்து பரவி... நிழலாக இருட்டைப் படர விட்டிருந்தது.

சுவர்க்கோழிகளும், வௌவால்களும் முற்றத்தின் மேற்புறம் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன. அவற்றின் நிழல் முற்றப் பகுதியில் கோலம் போட்டது.

விளக்கைச் சுற்றிச் சுவர்களில் ஏராளமான பல்லிகள். அதுவும் அசாதாரணமான அளவுக்குப் பெரிய பல்லிகள்.

சில, சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்து இரையைக் கௌவிப் பிடித்து பழையபடி தங்களது இருப்பிடத்துக்குத் திரும்பின.

கோபிகா திரும்பி வந்தாள்.

''நான் எதிர்பார்த்தது போலவே எல்லாம் அங்கேயே இருக்கின்றன!'' கோல்விளக்கைக் கையில் பிடித்தபடி பேசினாள்.

''உண்மையிலேயே நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை...'' ஹரி குறுக்கிட்டான்.

''வாருங்கள்... காட்டுகிறேன்!'' அவள், அவனை அழைத்தாள்.

அவன், அவளைத் தொடர்ந்தான். அவள் நிலவறைப் பலகையின் மேற்புறம் வந்து நின்றாள்.

''இதற்குள்தான் எல்லாவற்றையும் வைத்துள்ளனர்.''

''விஷயம் என்னவென்றே இன்னும் சொல்லவில்லை நீங்கள்!''

''சரி, அதோ அந்த நாதாங்கியை இழுத்துத் திறவுங்கள். சாவி அந்தச் சுவரில் இருக்கிறது!'' ஒரு வளையத்தில் மாட்டியிருந்த சாவியைச் சுட்டிக் காட்டியபடி கூறினாள்.

ஹரி சாவியை எடுத்தான். அவள் சொன்னபடி செய்து, கதவைத் திறந்தான். மேற்புறப் பலகையை உயர்த்திக் கீழ்ப்புறமாகப் பார்த்தான். அதற்குள் ஒரு விதமான பிரகாசம் தட்டுப்பட்டது.

''அது என்ன?'' ஹரி கேட்டான்.

''மாணிக்கம்... நாகமாணிக்கம்!''

''என்ன!'' வியப்பில் அவன் விழிகள் விரிந்தன. அவன் கண்கள் அந்த வெளிச்சத்தின் மையத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.

''அதோ அங்கே இருக்கிறது. நீங்கள் தேடி வந்த மாந்திரீக ஓலைச்சுவடிகள்!''

''மாந்திரீகச் சுவடிகளா? அது எனக்கு எதற்கு?''

''தேவைப்படும். நீங்கள் போரிட்டே தீர வேண்டும். அதற்கு உபயோகமாகும். எடுத்துக் கொள்ளுங்கள்!'' - கோபிகா கூறினாள்.

ஹரிகிருஷ்ணன் நிலவறையை நோக்கிச் சரிந்திருந்த மரப்படிகளில் கால் வைத்து இறங்கத் தொடங்கினான்.

## 4

நிலவறைக்குள் நுழைந்ததும் அவன் கண்ட காட்சி திடுக்கிட வைப்பதாக இருந்தது.

ஒளி சொரியும் நாகமாணிக்கத்துக்கு அருகில் தலையைத் தரையில் பதித்தபடி படுத்திருந்தது பிரமாண்டமான பாம்பு ஒன்று.

'ஒருவேளை தன்னை அபாயத்துக்குள்ளாக்குவதுதான் கோபிகையின் திட்டமோ?' என்றுகூட ஹரி கிருஷ்ணன் ஒரு கணம் நினைத்தான். எனவே, சற்றுத் தயங்கினான்.

''அதற்குப் பக்கத்திலிருக்கும் ஓலைச்சுவடியை எடுத்துக் கொள்ளுங்கள்!'' மேலிருந்து கோபிகாவின் குரல் கேட்டது.

ஹரிகிருஷ்ணன் தன் வலக்கையின் மேற்புறத்தில் கட்டியிருந்த தாயத்தை ஒரு முறை பார்த்தான். பின்பு மனத்தில் பகவதியை தியானித்தபடி குனிந்து அங்கிருந்த ஓலைச்சுவடியை எடுத்தான்.

அந்த ஓலைச்சுவடிக்குக் காவலிருப்பது போல் படுத்திருந்த பாம்பு அப்போதும் அசையாமல் கிடந்தது.

ஹரிகிருஷ்ணன் எச்சரிக்கையுடன் மீண்டும் ஒரு தடவை பாம்பைப் பார்த்தவாறே மரப்படிகளில் ஏறத்

தொடங்கினான். மேற்புறத்திலிருந்த அவள், அவன் பக்கமாகக் கையை நீட்டினாள். அவன் அந்தக் கையைப் பிடித்துக் கொண்டான்.

''பயந்து விட்டீர்கள் இல்லையா?'' அவள் கேட்டாள்.

''உண்மைதான் - கொஞ்ச நேரத்துக்கு!''

''இனி இந்த ஓலைச்சுவடி உங்களுக்கு உரிமையானது. அது உறுதியாகி விட்டது!''

''புரியவில்லையே?'' அவள் கண்களைப் பார்த்தவாறு கேட்டான்.

''முதலில் மேலே வாருங்கள். எல்லாவற்றையும் நான் உங்களுக்குப் புரிய வைக்கிறேன்!'' விளக்கைப் பிடித்துக் கொண்டு முன்புறமாக நடந்தபடி பேசினாள் கோபிகா.

இருள் நிறைந்திருந்த அந்த வீட்டின் உட்பகுதியில், கோல் விளக்கின் வெளிச்சத்தில் அவளது அழகு விவரிக்க முடியாததாக இருந்தது. அவர்கள் வராந்தாவுக்கு வந்தார்கள்.

''இந்த தறவாட்டின் (பரம்பரையின்) காரணவர்கள் பெரிய மாந்திரீகர்களாக இருந்தார்கள். அம்மை நோய் வந்து இறந்து போனவர்களைக்கூட சவக்குழி வரை நடக்க வைத்தவர்கள்! இந்தக் குடும்பத்தின் கடைசித் திருமேனி மோசமான நடவடிக்கை உடையவராக இருந்தார். பெண் பித்துப் பிடித்தவரும் கூட!'' அவள் பேசத் தொடங்கினாள். ஹரிகிருஷ்ணன் அவள் சொல்வதை கவனமாகக் கேட்டான்.

''அவர் தனது மாந்திரீக சக்தியைப் பயன்படுத்தி எவ்வளவோ கெட்ட காரியங்களைச் செய்தார். பொறுக்க முடியாத ஒரு கட்டத்தில், அவரையும் அவரின் காரியஸ்தரான கோமக்குறுப்பையும் யானை மிதித்துக் கொன்றது. யானை மீது பகவதியின் திடம்பு (உற்சவ மூர்த்தி) இருந்தது. இங்கு பக்கத்திலேயே ஒரு கோயில் உள்ளது. அந்தக் கோயிலின் திருவிழாவின் போதுதான் இது நடந்தது!''

''இதையெல்லாம் நீங்கள் எப்படி இவ்வளவு தெளிவாகக் கூறுகிறீர்கள்?'' ஹரிகிருஷ்ணன் கேட்டான்.

''எல்லாரும் எல்லாவற்றையும் பார்த்தால்தான் சொல்ல முடியுமா என்ன?'' அவள் சிரித்தவாறு கேட்டாள்.

ஹரிகிருஷ்ணன் தன் கையிலிருந்த ஓலைச் சுவடியின் மீதிருந்த தூசியைத் தட்டினான். எத்தனையோ வருடங்களாக எவரும் பயன்படுத்தாமலிருந்த பழைமையான சுவடி அது.

''இதை நீங்கள் படிக்க வேண்டும் என்பதற்காகவே உங்களிடம் எடுக்கச் சொன்னேன். நீங்கள் இங்கு வந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால், இதை முழுமையாக மனப்பாடம் செய்வதுடன், இதிலுள்ள மந்திரங்களைப் பயன்படுத்தவும் தெரிந்து கொள்ள வேண்டும்!''

''அதற்கு இந்தச் சுவடி எதற்கு?''

''தேவைப்படும்போது, இது எவ்வளவு அவசியம் என்பதை அனுபவம் உங்களுக்கு உணர்த்தும்.''

''அப்படியானால் படிக்கிறேன்.''

''ஒரு விஷயம். நீங்கள் இதைப் படிக்க வேண்டுமானால், இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அதாவது ஏறத்தாழ ஒரு சாமியார் மாதிரி!''

''அதெப்படி சாத்தியம்?''

''பிரம்மச்சரியம் கூடாது என்று அர்த்தம்... கிரகஸ்தாசிரமும் முடிந்திருக்க வேண்டும்!''

''எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையே?''

''பாணிக்கிரணம் என்றால் என்ன?''

''ஒரு பெண்ணைக் கைப்பிடிப்பது.''

''அதற்கு கல்யாணம் என்றும் ஒரு பொருள் உள்ளது அல்லவா? அந்த முறையில் நீங்கள் இப்போது திருமணமானவர்தான்!''

''அதெப்படி?'' ஹரிகிருஷ்ணன் வியப்புடன் அவளைப் பார்த்துக் கேட்டான்.

''நிலவறையிலிருந்து மேலேறி வரும்போது நீங்கள் என் கையைப் பிடிக்கவில்லையா?'' அவள் சிரித்தாள். முத்துமணிகள் குலுங்குவது போன்ற சிரிப்பு!

''சரி, வாருங்கள் அதிக நேரத்தைப் பேசிக் கழித்து விட்டோம்...'' என்றபடி விளக்குடன் எழுந்தாள். எழும் போது மறக்காமல் நிலவிளக்கின் திரியை எண்ணெய்க்குள் அமிழ்த்தி, அணைத்தாள்.

தென்புறமிருந்த அறை ஒன்றை அவனுக்காக ஒதுக்கிச் சுத்தப்படுத்தியிருந்தாள். மெத்து மெத்தென்ற இரட்டைப் பாய், படுக்கை விரிப்பு, தலையணை உட்பட எல்லாமே அங்கு தயாராக இருந்தன. அந்த அறைக்குள் பிரத்தியேக மான மணம் ஒன்று வீசியது.

''உங்கள் மனம் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்!'' என்றவாறு ஹரி கிருஷ்ணனுக்குப் பக்கத்தில் கட்டிலில் அமர்ந்தாள் கோபிகா.

''இந்தத் தாயத்தை பஸ்ஸில் உங்களுடன் வந்த பெரியவர்தானே கொடுத்தார்? இரவில் படுக்கும்போது அதை அவிழ்த்து வைக்க வேண்டும்!'' அவள் சொன்னாள்.

''ஏன்?'' தாயத்தை தடவியவாறு கேட்டான்.

''இல்லாவிட்டால் அது அசுத்தமாகிவிடும்!'' அவள் மீண்டும் சிரித்தாள்.

மாந்திரீக ஓலைச்சுவடியைத் தலையணையின் கீழ் வைக்கும்போது மறக்காமல், தாயத்தையும் அவிழ்த்து வைத்தான்.

அவளின் மார்பை மறைத்திருந்த மேலாடை நழுவி விழுந்தது. அவளின் மென்மையான கைகள் ஹரிகிருஷ்ணனின் தோள்களைத் தழுவின. அந்தக் கைகளின் தொடு உணர்ச்சி,

வெண்ணெயின் மென்மையையும் வழுவழுப்பையும் உணர்த்தின.

தலையணையிலிருந்து தலையைத் திருப்பி அவளைப் பார்த்தான். கோல் விளக்கின் வெளிச்சத்தில் அவள் முகத்தின் ஒரு பகுதி தெளிவாகத் தெரிந்தது. அவளின் மூச்சுக்காற்று, வெப்பமாக இருந்தது. அவள் உடம்புக்கு தாமரைப் பூவின் வாசனை இருந்தது. அவளது தலைமுடி அவனை மூடி மறைத்தது!

அவளின் மார்பில் தலை சாய்த்தபடி அவன் உறங்கிப் போனான். காலையில் அவன் கண்விழித்தபோது, அவளை அங்கு காணவில்லை!

ஹரிகிருஷ்ணன் துவாலை, சோப்பு ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, முற்றப் பகுதிக்கு வந்தான். வீட்டின் தென்புறத்தில் ஆறு சலசலத்துப் பாயும் இரைச்சல் கேட்டது.

சத்தம் வரும் திசை நோக்கி நடந்தான். தெளிந்த நீர் ஓடும் ஆறு. பெரிய மரங்கள் சில வேருடன் சாய்ந்து ஆற்றின் இரு கரைகளையும் இணைத்துப் பாலங்கள் அமைத்திருந்தன.

குளித்துவிட்டுத் திரும்பி வரும்போது, முந்தைய இரவில் நடந்ததெல்லாம் ஒரு கனவு மாதிரி அவனுக்குத் தோன்றியது.

இல்லத்தை அடைந்தபோது, முன்பின் பார்த்திராத ஒருவர் அங்கு உட்கார்ந்திருந்தார்!

''நீங்கள்தான் நேற்று இங்கு தங்கியிருந்தவரா?'' நடுவயது மனிதர், ஹரிகிருஷ்ணனிடம் கேட்டார்.

''ஆமாம். என்ன விஷயம்!''

''உங்களை குறூப்பு எஜமான் விசாரித்தார்...'' அவரது குரலில் கோபம் தெரிந்தது.

''யாரந்தக் குறூப்பு?'' ஹரிகிருஷ்ணனின் குரலில் உஷ்ணம் தெறித்தது.

''திரிவிக்கிரமக் குறூப்பு. அவர் இந்தப் பகுதிக்கே ராஜா மாதிரி. நான் அவரின் காரியஸ்தன். என் பெயர் ராமக்குறூப்பு.''

''அவர் எதற்காக என்னை விசாரிக்க வேண்டும்?''

''இந்தப் பகுதிக்கு யாராவது புதிதாக வந்தால், அவர் தான் அவர்களை வரவேற்பது வழக்கம். இங்கெல்லாம் அவரைச் சந்திக்காமல் எதையும் நீங்களாகச் செய்யக் கூடாது!''

''ஓகோ... அப்படியா? சரி. அதற்கென்ன வந்து பார்க்கிறேன்!'' ஹரி சம்மதித்தான்.

எழிமலைக் கோயிலைப் பற்றி திரிவிக்கிரமக் குறூப்புக்கு ஏதாவது தெரிந்திருக்கலாம். ஒருவேளை நமக்கு அது உதவலாம் என்று ஹரி நினைத்தான்.

ராமக்குறூப்புடன் ஹரி புறப்பட்டான். அவர்கள் இருவரையும் கிராமத்து ஜனங்கள் உற்றுப் பார்த்ததுடன் வணக்கமும் செலுத்தினர்.

''அதோ தெரிகிறது பாருங்கள். அதுதான் குறூப்பு எஜமானின் பரம்பரை வீடு!'' ராமக்குறூப்பு சற்றுத் தொலைவிலிருந்த வீட்டைச் சுட்டிக் காட்டினார்.

பழைமையான ஓர் இரண்டடுக்கு வீடு. பிரமாண்டமாகத் தெரிந்தது. கோட்டை மதில் போன்ற சுற்றுச் சுவர், பெரிய வாசல் கதவு. ஏறத்தாழ ஒரு ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்திருந்தது அந்தக் கட்டடம்.

''ஒரு காலத்தில் இந்தக் குடும்பத்தினர்தான் இந்த நாட்டு மன்னருக்கு அமைச்சர்களாக இருந்தனர். இந்தக் குறூப்பு எஜமான் கூட கிட்டத்தட்ட அப்படித்தான். இந்தப் பக்கத்தில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரிவதெல்லாம்

அந்தக் குடும்பத்தைச் சேர்ந்ததுதான்.'' ராமக்குறூப்பு நடந்தபடியே பேசினார்.

அந்த மாளிகையின் படிப்புரையை (தெருவாசலை) அடைந்தனர். ராமக்குறூப்பு கதவைத் தள்ளித் திறந்தார்.

உட்புறம் திண்ணையில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த திரிவிக்கிரமக் குறூப்பு, ஹரியைப் பார்த்ததும் எழுந்தார்.

உடனேயே, தெரியாமல் எழுந்து விட்டதைப் போல் பழையபடி அதில் சாய்ந்து உட்கார்ந்தார்.

''இவர்தான் நீங்க சொன்ன நபரா?'' திரிவிக்கிரமக் குறூப்பு கேட்டார்.

ராமக்குறூப்பு அதற்கு பதிலளித்தார். ஹரி அருகே சென்றபோது, அமருமாறு சைகை காட்டி, நாற்காலியைச் சுட்டிக் காட்டினார்.

ஹரி அமர்ந்தான்.

அப்போதுதான் ஹரியின் கழுத்தில் கிடந்த பூணூலை அவர் கவனித்தார். ''நீங்கள் நம்பூதிரிதான் அல்லவா?''

''ஆமாம்'' ஹரிகிருஷ்ணன் குறூப்பைப் பார்த்தான். நல்ல ஆஜானுபாகுவான தோற்றம். பின்புறமாகச் சீவி விட்ட கருமையான முடி. குறுகிய நெற்றி. வெளவால் ஒன்று இறக்கைகளை விரித்தபடி முகத்தில் பதிந்திருப்பது போன்ற புருவங்கள். அதன் கீழே நரியின் வஞ்சகப் பார்வையை உதிர்க்கும் விழிகள். ஒரு கறுத்த சிப்பைக் கவிழ்த்து வைத்தது போன்ற மீசை!

கழுத்தில், தொப்பூழ்க் கொடி வரை நீண்டு தொங்கும் தங்கத்தில் பதித்த ருத்திராட்ச மாலை. நெஞ்சில் கயிற்று மெத்தை போட்டிருப்பது போன்ற ரோமம். உயரம் ஆறரை அடிக்குக் குறையாது என்று தோன்றியது.

''இந்த இடத்துக்கு வந்திருப்பதன் நோக்கம்?'' குறூப்பு கேட்டார்.

''குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவும் இல்லை. இந்த கிராமத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்றுதான்.''

''அது எதற்கு? அரசாங்கம் உங்களை அனுப்பி வைத்திருக்கிறதா என்ன?'' குறூப்பு சந்தேகத்துடன் கேட்டார்.

''இல்லை இல்லை... இங்கு ஒரு கோயில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். எழிமலைக்காவு பகவதி கோயில்.''

''என்ன... எழிமலைக்காவு பகவதி கோயிலா?'' குறூப்பு கோயிலின் பெயரைத் திரும்பவும் உச்சரித்தார்.

பிறகு ராமக்குறூப்பைத் திரும்பிப் பார்த்தார்.

''இப்படி ஒரு கோயில் இருப்பதாக உங்களுக்கு யார் சொன்னது?'' திரிவிக்கிரமக் குறூப்பு விசாரித்தார்.

''ஓலைச்சுவடியில் படித்தேன்.''

''ஓலையில் இருக்கும் பசு புல்லைத் தின்னுமா என்ன?'' ஏளனத்துடன் கேட்டார் குறூப்பு.

''அப்படி இல்லை. தேவியின் வார்த்தைகள் அது. அந்தக் கோயில் இந்தப் பகுதியில் எங்கேயோ உள்ளது. அதை நான் கண்டுபிடிப்பேன்!''

''சின்னத்திருமேனி, தேவையில்லாததையெல்லாம் யோசித்து, வீணாக மனசைப் புண்ணாக்க வேண்டியதில்லை. அதெல்லாம் பழங்கதைகள்!''

''இருக்கலாம். நான் அந்தக் கோயிலைக் கண்டுபிடித்தே தீருவேன்!''

குறூப்பு, மீண்டும் காரியஸ்தரைப் பார்த்தார்.

''சரி இருக்கட்டுமே. அதற்காக பேய் - பிசாசுகள் இருக்கிற வீட்டில் குடியிருக்க வேண்டுமா என்ன? இந்த வீட்டில் கூட நீங்கள் தங்கலாமே!''

குறூப்பு சட்டென்று பாதை மாறினார்.

''அங்கும் ஆட்கள் இருக்கிறார்கள்!''

''நேற்று இரவில் அந்த வீட்டுக்கு என் ஆள் ஒருவன் போனான். அவன் திரும்பி வரவில்லை. விடியற்காலையில் அவனது பிணம்தான் கிடைத்தது. அதனால்தான் நீங்களும் ஆபத்தில் சிக்க வேண்டாம் என்று சொல்றேன்.''

''சரி, அதெல்லாம் போகட்டும். உங்களுக்கு அந்தக் கோயிலைப் பற்றி ஏதாவது தெரியுமா?'' ஹரிகிருஷ்ணன் கேட்டான்.

''அதோ தெரிகிறது பாருங்கள்... ரப்பர் மரங்கள் வளர்ந்திருக்கிற பகுதி. அங்குதான் ஒரு காலத்தில் அந்தக் கோயில் இருந்தது. ஆனால், அந்த இடம் இப்போது எனக்குச் சொந்தம்!'' குறூப்பு கூறினார்.

''அது முறையில்லையே. கோயில் உங்களுடையது இல்லையே?''

''அதெல்லாம் அப்படித்தான். புரிகிறதா?'' வேண்டு மானால், உங்களுக்குக் கொஞ்சம் பணம் தருகிறேன். தேவை யில்லாத விஷயத்தில் தலையிடாமல் இந்த இடத்தை விட்டுச் சீக்கிரமாகக் கிளம்புங்கள்!''

''கிளம்ப மாட்டேன்... கிளம்பவும் முடியாது! என்னை தேவிதான் அழைத்து இப்படிக் கட்டளை யிட்டிருக்கிறார். அதற்காகவாவது அந்தக் கோயிலைக் கண்டுபிடித்து வெளிக் கொண்டு வர வேண்டியது எனது கடமை!''

ஹரிகிருஷ்ணன் எழுந்து விடைபெற்றுக் கொள்ளாமல் நடக்கத் தொடங்கினான்.

''குறூப்பே, இன்று ராத்திரி அந்த நம்பூதிரிப் பையனைக் குளத்தில் மூழ்கடித்து விடுங்கள். நாலுபேரை துணைக்கு அழைத்துப் போங்கள்!'' குறூப்பு கட்டளையிட்டார்.

ஹரிகிருஷ்ணன் மனைக்கு வந்து சேர்ந்தான்.

அவனுக்கு அங்கு சாப்பாடு தயாராக இருந்தது. ஆனால், யாரையும் காணவில்லை.

சமையல் அப்படியே, அச்சாக அம்மாவின் கைமணத்துடன் இருந்தது!

இரவு நேரத்தில் கோபிகா வந்தாள். அவள் ஏழு திரியிட்டு விளக்கை ஏற்றினாள்.

''எதற்காக இத்தனை திரிகள்?'' ஹரி கேட்டான்.

''தேவைப்படுகிறது. சற்றுப் பொறுமையாக இருங்கள். காரணத்தைக் காட்டுகிறேன்...'' அவள் பதிலளித்தாள்.

மணி பதினொன்றைத் தாண்டி விட்டிருந்தது.

ஹரிகிருஷ்ணன் மாந்திரீக ஓலைச்சுவடியை வாசித்துக் கொண்டிருந்தான். கோபிகா அவனருகில் அமர்ந்திருந்தாள்.

அப்போது தெருவாசற்படியருகே காலடி ஓசைகள் சில கேட்டன.

## 5

''கவனியுங்கள், யாரோ வருகிறார்கள்!'' கோபிகா கூறினாள்.

''வேறு யார்? குறூப்பின் ஆட்களாகத்தான் இருப்பார்கள்!'' ஹரிகிருஷ்ணன் தயங்கியபடி இழுத்தான்.

''அவ்வளவுதானே? இதில் பயப்பட என்ன இருக்கிறது? உட்கார்ந்த இடத்திலிருந்தே சத்ரு ஸ்தம்பன மந்திரம் சொல்லுங்கள். உடனே பலன் தெரியும்!'' கோபிகா தைரியமூட்டினாள்.

ஹரிகிருஷ்ணன் மந்திரம் சொல்லத் தொடங்கினான். ''ஹ்ரீம், நரசிரோ மாலாலம் இருதாயை நம: ஹ்ரீம்.''

சுடலைக்குச் சென்று, சிதையில் எரிந்த சாம்பலைப் பூசிக்கொண்டு ஆயிரம் தடவை உச்சரிக்க வேண்டிய அந்த மந்திரத்தை, அந்த இடத்திலிருந்து ஓதியபோதே அது பலனளிக்கத் தொடங்கியது!

தெருவாசற்படி தாண்டி துளசிமாடம் வரை அபாயகரமான ஆயுதங்களுடன் வந்தவர்கள், சட்டென்று அப்படியே நின்றனர். அவர்களால் மேற்கொண்டு முன்னேற முடியவில்லை!

கோபிகா, தனக்கு முன்புறமிருந்த நிலவிளக்கிலிருந்து ஒரு திரியை மட்டும் விரல்களால் முன்புறமாக நகர்த்தினாள்.

மறுவிநாடி எரிந்து கொண்டிருந்த ஏழில் நான்கு திரிகள், அந்தரத்தில் உயர்ந்து எழும்பி விரைவாக வெளிப்புறமாக நகரத் தொடங்கின.

ஆனால், ஆணியடித்து நிறுத்தியது போல் அசைவற்று நின்றிருந்த அடியாட்களோ, தங்களுக்கு நேராக அந்தரத்தில் சீறிப் பாய்ந்து வரும் நான்கு பாம்புகளைப் பார்த்தனர். அவற்றின் வாயிலிருந்து தீக்கொழுந்துகள் உக்கிரமாக வெளியேறின!

அலறுவதற்காக திறந்த அவர்கள் வாய்க்குள் தீ நாளங்கள் விசையுடன் பாய்ந்து செருகின!

வந்தவர்கள் பின்வாங்கி ஓடத் தொடங்கினர். பயந்து நடுங்கியபடி கண்மண் தெரியாமல் ஓடத் தொடங்கியவர்கள், இறுதியாக மூச்சு வாங்கியபடி வந்து நின்ற இடம் திரிவிக்கிரமக் குறுப்பின் முன்னிலையில்தான்!

'ஹரிகிருஷ்ணனைக் கொன்று குளத்தில் எறிந்து விட்ட செய்தியைக் கேட்ட பிறகு தூங்கப் போகலாம்' என்று கண்விழித்துக் காத்திருந்தார் குறுப்பு. அவருக்கு அருகிலேயே அவரின் முறையற்ற மனைவியும் இருந்தாள்.

''என்னய்யா இது... ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்?'' குறூப்பு திகைப்புடன் கேட்டார்.

வந்தவர்களின் வாய்க்குள் அப்போதும் தீக் கொழுந்துகள் ஜொலித்துக் கொண்டிருந்தன. வந்தவர்களால் வாய் திறந்து பேச முடியவில்லை. சற்று நெருங்கி வந்த ஒருவனை மேலும் அருகில் அழைத்து, பக்கத்திலிருந்த கிண்டியிலிருந்து அதன் வால் பகுதி வழியாக தண்ணீரை அவன் வாயில் ஊற்றினார். குளிர்ந்த தண்ணீர் அவன் வாய்க்குள் இறங்கியும் தீக்கொழுந்துகள் கொஞ்சம் கூட அணையவே இல்லை!

கடைசியாக வேலைக்காரனை எழுப்புமாறு அருகிலிருந்த பெண்மணியிடம் கிசுகிசுத்தார் குறூப்பு.

கண்களைக் கசக்கி, கொட்டாவி விட்டபடி வேலைக்காரன் சேக்குட்டி வந்து நின்றான்.

''டேய் சேக்குட்டி, நீ சீக்கிரமாகச் சென்று ராமக் குறூப்பையும் பாச்சு வைத்தியனையும் அழைத்து வா!'' விக்கிரமக் குறூப்பு அவசரப்படுத்தினார்.

சேக்குட்டி இருளில் மறைந்தான்.

சற்று நேரத்துக்குள் அடியாட்களின் வாயில் ஜொலித்துக் கொண்டிருந்த ஜுவாலைகள் அணைந்தன. ஆனால், நான்கு பேரும் வாயை மூட முடியாமல் தரையில் விழுந்து, புரண்டு துடித்தார்கள்!

''இவர்களுக்கு என்ன ஆயிற்று?'' குறூப்பு யாரிடம் என்றில்லாமல் கேட்டார். ஆனால், அவர்களில் எவராலும் அதற்கு பதில் பேச முடியவில்லை.

சற்றுத் தூரத்தில் தென்னோலைப் பந்தத்தின் வெளிச்சம் தெரிந்தது. வந்தவர்கள் ராமக்குறூப்பும், வைத்தியரும்தான். அவர்களிடம் தான் கண்ட காட்சியை விளக்கினார் திரிவிக்கிரமக் குறூப்பு.

வைத்தியர் அவர்களின் வாய்ப் பகுதிகளைப் பரிசோதித்தார். பிறகு தனது மருந்துப் பெட்டியில் இருந்து நான்கு குளிகைகள் (சிறியதான மருந்து உருண்டைகள், மாத்திரைகள்) எடுத்தார். துளசி நீரில் உருண்டைகளை உரைத்து வாய்ப் பகுதியில் தடவச் சொல்லி ராமக் குறூப்பிடம் கொடுத்தார். அவரும் உடனே அப்படியே செய்தார்.

பாச்சு வைத்தியரின் மருந்து அவ்வளவு சாதாரணமானதல்ல. அடியாட்களில் ஒருவன் சற்று நேரத்தில் நடந்ததை விவரித்தான். விவரிப்பில் அவனது கைச்சரக்கையும் சேர்த்துக் கொண்டான். அதைக் கேட்டதும் விக்கிரமக் குறூப்பும் வைத்தியரும் பயந்தனர். ராமக் குறூப்போ, ''அர்ஜுனா, பல்குணா...'' என்று கண்களை மூடியபடி அரற்றினார்.

''இதற்கு உடனடியாக என்ன செய்யலாம்?'' குறூப்பு வைத்தியரிடம் கேட்டார்.

''வேறு என்ன செய்வது? இதையே அவர்களுக்குத் திருப்பிச் செய்ய வேண்டியதுதான்!'' வைத்தியர் சுலபமாக பதிலளித்தார்.

''அதற்கு ஏற்றவர்கள் யாராவது இருக்கிறார்களா?'' குறூப்பு விசாரிப்பில் தீவிரம் காட்டினார்.

''ஒருத்தர் இருக்கிறார். மந்திரத்தில் கொஞ்சம் கடுமையானவரும் கூட. அப்புறம்...'' வைத்தியர், குறூப்பின் சின்ன வீட்டைத் தயக்கத்துடன் பார்த்தார்.

''பாறுக்குட்டி நீ உள்ள போம்மா. நான் இதோ வருகிறேன்...'' அவளை நோக்கிக் கூறினார் குறூப்பு.

பாறுக்குட்டி, குறூப்பை ஓரக்கண்ணால் பார்த்தபடியே வீட்டுக்குள் போனாள்.

''சீக்கிரம் சொல்லுங்கள் வைத்தியரே!'' குறூப்பு தீவிரம் காட்டினார்.

''கட்டுக்காவல் இருக்கும் வீட்டுக்குள் படுத்துத் தூங்கும் பொண்ணை, தனது படுக்கைக்கே வரவழைக்கும் கெட்டிக்காரர்!''

''ஓகோ அப்படிப்பட்ட ஆளா! யாரது?''

''எண்ணெய்க்காட்டு மனையைச் சேர்ந்தவர். சொல்லி விட்டு வந்தால் போதும். அவர் பிடிவாதக் காரரும்கூட.''

அது ஒரு புதிய செய்திதான். திரிவிக்கிரமக் குறுப்பு அங்கு நின்றிருந்த வேலைக்காரன், காரியஸ்தர் மற்றும் அடியாட்களைப் பார்த்தார். விஷயத்தை ஊகித்துக் கொண்டவர்கள், தென்புறத்தில் இருந்த ஓய்வு அறையை நோக்கிச் சென்றனர். சாதாரணமாக யாராவது குறுப்பை பார்க்க வந்தால், அந்த அறையில் அமர்ந்துதான் அவர்களோடு பேசுவார். அதற்கென்றே கட்டப்பட்ட அறை அது. மிகவும் சிறிய அறை.

எல்லோரும் அங்கிருந்து போனதும் குறுப்பு, வைத்தியரைப் பொருள் செறிவுடன் பார்த்தார்.

''வந்து ஒரு வாரமாகிறது. பெரிய மந்திரவாதி. பழைய கதையிருக்கிறது இல்லையா... அதோட கடைசி வாரிசு. அதுதான் ஊரைவிட்டு ஓடிய அந்தர்ஜனமும் இரவிக் குறுப்பும். அவர்கள் நேராகப் பாண்டிய நாட்டுக்குப் போனார்கள்!''

''உண்மையாவா?'' குறுப்பு வியப்புடன் கேட்டார்.

''ஆமாம் அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தன. எத்தனையோ தலைமுறைகள் தாண்டிவிட்டது. ஆனால், ஒருவர் கூட உயிரோடு இருக்க முடியவில்லை. கடைசியாக ஒரு இரவிக்குறுப்பு பிறந்தார். அச்சு அசலாக அதே பழைய இரவிக்குறுப்பு. அவரது மறுபிறப்பு என்றே இவரைச் சொல்கிறார்கள்!''

''ஆமாம் வைத்தியரே, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அவரே சொல்லித்தான்! நான் அவரை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது. பயங்கரமான ஆள். மந்திரங்கள் எல்லாவற்றையும் கரைத்துக் குடித்திருக்கிறார். தரையில் நிற்கும் மரங்களை நடக்க வைக்கிறார் என்றால் பாருங்களேன். யக்ஷி, கந்தர்வர்களையெல்லாம் கோடு போட்டே நிற்க வைக்கிறவர்!''

''அவருக்கு அதிலென்ன பிடிவாதம்?''

''காரணம் இருக்கிறது! எழிமலைக்காவு பகவதிதான் அவர் மகனைக் கொன்றவள். அதற்குப் பழி தீர்ப்பது மாதிரி, அந்த பகவதியை இங்கிருந்து கிளப்பிக் கொண்டு போய், அவர் சொற்படியெல்லாம் அதை ஆட்டி வைக்க வேண்டும் என்கிற ஒரு வைராக்கியம். இன்னொரு காரணம், அந்தப் பகவதி சிலைக்கு அடியில் ஏராளமான தங்க - வைர நகைகள் இருக்கின்றன!''

''ஆகா... அற்புதம்... அற்புதம்! நான் நீண்ட நாளாக ஏங்கியது இப்போது நிறைவேறப்போகிறது. நோயாளி விரும்பினதும் பால், வைத்தியர் சாப்பிடச் சொன்னதும் பால் என்பது மாதிரி ஆகியிருக்கிறது.''

''அப்படியே ஆகட்டும்... இல்லை ஆகிவிட்டதாகவே நினைத்துக் கொள்ளுங்கள்.

''நமது முதல் வேலையே மகா மாந்திரீகனான இரவிக் குறூப்பைச் சந்திப்பதுதான்!'' என்றபடி திரிவிக்கிரமன், வைத்தியரைப் பார்த்தார்.

''சரி. நாளைக்குக் கட்டாயம் நான் இங்கு வருகிறேன்'' என்ற வைத்தியர் எழுந்தார்.

வைத்தியர் தென்னோலைப் பந்தத்தை எரிய வைத்துக் கொண்டு புறப்பட்டபோது, திரிவிக்கிரமக் குறூப்பு தன் காரியஸ்தரை அழைத்தார்.

"ராமா... சீக்கிரமாக இங்கு வா. நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும். முதலில் இதைப் பிடி" என்றவாறு சுவரில் தொங்கிக் கொண்டிருந்த வாளை உருவினார்.

"இதை உடனடியாகப் பயன்படுத்த வேண்டும். வைத்தியர், அவரது வீட்டுக்குள் நுழையக் கூடாது!" திரிவிக்கிரமக் குறுப்பு கட்டளையிட்டார்.

ராமக் குறுப்பு வாளை வாங்கிக் கொண்டு வைத்தியர் போன திசையிலேயே ஓடினார். ஒரு பாழுங்கிணற்றுக்கருகே பாச்சு வைத்தியரின் தலையை வெட்டினார். பிறகு உடலையும் தலையையும் ஆழமான அந்தக் கிணற்றுக்குள் வீசியெறிந்தார். வாளைச் சுத்தமாகக் கழுவிக் கொண்டு வந்து திரிவிக்கிரமக் குறுப்பிடம் திரும்பவும் ஒப்படைத்தார்!

பாச்சு வைத்தியர் சொன்ன ரகசியங்கள், இப்போது சம்பந்தப்பட்ட இரவிக்குறுப்பிடமும், திரிவிக்கிரமக் குறுப்பிடமுமாக மிஞ்சின.

மறுநாள் மாலை நேரத்தில் திரிவிக்கிரமன், எண்ணைய்க்காட்டு மனையை நெருங்கினார். ஏறத்தாழ அது சிதிலமாகி விட்டிருந்தது.

அதற்குள் மனிதர்கள் எவரும் இருப்பதாகத் தெரிய வில்லை. ஆனால், மனையை நெருங்கியபோது யாரோ விளக்கேற்றுவதை கவனித்தார். தெரு வாசற்படியிலிருந்த படியே உட்புறமாகப் பார்த்தார்.

கதவுகள் இல்லை. அதன் நிலைவாசற்படி இற்றுப் போயிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார். தன்னை எவரும் கவனிக்கவில்லை என்பது நிச்சயமானவுடன் உட்புறமாகக் காலெடுத்து வைத்தார்.

விளக்கேற்றிக் கொண்டிருந்த பெண்மணி சட்டென்று திரும்பினாள்.

'ஆகா அழகியேதான்... அதில் சந்தேகமில்லை!' குறூப்பு, மனசுக்குள் மந்திரித்தார்.

அருகில் சென்றார்.

''இரவிக்குறூப்பு இருக்கிறாரா?''

''இருக்கிறார்!'' பெண்மணி பதிலளித்தாள்.

''அவரைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன்.''

''கூப்பிடுறேன்!'' என்றபடி அவள் சிரித்தாள்.

குறூப்பு ஒரு கணம் திடுக்கிட்டார்.

அவள் சிரித்தபோது, வளைந்த கூர்மையான பற்கள் இரண்டு அவளின் கடைவாய்ப் பகுதியிலிருந்து வெளியேறின. அவள் வீட்டின் உட்புறம் போனாள்.

'ஆகா... இரவிக்குறூப்பு சாமானியமான ஆளல்ல' குறூப்பு மனசுக்குள் சொல்லிக் கொண்டார். 'மோகினி மற்றும் பிசாசுகளை வீட்டுவேலைகளுக்கு வைத்திருக் கிறார்.' வைத்தியர் சொன்ன வார்த்தைகள் ஞாபகம் வந்தன.

சற்று நேரத்தில் கழுகு ஒன்றை இடக் கையில் உட்கார வைத்தபடி, வலக் கையால் ஊன்றுகோலைப் பிடித்தவாறு இரவிக்குறூப்பு வெளிப்பட்டார்.

அந்த ஊன்றுகோல் வித்தியாசமாக இருந்தது. ஒரு பாம்பு நிமிர்ந்து நிற்பது போன்ற பிரமையைத் தந்தது. அவர் பிடித்திருந்த பகுதிக்கு மேற்புறம் அதன் படம் தெரிந்தது. உயர்ந்து நிமிர்ந்த படம். அதன் இரு பகுதிகளிலும் கண்களின் இடத்தில் இரண்டு சிவப்புக் கற்கள். இடக் கையில் கோபத்தோடு அமர்ந்திருப்பது போல் தோற்ற மளித்த கழுகுக்கு உண்மையிலேயே உயிர் இருந்தது.

கழுத்தில் இறகுகள் இல்லாமல் நீண்டு சிவந்த சதைப் பகுதியுடன் குரூரமும் வெறுப்பும், பயமும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது அந்தப் பறவை.

அது விக்கிரமக் குறூப்பை ஊன்றி கவனித்தது.

இரவிக்குறூப்பு நல்ல உயரமான மனிதர். முக்கோண வடிவிலிருந்த அவர் முகத்தில், புருவப் பகுதிகளில் முடி அதிகமாக இல்லை.

இரண்டு கண்கள்... அது கழுகின் கண்களைப் போலவே சிவந்திருந்தன.

முனை வளைந்த நீண்ட மூக்கு, நெற்றியின் கீழே, புருவத்தின் மத்தியிலிருந்து தொடங்கி நீண்டிருந்தது.

உதடுகள் மெலிதாகவும் தாடைப் பகுதி கூர்மையாக வும் இருந்தன. மார்பில் ரோமம் எதுவும் தட்டுப்பட வில்லை. ஆனால், அந்த இடத்தில் பாம்பின் வடிவம் ஒன்று பச்சை குத்தப்பட்டிருந்தது. பெரிய ருத்திராட்சங்கள் கோத்த வெள்ளி மாலை ஒன்றும் அதன் நடுப்பகுதியில் வௌவாலின் தலைப் பகுதி பதக்கம் போலும் தொங்கியது.

''உட்காருங்கள்!'' அந்தக் குரல் கழுகிடமிருந்து புறப்பட்டதாக குறூப்புக்குத் தோன்றியது.

விக்கிரமன் வராந்தாவில் அமர்ந்தார்.

நிலவிளக்கை ஒட்டி அறைவாசல்படி அருகே மாந்திரீகர் சப்பணமிட்டு அமர்ந்தார்.

''திரிவிக்கிரமக் குறூப்புதானே!''

''ஆமாம்!'' குரலில் பணிவு நிரம்பியிருந்தது.

''பாச்சு வைத்தியர் எல்லாவற்றையும் சொல்லி விட்டார் இல்லையா?''

''ஆமாம் சொன்னார்.''

''பாச்சு வைத்தியர் எங்கே?''

''ஏனோ என்னுடன் வரவில்லை. நீங்கள் பழைய இரவிக்குறூப்புதான் என்று...'' மீதி வார்த்தைகளை திரிவிக்கிரமன் முடிக்கவில்லை.

''அப்படித்தான் இருந்தேன். ஆனால், இப்போது நான் கறுப்பசாமி. என் குருவின் பெயரையே வைத்துக் கொண்டேன். இனிமேல் நான் கறுப்பசாமிதான். நீங்கள் கூட... ஏன் எல்லோருமே அப்படியே கூப்பிடலாம்!''

''கறுப்பசாமி...'' அவர் கையிலிருந்த கழுகு கனத்த குரலில் கூறியது.

''கறுப்பசாமி... கறுப்பசாமி... கறுப்பசாமி...'' அந்த வீட்டின் மரச்சுவர்களில் ஒளிந்திருந்த பெரிய பல்லிகள் அந்த வார்த்தையை அப்படியே எதிரொலித்தன. மொத்தமாகப் பறந்து வந்த வௌவால் கூட்டம் ஒன்றும் கறுப்பசாமி என்ற பெயரை உச்சரித்தது.

''இவர்கள் எல்லோரும் எனது கட்டளைக்காகக் காத்திருப்பவர்கள்!'' கறுப்பசாமி கூறினார்.

திரிவிக்கிரமக் குறூப்பு எல்லாவற்றையும் பார்த்தபடி பிரமிப்பில் ஆழ்ந்திருந்தார்.

''எங்கே பாச்சு வைத்தியர்?'' கறுப்பசாமியின் குரலில் கடுமை தென்பட்டது.

குறூப்பு நெளிந்தார்.

அப்போது ராமக்குறூப்பு மூச்சிரைத்தபடி அவரை நோக்கி ஓடி வந்தார்.

''என்னாச்சு குறூப்பு?'' திரிவிக்கிரமன் கேட்டார்.

''அதோ... அதோ...'' காரியஸ்தர் பயத்துடன் மீதி வார்த்தைகளை விழுங்கினார். அங்கே...

அவருக்குப் பின்னால் ரத்தம் வடியும் தலையை வலக் கையில் பிடித்தபடி பாச்சு வைத்தியர் பாய்ந்து வந்து கொண்டிருந்தார்!

# 6

பயங்கரமான அந்தக் காட்சியைக் கண்ட திரிவிக்கிரமன் திடுக்கிட்டு நடுங்கத் தொடங்கினார்.

மாந்திரீகரான கறுப்பசாமிகூட ஒரு கணம் பிரமித்தார். இப்படியொரு காட்சியை அவரது வாழ்நாளில் ஒரு போதும் அவர் கண்டதில்லை!

''என்ன செய்யலாம் குறூப்பே?'' கறுப்பசாமி கேட்டார்.

''வெட்டப்பட்ட தலை வெட்டப்பட்டதாகவே இருக்கட்டும். இல்லாவிட்டால், நான் தோல்வியடைந்ந தாகிவிடும்!''

''ஓகோ, அப்படியா?'' என்ற கறுப்பசாமி வீட்டுக்குள் நுழைந்து, கையில் ஒரு சூலத்துடன் திரும்பி வந்தார். மந்திரம் ஜபித்தபடி சூலத்தைப் பாச்சு வைத்தியரின் உடலை நோக்கி எறிந்தார்.

பாச்சு வைத்தியரது தலையற்ற உடலின் மார்புப் பகுதியைத் துளைத்த சூலம் மறுபுறமாக வெளியேறியது. இருந்தும் அந்த உடல் எதுவும் நடக்காதது போல் அப்படியே நின்றது சற்று நேரம். பிறகு வந்த வழியே அந்த உடல் ஓடத் தொடங்கி, பின்னர் மறைந்தது.

''உட்காருங்கள் குறூப்பே!''

குறூப்பு வராந்தாவில் அமர்ந்தார்.

''கோயில் எந்த இடத்தில் இருக்கிறது என்று அவனுக்குத் தெரியுமா?'' கறுப்பசாமி கேட்டார்.

''அது அவனுக்குச் சரியாகத் தெரியாது என்றே தோன்றுகிறது!''

''அதாவது... அவனுக்கு அந்த விஷயம் தெரியாமல் இருப்பதுதான் நல்லதென்று சொல்ல வருகிறீர்கள். அப்படித்தானே?''

''அவ்வளவுதான்!''

''நானும் அதையேதான் விரும்புகிறேன். கோயிலைக் கண்டுபிடித்து விட்டால், அதுவும் முறையான பூஜை தொடங்கப்பட்டு விட்டால் பகவதியின் சக்தி அதிகரிக்கும். அப்படி நடந்துவிட்டால், அதன் பிறகு நானும் தப்பிக்க முடியாது!''

''அப்படியானால், வந்திருப்பவனைத் தொலைத்து விடுவதுதான் சரியான வழி!''

''அதை என்னிடம் விட்டுவிடுங்கள்... நீங்கள் தைரியமாகப் புறப்படலாம்!''

**அ**ன்று இரவும் ஹரிகிருஷ்ணன் வழக்கம் போல் கோயிலைப் பற்றிய ஓலைச்சுவடிகளைப் புரட்டி, எதையோ தேடிக் கொண்டிருந்தான். நள்ளிரவு தாண்டிய நேரம். எங்கும் மயான அமைதி.

அந்த இல்லத்தின் முன்புறமிருந்த தெருவாசற்படிக்கு எதிரிலிருந்த எட்டி மரத்தின் இலைப் பரப்புக்குள் இருள் ஒளிந்திருந்தது. ஆகாயத்தில், கறுத்து இருண்ட மழை மேகங்கள் திரளத் தொடங்கின.

தொலைவில் எங்கேயோ நாய் ஒன்று ஊளையிட்டது. தொடர்ந்து எட்டி மரத்தின் இருளில் மறைந்திருந்த ஆந்தை ஒன்றும் பயமேற்படுத்தும் வகையில் கூவியது.

ஹரிகிருஷ்ணனுக்குத் தூக்கம் வரவில்லை. கோபிகாவையும் காணவில்லை!

அதே நேரம் கறுப்பசாமி தீவிரமான பூஜையில் ஈடுபட்டிருந்தார். கர்ணப் பிசாசினி என்கிற உக்கிர தேவதையின் சிலைக்கு முன்பாக அமர்ந்து அவர் மந்திரம் ஜபித்தார். அந்தச் சிலை பயங்கரமாக இருந்தது. அந்தச் சிலையின் காலடியில் பிணம் போல் ஏதோ ஒன்று கிடந்தது. அதன் கழுத்தில் மனிதத் தலைகளைக் கோத்த மாலை. மனிதர்களின் கை எலும்புகளை இடுப்புப் பகுதியில் ஆடை போல் அணிந்திருந்தது. அந்த உடலின் மற்ற பகுதிகளில் வேறு மறைவுகள் எதுவும் இல்லை.

அதன் முன்பாக எரிந்து கொண்டிருந்த ஹோம குண்டத்தில் பூஜைப் பொருட்களை எறிந்து மந்திரஸித்தியை வலுப்படுத்தினார். பிறகு உச்சரிக்கத் தொடங்கினார்:

''ஓம்... ஹ்ரீம் கர்ணப் பிசாசினி
கர்ணமே கதய ஸ்வாஹா
ஸ்மாசனஸோதா வனஸ்தோ
வா ஜபோக்ஷம் ஸமாஹித
தகாம்சம் ஜுஹு யாதவ்ஹ
நௌ பிபீதக ஸ்மித்வரே...''

சட்டென்று நீலநிற ஜுவாலை ஒன்று ஹோம குண்டத்திலிருந்து எழுந்து, உயர்ந்தது.

அந்த ஜுவாலைக்குள் ஹரிகிருஷ்ணன் நிலை விளக்குக்கு முன்னால் அமர்ந்து ஓலைச்சுவடியை வாசிப்பதை கறுப்பசாமி பார்த்தார். 'தகுந்த நேரம்தான்!' என்று அவருக்குத் தோன்றியது.

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?'' கறுப்பசாமி முன்னாலிருந்த சிலையிடம் கேட்டார்.

''நீ நினைத்தால் இப்போது அவனை அழித்து விடலாம்! அந்த மனையின் மேற்குத் திசையில் நிற்கிற எட்டி மரத்தில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அதிலிருந்து ஒருவரை அனுப்பி வைத்தால் போதும்!''

நாள் : ________

கறுப்பசாமி நெருப்பை அணைத்துவிட்டு எழுந்தார். வீட்டின் பின்புறத்துக்கு வந்தார். அவரின் இடக் கையில் கோல் விளக்கு ஒன்று இருந்தது.

ஹரிகிருஷ்ணன் இருந்த மனையின் முன்பகுதிக்கு வந்தார். செழித்து வளர்ந்திருந்தது எட்டி மரம். அதன் தண்டுப் பகுதி முழுவதிலும் ஏராளமான ஆணிகள் அறையப் பட்டிருந்தன.

கறுப்பசாமிக்கு விஷயம் இன்னதென்று விளங்கியது.

எத்தனையோ நூற்றாண்டுகளாக எந்தெந்த மந்திர வாதிகளோ மோகினிகள் மற்றும் பிரேத, ஆவிகளை ஆணி அறைந்து நிறுத்தி வைத்துள்ள இடம். விளக்கொளியில் அவர் ஒவ்வோர் ஆணியையும் கவனித்தார்.

பார்த்துக் கொண்டே இருந்தபோது சற்று நீளமான ஆணி ஒன்று அசைவதை கவனித்தார். அந்த ஆணியை மெதுவாக இழுத்தார்.

மறு விநாடி-

அந்த எட்டி மரமே பயங்கரமாகக் குலுங்கி அசைந்தது. கண் மூடித் திறப்பதற்குள் மரத்தையொட்டியே, மரத்தின் அதே உயரத்தில் பயங்கரமான உருவம் ஒன்று நின்று கொண்டிருந்தது. பனங்குலை போன்ற தலைமுடியை அவிழ்த்துவிட்டபடி கறுப்பாக, உடையற்ற நிலையில் பைசாசிகமான ஓர் உருவம்.

அந்த உருவம் கறுப்பசாமியைப் பிடிப்பதற்காக முன்புறமாகக் கை நீட்டியது. தன் கையிலிருக்கும் 'சர்ப்ப தண்டத்தை' கறுப்பசாமி அதன் முன்பாக நீட்டினார். சற்று நேரத்துக்குள் அந்த பிரமாண்ட உருவம் ஒரு சராசரி பெண் வடிவத்துக்கு மாறியது.

''பின்னாலேயே வா!'' என்ற கறுப்பசாமி திரும்பி நடக்கத் தொடங்கினார். அந்த உருவமும் அவரைப் பின் தொடர்ந்தது.

ஹரிகிருஷ்ணன் அப்போதும் ஓலைச்சுவடியை வாசித்துக் கொண்டிருந்தான்.

காற்று வீசும் மென்மையான சத்தம் கேட்டது. தொடர்ந்து தொலைவில் எங்கோ நாய்கள் ஊளையிடுவதும், கூடடைந்த பறவையினங்கள் பயத்தில் குரலெடுத்து அலறுவதும் கேட்டன.

தனியாக இருந்தாலும் கூட ஹரி இவை எதையும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

யாரோ நடந்து வரும் சத்தம்.

காலடியோசையும், கால் சலங்கையின் சன்னமான மணியோசையும் அவன் காதுகளில் பதிந்தன.

ஹரி சத்தம் வந்த திசை நோக்கித் திரும்பினான். மெல்லிய வெண்புகையால் உருவான வடிவம் ஒன்று தெருவாசற் கதவைத் தாண்டி வந்து கொண்டிருந்தது.

வருவது யாரென்று தெரிந்து கொள்ளும் ஆவலில் ஹரி கையிலிருந்த ஓலைச் சுவடியைக் கீழே வைத்துவிட்டு கவனித்தான்.

வந்தவள் இளந்திண்ணையை அடைந்து நிலவிளக்கின் அருகே நின்றாள். ஆனால், அது கோபிகா அல்ல!

மனத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகியான ஒரு பெண். ஜாக்கெட்டும், பாவாடையும், தாவணியும் உடுத்திருந்தாள். அவிழ்த்து விடப்பட்ட தலைமுடியின் முனையில் ஒரு சிறிய முடிச்சு தென்பட்டது. அங்கங்கள் ஒவ்வொன்றும் அளவெடுத்துச் செதுக்கியதுபோல் கச்சிதமாக இருந்தன.

வரைந்து வைத்தவை போன்ற புருவங்கள். அதன் கீழ் துள்ளும் கயல்விழிகள். அவற்றில் பளபளப்பு. அழகான மூக்கு, அழகான உதடுகள், எடுப்பான மார்புகளும், இடுங்கிய

நூலிடையும், திரண்ட புட்டப் பகுதிகளும் யார் பார்த்தாலும் அவளிடம் மோகங்கொள்ளத் தூண்டும்படி இருந்தன.

''யாரது? தெரியவில்லையே?'' ஹரி கேட்டான்.

''எல்லாம் பக்கத்து வீடுதான். பெயர் சாவித்ரி. அதோ தெரிகிறதே அதுதான் வீடு!'' தெருவாசற்படியை நோக்கி விரல் சுட்டிக்காட்டினாள்.

திறந்திருக்கிற தெருவாசல் வழியாக அவன் பார்த்தான். தொலைவில் எங்கோ ஒரு வெளிச்சப்புள்ளி தெரிந்தது.

''அதிசயமாக இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்களே?''

''இதுவும் எனக்கு வேண்டியவர்களது வீடுதான். கொஞ்சம் தூரத்துச் சொந்தம். உறவு வகையில் எனக்கு பெரிய தாய்மாமன். பாட்டி சொல்லிக் கேள்விப்பட்டி ருக்கிறேன். திடீரென்று இங்கு வெளிச்சம் தெரிந்தால், பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.''

அவளிடம் மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் ஹரி தயங்கி நெளிந்தான். மீண்டும் வெளிப்புறம் பார்த்தான். இப்போது அந்த வெளிச்சப் புள்ளியும் மறைந்து விட்டிருந்தது!

''நான் இப்படி உட்காரலாமா?'' வந்தவள் கேட்டாள்.

''இதையெல்லாம் என்னிடம் கேட்க வேண்டுமா? என்ன, உட்கார வேண்டியதுதான்!''

''உங்களுக்குத் தூக்கம் வந்தால், போய் படுத்துக் கொள்ளுங்கள். நான் நாளைக்குத்தான் போவேன்!'' வசியமாகச் சிரித்தபடி அவள் பேசினாள்.

அந்தச் சிரிப்பு அவன் அடிமன ஆழத்தைத் தொட்டது.

''காணவில்லையே என்று வீட்டில் தேடமாட்டார்களா?''

''தேடுவதற்கு யாருமில்லை!''

''அப்படியானால்?''

''வீட்டில் பாட்டி மட்டும்தான். அவரும் இந்நேரம் தூங்கிவிட்டிருப்பார்.''

அதற்குள் ஹரிகிருஷ்ணனுக்கு போய்ப் படுத்தே தீர வேண்டும் என்று தோன்றியது. இமைகள் பாரம் அதிகமாகி இழுபடுபவைபோல் தோன்றியது.

''எனக்குத் தூக்கம் வருகிறது'' என்றவாறு எழுந்தான்.

கனவில் நடப்பவனைப் போல் அவன் நடந்து போனான். வழக்கமான அவனது படுக்கையறைக்கு வந்தான். அங்கு எரிந்து கொண்டிருந்த கோல் விளக்கைக் கூட அணைக்காமல் சட்டென்று படுக்கையில் சரிந்தான்.

சற்று நேரத்துக்குள் அறைக்குள் அவளது காலடி யோசை கேட்டது.

அவன் படுத்திருந்த கட்டிலில் வந்து அமர்ந்தாள் அவள்.

அவன், அவளையே பார்த்தபடி படுத்திருந்தான். அவளின் வலக் கை, அவன் நெற்றி வழியாக இறங்கியது. புருவம் தாண்டி மூக்குப் பகுதியில் அவளின் சுண்டு விரல் இறங்கி, படிப்படியாக உதடு... தாடை.... என்று நெஞ்சுப் பகுதியை எட்டியது. அவளின் உடல் அவன் வெறி கொள்ளுமளவுக்கு இருந்தது. அவள் மென்மையாக ஒரு பூ மாதிரி அந்தக் கட்டிலில் சரிந்தாள்.

அவள், அவனைக் கட்டியணைக்க முயற்சித்ததும், அவள் உடல் சட்டென்று வடிவம் மாறியதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

பயங்கரமும் பைசாசிகமுமான அந்த உருவத்தை கண்டு திடுக்கிட்ட ஹரி, படுக்கையிலிருந்து துள்ளி யெழுந்தான்.

அந்த உருவத்தைக் கட்டிலிலிருந்து தள்ளிவிட ஹரி முயன்றான். அதற்குள் அந்த உருவம் பிரமாண்டமாக வளர்ந்து மேற்கூரையைத் தொட்டது!

ஹரி அதனிடமிருந்து தப்பிக்க முயன்றான். என்ன வழியென்று சுற்றுமுற்றும் பார்த்தபோது சுவரில் ஒரு பத்ரகாளியின் படம் தொங்கிக் கொண்டிருந்தது. சட்டென்று அதை எடுத்து அந்த உருவத்தின் மீது எறிந்தான்.

என்ன ஆச்சரியம்!

சக்ராயுதம் மாதிரி அந்தப் படம் சுழன்று சுழன்று அந்த உருவத்தின் இடுப்புப் பகுதியை ஊடுருவி இரண்டாக வெட்டி மறுபுறம் தரையில் போய் விழுந்தது!

இரண்டு துண்டுகளாகத் தரையில் விழுந்த அவள், ஹரிகிருஷ்ணன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே காற்றில் கரைந்து மறையவும் செய்தாள்.

ஹரி கீழே விழுந்திருந்த காளியின் படத்தை எடுக்க முயன்றான். ஏற்கெனவே இற்றுப் போயிருந்த படம், தூள் தூளாக நொறுங்கி விட்டிருந்தது.

இருப்பினும் பெரிய ஆபத்து ஒன்றிலிருந்து தப்பித்த ஆறுதலுடன் கட்டிலில் படுத்தான்.

சற்று நேரத்தில் தன்னை யாரோ அழைப்பது போல் தோன்றவே... கண் திறந்தான். கோபிகாவாகத்தான் இருக்கும் என்று நினைத்தான். ஆனால் அந்தக் குரல் அவளுடையது அல்ல.

''யாரென்று புரியவில்லையே?'' ஹரி கேட்டான்.

''நான்தான் உங்களை இங்கே வரவழைத்தவள்!'' தெளிவற்ற ஓர் உருவம் பதிலளித்தது.

''கோபிகா எங்கே?''

''கோபிகாவின் லட்சியம் நிறைவேறி விட்டது. அவள் போய்விட்டாள். நீங்கள் மந்திரஸித்தியில் முழுமையடை

வதற்காகத்தான் அவள் இங்கு தங்கியிருந்தாள். இனிமேல் நீங்கள் இங்கு தங்க வேண்டியதில்லை!''

''நான் இங்கிருந்து போய்த்தான் தீர வேண்டுமா?'' ஹரி ஏமாற்றத்துடன் கேட்டான்.

''உங்களைப் புறப்படச் சொல்வது, உங்களது நன்மைக்காகத்தான். புறப்படும்போது இங்கிருந்து கிடைத்த ஓலைச்சுவடிகளையும் எடுத்துக் கொள்ளுங்கள்!''

''நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்'' தன்னுடன் பேசுவது உண்மையில் திவ்வியமான சக்தி வாய்ந்த யாரோ என்பது ஹரிக்குப் புரிந்தது.

''இங்கிருந்து கிழக்குப் புறமாக இரண்டு மைல் தூரம் போனால், அங்கு ஓர் இல்லம் உண்டு. யாரிடமாவது விசாரிக்க வேண்டுமென்று தோன்றினால் 'சங்கரமங்கலம்' ஸ்ரீதேவிக்குட்டியைத் தேடி வந்ததாகச் சொல்லுங்கள். அது போதும்!''

ஹரி அந்தப் பெயரை மனத்தில் கவனமாகப் பதிய வைத்துக் கொண்டான்.

''சங்கரமங்கலம் ஸ்ரீதேவிக்குட்டி!''

''நாளை மாலை நேரத்தில் அங்கு போய்ச் சேர்ந்தால் போதும்!''

''அப்படியே செய்கிறேன்!''

அந்த உருவம் மறைந்தது, மறுநாள் மாலை நேரத்தில் ஹரி தனது தோள்பையுடன் அந்த மனையிலிருந்து வெளியேறினான். மனையிலிருந்து சற்றுத் தொலைவு நடந்த பிறகு பின்னால் ஏதோ சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தான். அது வரை அவன் தங்கியிருந்த மனை தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது!

தீ ஜுவாலைகள் விநாடிக்கு விநாடி மேற்புறமாக உயர்ந்து கொண்டிருந்தன.

எங்கிருந்தெல்லாமோ பாய்ந்து வந்த காற்று அக்னி பகவானுக்கு உதவியது.

''என் தாயே... பகவதி...'' ஹரி மனமுருகிப் பிரார்த்தித்தான். ஏறத்தாழ ஒரு மைல் தூரம் நடந்த பிறகு களைப்புத் தோன்றியது.

அது ஒரு நான்கு முனைச் சந்திப்பு. அருகில் ஒரு சின்ன டீக்கடை இருந்தது. ஹரி அதற்குள் நுழைந்தான்.

புதியவனான ஹரியை, கடைக்காரன் மற்றும் அங்கிருந்த இருவர் உற்று கவனித்தனர்.

''ஒரு டீ குடுங்க!'' என்ற ஹரி ஒரு தூணின் மீது சாய்ந்து நின்றான். அதில் தொங்கிக் கொண்டிருந்த சிவலிங்கத்தின் படத்தை உற்றுப் பார்த்தான்.

''இந்தப் பக்கம் எங்கே போகிறீர்கள்?'' உட்கார்ந் திருந்தவர்களில் ஒருவரான நடுவயது நபர் குசலம் விசாரிக்கத் தொடங்கினார்.

''பக்கத்தில் சங்கரமங்கலம் வரையில்...''

ஹரியின் வார்த்தைகளைக் கேட்ட மூவரும் ஒருவரை யொருவர் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

''ஐயோ... அந்த வீட்டில் இப்போது யாரும் இல்லையே!'' ஒருவர் பேசினார்.

''இருக்காங்க... ஸ்ரீதேவிக்குட்டி!''

''யாரு...? ஸ்ரீதேவிக்குட்டியா? கடவுளே என்ன இது?''

அவர்கள் தங்கள் மூக்கின்மேல் விரல் வைத்தார்கள்!

# 7

‘‘என்ன... நீங்கள் எல்லோரும் இப்படி வெறித்துப் பார்க்கிறீர்கள்?’’ வாங்கிய டீயை மேஜை போல் இருந்த பலகை மீது வைத்த ஹரி கேட்டான்.

‘‘இல்லை... ஒன்றும் இல்லை.’’ பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு மூவரும் மௌனமானார்கள்.

பெஞ்சிலிருந்து எழுந்து காசைக் கொடுத்துவிட்டு ஹரி வெளியேறினான்.

‘‘இந்த மாதிரி இவரை யார் சொல்லி அனுப்பி யிருப்பார்கள்?’’ டீக்கடைக்காரர் வாசுதேவன் கேட்டான்.

‘‘தம்பி கனவு கண்டிருப்பார். அந்தப் பெண் லேசுப் பட்டவளா என்ன?’’ கொள்ளிக்கட்டை நெருப்பிலிருந்து பீடி பற்ற வைத்தபடி கேசவன் பிள்ளை கூறினார்.

‘‘அப்படித்தான் இருக்கும் கேசவா!’’

ஹரிகிருஷ்ணன் முன்புறமாக நடந்தான். அதன் பிறகு வழியில் வேறெவரும் தட்டுப்படவில்லை. ஏறத்தாழ இரண்டு மைல் தூரத்தைக் கடந்த பிறகு, சற்றுத் தொலைவில் பழங்கால வீட்டின் மேற்கூரை ஒன்று கண்ணுக்குத் தெரிந்தது.

ஆனால், அந்த வீட்டுக்குச் செல்லும் வழி எதுவும் தட்டுப்படவில்லை. இரு புறமும் வரிசையாக மரங்கள் நின்றிருந்ததால், முன்னொரு காலத்தில் அதனூடாக ஒரு வழி இருந்திருக்க வேண்டுமென்று ஹரிக்குப் புரிந்தது.

காட்டுச் செடிகள் புதராக வளர்ந்து பாதையை ஆக்கிரமித்திருந்தன. இருப்பினும் அதையெல்லாம்

பொருட் படுத்தாமல் ஹரி கூப்பிடு தொலைவிலிருந்த அந்த வீட்டை லட்சியமாக்கி ஒதுங்கி நடந்தான்.

நேரம் இருட்டிக் கொண்டு வந்தது. தோள் பையிலிருந்து டார்ச் லைட்டை எடுத்து சுவிட்சை அழுத்தி விட்டு, முன்புறமாக வெளிச்சம் பாய்ச்சியபடி நடந்தான்.

'இன்னும் சற்று முன்பாகப் புறப்பட்டிருக்கலாம்' ஹரி யோசனையிலாழ்ந்தான். 'நான் அந்த இல்லத்திலிருந்து வெளியேறியவுடன் தீப்பிடித்துக் கொண்டது. ஒருவேளை நான் புறப்பட மேலும் தாமதித்திருந்தால்... நானும் அந்த நெருப்பில் அகப்பட்டு வெந்து போயிருக்க வேண்டியது தான்!'

சற்றுத் தூரத்தில் இடிந்து சிதிலமடைந்த படிக்கட்டுத் தென்பட்டது. பாதை அத்துடன் முடிவடைந்து விட்டது. அதையொட்டி ஒரு பெரிய கரும்பனை மரம் வளர்ந் திருந்தது.

ஹரி அண்ணாந்து பார்த்தான்.

ஆகாயத்தைத் தொட்டு விடுவது மாதிரி உயரமாக வளர்ந்திருந்தது பனைமரம். மங்கிய வெளிச்சத்தில் அகலமாகப் பரந்து விரிந்திருந்த அந்த வீடு அல்ல... மாளிகை இடிந்து சிதிலமாகியிருப்பது தெளிவாகத் தெரிந்தது. அந்த வீட்டின் அப்போதைய தோற்றமும் பனைமரப் பின்னணி யும் ஒரு மோகினிக் கதையின் களம்போல் காட்சியளித்தது.

ஹரி, டார்ச் லைட்டை எரியவிட்டபடி வீட்டுக்குள் நுழைந்தான்.

அவனுக்காகவே காத்திருப்பது போல், நிலைவாசற் படியில் நிலவிளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

அப்படியானால், இந்த வீட்டுக்குள் ஆள் புழக்கம் இருப்பது உண்மை என்ற ஆறுதலுடன், ஹரி தோள் பையை இறக்கி முன்புற அறையில் வைத்தான்.

''ஹரிகிருஷ்ணன் வந்துவிட்டீர்களா?'' உள்ளிருந்து ஒரு பெண் குரல் கேட்டது.

''வந்துவிட்டேன்!'' ஹரி உரத்த குரலில் பதிலளித்தான்.

உட்புறமிருந்து எவரோ நடந்து தன்னை நெருங்குவதாக, தொடர்ந்து கேட்ட காலடிச் சத்தம் உணர்த்தியது.

முன்னறையின் உட்புற வாசலுடன் அந்தச் சத்தம் நின்று போனது.

ஹரிகிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான். தேய்த்துப் பளபளப்பாக்கிய வெண்கல விளக்கு ஒன்றைக் கையில் பிடித்தவாறு இளம் பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்.

அவள் வைத்திருந்த விளக்கு வெளிச்சத்திலேயே, அவன் அவளை கவனித்தான்.

மேற்புறம் ரவிக்கை. இடுப்பிலிருந்து கீழே 'முண்டு' (வேட்டி) கட்டியிருந்தாள். அவள் நடந்து ஹரிகிருஷ்ணனை நெருங்கினாள். அவளது சமீபம் மனோரஞ்சித வாசனையை நினைவூட்டியது. ஹரியின் அருகில் விளக்கை வைத்து விட்டு, இளந்திண்ணையில் இறங்கினாள்.

''ஸ்ரீதேவிக் குட்டியம்மாதானே?''

''ஆமாம்!''

அவன், அவளை ஏற இறங்கப் பார்த்தான். எல்லா விதமான அழகுகளும் பொருந்திய ஓர் உருவம். எந்த அங்கமும் இன்னும் அப்படி இருந்திருக்கலாமோ... இப்படி இருந்திருக்கலாமோ... என்ற நினைப்புக்கே இடம் தரவில்லை!

நிலவிளக்கில் எரிந்து கொண்டிருந்த ஒற்றைத் திரியின் வெளிச்சத்திலும் அதன் வெண்கலப் பளபளப்பிலும் அவள் புதிதாக வடித்தெடுத்த கச்சிதமான ஓர் அழகுச் சிலையாகத் தெரிந்தாள்.

அந்தப் பெயர் அவளுக்குப் பொருத்தமாக இருந்தது.

''ஸ்ரீதேவிக்குட்டியம்மா!'' ஹரி தன்னையும் மீறி அந்தப் பெயரை மீண்டும் ஒரு தடவை உச்சரித்தான்.

''இந்தப் பெயர் பிடித்திருக்கிறதா?''

''பிடித்திருக்கிறது!''

''சரி மிச்சமெல்லாம் சாப்பாட்டுக்குப் பிறகு. அதற்கு முன்னால் குளிக்க வேண்டுமில்லையா? அதோ அந்தப் பக்கம் கிணறு இருக்கிறது. அதிக ஆழமில்லாத கிணறுதான். தண்ணியும் மேலேயே இருக்கிறது.''

குளியல் துண்டை எடுத்துக் கொண்டு நிழல் பக்கமாக ஒதுங்கினான். சாதாரணமாக அந்த நேரத்தில் குளிப்பது அவன் வழக்கம். நல்லவேளையாக இன்று அதுவும் முடங்கவில்லை.

குளித்துவிட்டு வருவதற்குள் இரவுச் சாப்பாடு தயாராக இருந்தது. ஹரிக்கு மிகவும் விருப்பமான கஞ்சியும், மாவடுவும், சுட்ட அப்பளமும் இருந்தன.

கோபிகாவின் சமையலும் இதேதான். எல்லாம் சொல்லி வைத்த மாதிரி உள்ளன!

அவன் சாப்பிடுவதை அவள் உற்சாகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ஹரியும் அதை கவனிக்கத் தவறவில்லை.

''நீங்கள் சட்டென்று அங்கிருந்து புறப்பட்டதும் நல்லதற்குத்தான்!''

''எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''அதுதான் தீப்பிடித்து எரிந்து விட்டதே!''

''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''அதையெல்லாம் இங்கே வந்து உடனுக்குடன் சொல்வதற்கு ஆட்கள் இருக்கிறார்கள்!''

''அது யார்?''

''அதையெல்லாம் பிறகு சொல்கிறேன். திருப்தியாகச் சாப்பிடுங்கள்!''

சாப்பிடும்போது, ஹரிகிருஷ்ணனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பாத்திரம் தான் சந்தேகத்துக்குக் காரணம்!

தனக்கு மிகவும் பழக்கமான பாத்திரம் போலவே தோன்றியது. ஒரு தடவை அதைத் திருப்பிப் பார்த்திருந்தால் சந்தேகம் நிவர்த்தியாகியிருக்கும். தான் வீட்டில் வழக்கமாகச் சாப்பிடும் பாத்திரத்தின் பின்புறம் பாட்டியின் பெயர் பொறித்திருக்கும். இப்போது சாப்பிடும்போது அதை எப்படித் திருப்பிப் பார்ப்பது?

''எதைப் பற்றி யோசிக்கிறீர்கள்?'' ஸ்ரீதேவி கேட்டாள்.

''ஒன்றுமில்லை!'' சீக்கிரமாகச் சாப்பிட்டு எழுந்தான்.

''ஹரி உங்களுக்கு நல்ல அறையை ஒதுக்கி வைத்திருக்கிறேன்!'' ஹரி நடு முற்றத்திலிருந்த பால் கிண்டியின் நீரைச் சாய்த்துக் கைகழுகிவிட்டு நிமிர்ந்தபோது ஸ்ரீதேவி கூறினாள்.

அவனை, அவள் அழைத்துக் கொண்டு போனாள்.

அந்த அறைக்குள்ளும் வெண்கல விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

''நான் இந்த வீட்டுக்கு வரும் வழியில் எதிர்ப் பட்டவர்கள் எல்லோரும் என்னை ஒரு மாதிரி சந்தேகமாகப் பார்த்தார்கள்!'' கட்டிலில் உட்கார்ந்தவாறு பேசினான்.

''ஏன்?''

''உங்களது பெயரைச் சொன்னதால் அப்படிப் பார்த்தார்களோ, என்னவோ...''

''அதற்கென்ன பரவாயில்லை! உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்லி வைக்கிறேன். என்னிடம் நீங்கள் எதையும் கேட்காமல் இருக்க வேண்டும்!''

''அப்படியானால்?''

''அதாவது அது எப்படி? இது எப்படி? இது எதனால், ஏன் இந்த மாதிரி என்றெல்லாம் கேட்கக் கூடாது!''

''கேட்க மாட்டேன்.''.சட்டென்று முற்றப் பகுதியில் எதுவோ பறந்து வந்து உட்கார்ந்த சத்தம் கேட்டது. அதை கவனித்த ஸ்ரீதேவி உடனே வெளியேறினாள். அறையிலிருந்த ஹரியும் அவளைப் பின் தொடர்ந்தான்.

நடு முற்றத்தில் - நிலா வெளிச்சத்தில் அன்று வரை அவன் பாத்திராத ஒரு புதிய பறவையைப் பார்த்தான். அதன் கண்கள் சிவப்பு நிற முத்துகள் போல் பளபளத்தன.

''கழுகு!'' ஸ்ரீதேவி கூறினாள்.

அவள் சொன்னது கேட்டதுபோல், அது தலையை உயர்த்திப் பார்த்தது. பிறகு அந்த நிலையிலிருந்தே பறந்து மேலெழும்பியது அது. சிறகடியோசை கேட்டது. காற்றைக் கிழித்துக் கொண்டு கழுத்தில் இறகுகள் இல்லாத அவலட்சணமான அந்தப் பறவை பறந்து அகலுவதை ஹரி கவனித்தான்.

''இது எப்படி இங்கு வந்தது?'' ஹரி கேட்டான்.

''அதையெல்லாம் நீங்களே தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இந்த இடத்துக்கு வந்திருக் கிறீர்கள்!''

ஹரிகிருஷ்ணன் எண்ணெய்க்காட்டு மனையிலிருந்த போது, தெளிவற்ற உருவத்தில் தென்பட்ட பெண்மணி கூறியதை நினைத்துப் பார்த்தான். நாகமாணிக்கத்தின் வெளிச்சத்தில் தங்க நிறப் பாம்பு காவலிருந்த ஓலைச்சுவடி இப்போது தனது தோள்பையில் உள்ளது. எத்தனையோ நூற்றாண்டுகளைக் கண்ட ஓலைச் சுவடி அது.

''சுவடியை எடுங்கள்... நான் சொல்லித் தருகிறேன்!''

ஹரிகிருஷ்ணன் எழுந்து ஆணியில் தொங்கும் பையிலிருந்து ஓலைச்சுவடியை எடுத்தான்.

''இதிலுள்ள மிகவும் முக்கியமான சில மந்திரங்களை முதலில் நீங்கள் மனப்பாடம் செய்ய வேண்டும். அதிலும் யக்ஷிணி மந்திரங்கள் அத்தியாவசியம். அப்படிப்பட்ட ஒன்றான வட யக்ஷிணி மந்திரத்தை நான் வாசிக்கிறேன். கவனியுங்கள்.

**ஜஹ் யேஹியக்ஷி யக்ஷி மகாயக்ஷி**
**வட விருக்ஷனிவாசினி ஸீஹ்ரம் மே**
**ஸர்வ ஸௌக்யம் குருகுர் ஸ்வாஹா**

நான் சொன்னபடி சொல்லுங்கள்!''

மறுமுறை அவளைச் சொல்ல வைக்காமல், ஹரி அதை தெளிவாகத் திருப்பிச் சொன்னான். அதன் பிறகு அத்துடன் தொடர்புள்ள மந்திரங்கள் சிலவற்றைச் சொன்னாள்.

''இந்த மந்திரத்தைச் சரியாகச் சொன்னால் யக்ஷிணியின் கால்சிலம்பின் சத்தம் சங்கீதமாகக் கேட்கும்.

'ததக் ப்ரஜயேன் மந்த்ரமானிஸீதம் ஸமாஹித:
ஸ்ருணோதி நபுராரவம் மந்த்ரீ கீதத்வனிம் ததா'

தொடர்ந்து என்ன சத்தம் கேட்டாலும் நீங்கள் பயப்படாமல் ஜபித்துக் கொண்டே இருந்தால், தேவி பிரத்தியட்சமாவார். உங்களை அவளுடன் கூடும்படி கூறுவாள். தேவியின் ஆசையை நீங்கள் நிறைவேற்றினால், அதன் பிறகு அவளிடம் நீங்கள் எது கேட்டாலும் கிடைக்கும்!''

ஸ்ரீதேவியின் வார்த்தையைக் கேட்ட ஹரி தன்னையும் மீறி தடவை அவளை தலை முதல் பாதம் வரை ஊன்றிப் பார்த்தான். காரணம், ஒரு 'மோகினி' என்பதற்கு எதெல்லாம் லட்சணங்கள் என்று வரையறுத்திருக்கிறார்களோ, அதெல்லாம் அவளிடமும் பொருந்தியிருப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

அவர்கள் ஓலைச்சுவடியை வைத்துக் கொண்டு பேசும் போது, அந்த வீட்டுக்கு வெளியே மற்றொரு சம்பவம் நடைபெற்றது.

அந்த வீட்டின் முற்றத்திலிருந்து பறந்து உயர்ந்த கழுகு கறுப்பசாமியை நெருங்கி அவரின் கைத்தண்டில் அமர்ந்தது. பிறகு மனிதக் குரலில், தான் கண்டவற்றை அவரிடம் விவரிக்கத் தொடங்கியது.

''ஓகோ... அப்படியா சங்கதி?''

கறுப்பசாமி உடனே ஓலையொன்றை எடுத்து அதில் நாக மந்திரம் எழுதி, அதை கழுகின் வாயில் செருகினார்.

கழுகு அதை வாயில் கவ்வியபடி, மனையின் தென்புறமிருந்த பாம்புக் கோயிலை அடைந்தது.

நாகமந்திரம் எழுதிய ஓலையைக் கீழே போட்டது.

அடுத்த நொடி அந்தப் பாம்புக் கோயிலின் இருண்ட பகுதியிலிருந்த பிரமாண்டமான பாம்பு ஒன்று ஊர்ந்து வந்து கழுகை நெருங்கியது. அந்தப் பாம்பை அலகில் கொத்தி யெடுத்த கழுகு, உடனே ஆகாயத்தில் பறக்கத் தொடங்கியது.

சங்கரமங்கலம் வீட்டையடைந்த கழுகு சற்றுத் தாழ்ந்து, பாம்பை அதன் நடுமுற்றத்தில் இறக்கி விட்டது.

பின்பு அந்தப் பாம்பு, எவரோ வழிகாட்டியது மாதிரி நேராக ஹரி படுத்திருக்கும் அறைக்குள் ஊர்ந்து போனது.

ஹரி அங்கு தனியாக இருந்தான். ஸ்ரீதேவி அங்கிருந்து வெளியேறி இருந்தாள்.

பாம்பு ஒன்று ஊர்ந்து வருவதை அதிர்ஷ்ட வசமாக ஹரி கவனித்தான். அப்போது அவன் கருட மந்திரம் வாசித்துக் கொண்டிருந்ததும் தற்செயல்தான்.

''க்ஷிப ஓம் ஸ்வாஹா!'' என்று உச்சரித்து முடித்தானோ இல்லையோ, அப்போது, எங்கிருந்தோ சிறகடியோசை ஒன்று கேட்டது.

அவனால் அவன் கண்களை நம்ப முடியவில்லை. மேகத்துண்டு ஒன்று பெயர்ந்து வருவது போல் நிழல் தெரிந்தது. அந்த நிழல் பாம்பின் மீது விழுந்தபோது, பாம்பு நெளிந்தது. பருந்தின் இரண்டு பெரிய அலகுகளும் விரிந்து பாம்பைக் கொத்தியெடுப்பதை ஹரி கண்டான். பாம்பு வெளிப்புறமாக இழுக்கப்பட்டு மறைந்தபோது, அவன் கதவை மூடி தாழிட்டான். கிளம்பி வந்தது முதல் ஒரே சோதனைதான். ராக்கோழி கூவியது. சரி சற்று நேரம் தூங்கலாம் என்று முடிவு செய்து கட்டிலில் சாய்ந்தான். அப்போதும் அவனையுமறியாமல் அவன் உதட்டில் ஒரு மந்திரம் உயர்ந்தது.

'ததக்ரே... நூபுராரவம்...'

சட்டென்று அந்த அறைக்குள் கால் சிலம்பின் ஓசை கேட்டது!

## 8

இருட்டில் சிலம்பொலி கேட்டதால், ஹரி காதின் கவனத்தைக் கூர்மைப்படுத்தினான்.

எங்கிருந்து வருகிறது அந்தச் சத்தம்?

ஒருவேளை தான் உச்சரித்த மந்திரம் பலன் அளிக்கத் தொடங்கி விட்டதா?

அப்படியானால், ஸ்ரீதேவி சொன்னது அவ்வளவும் சத்தியமான வார்த்தைகள்தான்!

யக்ஷியின் ஆசையை நிறைவேற்றி விட்டால், நாம் கேட்டது கிடைக்கும் என்றல்லவா சொன்னாள்.

அந்தச் சத்தம் நெருங்கி விட்டிருந்தது.

''நான் வந்திருக்கிறேன்!'' மிக அருகில் ஒரு குரல் கேட்டது. அதே நேரம் மச்சுப் பகுதியைத் தாங்குவதற்காக நிறுத்தப்பட்டிருந்த சிற்ப வேலைப்பாடு நிறைந்த தூணில் செருகியிருந்த கோல் விளக்கிலிருந்து ஒரு கை உயர்ந்தது.

விளக்கு இப்போது எரியத் தொடங்கியிருந்தது. உற்றுப் பார்ப்பதற்குள் தனக்கு முன்பாக தேவதை போன்ற அழகுடன் நின்றிருந்த பெண்ணைக் கண்டு, ஹரி வியப்படைந்தான்.

அவன் படித்திருந்த எத்தனையோ சுவடிகளில் யக்ஷி என்கிற மோகினியைப் பற்றி நிறையவே குறிப்பிடப்பட்டிருந்தது. படிக்கும்போது அதெல்லாம் நடைமுறைக்கு சரிப்பட்டு வராத சுவாரஸ்யங்களாகவும் தோன்றின.

மோகினி என்பதை பைசாசிகமான ஓர் உருவமாகத் தான் அவன் கற்பனை செய்திருந்தான். அப்போதெல்லாம் அதைப் பற்றி நினைக்கவே அவன் பயந்ததும் உண்டு.

''என்னைக் கூப்பிட்டீர்கள் இல்லையா?'' அவளின் குரலும் மந்திரம் போலவே இருந்தது.

''நான் மந்திரம் சொன்னேன்.''

''அதனால்தான் வந்திருக்கிறேன்!''

அவள் கட்டிலில், அவனருகே அமர்ந்தாள்.

தாமரைப் பூவின் மகரந்தம் போல் ஒரு வாசனை அவளிடமிருந்து புறப்பட்டது. அவள் அணிந்திருந்த உடைகள் பூமியில் நெய்யப்பட்டதாகவே தெரியவில்லை. மேகத் துண்டுகளால் இணைக்கப்பட்டது போலிருந்தது. ஒரு சங்கீதத்தின் ஆவரணம் போல்!

ஹரிகிருஷ்ணனின் முடி நிறைந்த மார்புப் பகுதியில் அவளின் கைவிரல்கள் அளைந்தபோது, முடிகளுக்கு நடுவே மேகங்கள் நகர்வது போல் தோன்றியது.

அவளின் இதழ்கள் ஈரமாக இருந்தன.

பிறை நெற்றியும், நட்சத்திரங்கள் ஊற்றெடுக்கும் கண்களும், அந்திச் சாயமேற்ற கன்னக் கதுப்புகளும், மேனியின் தங்க நிறமும்... அவனுக்குள் வேட்கையைக் கிளறி விட்டன.

மலரம்பு மாரில் பாய்ந்தவனைப் போல் அவன், அவளை மார்புறத் தழுவினான்.

அவனுடையதும் அவளுடையதும் மூச்சுக் காற்றுகள் ஒன்றிணைந்தபோது, தேவசபையில் மேனகையின் கால் சிலம்பின் ஒலி அவனுக்குக் கேட்டது.

இரவின் மூன்றாம் யாமம் முடிவடையும்போது, அவள் கேட்டாள்: ''இங்கே எதற்காக வந்தீர்கள்?''

''எழிமலைக் கோயிலைக் கண்டுபிடிப்பதற்காக!''

''உங்களுக்கு நான் உதவுகிறேன். ஆனால், தற்சமயம் தேவியின் சக்தி மிகவும் குன்றி விட்டிருக்கிறது. முறையான பூஜை மற்றும் ஹோமங்களால் மட்டுமே தேவியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியும்!''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' ஹரி ஆவலுடன் கேட்டான்.

''இங்கு தங்கியிருந்தாலே போதும். ஸ்ரீதேவி குட்டிக்கு அதெல்லாம் தெரியும்.''

''கோயில் எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்!''

''சொல்கிறேன். மலையடிவாரத்தில் தட்டையான ஒரு பகுதி இருக்கிறதல்லவா? அதாவது தற்போது தோட்டமாக உள்ள இடம்?''

ஹரிகிருஷ்ணன் உடனே அந்த இடத்தை மனத்தில் அடையாளப்படுத்த முயன்றான். வரும்போதே மேகங்களை உரசியபடி இருக்கும் எழிமலையின் சிகரங்களை அவன் கவனித்தான். அதன் தாழ்வாரத்தில் அகலமாகப் பரந்து

விரிந்திருக்கும் நிலப் பகுதியில் திரிவிக்கிரமக் குறுப்பு ரப்பர் மரங்களை நட்டுச் செழிப்பாக்கி இருப்பதையும் கவனிக்கத் தவறவில்லை. ஒருவேளை அதன் மையத்தில் கோயில் இருக்கக் கூடும் என்று அவன் ஏற்கெனவே யூகித்திருந்தான்.

எனினும் துல்லியமான இடம் தெரிந்தால்தான் பக்தர்களை அதற்குத் துணையாகத் திரட்ட முடியும்.

''அந்தக் காலத்தில் கோயில் நிலைகொண்டிருந்த பகுதியின் தென்மேற்கில் பிரமாண்டமான ஓர் ஆலமரம் இருந்தது. இப்போதும் அந்த மரம் அதே இடத்தில் இருப்பதை ஓர் அதிசயம் என்றே குறிப்பிட வேண்டும்.''

அதைக் கேட்ட ஹரிக்கு வியப்புத் தோன்றியது. பூமிக்கடியில் மறைந்த ஆலமரம் பூமியைத் துளைத்துக் கொண்டு வளர்கிறதா?

''அந்த மரத்தின் மேற்பகுதி இப்போதைய நிலப் பரப்பின் மீது துளிர்விட்டு வளர்ந்திருக்கிறது.''

''உண்மையாகவா!'' ஹரி வியப்பு மாறாதவனாகக் கேட்டான்.

அப்போது மூன்றாவது யாமம் முடிவடையப் போவதை அறிவிக்கும் பொருட்டு, ஏதோ ஒரு பறவை கூவியது. சட்டென்று அவள் எழுந்தாள்.

அவளது கால் சலங்கையின் ஒலி மெதுவாக அகன்று அகன்று மறையவும் செய்தது. கனவிலிருந்து விழித்து எழுபவன் போல் ஹரி கட்டிலிலிருந்து எழுந்தான். விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. அப்போதுதான், தான் அதுவரை அனுபவித்தவை உண்மைதான் கனவல்ல என்பது விளங்கியது.

மறுநாள் மதியத்துக்குப் பிறகு ஹரி அங்கிருந்து புறப்பட்டான். சற்றுத் தொலைவு நடப்பதற்குள்ளேயே தன்னை நோக்கி ஒருவர் வந்து கொண்டிருப்பதை கவனித்தான்.

வந்தவர், ஹரிகிருஷ்ணனை உற்றுப் பார்த்தார். ஹரியும் அவரைக் கூர்ந்து பார்த்தான்.

''நேற்று டீக்கடையில் பார்த்தவர்தானே நீங்கள்?'' வந்தவர் கேட்டார்.

''ஆமாம்!'' ஹரி பதிலளித்தான்.

''இப்போது எங்கிருந்து வருகிறீர்கள்?''

''நேற்றுச் சொன்னேனே... அதே வீட்டில் இருந்து தான்.''

''சங்கரமங்கலம் வீட்டிலிருந்தா? கடவுளே!'' முந்தைய நாள் நடந்த பேச்சு அவரது நினைவுக்கு வந்தது போலும்.

''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?''

''அந்த வீட்டில் ராத்திரி தங்கிவிட்டு திரும்பி வருகிறீர்கள்... அப்படித்தானே?''

''ஆமாம்! நீங்கள் ஏன் அதற்கு இவ்வளவு பதறுகிறீர்கள்?''

''ஏன் பதறுகிறேனா? இதுவரை அந்த வீட்டுக்குப் போனவர்கள் யாரும் உயிருடன் திரும்பி வந்ததில்லை. அந்த வீட்டுக்கு முன்னால் பனை மரம் ஒன்று நிற்பதை கவனித்திருப்பீர்களே!''

''ஆமாம், இருக்கிறது!''

''எத்தனை பேரின் உயிரைக் குடித்திருக்கிறது தெரியுமா அதில் குடியிருப்பது?''

''அப்படியானால், இதுவரை அந்த இடத்துக்கு சரியான நபர் யாரும் வரவில்லை என்று தெரிகிறது!''

வந்தவர் ஹரியை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்து விட்டு விடுவிடுவென்று நடந்து போனார்.

ஹரி மீண்டும் நடக்கத் தொடங்கினான்.

ரப்பர் தோட்டத்தின் எல்லையில் கால் வைத்தபோது, பொழுது இருட்டத் தொடங்கியிருந்தது.

மாலை நேரம்தான் என்றபோதும் ரப்பர் மரங்களின் அடர்ந்த இலைகள், அந்தப் பகுதியை இருளடையச் செய்திருந்தன. இருள் அங்கேயே ஒளிந்திருந்தது.

அந்தப் பகுதியில் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை மனிதர்கள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. வேலைக்காரர்கள் நடந்து ஏற்படுத்தியிருந்த பாதை வழியே அவன் முன்னேறினான்.

'ஏறத்தாழ ரப்பர் தோட்டத்தின் மையப் பகுதிதான் கோயில் இருந்த இடமாக இருக்க வேண்டும்!' என்று அவனது உள்ளுணர்வு கூறியது.

மையப் பகுதியை நெருங்கியபோது, அங்கு சற்று வெளிச்சமாக இருந்தது. அதற்கு சுற்றிலுமிருந்த ரப்பர் மரங்கள் சில உலர்ந்து போயிருந்தன. அதுவே அவனுக்கு ஒரு வித நம்பிக்கையை ஏற்படுத்தியது.

கோயிலின் அற்புதமான சக்தியைப் பற்றிப் படித்திருந்தது நினைவில் எழுந்தது. அசுத்தமான பொருட்களை எடுத்துக் கொண்டு அதன் மீது பறவைகள் பறந்தாலே, அவை எரிந்து சாம்பலாகிவிடும் என்று சுவடியில் இருந்ததே!

தரைப் பகுதி தெளிவாகத் தெரிந்ததால், ஹரி அந்தப் பகுதியை ஊன்றி கவனித்தான்.

அறுகம்புல் அங்கங்கே திட்டுத் திட்டாகச் செழித்து வளர்ந்திருந்தது. காட்டு கதளிப் பூக்கள் மலர்ந்தபடி காற்றில் ஆடின. பூக்களுக்கு நடுவே கருமையான பழங்கள் முத்துகளைப் போல் பளபளத்தன.

தரையை அங்குலம் அங்குலமாகப் பார்த்தபடியே அவன் நகர்ந்தான்.

பசுமையான அறுகம்புற்களுக்கு நடுவே சிவப்பு நிறத்தில் ஏதோ தளிர்கள். சட்டென்று தரையில் அமர்ந்து அதற்கு சுற்றிலுமிருந்த புற்களைக் கைகளால் விலக்கிப் பார்த்தான்.

அவனது சந்தேகம் தீர்ந்தது. அது மண்ணுக்குள் புதைந்திருந்த ஆலமரத்தின் உச்சிக்கிளை. மண்ணைத் துளைத்துக் கொண்டு துளிர்த்திருந்தது!

அவள் சொன்னதெல்லாம் எவ்வளவு சரியாக இருக்கிறது! விரல்களால் அந்தப் பகுதி மண்ணைக் கிளறினான். அந்த மண் அசைந்து கொடுக்காமல் பாறை போல் இறுகியிருந்தது.

அப்படிப்பட்ட மண்ணையும் துளைத்துக் கொண்டு ஆலமரம் முளைவிட்டிருப்பதை நினைத்தபோது, அவன் உடல் சிலிர்த்தது!

மேலும் சற்று முயன்று அந்தப் பகுதி மண்ணைத் தோண்ட முயன்றான். முடியவில்லை. சற்றுத் தொலைவில் ரப்பர் மரத்தின் அடியில் ஏதோ ஒன்று பளபளப்பாக மின்னியது.

அருகில் சென்றான். அது ரப்பர் மரத்தில் பால் எடுப்பதற்காகப் பட்டையைச் செதுக்கும் கத்தி. யாரோ மறந்து விட்டுப் போயிருக்கலாம்.

அந்தக் கத்தியின் உதவியால் ஆலம் தளிரைச் சுற்றியிருந்த மண்ணைக் குத்தி அப்புறப்படுத்த முயன்றான். நீண்ட நேர முயற்சிக்குப் பிறகு மண் மெதுவாக இளகத் தொடங்கியது.

சற்று நேரத்தில், ஏற்கெனவே துளிர்த்து வந்த ஆல மரத்தின் கிளை வெட்டப்பட்டிருப்பதை அங்கிருந்த இலைகள் அடையாளம் காட்டின. அப்படியானால் இந்த மரத்தை வளர வளர யாரோ வெட்டுகிறார்கள்!

எப்படியிருந்தாலும் தான் வந்த நோக்கம் வெற்றி பெறும் என்பதில் அவனுக்குச் சந்தேகமே இல்லை. ஹரி அங்கிருந்து கிளம்பினான்.

சங்கரமங்கலம் வீட்டை அடைந்தபோது, பொழுது நன்றாக இருட்டி விட்டது.

''எங்கு போயிருந்தீர்கள்?'' ஸ்ரீதேவி கேட்டாள்.

''பகவதி கோயிலுக்கு முன்னால் வளர்ந்திருக்கும் ஆலமரத்தின் உச்சியை நான் பார்த்தேன்!'' ஹரி கூறினான்.

''அப்படியானால், பகவதியின் நல்ல காலம் ஆரம்பமாகியிருக்கிறது என்று அர்த்தம். இல்லையென்றால் நீங்கள் இந்த இடத்துக்கு வந்திருக்க மாட்டீர்கள்.''

''எல்லாம் நல்லதற்குத்தான். நான் குளித்துவிட்டு வரட்டுமா?'' என்றபடி துவாலையுடன் அவன் கிணற்றடிக்கு விரைந்தபோது ஸ்ரீதேவி சொன்னாள்.

''பக்கத்திலேயே இந்த மனையின் குளம் ஒன்று இருக்கிறது. நிறைய ஊற்றுகள் உள்ள குளம். சுத்தமான தண்ணீர். அங்கு போனால் இறைத்துக் குளிக்கும் தொல்லை இருக்காதே.''

''ஆகா அப்படியானால் குளத்திலேயே குளித்தால் போகிறது. ஆசை தீர முழுகி எழுந்திருக்கலாமே!'' ஹரி குளத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

குளம் பெரியதாக இருந்தது. ஏறத்தாழ இருபதடி அகலம். நாற்பதடி நீளம் இருக்கும். செவ்வகமான குளம்.

நீர்ப்பரப்பை அடைவதற்குப் படிக்கட்டுகள் இருந்தன. பசுமையேறி பாசம் பிடித்துக் கிடந்த படிகள். குளத்து நீரில் ஆங்காங்கே மலரத் துடிக்கும் தாமரைப் பூக்கள் மொட்டாக இருந்தன.

ஹரி, வேட்டியிலிருந்து துவாலைக்கு மாறினான். ஸ்ரீதேவி சொன்னது போல், தரைப் பகுதி தெரியும்படி தண்ணீர் தெளிவாக இருந்தது.

மேற்புறம் குளிர்ந்த காற்று வீசியது. வலக் கையால் மூக்கைப் பொத்திப் பிடித்துக் கொண்டு நீருக்குள் மூழ்கினான்.

ஒரு தடவை மூழ்கி எழுந்தான். மீண்டும் மூழ்கிய போது நீருக்குள் யாரோ நின்று கொண்டிருப்பது போல் தோன்றியது. திடுக்கிட்டபடி நீரின் மேற்புறத்துக்கு வந்து படியேறினான்.

அப்போது படியில் அவனுக்குப் பின்னால் யாரோ நிற்பது போன்ற உணர்வு. திரும்பினான்.

இரண்டு கைகள் ஹரிகிருஷ்ணனை நெருங்கின. கறுத்த இரண்டு கைகள். ஆனால், உருவம் எதுவுமில்லை!

''அங்கு போய்ப் பார்த்துட்டுவிட்டுத்தான் இங்கு வந்தேன். இருக்கட்டும். இந்தக் குளத்திலேயே நீ சமாதியடைய வேண்டும் என்பதுதான் உனது தலையெழுத்து!'' அசரீரியாக ஒரு குரல் ஒலித்தது.

பின்னால் சலசலத்து அலையடிக்கும் தண்ணீர். முன்னால் காண முடியாத ஏதோ ஒன்று! 'என்ன செய்வது?' என்று புரியாதவனாக ஹரி தவித்தான்.

## 9

**த**ன்னை அபாயத்துக்கு உட்படுத்துவதற்காக எதிரில் நிற்கும் கண்ணுக்குத் தெரியாத அரூபத்திடமிருந்து எப்படித் தப்புவது என்று யோசித்த ஹரிகிருஷ்ணனுக்கு, சட்டென்று ஒரு யோசனை தோன்றியது!

தான் பஸ்ஸில் பயணம் செய்தபோது முன்பின் பழக்கமில்லாத பெரியவர் நல்கிய மந்திரித்த கயிறு தன்னிடமிருப்பது நினைவுக்கு வந்தது.

அதை ஒரு தடவை சோதித்துப் பார்த்தால் என்ன என்று நினைத்தவன், அதைக் கையிலிருந்து அவிழ்த்து எடுத்தான்.

'என்ன நடந்தாலும், சரி!' என்று தீர்மானித்தவனாக, அந்தக் கயிற்றை முன்புறமாக வீசியெறிந்தான். தாயத்துடன் கூடிய அந்தச் சரடு, கண்ணுக்குத் தெரியாத அரூபமிருக்கும் திசையில் சென்றபோது, சட்டென்று தீ ஜுவாலையாக மாறியது.

அதன் பிறகு அந்த இடத்தில் ஒரு நிமிடம் கூட நிற்காமல் வேக வேகமாக நடந்து வீட்டை அடைந்தான்.

''குளித்துவிட்டு வருவதற்கா இவ்வளவு நேரம்?'' ஸ்ரீதேவிக்குட்டி கேட்டாள்.

''குளத்திற்கு அருகில் நான் ஒரு சோதனையை நேரிட வேண்டி வந்தது!''

''கவனமாக இருங்கள். இன்னும் இது போல் நிறையச் சோதனைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, நீங்கள் மந்திரங்களைப் படிக்காமல் வேறு வழியே இல்லை!''

''நான் என்னால் முடிந்த அளவுக்கு முயற்சி செய்கிறேன்!'' ஹரி உறுதியளித்தான்.

''சரி வாருங்கள்... சாப்பிடலாம்.''

இருவரும் வீட்டுக்குள் சென்றனர்.

சாப்பிடும்போது ஹரிகிருஷ்ணனுக்கு மறுபடியும் ஒரு சந்தேகம் எழுந்தது. அவன் சாப்பிடும் வெண்கலப் பாத்திரம் ஏற்கெனவே அவன் பயன்படுத்தியது போல் தெரிந்தது.

பெரும்பாலும் எல்லாப் பாத்திரங்களும் ஒரே மாதிரி இருப்பதால், ஒருவேளை தனக்கு இவ்வாறு தோன்றுகிறதோ... என்னவோ? சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள ஒரு தடவை பாத்திரத்தைச் சோதிக்க வேண்டியது தான். ஆனால் எப்படிச் சோதிப்பது?''

ஒரு வழியாகச் சாப்பிட்டுவிட்டுத் தனது படுக்கை யறைக்கு வந்த பிறகு, சற்று நேரத்தில் ஸ்ரீதேவிக்குட்டி அவனருகில் வந்து அமர்ந்தாள்.

''போன விஷயம் என்னவாயிற்று?'' அவள் கேட்டாள்.

''ஆலமரத்தின் உச்சிக்கிளையின் தளிர்களைப் பார்த்தேன்.''

''சந்தேகமே இல்லை. அதுதான் கோயிலின் சரியான இடம். இங்கு வந்த பிறகு தென்பட்ட முதல் வெற்றி. மேற்கொண்டு இதைத் தொடர்வது கடினமாக இருக்கும் என்று தோன்றவில்லை.''

''கோயில் இருக்கும் பகுதியின் மேற்புறத்தில் நட்டு வைத்த ரப்பர் மரங்கள் உலர்ந்து கருகியுள்ளன. எனவே, தேவியின் சக்தி குன்றவில்லை என்றே தோன்றுகிறது.''

''அதை நாம் அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியாது!''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''இதெல்லாம் ஓர் அடையாளம்தான். அதை வெளிப் படுத்தும் வழிதான் தெரியவில்லை. உண்மையில் தேவியின் சக்தி குன்றாமலிருந்தால், மறுபடியும் ஒரு பூகம்பம் ஏற்பட்டிருக்கும். அது மட்டும் நடந்திருந்தால் மேற்புறம் இருக்கும் தடைகள் எல்லாம் சுலபமாக விலகியிருக்கும்.''

''மேற்கொண்டு என்ன செய்யலாம்?''

''ஒரு பூகம்பத்தை ஏற்படுத்த வேண்டும், அவ்வளவு தான்.'' ஸ்ரீதேவி சொன்ன முறையில் அது வெகு சுலபம் போல் தோன்றியது.

''நீங்கள் சொல்வது நடக்கக் கூடிய விஷயமா?''

''நடக்கும்... அதற்குத்தான் மந்திரங்களைப் படிக்க வேண்டும் என்பது. தவிர, இந்த ஊரில் இப்படி ஒரு கோயில்

இருந்ததையும் அந்த தேவிக்கு அற்புதமான சக்திகள் இருந்ததையும், நம்புகிறவர்கள் இன்னும் இருக்கிறார்கள். இனிமேல் அப்படிப்பட்டவர்களைச் சந்தித்து, அவர்களுடன் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும்!''

''உண்மையாகவா? நான் அப்படியொரு வழியைப் பற்றி இதுவரை யோசிக்கவேயில்லை.''

''அதற்கு ஆரம்பமாக நானே ஒருவரைப் பற்றி உங்களிடம் சொல்லித் தருகிறேன்.''

''யார் அவர்?''

''ஒரு தம்புரான். பெயர் ரவிவர்மா. இந்த கிராமத்தின் பொறுப்பு அதிகாரியாக இருந்தவர்களது பரம்பரையைச் சேர்ந்தவர். அவரைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.''

''அப்படியே செய்கிறேன்.''

''உங்களிடம் இன்னுமொரு விஷயத்தையும் கேட்க வேண்டியுள்ளது!'' விளக்கின் திரியைத் தூண்டி விட்டபடி அவள் பேசினாள்.

அறைக்குள் வெளிச்சம் அதிகரித்தது.

அந்தத் தெளிவான வெளிச்சத்தில் ஸ்ரீதேவியின் அழகு பன்மடங்கு எடுப்பாகத் தெரிந்தது.

இருபத்தைந்திலிருந்து முப்பதுக்குள் மதிப்பிடக் கூடிய முகம். எல்லா விதங்களிலும், வல்லமையுள்ள ஒரு பெண்மணி. அந்த முகத்தில் எல்லா வித உணர்வுகளும் அலையடித்தன. அந்தக் கண்களில் அவனுக்கு ஏதோ ஒரு சிறப்பு தட்டுப்பட்டது. மயக்கமேற்படுத்தும் விழிகள்.

ஓர் ஆடவனை ஆவலுடன் பார்க்கவும், பார்த்தவனை தன்னை நோக்கிக் கவரச் செய்வதுமான சக்தி அவற்றில் இருந்தது. ஆனால், அவள் தன்னிடம் இதுவரை எதையும் கேட்டதில்லை. எதற்காகவும் நெருங்குவதுமில்லை.

அவளது நடவடிக்கைகள் இப்படியெல்லாம் இருப்பதற்குக் காரணம் என்ன?

அதுவரை அவன் பாதுகாத்து வந்த பிரம்மச்சரியத்தை ஒரு குறிப்பிட்ட காரணம் கூறி கோபிகா உடைத்து நொறுக்கியதிலிருந்து... அவனின் ரத்தக் குழாய்களில் பதிந்திருந்த உணர்வு நரம்புகள், வெப்பத்தால் தகித்துக் கொண்டிருந்தன.

ஒரு பெண்ணுடன் கூடுவதில் தவறு இல்லை என்றும், மனிதன் முழுமை பெற வேண்டுமெனில், இத்தகைய இணைப்புகள் தவிர்க்க முடியாதது என்றும் சில புராணங்களில் குறிப்பிட்டிருப்பதில் அர்த்தமிருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

''கோயிலுக்கு முன்புறமிருக்கும் ஆல மரத்தின் மேற்புறத் தளிர்களை எப்படிக் கண்டுபிடித்தீர்கள் என்பதைச் சொல்லவில்லையே!''

ஹரி தயங்கினான்.

முந்திய நாள் இரவு யக்ஷிணீ மந்திரம் ஜபித்ததையும், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களையும் எப்படி அவளிடம் கூறுவது?

ஹரி மௌனமாக இருப்பதைப் பார்த்த ஸ்ரீதேவிக் குட்டி புன்னகைத்தாள்.

''யாராவது சொல்லித் தந்திருப்பார்கள். அப்படித் தானே?''

''நேற்று ஒரு கனவு...''

''அது பொய்... நிஜம் என்னவென்று எனக்குத் தெரியும். நேற்று நான் ஒரு கொலுசுச் சத்தம் கேட்டேன். அது எங்கு போனது என்றும் எனக்குத் தெரியும்!'' சிரித்தபடியே பேசினாள்.

''தெரிந்து கொண்டுதான் கேட்டீர்களா?''

''நான் தெரிந்து கொள்ள வேண்டாமா? அவள்தானே இந்த வீட்டின் சொந்தக்காரி!''

''அப்புறம் ஏன் இப்படிக் கேட்டீர்கள்?''

''நீங்கள் அந்த மந்திரத்தைச் சொல்வீர்கள் என்றும், அதன் பிறகு நடக்கப் போவது என்ன என்றும் எனக்குத் தெரியும். நீங்கள் அப்படிச் செய்ததும் ஒரு வகையில் நல்லதற்குத்தான்!''

''நீங்கள் வேறு எதையோ சொல்ல வருவது போல் தெரிகிறது. சொல்லுங்களேன்...''

''வெளிப்படையாகவே சொல்கிறேன்! எதற்காக மறைத்து வைக்க வேண்டும்? இந்த மனையில் எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஓர் அன்னிய ஆடவன் வசிப்பது இதுதான் முதல் தடவை. இப்போதுதான் முதன் முறையாக நான் ஒரு இளைஞனிடம் பழகுகிறேன். ஹரி வந்தவுடன் எனக்கு சந்தோஷமாக இருந்தது. ஓர் இளைஞனின் உடல் வெப்பத்தையும், இதயத் துடிப்பையும் நேரடியாக உணர முடியுமே என்று நினைத்தேன்!''

வெளிப்படையாக மனதைத் திறந்து காட்டி, தயக்கமில்லாமல் பேசும் அந்தப் பெண்மணியையே ஹரி பார்த்துக் கொண்டிருந்தான்.

''புராணங்களில் நமது வானகத்துத் தேவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இணைகள் உள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக பெண் என்பவள் ஓர் ஆணுக்கு சக்தி தருபவள் அல்லவா?''

''உண்மைதான்!'' ஹரி ஒப்புக் கொண்டான்.

ஸ்ரீதேவி, அவனை நெருங்கி அவன் உடலை ஒட்டியபடி அமர்ந்தாள். அங்கிருந்தவாறே அவள் விளக்கு இருந்த திசையில் கையை நீட்டினாள். சொல்லி வைத்தது

போல் ஒரு வெள்ளை நிற வண்ணத்துப் பூச்சி, சரியாக அப்போது அங்கு வந்து சேர்ந்து விளக்கின் ஜுவாலையை அணைத்தது.

ஸ்ரீதேவியின் மூச்சுக்காற்று ஹரியின் கன்னத்தில் படிந்தது. அவள் உடம்பின் வியர்வைக்கு துளசிப்பூவின் மணமிருந்தது. அவனின் உயிர்த்திசுக்களில் ஸ்ரீதேவிக்குட்டி உயிர் அணுக்களாக ஊடுருவினாள்.

வெண்ணெயில் முடியைப் போட்டு இழுப்பது மாதிரி அவன், அவளில் ஒன்றினான்.

விடியக்கருக்கலில் கோழி கூவியபோது, ஹரி கண் விழித்தான். ஆனால், அவனுடன் படுத்திருந்த ஸ்ரீதேவியை அங்கு காணவில்லை.

மனையின் குளத்தில் குளித்து வந்த பிறகு விளக்கேற்றிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது வீட்டுக்குள் பாத்திரங்கள் ஓசையெழுப்பின.

''யாரது?'' ஹரி கேட்டான்.

''உங்களுக்கான காலைப் பலகாரத்தை எடுத்து வைக்கிறேன்!'' முன்பின் பழக்கமில்லாத ஒரு புதிய குரல் கேட்டது.

சத்தம் வந்த அறையை நோக்கி நடந்தான். ஏறத்தாழ அறுபது வயது மூதாட்டி. கறுப்பும் வெளுப்பும் கலந்த தலைமுடி, பின்புறம் அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. முகம் மற்றும் உடல் முழுக்கத் தோலில் சுருக்கங்கள் தென்பட்ட போதிலும் ஒரு காலத்தில் அவள் பேரழகியாக இருந்திருக்க வேண்டும் என்பது விளங்கியது.

''நீங்கள் யார் என்று தெரியவில்லையே?'' ஹரி கேட்டான்.

''இந்த வீட்டுத் தம்புராட்டி (மேல் குலத்தைச் சேர்ந்த எஜமானியம்மா) வரச் சொன்னதால் வந்திருக்கிறேன். பெயர் பாறுக்குட்டி அம்மா!''

''அவர்கள் எங்கே?''

''இல்லம் வரைக்கும் போயிருக்கிறார்கள்.''

இரவு நேரத்தில் ஸ்ரீதேவி இங்கு தங்குவதை, வந்திருப்பவள் தெரிந்து கொள்ள வேண்டாம் என்பதால் ஹரி மேற்கொண்டு எதையும் பேசவில்லை.

''சமையல் நன்றாக இருக்குமில்லையா?''

''தம்பி நீங்கள் உங்களது வீட்டில் சாப்பிடுவது மாதிரியே சமைத்துத்தருகிறேன். அப்படியே உட்காருங்கள், சாப்பிடலாம்!''

தட்டிலிருந்த ஆவி பறக்கும் சூடான இட்லியும், தேங்காய் எண்ணெயில் தாளித்த சட்னியும் ஹரிக்குள் பசியைக் கிளறின. ஒரு தம்ளரில் பால்.

ஒரு விள்ளல் எடுத்து ருசி பார்த்தான். அவன் வீட்டுச் சுமையல் மாதிரியே இருந்தது. எந்த விதமான வித்தியாசமும் தெரியவில்லை!

''இனிமேல் நீங்கள் இங்கேயே இருப்பீர்கள்... இல்லையா?''

''பகல் நேரத்தில் இருப்பேன். சாயந்திரத்தில் கிளம்பி விடுவேன்.''

''கண்டிப்பாகக் கிளம்ப வேண்டுமா?''

''எனக்கென்று சில வேலைகள் உள்ளன.''

''எனது ராத்திரிச் சாப்பாடு?''

''அதை தம்புராட்டியே வந்து பரிமாறுவார்கள்.''

சொன்னபடியே விளக்கு வைப்பதற்கு முன்பாக மூதாட்டி வெளியேறியபோது பின்புறமாக காலடியோசை கேட்டது. திரும்பினான். ஸ்ரீதேவிக்குட்டி!

விளக்கிலிருந்து விலகி நின்றபோது, ஹரி வியந்தான். 'அப்பா! என்ன ஓர் அழகு!'

''என்ன இன்றைக்கு மந்திரம் படிக்கவில்லையா?''

''படிக்க வேண்டும். அதற்காகவும்தானே வந்திருக்கிறேன்!''

அன்று இரவு விக்கிரமக் குறூப்பு, கறுப்பசாமியிடம் வந்தார்.

அவர் ஒரு ஹோமம் நடத்தும் தீவிரத்திலிருந்தார். குறூப்பைப் பார்த்தவுடன், செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்திவிட்டு அவரிடம் வந்தார் கறுப்பசாமி.

''வந்திருக்கிறவன் நிறைய விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறான் என்று தோன்றுகிறது!'' குறூப்பு பேசினார்.

''என்ன தெரிந்து வைத்து என்ன பிரயோஜனம்? அவன் ஒரு போதும் அந்தக் கோயிலைக் கண்டுபிடிக்கப் போவதில்லை!''

''ஏன்?''

''பூமி மட்டத்திலிருந்து சுமார் அறுபதடி ஆழத்தில் கோயில் உள்ளது. அவ்வளவு மண்ணையும் தோண்டி, கோயிலை வெளியில் கொண்டு வருவது லேசான காரியமா என்ன!''

''இதெல்லாம் நமது கணிப்பு. கோயில் இன்ன இடத்தில் இருக்கிறது என்று அவன் சொன்னால், பக்தர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துவிட மாட்டார்களா? அப்புறம் தீராத தலைவலியல்லவா?''

''அந்த அளவுக்கு அவனை நாம் விட்டால்தானே? அதற்கு முன்னால் 'அவனை இல்லாமல் செய்வதுதான் நமது நோக்கம்.''

''உண்மைதான். ஆனால், நடக்க வேண்டுமே.''

''ஏன் நடக்காது! அவன் முதலில், தங்கி இருந்த இடம் எரிந்து சாம்பலாகவில்லையா? அப்படிச் செய்ய முடிந்த

எனக்கு இது ஒரு பெரிய காரியமா என்ன?'' - என்ற கறுப்பசாமி, ''கருடா'' என்று அழைத்தார்.

உடனே மேற்புறமாக எதுவோ சிறகடித்துப் பறந்து வரும் சத்தம் கேட்டது. அருகில் வந்தபோதுதான் அது கறுப்பசாமியின் விருப்பத்துக்குரிய கழுகு என்பது விளங்கியது.

''அவனிடம் பழைய கால மந்திரச்சுவடி ஒன்று உள்ளது. அது அவனிடம் இருப்பது வரை நமக்குத் தொல்லைதான். இன்றைக்கு இரவில் எப்படியும் அதை நமது கழுகு கிளப்பிக் கொண்டு வரும்!'' என்றபடி பயமேற்படுத்தும் அந்தக் கழுகைப் பார்த்தார் கறுப்பசாமி.

''நிச்சயமாகக் கொண்டு வருகிறேன்!''

கழுகின் குரல் வித்தியாசமாக ஒலித்தது.

''அப்படியானால் புறப்படு!'' கறுப்பசாமி, கழுகிடம் கட்டளையிட்டார்.

அவரது கட்டளைக்காகவே காத்திருந்த மாதிரி, கழுகு சிறகுகளை விரித்தபடி மேற்புறமாகப் பறந்து உயர்ந்தது!

## 10

**ஹ**ரிகிருஷ்ணன், நிலவிளக்கின் ஒளியில்... பனையோலைச் சுவடியின் இதழ்களைப் புரட்டிக் கொண்டு இருந்தான்.

எப்படிப்பட்ட எதிர்ப்புகள் வந்தாலும் அதை நேரிடும் நிலைக்குத் தன்னை தயார் செய்தான் என்றும் சொல்லலாம். இதற்காகப் புறப்பட்டது முதல் தனக்கு எதிர்ப்புகளும் எதிரிகளும் அதிகமாகி விட்டார்கள் என்பதையும் ஹரி உணர்ந்திருந் தான். எனவே, எல்லாவற்றுக்குமான ஒரே தீர்வு

மந்திரஸித்தி அடைவதுதான் என்று ஹரி தீர்மானம் செய்தான்.

அருகில் ஸ்ரீதேவிக்குட்டி அமர்ந்திருக்கிறாள். அவனது ஒவ்வொரு நடவடிக்கையையும் அவள் கவனித்துக் கொண்டே இருந்தாள்.

அன்று அமாவாசை நாள். எங்கும் கனத்த இருட்டு. கனமான நிசப்தம்.

ஓர் இலை தரையில் விழுந்தால், ஒரு கிளையே விழுவது போல் ஓசையெழுந்தது.

தூரத்தில் எங்கோ பாதிராப் பறவைகள் குரல் எடுத்துக் கூவின.

''நான் படுத்துக் கொள்கிறேன். எனக்குத் தூக்கம் வருகிறது!'' ஸ்ரீதேவி எழுந்தாள்.

அவளது கொலுசுகளின் சத்தம் அகன்று கொண்டே இருந்தது. அந்தச் சத்தம் அமைதியுடன் கலந்த ஒரு கணத்தில், எங்கிருந்தோ ஒரு பறவையின் சிறகடியோசை கேட்டது.

நள்ளிரவில் இரை தேடும் ஏதாவது ஒரு பறவையாக இருக்கும் என்று நினைத்தவனாக, ஓலைச்சுவடியின் ஓரிதழைப் புரட்டினான். மனத்தை உடம்பிலிருந்து வேறுபடுத்திச் செல்லவும், நினைத்த இடத்தை அடைந்து அரூபமாகவே அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளை கவனிக்கவும் உதவும் மந்திரம்தான் சுவடியின் அந்தப் பகுதியில் இருந்தது.

முறைப்படி பூஜை செய்து பத்தாயிரத்தொரு முறை அதிலுள்ள மந்திரத்தை உருவிட்டால், காரிய ஸித்தி கிடைக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த மந்திரம் தனக்கு மிகவும் பயன்படும் என்று நினைத்து, உடனே அதை மனப்பாடம் செய்வதில் ஈடுபட்டான்.

திடுமென்று, வாசலுக்கு வெளியே வளர்ந்து பந்தலாகப் பரவி நிற்கும் சர்ப்பகந்தி மரத்தின் ஏதோ ஒரு கிளை பயங்கரமாகச் சலசலத்தது. அமைதியான அந்தச் சூழ்நிலையில் அந்த மரத்தை யாரோ பிடித்து உலுக்குவது போல் தோன்றியது.

ஹரி, தன்னையும் மீறி அந்தத் திசையில் பார்த்தான். அந்தக் கணத்தில் அவன் மனத்தில் சன்னமான பீதி ஒன்று உயரவும் செய்தது.

'இந்த நேரம் ஸ்ரீதேவிக்குட்டி அருகில் இருந்தால் எப்படி இருக்கும்?' என்று மனம் ஒரு கணம் எண்ணியது. என்ன ஆச்சரியம்? அவன் நினைத்தது மாதிரியே, அவள் அவனை நோக்கி வந்தாள்.

''எதற்காக நான் வரவேண்டுமென்று நினைத்தீர்கள்?''

''ஆமாம்... நான் நினைத்தது உங்களுக்கு எப்படி விளங்கியது?''

''என்னிடம் அப்படியொரு தன்மை உள்ளது. என்னை யாராவது நினைத்தால், உடனே அது எனக்குப் புரியும்.''

''அப்படியானால், உங்களால் மற்ற மனிதர்களது மனசையும் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும் இல்லையா?''

''அப்படியெல்லாம் சொல்ல முடியாது.''

''அப்புறம் எப்படி இது சாத்தியம்?''

''நான் இந்த நாலுகெட்டின் வடமேற்கு அறையில் உட்கார்ந்திருந்தேன். பல்லி ஒன்று தகவல் சொன்னது.''

''என்ன சொன்னது?''

''நீங்கள் என்னைத் தேடுவதாக!''

''உண்மையிலேயே இது ஆச்சரியம்தான்!

''இதில் ஆச்சரியத்துக்கு இடமே இல்லை. இந்த வீட்டில் இருக்கிற சின்னச் சின்ன உயிர்கள்கூட என்ன வெல்லாமோ தெரிந்து வைத்துள்ளன!''

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, அந்த அறை வாசலின் மேற்புறமிருந்த பல்லி குரல் எழுப்பியது.

''பார்த்தீர்களா... நான் சொன்னது எவ்வளவு உண்மை என்று!''

''அப்படியானால், இதே பல்லிதான் உங்களிடமும் வந்து சொல்லியிருக்கும் இல்லையா?''

''இருக்கலாம்!''

மறுபடியும் அந்தப் பல்லி குரலெழுப்பியது. ஹரி வியப்படைந்தான்.

இந்த வீட்டிலுள்ள சின்னச் சின்ன உயிரினங்கள்கூட மந்திரவித்தைகள் தெரிந்து வைத்திருக்கின்றனவோ?

''சரி அதெல்லாம் போகட்டும். என்னை எதற்காக நினைத்தீர்கள்?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் சர்ப்பகந்தி மரத்தின் கிளை ஒன்று பயங்கரமாகச் சலசலத்த சத்தம் கேட்டது. நான் இந்த இடத்துக்குப் புது ஆளாயிற்றே... அதனால்தான்.''

''ஓகோ... அப்படியா?'' என்றபடி வெளிவாசலை நோக்கி நடந்தாள் அவள்.

இருளுக்குக் கொஞ்சம்கூட பயப்படவே இல்லை ஸ்ரீதேவி. விரைவிலேயே சர்ப்பகந்தி மரத்தின் அடிப் பகுதிக்கு வந்து சேர்ந்தாள் அவள்.

ஹரிக்கு, அவளைப் பின்தொடர்ந்து போகலாமே என்று முதலில் தோன்றியது.

ஆனால், அவள் எதுவும் பேசாமல் புறப்பட்டு விட்டாளே! தான் வருவதை ஒருவேளை அவள் விரும்பா மலிருக்கலாம். ஹரி அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

மரத்தின் கீழே நின்ற ஸ்ரீதேவி கேட்டாள்: ''யாரது?'' பதில் இல்லை.

''சங்கரமங்கலம் ஸ்ரீதேவிக்குட்டி பேசுகிறேன். என்னை ஏமாற்ற முடியாது என்பது ஞாபகம் இருக்கட்டும்!''

மீண்டும் சர்ப்பகந்தி மரம் பயங்கரமாகச் சலசலத்தது.

ஏழு யானைகள் மரத்துக்குச் சுற்றிலும் நின்று தங்கள் தும்பிக்கைகளால் மரத்தை அலைக்கழிப்பது போல் மரம் பேயாட்டம் ஆடியது. மரத்தின் கிளைகள் தெறித்து விழுவது போல் மரம் தள்ளாடியது. மரக்கிளையில் அமர்ந்திருந்த கழுகினால் தொடர்ந்து அங்கேயே ஒளிந்திருக்க முடியவில்லை.

எனவே மரத்தின் மீதிருந்து, தனது கூர்மையான நகங்களை விடுவித்து மேல் நோக்கிப் பறந்து மறைந்தது அது.

மரத்தில் எவருமில்லை என்பதை உணர்ந்த ஸ்ரீதேவி இளந்திண்ணைக்கு வந்தாள்.

''அந்தச் சத்தத்துக்கு என்ன காரணம்?'' - ஹரி கேட்டான்.

''ஒன்றுமில்லை. மரக்கிளையில் ஏதோ ஒரு பறவை வந்து உட்கார்ந்திருக்கும். அது பறந்து போயிருக்கும்.''

''நீங்கள் கண்டிப்பாகப் போய்த்தான் ஆக வேண்டுமா?''

''ஆமாம். நான் இங்கு இருந்தால் சரியாகாது.'' மேற்கொண்டு எதுவும் பேசாமல் ஸ்ரீதேவி எழுந்தாள். மறைந்தாள்.

ஹரி தனியானான். நடுநடுவே விளக்கின் திரியைத் தூண்டி விட்டான். கண் இமைகளில் கனம் படிந்தது. 'தூங்க வேண்டியதுதான்!' என்று நினைத்தவனாக, ஓலைச் சுவடியைக் கையில் எடுத்துக் கொண்டு, படுக்கை அறையை

நோக்கி நடந்தான். வெளிக் கதவை மறக்காமல் மூடித் தாழிட்டான்.

நள்ளிரவு. ஒரு மணிக்கு மேல் இருக்கலம். படுக்கைக்கு வந்த பிறகு தூக்கம் வரவில்லை. திறந்து கிடந்த ஜன்னல் வழியாக ஆகாயத்தை உற்றுப் பார்த்தான்.

ஆங்காங்கே நட்சத்திரங்கள் சிதறிக் கிடந்தன. மச்சின் மேற்பகுதியில் சுவர்க்கோழிகள் சத்தம் எழுப்பியபடி பறந்து கொண்டிருந்தன. எலிகளுக்கும் குறைச்சலில்லை. ஆனால், ஹரி ஒரு முக்கியமான விஷயத்தை கவனிக்கத் தவறவில்லை. அசாதாரணமான வடிவம் வாய்ந்த பல்லிகள்! சிலவற்றைப் பார்த்தால் முதலைக் குட்டியோ என்று எண்ணத் தோன்றும். ஆனால், இன்று வரை அவற்றால் அவனுக்கு எந்த விதமான தொந்தரவும் ஏற்பட்டதில்லை!

திடுமென்று பல்லி ஒன்று குரல் கொடுத்தது. சத்தம் வந்த திசை நோக்கித் திரும்பினான். பெரிய பல்லி. ஏறத்தாழ ஓரடி நீளமிருக்கலாம். மின்மினியின் உடம்பு போல் அதன் உடல் முழுவதும் ஒளிர்ந்தது.

ஹரி பார்த்துக் கொண்டிருந்தபோதே அந்தப் பல்லி மரச்சுவரின் (கேரளாவின் பழங்கால வீடுகள் மரத்தால் கட்டப்பட்டிருக்கும்) பிளவு ஒன்றில் புகுந்து மறையவும் செய்தது.

அவன் கட்டிலிலிருந்து எழுந்தான். தீப்பெட்டியை எடுத்து, கோல்விளக்கை ஏற்றினான். விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு பல்லி மறைந்த சுவர் பகுதியை நோக்கி நடந்தான். உற்றுப் பார்த்தபோது, அங்கு ஒரு கதவு இருப்பது தெரிந்தது.

மரச்சுவரில் சிற்ப வேலைகளுக்கு மத்தியில்... சட்டென்று தெரிந்து கொள்ள முடியாதபடி அவ்வளவு நுட்பமாக அமைக்கப்பட்டிருந்தது அந்தக் கதவு!

ஹரி, அந்தக் கதவை எப்படித் திறப்பது என்று யோசித்தான்... இழுத்துத் திறக்கும் விதமாக அதில் எந்த விதமான பிடிமானமும் இல்லை.

ஊன்றி கவனித்தபோது அழகான பூ ஒன்று செதுக்கப் பட்டிருந்த இடத்தில், சிறிய சாவித்துவாரம் ஒன்று தெரிந்தது. அப்படியானால் இதைத் திறக்கச் சாவி வேண்டும். அதன் சாவியை எங்கேயென்று தேடுவது?

'எத்தனையோ நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த அந்தக் கட்டடத்தில், சட்டென்று கண்ணுக்குப் புலப்படாத கதவின் சாவியை எப்படி தேடி எடுப்பது?' என்று மலைத்தான்.

எதற்கும் அந்த அறையை ஒரு முறை நன்றாகச் சோதித்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தான். விளக்கைக் கையில் பிடித்தபடி அந்த அறையின் ஒவ்வோர் அங்குலத்தையும் கவனமாகக் கண்களால் துழாவினான். அப்படியும், எதுவும் தட்டுப்படவில்லை. கடைசியில் கோல்விளக்கை அதன் இடத்தில் வைத்துவிட்டு கட்டிலில் படுத்தான். பல்லியொன்று கோல்விளக்கின் மீது பாய்ந்தது.

ஹரி அதையே பார்த்துக் கொண்டிருந்தான். பல்லி பாய்ந்த வேகத்தில் விளக்கு வைத்திருந்த பகுதி சன்னமாக அசைந்தது. அந்த ஒரு கணத்தில் அதன் மேற்பகுதியில் தொங்கிக் கொண்டிருந்த சாவியும் அசைந்தது.

அருகில் சென்று கவனித்தான். ஆனால், சாவியைச் சுலபத்தில் அங்கிருந்து அவிழ்த்து எடுக்க முடியவில்லை. ஒரு வகையாக எடுத்தான்.

விளக்கை எடுத்துச் சென்று, அந்தத் துவாரத்தில் சாவியைப் பொருத்தி வலப் புறமாகச் சுழற்றினான்.

அது பழங்காலப் பூட்டு. சற்று நேரத்தில் 'டின்' என்ற சத்தத்தோடு பூட்டு திறந்து கொண்டது. சாவியை வலுவாகப்

பிடித்தபடி, கதவை விசையுடன் திறந்தான். உட்புறம் பார்த்த ஹரி ஒருகணம் வியப்பினாலும் மகிழ்ச்சியினாலும் தடுமாறினான். தான் வந்து சேர்ந்திருப்பது தந்திர வேலைகள் நிறைந்த ஓர் இல்லத்துக்கு என்பது அவனுக்கு விளங்கியது.

அதற்குள் இருள் நிறைந்திருந்தது. உள்ளே என்ன இருக்கிறது என்பதே விளங்காத இருட்டு. ஹரி விளக்குடன் அதற்குள் நுழைந்தான்.

மரத்தாலான சுற்றுச்சுவர்களைக் கொண்ட இடுங்கிய ஓர் அறை அது. அதன் ஒரு மூலையில் ஒரு செப்புக்குடம் இருந்தது. அந்த அறைக்குள் வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஹரி அந்தக் குடத்தை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். கதவைப் பழையபடி பூட்டினான்.

குடத்தின் வாய்ப்பகுதி பித்தளைத் தகடால் மூடப் பட்டிருந்தது. அதன் மேற்புறம் சங்கு உருவம் பொறிக்கப் பட்டிருந்தது. தேவநாகரி மொழியில் அதன் மீது மந்திரங்கள் சில செதுக்கப்பட்டிருந்தன. ஹரி, விளக்கு வெளிச்சத்தில் அந்த மந்திரங்களை வாசித்தான்.

மந்திரத்தின் சாராம்சப்படி, அந்தக் குடத்துக்குள் எதுவோ ஒன்று அடக்கம் செய்யப்பட்டுள்ளது என்பது புரிந்தது.

ஹரி தனது தோள் பையிலிருந்து பேனாக் கத்தியை எடுத்தான். செப்புக் குடத்தின் வாய்ப் பகுதியை மடக்கி மூடியிருந்த பித்தளைத் தகட்டின் ஓரங்களை நெம்பி விலக்கத் தொடங்கினான்.

பித்தளைத் தகடு முற்றிலுமாக அதிலிருந்து விடுபட்ட வுடன், அதைக் கையால் தொடாமல் உதறி விழச் செய்தான்.

செப்புக் குடத்துக்குள் கையை நுழைக்கலாம் என்று நினைத்தவன், மறு கணம் யோசனையை மாற்றி, அதை

அப்படியே தலைகீழாகக் கவிழ்த்தான். அதற்குள் இருப்பது கீழே விழாமல், அதற்குள்ளேயே ஒட்டிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

ஹரி குடத்தைத் தலைக்கு மேலாகப் பிடித்தபடி கவிழ்த்துக் குலுக்கினான். அப்போதும் விழவில்லை. ஆனால், சிவப்பு நிறப் பட்டுத்துணி மட்டும் அவன் கண்ணுக்குத் தெரிந்தது.

சற்று நேரம் கவனமாகப் பார்த்தபடி குடத்துக்குள் கையைவிட்டு, பட்டுத்துணியில் முடிந்திருந்ததை இழுத்து வெளியே எடுத்தான். அப்போது, அதனுடன், மற்றொரு பொருளும் வெளியே வந்து விழுந்தது. அது, சாதாரண அளவிலான ஒரு தாயத்து!

# 11

முதல் தடவையாகத் தாயத்தைக் கவனித்தான். அதன் மேற்புறத்தில் தேவநாகரி மொழியில் மந்திர எழுத்துகள் எழுதப்பட்டிருந்தன. 'மிருத சஞ்சீவினி மந்திரம்!'

ஹரி மகிழ்ச்சியுடன் அதை வாசித்தான். அவனால் அதைப் படிக்க முடிந்தது. அதன் வலப் புறத்தில் 1,00,001 என்று பழங்கால எண்ணால் குறிக்கப்பட்டிருந்தது.

மிருத சஞ்சீவினி மந்திரத்தை லட்சத்தியோரு தடவை ஜபிக்க வேண்டும் என்பது அதன் பொருள் என்பதை யூகித்தான்.

'மந்திரம் எங்கே இருக்கிறது?' - ஹரி யோசனையில் ஆழ்ந்தான். தனக்கு முன்பாக உள்ள சிவப்புப் பட்டுப் பொதியில் அதற்கு உதவக் கூடிய ஏதாவது தென்படலாம் என்று தோன்றியது.

அதை அவிழ்க்கத் தொடங்கினான். ஆனால், அவிழ்க்க முடியவில்லை. உற்றுப் பார்த்தபோது, பட்டு நூலால் அந்தப் பகுதியை நெய்து இணைத்தாற் போலிருந்தது.

சிவப்பு நிறப் பட்டுத் துணியில் பை ஒன்றைத் தயாரித்து, அதற்குள் எதையோ போட்டு பட்டு நூலாலேயே நெய்து மூடியிருக்கிறார்கள். இணைப்பு எங்கே உள்ளது என்று தெரியவில்லை. 'அப்படியானால், துணியைக் கிழித்து உள்ளே இருப்பதை எடுக்க வேண்டியதுதான்' என்று தீர்மானித்தவன் ஒரு கணம் தயங்கினான். அப்படிச் செய்யலாமா என்ன?' சந்தேகம் எழுந்தது.

'பிரிக்க வேண்டிய முறைப்படி பிரிக்காவிட்டால், ஏதாவது விபரீதம் நிகழுமோ? சரி... எதற்கும் முதலில் தாயத்தைப் பிரிக்க முடிகிறதா?' என்று பார்ப்போம். தாயத்தைக் கையில் எடுத்து மடக்கி வைக்கப்பட்டிருந்த பகுதியை கவனித்தான்.

பேனாக் கத்தியை எடுத்தான். மடக்கப்பட்டிருந்த பகுதியை நீக்கினான். மெதுவாகவும் கவனமாகவும் நீக்கிய பின்பு வட்டமான அதன் மேற் பகுதியை உள்ளங்கையில் கவிழ்த்தான்.

தங்கத்தாலான ஒரு பொட்டு மாதிரி, அந்த மூடி அவன் கையில் மின்னியது.

தாயத்தின் உட்புறத்தைப் பார்த்தான். அதனுள் தகடு ஒன்று சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. திறந்த பகுதியை உள்ளங்கைப் பக்கமாக வைத்து இரண்டு... மூன்று தடவை உதறினான். அதற்குள் இருந்து சுருண்டிருந்த தங்கத் தகடு ஒன்று உள்ளங்கையில் வந்து விழுந்தது.

மகிழ்ச்சியடைந்த ஹரி, அந்தத் தகடை நன்றாக நிமிர்த்திப் பார்த்தான். அதன் பாதி பாகம் எழுத்தால் நிரப்பப்பட்டிருந்தது.

அகில் மற்றும் சந்தனத்தால் ஹோமாக்னி ஏற்படுத்தி, அதில் பட்டுத் துணியின் ஒரு முனையை வைக்கவும். பிறகு தாமரை இதழ்கள் ஆயிரத்தொன்றால் ஹோமம் செய்யவும். கூடவே மறுபுறத்தில் எழுதப்பட்டிருக்கிற மிருத சஞ்சீவினி மந்திரத்தை லட்சத்தியோரு தடவை உச்சரிக்கவும். அப்படிச் செய்தால் உடனே பலன் தெரியும்.

அதில் எழுதியிருப்பதை உடனே சோதித்துப் பார்ப்பது என்று ஹரி முடிவு செய்தான். ஆனால், அதே நேரம் வேறொரு சிந்தனை அவனைச் சற்றுத் தயங்க வைத்தது. ஸ்ரீதேவிக்குட்டிக்குத் தெரியாமல் இதைச் சோதிப்பது நல்லதல்ல. ஸ்ரீதேவி சாமானியமானவளல்ல. அவளுக்கு எவ்வளவோ தெரியும். ஆனால், முடியாத ஏதோ ஒரு காரணத்தால் ஸ்ரீதேவி மந்திரங்களைப் பரிசோதிக்காமல் அல்லது பயன்படுத்தாமல் இருக்கிறாள்!

ஹோமாக்னியில் என்ன தெரியும்? இதை நேரடியாக ஸ்ரீதேவியிடம் கேட்டுவிட்டால் என்ன? ஒரு வேளை இதற்கு அவள் ஒப்புக் கொள்ளவில்லையென்றால்...?

எப்படி இருந்தாலும் மாதத்தில் நான்கு நாட்கள் ஸ்ரீதேவி அருகிலுள்ள சிறு வீட்டில் போய் தங்குவது வழக்கம். அந்த நாட்கள் எவை என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதை எப்படி அவளிடம் கேட்பது? கேட்காமலேயே அதைத் தெரிந்து கொள்ள வழி உண்டா என்று யோசித்தான்.

சட்டென்று அவன் மனத்தில் ஒரு யுக்தி தோன்றியது. ஸ்ரீதேவிக்குட்டி முதலில் வரட்டும். வந்த பிறகு அதைப் பார்த்துக் கொள்ளலாம்.

அதன் பிறகு ஹரி, தனக்குக் கிடைத்த பொருள்களைப் பழையபடி அதே அறைக்குள் வைத்துப் பூட்டினான்.

அன்று இரவு நேரத்தில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வழக்கம் போல் வராந்தாவில் அமர்ந்து ஓலைச் சுவடி ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

ஸ்ரீதேவி அவனருகில் வந்து அமர்ந்தாள்.

''எதுவரைக்கும் வந்திருக்கிறீர்கள்?'' வந்தவள் விசாரித்தாள்.

''அப்படியே படிக்கிறேன். ராத்திரியில் ரொம்ப நேரம் படிக்கும்போது என்னமோ ஒரு தனிமை உணர்வு தோன்றுகிறது.''

''அதற்குத்தான் நான் இருக்கிறேனே!'' - விளக்கின் திரியைச் சற்று உயர்த்தியபடி கேட்டாள்.

விளக்கின் வெளிச்சம் அவளின் இடக் கன்னத்தில் விழுந்து கொண்டிருந்தது. அவளின் உடலின் சரிபாதி வெளிச்சத்திலும் மீதி இருளிலுமாக இருந்தது. அதுவே பிரத்தியேகமான ஓர் அழகாக அவனுக்குத் தோன்றியது.

அந்தப் புருவக் கொடிகள்... நட்சத்திரம் ஊற்றெடுக்கும் கண்கள்... சிவந்த அரளிப் பூவின் இதழ்களை ஒட்ட வைத்தது போன்ற ஈரமான இதழ்கள். வலம்புரிச் சங்கை நினைவூட்டும் நீண்ட கழுத்து... செதுக்கியெடுத்தது போன்ற மார்புப் பகுதிகள்... தொப்பூழ்க் கொடியின் பாதிப் பகுதி...

''நீங்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் கிளம்பிவிடுவீர்களோ...'' ஹரி. அவள் முகத்தைப் பார்த்தவாறு கேட்டான்.

அந்தப் பார்வை, மலரம்பு தாக்கியது போல் தோன்றியது ஸ்ரீதேவிக்கு.

''வட யக்ஷிணீ மந்திரத்தை உச்சரித்ததிலிருந்து நீங்கள் கொஞ்சம் மாறித்தான் போயிருக்கிறீர்கள்!''

''சிலதையெல்லாம் பார்த்தால் எப்போதும் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றுகிறது.''

''புரிகிறது... புரிகிறது!''

''அப்படியானால், இன்றைக்குப் போக மாட்டீர்கள் அல்லவா?''

''சரி... போகவில்லை!... இப்போது என்ன படிக்கிறீர்கள்?''

''சின்ன மஸ்தா மந்திரங்கள்.''

''எங்கே சொல்லுங்கள் கேட்போம்.''

**''த்யா தைவம் பிரஜபேல்லக்ஷ.**
**சதஷ்கம் தத்தசாம் கத...''**

ஹரி இவ்வளவு சொல்வதற்குள் ஸ்ரீதேவி மீதமுள்ள மந்திரத்தை உருவிடத் தொடங்கினாள். **''பலானசர் பில்வஜெர்வா பிஜ ஹயாத் குஸமை ஃபவை.''**

''அதிசயமாக இருக்கிறது!''

''பாதியில் இருந்துதான் சொல்லத் தெரியும்.''

''உண்மையாகவா?''

''ஆமாம்.''

''ஏன் அப்பிடி?'' ஹரி கேட்டான்.

''மந்திரங்களைக் குறைந்தபட்சம் நாற்பத்தொரு நாட்களாவது சொல்ல வேண்டும்? உங்களால் அது எப்படி முடியும்?''

''நீங்கள் சொல்வது புரியவில்லை?''

''தேவலையே... சுத்தமில்லாமல் எப்படி மந்திரம் சொல்வது.''

''இப்போது மந்திரம் சொன்னேனே...'' ஹரி மீண்டும் அவளைப் பார்த்தபடி கூறினான்.

ஸ்ரீதேவி முகம் தாழ்த்தினாள். அந்தக் கன்னங்களில் வெட்கம் அலையடித்தது.

ராப் பறவைகள் குரலெழுப்பின.

ஹரி, சுவடியில் அடையாளம் வைத்துவிட்டு, எழுந்திருக்க முயன்றான்.

''என்ன இன்றைக்கு மந்திரம் அவ்வளவுதானா?''

''ஆமாம்! தூக்கம் வருகிறது.''

''உடனே தூங்க வேண்டுமா?''

''அப்படியெல்லாம் இல்லை!''

ஹரியைப் பின்தொடர்ந்து ஸ்ரீதேவி நடக்கத் தொடங்கினாள்.

அவனது அறைக்குள் நுழைந்ததும் அவள் அறைக் கதவை மூடினாள்.

''உங்கள் உடம்பில் இருந்து எப்படி தாமரைப் பூவாசனை வருகிறது?'' அவளின் வலம்புரிச் சங்குக் கழுத்து, அவன் உதடுகளில் உரசியபோது ஹரி கேட்டான்.

''என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?''

''பிடிக்காமல்... தாமரைப்பூவின் வாசனையை யாராவது வெறுப்பார்களா?'' அவன் கைகள் அவளைத் தழுவின. வெண்ணெயின் வழுவழுப்பு இருந்தது அந்த உடம்புக்கு. கை விரல்கள் உடலுக்குள் அமிழ்ந்து போவது போன்ற மென்மை. அவளது மூச்சுக் காற்றுக்குக்கூட இரவுப் பூக்களின் நறுமணம் இருந்தது. விடியற் கருக்கலில் சேவல் கூவியபோது ஸ்ரீதேவி எழுந்தாள்.

''இன்றைக்கு ஆஷாடம் (ஆனி) மாசம் மூன்றாம் தேதி இல்லையா? இனி நான் அமாவாசைக்குப் பிறகுதான் வருவேன்!'' ஸ்ரீதேவி கூறினாள்.

''ஏன்?''

''நாளையிலிருந்து நான்கு நாள் இந்த வீட்டுக்குள் நுழைய மாட்டேன். அமாவாசை அன்றைக்கு நான் பூஜைக்குப் போக வேண்டும்... மறுநாள் வருவேன்.''

''இப்போது புரிந்து விட்டது!''

''சில மந்திரங்களை நான் படிக்காததற்குக் காரணம் இப்போது விளங்கியதா?'' மிகவும் மெலிந்த குரலில் வெட்கத்துடன் கேட்டாள். ஸ்ரீதேவியின் கொலுசுச் சத்தம் அகன்று கொண்டே இருந்தது. குளிர்ந்த காற்று ஜன்னலைத் தாண்டி உடம்பைத் தாக்கியது. ஹரி போர்வையால் போர்த்திக் கொண்டு படுத்தான். காலையில் எழுந்தபோது மனதில் ஒரு கேள்வி பிறந்தது. இனி யார் நமக்குச் சமைப்பார்கள்? பாறுக்குட்டி வருவாளா?

'சரி குளித்துவிட்டு வந்து பார்த்துக் கொள்ளலாம்...' என்று துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு ஆற்றை நோக்கி நடந்தான்.

குளிர்ந்த தண்ணீர் உடலை அளைந்தபோது, உடல் முழுவதும் சில்லிப்பை உணர்ந்தது. ஸ்ரீதேவியின் மணம் அவன் உடலில் பரவலாகத் தேங்கியிருந்தது. நான்கு தடவை மூழ்கி எழுந்த பின்னும் அந்த மணம் மறையவே இல்லை. அது வருத்தத்துக்குரிய ஒன்றாகவும் தோன்றவில்லை. திரும்பு பயணத்தின்போது நேராக இல்லத்துக்கு வராமல், டீக்கடைக்குள் நுழைந்தான். வழக்கமான நாலைந்து பேர் கடைக்குள் இருந்தார்கள்.

''நீங்கள்தானே அன்றைக்கு சங்கரமங்கலத்துக்குப் போனவர்?'' டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவர் கேட்டார்.

அங்கிருந்தவர்களின் கண்களில் ஆச்சரியம் தளும்பியது!

''ஆமாம்... நானேதான்!'' ஹரி பதிலளித்தான்.

''ஒரு சின்னச் சந்தேகம்... அந்த நபர் நீங்கள்தானா என்பதில்...''

''அதில் என்ன சந்தேகம்?''

''இல்லை... இதுவரை அந்த வீட்டுப்பக்கம் போன எவரும் திரும்பி வந்ததில்லை!''

''ஏன் திரும்பி வரவில்லை?''

''நீங்கள் சும்மா இருங்கள். பாவம் அவர் டீ சாப்பிட வந்திருக்கிறார். அவரிடம் கண்டதையும் சொல்லி வீணாக அவரை பயப்படுத்தாதீர்கள்!'' கடைக்காரர் முந்தைய நபரைக் கண்டித்தார்.

அதன் பிறகு யாரும் எதுவும் பேசவில்லை. இலையில் சூடான இட்லியும் சாம்பாரும் வந்தன. ஹரி சாப்பிடுவதை மற்றவர்கள் வேடிக்கை பார்த்தனர். 'எதிரே உட்கார்ந்து சாப்பிடுபவர் மனித ஜாதியே இல்லை!' என்பது போல் அவர்கள், ஹரியைப் பார்த்தனர்.

''தம்பி, சங்கரமங்கலம் வாரிசற்றுப் போன ஓர் இல்லம். அங்கு இருப்பதெல்லாம் ரக்ஷஸுகள்... உங்களை அவை கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டுவிடும். நீங்கள் மீண்டும் அங்கு போகாமல் இருப்பதுதான் நல்லது.''

ஹரி அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாதவனாக, கடைக்காரரிடம் கேட்டான்: ''நாலஞ்சு நாளைக்கு மதியச் சாப்பாடு தேவை... கிடைக்கும் இல்லையா?''

''அதற்கென்ன, தாராளமாக வாங்க'' கடைக்காரர் ஒப்புக் கொண்டார்.

ஹரி எழுந்தான். கடையிலிருந்து அவன் வெளியேறத் தொடங்கியதும், கடைக்குள் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் அவனைப் பின்தொடர்ந்தார்.

''தம்பி, அதே வீட்டுக்குதான் போகிறீர்களா நீங்கள்?''

''ஆமாம்!''

''அப்படியானால், இதையும் கேட்டுக் கொள்ளுங்கள்... அந்த வீட்டின் கடைசி வாரிசான ஸ்ரீதேவிக்குட்டி

அந்தர்ஜனம் அந்த வீட்டின் தானிய அறையில் தூக்குப் போட்டு இறந்து போனார்!''

''என்ன!'' ஹரி சட்டென்று திரும்பினான். அதுவரை அவனுடன் பேசிக் கொண்டு வந்த நபர் திடுமென்று காணாமல் போனார். அதற்கு பதிலாக கரும்பூனை ஒன்று இடப் புறமாகப் பாய்ந்தது.

## 12

ஹரிகிருஷ்ணன் சற்று நேரம் அங்கேயே நின்றான். தன்னிடம் பேசிக் கொண்டிருந்தவர் ஒரு மனிதர். அதுவும் சற்று நேரத்துக்கு முன்னால், டீக்கடைக்குள் இருந்து கொண்டு தன்னிடம் பேசியவர். ஸ்ரீதேவியைப் பற்றிப் பேசிய உடன் மறைந்தும் போனார். ஆனால், அந்த இடத்தில் தென்பட்ட கரும் பூனை, ஹரியின் மனத்திலிருந்து மறையாமலே நின்றது!

அப்படியானால், தன்னிடம் பேசியவர் மனிதரல்ல; வேறு ஏதோ ஒன்று... அது உறுதி. இங்கு வந்தது முதல் நடப்பதெல்லாமே விசித்திரமான விஷயங்கள்தான். ஆனால், ஹரிக்கு ஒரு விஷயம் புரிந்தது. எப்படியிருப்பினும் தன்னிடம் பேசியவர்... தன்னிடமோ, ஸ்ரீதேவியிடமோ நல்ல எண்ணம் கொண்டவர் அல்ல!

சங்கரமங்கலம் வீட்டிலிருந்து தன்னை அப்புறப் படுத்துவதே இதன் நோக்கம். தனக்கு எதிராகக் கோயில் நிலத்தைக் கையகப்படுத்தி வைத்திருப்பவர்தான் இந்தக் காரியத்தின் பின்னணியிலும் இருப்பவர் என்று ஹரிக்குத் தோன்றியது.

இல்லத்தை அடைந்தபோது வராந்தாவில் மனிதர் ஒருவர் உட்கார்ந்திருப்பதை அவன் கவனித்தான். நடுத்த

வயது. உயரமான மெலிந்த உடம்பு. முடி நரைத்த மனிதர். இருப்பினும், அந்த முகத்தில் ஒரு வித ஒளி தென்பட்டது.

''யாரென்று தெரியவில்லையே...'' ஹரி பேச்சைத் துவக்கினான்.

''ராமவாரியர் என் பெயர்... பக்கத்தில்தான் குடியிருக்கிறேன். நேற்றுதான் குழந்தைகள் வந்து சொன்னார்கள். சங்கரமங்கலம் வீட்டுக்கு யாரோ வந்திருப்பதாக. அதுதான் பார்க்கலாம் என்று வந்தேன்.''

''நல்லவேலை செய்தீர்கள். இப்படியாவது ஒருவரைப் பழக்கப்பட முடிந்ததே. உட்கார்ந்திருங்கள்... நான் இதோ வருகிறேன்...'' என்ற ஹரி வீட்டுக்குள் நுழைந்தான்.

சற்று நேரத்துக்குள் உடை மாற்றிக் கொண்டு திரும்பி வந்தான்.

''குளித்துவிட்டு வரும்போது அப்படியே டீக்கடைக்குப் போயிருந்தேன்'' ஹரி கூறினான்.

''அப்படித்தான் இருக்கும் என்று நினைத்தேன்.''

''விசேஷம் ஏதாவது உண்டா? நான் இந்த இடத்துக்குப் புதியவன்... ஊரைப் பற்றி எதுவும் தெரியாது!'' ஹரி ஆரம்பித்து வைத்தான்.

''நிறைய இருக்கிறது. இங்கு நடந்த பல விஷயங்கள் எனக்குத் தெரியும். ஒரு காலத்தில் இந்த ஊர் எல்லா ஐஸ்வர்யங்களும் நிறைந்து செழிப்பாக இருந்தது... ம் அதெல்லாம் எத்தனையோ வருஷங்களுக்கு முந்தைய கதை. இன்றைக்கு அதெல்லாம் பழங்கனவாகிவிட்டது.''

''அதற்கு என்ன காரணம்?''

''அந்தக் காலத்தில் இந்த கிராமத்தைக் காப்பாற்றி வந்தது இந்த ஊருக்கு எல்லாமாக இருந்த 'தாய் பகவதிதான்.' இப்போது அந்தக் கோயிலே இல்லாமலாகி

விட்டது அதன்பிறகுதான் இந்த ஊர் இந்த நிலைமைக்கு உள்ளானது.''

''அந்தக் கோயிலப் பற்றி குறிப்பாக நீங்கள் எதையாவது சொல்ல முடியுமா?''

''தலைமுறை தலைமுறையாகச் சொல்லிக் கேள்விப் பட்டவை மட்டும்தான்... மலைகளுக்கு நடுவில் விசாலமான ஒரு மைதானம் இருந்தது அப்போது. அதன் மையத்திலிருந்ததாம் கோயில். எல்லா அம்சங்களும் சக்திகளும் நிறைந்து வழிந்த கோயில்.''

''நான் ஒரு கேள்வி கேட்கலாமா?''

''கேளுங்கள்...''

''இந்த இல்லத்துக்கும் கோயிலுக்கும் ஏதாவது தொடர்பு இருந்ததா?''

''இருந்ததாகத்தான் கேள்விப்பட்டேன். அந்த கோயிலில் தேவியைப் பிரதிஷ்டை செய்தவர் சங்கர மங்கலம் வீட்டைச் சேர்ந்த ஒரு திருமேனிதான் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் எண்ணெய்க்காட்டு மனையைச் சேர்ந்தவராம். இதெல்லாம் நீண்ட காலத்துக்கு முன்பாக நடந்த விஷயங்கள் இல்லையா?''

''சரிதான்... எல்லாம் கேள்வி ஞானத்தாலேயே தெரிந்து கொள்ளக் கூடிய விஷயங்கள்தான்... ராமவாரியரே. நீங்கள் எனக்கு எந்த வகையிலயாவது உதவ முடியுமா?''

''அதற்காகத்தான் வந்திருக்கிறேன். அந்தக் குறுப்பு தான் கோயில் நிலத்தை கைவசப்படுத்தியுள்ளார். ஆனால், அதற்கு முறையான பத்திரங்கள் எதுவுமில்லை.''

''வாரியரே... நீங்கள் நினைத்தால் 'கோயில் புனருத்தாரணக் கமிட்டி' ஒன்றைத் தொடங்க முடியுமா?''

''செய்யலாம்... ஆனால், இந்த கிராமத்தின் ஒரு பழக்கம் என்னவென்றால், பெரும்பாலான ஆட்கள்

குறுப்பை ஆதரிப்பவர்கள். அதாவது அவரது நிலத்தில் வேலை செய்பவர்கள்.''

''குறுப்பின் ரப்பர் தோட்டத்துக்கு நடுவில் வட்டமாகச் சில மரங்கள் கருகிப் போனது போல் உள்ளன. அங்குதான் கோயில் புதைந்திருக்கும் என்று நினைக்கிறேன்.''

''இப்படியெல்லாம் சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். அங்குதான் கோயில் இருந்தது என்பதற்கான வலுவான ஆதாரம் எதையாவது நாம் சுட்டிக்காட்ட வேண்டும். உங்களால் அதைச் செய்ய முடியுமா? இல்லா விட்டால், அவர்கள் நம்பும்படி ஏதாவது அதிசயம் நடக்க வேண்டும்... அதற்குப் பிறகு அவர்களை ஒன்று சேர்ப்பது எனது வேலை!''

ராமவாரியரது திட்டம் சரியானதுதான் என்று ஹரி நினைத்தான். அதற்காக முயற்சி செய்வதாகக் கூறினான்.

''சரி... நான் நாளைக்கு வந்து உங்களைப் பார்க்கிறேன்.'' ராமவாரியர் விடைபெற்றுப் புறப்பட்டார்.

''டீ குடிக்கப் போனீர்கள் போலிருக்கிறதே...'' உள்ளிருந்து பழக்கமில்லாத ஒரு குரல் கேட்டது.

'நான் வெளியே போகும்போது வீட்டிற்குள் யாரும் இல்லை. வந்திருப்பது யாராக இருக்கும்? குரலைப் பார்த்தால், நிச்சயமாக அது ஸ்ரீதேவிகுட்டி அல்ல!' என்பது விளங்கியது.

''யாரது?'' ஹரி கேட்டான்.

அதற்கு பதில் சொல்வது போல், வாசற்படிக்கு வந்தவள் ஓர் இளம்பெண். முண்டும், ஜம்பரும் அணிந் திருந்தாள். அழகி.

''யாரென்று தெரியவில்லையே?'' ஹரி மறுபடியும் கேட்டான்.

''பெயர் வாஸந்தி. அம்மாதான் சொல்லி அனுப்பினார்கள்.''

''ஓகோ... பாறுக்குட்டியம்மா மகளா?''

''ஆமாம்.''

''எனக்கும் சின்ன வயசு... இந்த வீட்டில் வேறு யாரும் கிடையாது. இதெல்லாம் ஒரு தொந்தரவாக இருக்குமே.''

''என்ன தொந்தரவு?''

''நாலு பேர் நாலு விதமாப் பேசலாம்.''

''பேசிவிட்டுப் போகட்டும்... எனக்கு அந்த மாதிரி பயமெதுவும் கிடையாது!''

''அப்படியானால், எனக்குக் கவலையில்லை... முக்கியமான விஷயம், சமைக்கத் தெரியுமில்லையா?''

''நன்றாகச் சமைப்பேன். சாப்பிட்டுப் பார்த்த பிறகு சொல்லுங்கள்!''

''அதற்குள் சமையல் ஆரம்பமாகி விட்டதா? இட்லி சாப்பிட்டேன். இருந்தாலும் வாஸந்தியின் கையால் செய்த முதல் சமையல். சாப்பிட்டால் போகிறது!''

ஹரி உள்ளே நுழைந்தான். இப்போது சாப்பிட்ட போதும், அம்மாவின் கைமணம் கமழ்ந்தது. சொந்த வீட்டில் சாப்பிட்டது போலவே உணர்ந்தான்.

''எங்களது வீட்டுச் சாப்பாடு மாதிரியே இருக்கிறது.'' ஹரி பாராட்டாகக் கூறினான்.

''அப்படித்தான் இருக்கும்!''

''வாஸந்தி, விளக்கு வைப்பதற்கு முன்னால் வீட்டுக்குத் திரும்ப வேண்டும் இல்லையா? அப்படித்தானே அம்மா சொல்லியிருப்பார்கள்?''

''இல்லை... இங்கேயே தங்குமாறு சொல்லி யிருக்கிறார்கள்!''

''ஐயையோ, அது சரியாகுமா?''

''அம்மா என்னிடம் சொன்ன பிறகு நான் அதை மீறி என்ன செய்ய முடியும்?'' வாஸந்தி வெட்கப்பட்டாள்.

அவளது நடவடிக்கைகள் மற்றும் பார்வையை கவனித்தபோது, வாஸந்தி தேர்ந்த ஒருத்திதான் என்பது அவனுக்குப் புரிந்தது.

'நான் இங்கு வந்திருப்பது ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக. இந்த ஊருக்கு வந்தவுடன் தொடர்பு கொண்டது இந்த ஊர்க்காரர் எவருடனும் அல்ல; கோபிகாவுடன்தான். ஆனால், அவள் மனிதப் பெண் அல்ல... மட்டுமின்றி வாஸந்தியுடன் இங்கு நாம் தங்கியிருப்பதை ஸ்ரீதேவி விரும்புவாரோ, மாட்டாரோ?'

ஹரி ஹோமாக்னிக்கு வேண்டியவற்றைத் தயார் செய்தான். அகில், சந்தனம் உட்பட்ட எல்லாமே அங்கு தயாராக இருந்தன.

வெளிப்புறமிருந்த திறந்தவெளிச் சவுக்கத்தில் எல்லாவித சௌகரியங்களும் இருந்தன. முன் எப்போதோ, யாரோ ஹோமகுண்டத்தையும், இருப்பிடத்தையும் கூடத் தயார் செய்திருந்தனர்.

துளசி மாடத்திலிருந்த விளக்கு அணைந்திருந்தது. எங்கும் இருள் சூழ்திருந்தது.

ஹரி ஹோமகுண்டத்தில் சமிதுகளைப் போட்டு நெருப்பு மூட்டினான். கற்பூரத்தின் ஜுவாலையிலிருந்து அகில் மற்றும் சந்தனக் கட்டைகள் பற்றி எரியத் தொடங்கின. நீலம் மற்றும் மஞ்சள் நிற ஜுவாலைகள் ஒரே சீராக உயர்ந்து எழும்பின. தாயத்தின் தகட்டிலிருந்த மந்திரத்தை ஹரி உச்சரிக்கத் தொடங்கினான்.

இருநூற்றுஐம்பத்தொரு தடவை மந்திரம் உச்சரித்த பிறகும் சட்டென்று தீப்பிடிக்கக் கூடிய பட்டுத் துணி எரியாமல் குண்டத்துக்குள் அப்படியே கிடந்தது.

ஹரி மந்திரோச்சாரணத்தைத் தொடர்ந்தான். எண்ணிக்கையை உறுதி செய்வதற்காகக் கழுத்திலிருந்த ருத்ராட்சமாலையின் மணிகளை உருட்டத் தொடங்கினான். எண்ணிக்கை ஆயிரத்தொன்றை தொட்ட அதே நேரத்தில், பட்டுத்துணி கருகத் தொடங்கியது. வெண்மையான தடித்த புகைச் சுருள்கள் மேற்புறமாக உயரத் தொடங்கின. உயர்ந்த புகை மேற்கூரையில் தட்டி ஒரு தூண் போல் வடிவம் கொண்டது.

திடுமென்று ஹோமகுண்டத்திலிருந்து ஏதோ ஒன்று மேற்புறமாக உயர்ந்து எழும்புவதாகத் தோன்றியது. ஹரி ஊன்றி கவனித்தான்.

சற்று நேரத்திற்குள் புகை அடங்கியது. புகை மறைந்த அதே கணத்தில் தேவ கன்னிகைபோல் ஒருத்தி அங்கு நின்று கொண்ருந்தாள். அவள் தன் கால்களை வெளிப்புறமாக எடுத்து வைத்தாள். மேகத் துண்டுகள் போன்ற தெளிவற்ற வெள்ளை உடை அவளுடலை மறைத்திருந்தது.

''யார் நீ?'' ஹரி கேட்டான்,

''விஷ்ணுப்ரியா!''

''நீ எப்படி இதற்குள் அகப்பட்டதாய்?''

''அது ஒரு பெரிய கதை.''

''அப்படியா... சரி! முதலில் அப்படி உட்கார்!'' அருகிலிருந்த பீடத்தைச் சுட்டிக் காட்டினான் ஹரி.

அவள் அமர்ந்தாள்.

''இனி சொல் உனது கதையை.''

''நான் எழிலைக்காவு பகவதி கோயிலின் - தேவியின் காவல் பெண்களில் ஒருத்தி.''

''என்ன!'' ஹரி வியப்புடன் கேட்டான்.

# 13

''ஆமாம், அது ஒரு பெரிய கதை...'' அவள் பேசினாள். குரல் இனிமையாக இருந்தது.

''நான் அதைத் தெரிந்து கொள்ளலாமா?''

''உங்களிடம் அதைச் சொல்லாமல் இருக்கவும் முடியாது. நீங்கள் என் நன்றிக்கு உரியவர். எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு பெரிய மாந்திரீகரால் கட்டுண் டிருந்த எனக்கு விடுதலை அளித்தவர் நீங்கள்தான்!''

ஹரி, அவளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந் தான்.

முன்பே தனக்கு அறிமுகமான கோபிகாவுக்கும், இவளுக்கும் பெரிய வேறுபாடு எதுவும் தெரியவில்லை. ஸ்ரீதேவியை விடவும் இளமையாகத் தெரிந்தாள். வயதைக் கணிக்க முடியவில்லை. காலத்தை வென்ற ஆனால், வயது குறிப்பிட முடியாத ஓர் உருவம்! செதுக்கியெடுத்த அழகு, மோகமேற்படுத்தும் உடற்கட்டு. அமானுஷிகமான அழகு, வர்ணனைக்கு அப்பாற்பட்டதாகத் தெரிந்தது. எவ்வளவு நேரம் பார்த்தாலும் தெவிட்டாத அழகு! ஹரி அவளையே பார்த்தான்.

''என்ன இப்படி உற்றுப் பார்க்கிறீர்கள்!'' அவள் கேட்டாள்.

''உங்களைப் பார்த்த பிறகு, என் கண்களைத் திருப்பி எடுக்க முடியவில்லை. அசந்து போயிருக்கிறேன்!'' ஹரி கனவில் பேசுவதுபோல் பேசினான்.

''பெரும்பாலும் நாங்கள் எல்லோரும் இந்த வகையில் ஒரே மாதிரிதான். எங்களுக்குள் வித்தியாசம் கண்டுபிடிப்பது கஷ்டம்!''

''இருக்கட்டும். நீங்கள் இங்கு வந்து சேர்ந்தது எப்படி என்று இன்னும் சொல்லவில்லையே?''

''சொல்கிறேன். நமக்கு நிறைய நேரம் உள்ளது. இன்றைக்கு ஸ்ரீதேவி வர மாட்டார்கள்.''

''அவரைத் தெரியுமா உங்களுக்கு?''

''இன்னும் நான்கு நாட்கள் அவர் இந்தப் பக்கம் வர மாட்டார் என்பதும் தெரியும்.''

''மனிதப் பெண்ணல்லாத ஸ்ரீதேவிக்குக் கூடவா இதெல்லாம்...''

''அது எல்லோருக்கும் பொதுவானது.''

''நிறையச் சொல்ல வேண்டியிருப்பதாகச் சொன்னீர்களே... சொல்லுங்களேன்.''

''எல்லாவற்றையும் தெளிவாகச் சொன்ன பிறகுதான் நான் இங்கிருந்து கிளம்புவேன். போதுமா? கொஞ்ச நேரம் இப்படியே அமைதியாக உட்கார வேண்டும் போலத் தோன்றுகிறது!'' விஷ்ணுப்ரியா கூறினாள்.

ஹரி சிந்தனையில் ஆழ்ந்தான். அவள் சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது. எத்தனையோ வருடங்களாக ஒரு சிறிய தாயத்துக்குள் அடைபட்டு இருளில் காலத்தைக் கழித்தவள் அல்லவா? இப்போது கூட எதிர்பாராமல்தானே அவளுக்கு விடுதலை கிடைத்தது. எனவே, அவளது கோரிக்கை நியாயமானதுதான். ஹரியின் மனம் சமாதானம் செய்து கொண்டது.

''ஒரு யோசனை... இங்கு உட்கார்ந்திருப்பதைவிட வெளியில் எங்காவது போகலாமே.''

''நானும் அதையே உங்களிடம் சொல்ல நினைத்தேன்.''

''எங்கே போகலாம்?''

''தென் புறத்திலுள்ள ஆற்றங்கரைக்குப் போகலாமே. ஆற்றை மறித்தபடி ஆங்காங்கே பாறைத் துண்டுகள்

நிறையக் கிடக்கின்றன. நான் ஆற்றின் சலசலப்பைக் கேட்டு எத்தனை வருஷங்களாகின்றன தெரியுமா?'' பேசியபடி விஷ்ணுப்ரியா பீடத்திலிருந்து எழுந்தாள்.

இருவரும் ஆற்றை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

விஷ்ணுப்ரியாவின் பேச்சிலிருந்து, அவளுக்கு அந்த இடமெல்லாம் ஏற்கெனவே பழக்கம் என்பது விளங்கியது.

''அதோ கேட்கிறது தண்ணீரின் சலசலப்பு!''

இருவரும் அருகருகே ஆற்றின் நடுவிலுள்ள பாறை ஒன்றின் விளிம்பில் அமர்ந்தார்கள்.

அவள் காலின் கீழ்ப்பகுதியில்... முன்புறமாக பாறைகளில் மோதித் தெறித்தபடி தண்ணீர் பாய்ந்து ஓடியது.

ஆகாயத்தில் நிலவு ஊர்ந்து கொண்டிருந்தது.

நிலவு வெளிச்சம் ஆற்றில் தங்கத்தை உருக்கி ஊற்றினாற் போல் ரசவாதம் செய்து கொண்டிருந்தது. பாறைகளுக்குச் சுற்றிலும் பாய்ந்து வந்த நீர், ஆங்காங்கே சிறிய சிறிய சுழல்களை ஏற்படுத்தின.

''இனி உனது கதையைச் சொல்லலாமே?'' ஹரி கதை கேட்பதில் தீவிரமானான்.

''எத்தனையோ வருடங்களுக்கு முன்னால்...'' அவள் சொல்லத் தொடங்கினாள்: ''எழிமலைக்காவு பகவதி கோயில் எல்லா விதமான வல்லமைகளுடனும் மேன்மையுற்று விளங்கிய காலம். அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் திடுமென்று ஒருநாள் மலைகள் இடம் பெயர்ந்ததும், பூகம்பம் ஏற்பட்டு கோயில் மண்ணுக்கடியில் புதைந்ததும்... இது, உங்களுக்குத் தெரிந்திருக்குமே!''

''கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''எனது கதை அதற்குப் பிறகு நடந்தது.''

''சுமார் எத்தனை வருஷங்கள் ஆகியிருக்கும்?''

''முந்நூறு வருஷங்கள் இருக்கலாம்.''

''என்ன நடந்தது? விளக்கமாகச் சொல்லுங்களேன்.''

விஷ்ணுப்ரியா தொடர்ந்தாள்:

''கோயிலுக்கு விபத்து நேர்ந்தபோது நான், வடபுறத்திலுள்ள சிறிய பகவதியின் கோயிலுக்கு தேவியின் பொருட்டு தூது சென்றிருந்தேன். அதனால் நான் அப்போது கோயிலிலோ, தேவியின் அருகிலோ இல்லை!''

''அது யார் சிறிய பகவதி'' - ஹரி குறுக்கிட்டான்.

''இருவரும் சகோதரிகள். அதன் பின்னணியிலும் ஒரு கதை உண்டு; இங்கு அது அவ்வளவு முக்கியமல்ல...''

ஹரி வியப்புடன் விஷ்ணுப்ரியா பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஒரு வகையில் பார்த்தால், தான் இந்தப் பகுதிக்கு வந்தது முதல் எத்தனையோ சம்பவங்களுக்குச் சாட்சியாக இருக்க நேர்ந்ததுள்ளது.

''தூது போயிருந்த நான் திரும்பி வந்தபோது, கோயில் விபத்தில் சிக்கியிருப்பதைக் கண்டேன். அதன் பிறகு ஒவ்வொரு பௌர்ணமிக்கும் நான் கோயில் இருந்த பகுதிக்கு வந்து கொண்டிருந்தேன். அப்படி ஒரு முறை நான் வந்தபோது கோயில் இருந்த இடத்தின் மீது வெள்ளம் பாய்ந்ததால் கருவறைப் பகுதியின் மேற்புறம் தெளிவாகத் தெரிந்தது...''

அதைக் கேட்ட ஹரிகிருஷ்ணனின் கண்கள் பிரகாசமடைந்தன. செப்புத் தகடுகள் பதித்த கோயிலின் மேற்கூரைப் பகுதிகள் அவன் கண்களுக்குத் தெரிவது போல் ஒரு பிரமை. அப்படியே இமைக்க மறந்தவனாக உட்கார்ந்திருந்தான்.

''அப்புறம்?'' - ஹரி தூண்டினான்.

மேற்குத் திசையிலிருந்து குளிர்ந்த காற்று வீசியது. அந்தக் காற்றில் விஷ்ணுப்ரியாவின் நீளமான தலை

முடியிழைகள் காற்றில் ஊஞ்சலாடின. அவள் அணிந்திருந்த உடைகள் புகை போல் அசைந்தாடின. எங்கோ பூத்திருக்கும் பாரிஜாதப் பூவின் வாசனை காற்றில் கலந்து பரவியது.

ஆற்றின் மறுகரை இருட்டாக இருந்தது. காட்டு மரங்கள் இடைவெளி அதிகமின்றி அடர்த்தியாக வளர்ந்து செழித்திருந்தன. நிலவொளி வலுவாகப் பாய்ந்த போதிலும் மரத்தின் மேற்பரப்பைத் துளைத்துக் கொண்டு அந்தத் தண்மையான கதிர்களால் பூமியைத் தொட முடியாததால், அந்தப் பகுதியே கறுத்த மையால் வரைந்து வைத்த ஒரு நிழல் சித்திரம் போல் காட்சி அளித்தது.

அந்த மரக்கூட்டத்தின் மேற்புறத்தில் ராப் பறவைகள் சிறகசைத்தபடி குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன. சிள்வண்டுகள் மற்றும் சுவர்க்கோழிகளின் ரீங்காரம், இருண்ட அந்தச் சுற்றுப்புறத்தை பயங்கரமாக்கின.

''பிறகு...'' ஹரி கேட்டான்.

''நான் கோயிலுக்கு வந்தபோது மற்றொரு சம்பவமும் நடந்தது.''

''அது என்ன?''

''கருவறையின் மேற்புறம் தெரிந்த பகுதிக்கு அருகில் சற்றுத் தள்ளி ஏதோவொன்று பளபளப்பாகத் தெரிந்தது. அருகில் சென்றபோது உடல் புல்லரிக்கும்படியான ஒரு காட்சியைக் கண்டேன்.''

''... ... ... ...''

அந்தச் சம்பவத்தை மீண்டும் காண்பதுபோல் சற்று நேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள் விஷ்ணுப்ரியா.

''என்ன காட்சி அது?''

''தேவியின் கோயிலுக்கு முன்புறமாக வளர்ந்து நிற்கும் ஆல மரத்தின் மேற்புறத் தளிர். அது, தரைப் பரப்பைத் துளைத்து வளர்ந்திருந்தது. என்ன ஓர் அதிசயம்! நான்

சட்டென்று அதிலிருந்து ஓர் இலையைப் பறித்து உச்சந்தலையில் வைத்துக் கொண்டேன். அந்த விநாடியில் இந்தக் கோயில் மீண்டும் நிச்சயமாக வெளியுலகத்துக்குத் தெரிய வரும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது!''

''அதன் பிறகு என்ன நடந்தது?''

''ஒரு கார்த்திகை மாதப் பௌர்ணமியன்று நான் திரும்பவும் அங்கு சென்றபோது எதிர்பாராமல் தெளிவற்ற உருவம் ஒன்று என் முன்பாகத் தோன்றியது. அந்த உருவம் ஒரு பெண் மந்திரவாதியாக இருந்தாள். அவள், என்னிடம் 'நீ யார்' என்று கேட்டாள். உண்மையைச் சொன்னால், அவள் மூலமாக எனக்கு ஏதாவது ஆபத்து ஏற்படலாம் என்பதால் நான் அவளிடம் உண்மையைச் சொல்லவில்லை. சட்டென்று அவள் கையிலிருந்த மந்திரப் பிரம்பை என் மீது வீசினாள். நான் அவளது பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டேன்!''

''பட்டுத் துணிக்குள் எப்படி அடைபட்டீர்கள் நீங்கள்?'' ஹரி விசாரித்தான்.

''அந்த மந்திரவாதினி களிமண்ணால் ஒரு பொம்மை செய்தாள். அந்த மண் பொம்மையை சூளையில் வைத்துச் சுட்டு எடுத்தாள். என்னை அந்தப் பொம்மைக்குள் ஆவாகம் செய்தாள். பிறகு சிவப்பு நிறப் பட்டில் என்னை சுற்றினாள்.''

''அதற்குள் ஒரு தாயத்தும் இருந்ததே.''

''அப்படித்தான் இதற்கான கர்மத்தைச் செய்ய முடியும்!''

''ஏன்?''

''இது போன்ற மாந்திரீகப் பிரயோகத்தின்போது தேவ அம்சமுள்ளவர்களை பந்தனம் செய்தால், அதிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு உரிய வழி முறைகளையும் குறிப்பிடத்தான் வேண்டும்.''

''விஷ்ணுப்ரியாவை யார் இப்படி பந்தனம் செய்தது என்று தெரியுமா?''

''நான் ஒரு போதும் அதை தெரிந்து கொள்ள முடியாது.''

''ஏன்?''

''மாந்திரீகத்தால் பந்திக்கப்படுபவருக்கு, யார் தன்னை பந்தனம் செய்தார் என்பது தெரிந்து விட்டால், பிறகு விமோசனமடைவது சுலபமாகிவிடும்!''

ஹரிக்கு அவள் சொன்ன வார்த்தையின் பொருள் விளங்கவில்லை.

''இப்போது சொன்ன பதிலின் அர்த்தம் புரியவில்லை எனக்கு.''

''பந்திப்பது மந்திரத்தால்தான். இந்த இடத்தில் மந்திரங்களுக்குச் சக்தி அதிகம். மந்திர எழுத்துகளுக்கு அபாரமான சக்தி உள்ளது. அதை முறைப்படி உச்சரிக்கும் போது அதன் வலு அதிகரிக்கிறது. இதெல்லாம் மந்திரங் களுடன் தொடர்பு உள்ளவர்களுக்கு மட்டுமே புரியும்.''

''இப்படியொரு விடுதலை கிடைக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களா என்ன?''

''நிச்சயமாகத் தெரியும். நீங்கள் இங்கு வருவீர்கள் என்று எனக்கு ஏற்கெனவே தெரியும்.''

''தீர்க்கதரிசனமா?''

''அதை எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்... ஒவ்வொன்றும் நடக்க வேண்டியபடி நடக்கும்.''

''அப்படியா?''

''நான் சொன்னது உண்மை! நீங்கள் இந்த இல்லத்துக்கு வந்தது முதல் நான் ஒரு பிராணியின் உடம்பில் புகுந்து கொண்டு உங்களை கவனித்தேன்!''

''அப்படியானால், ஸ்ரீதேவியுடன் நான் நெருங்கியிருந்த சந்தர்ப்பங்களில் கூட நீங்கள் என்னைப் பார்த்திருப்பீர்கள், அப்படித்தானே?''

''அதுதான் உண்மை. எப்பொழுதாவது ஸ்ரீதேவி இங்கிருந்து நகர்வார். அந்த சந்தர்ப்பத்தில் நான் உங்களது கவனத்தைக் கவர்வதென்று தீர்மானித்தேன். அப்படியே நடக்கவும் செய்தது.''

''அதன் பிறகு கோயிலுக்கு என்ன நேர்ந்தது என்று உங்களுக்குத் தெரியாது இல்லையா?''

''ஆமாம், தெரியாது!''

''ஒரு காலத்தில் விஷ்ணுப்ரியா பார்த்த கருவறையின் மேற்புறப் பகுதி இப்போது கண்ணுக்குத் தெரியாமல் முழுவதுமாக மறைந்து விட்டிருக்கிறது. அங்கெல்லாம் ரப்பர் விவசாயம் செய்திருக்கிறார்கள். ஆனால், நீங்கள் குறிப்பிட்ட ஆல மரத்தின் நுனி மட்டும் இப்போதும் துளிர்விட்டுக் கொண்டிருக்கிறது.''

''உண்மையாகவா!'' நம்ப முடியாதவளாகக் கேட்டாள் விஷ்ணுப்ரியா.

அப்போது, கிழக்குப் புறமிருந்த மலைத் தொடரின் அடிவாரப் பகுதியிலிருந்து பயங்கரமான ஓர் இரைச்சல் கேட்டது.

''என்னது!'' - விஷ்ணுப்ரியா உட்கார்ந்த இடத்திலிருந்து துள்ளி எழுந்தாள்.

''அதோ அந்தச் சத்தம் நம்மை நோக்கி வருகிறது!'' ஹரிகிருஷ்ணன் திடுக்கிட்டவனாகத் துள்ளி எழுந்தான்.

விநாடிக்கு விநாடி அந்தச் சத்தம் அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது!

# 14

கிழக்குப் புற மலையின் அடிவாரத்திலிருந்து வரும் அந்தச் சத்தம் இரைச்சலிட்டுப் பாயும் வெள்ளத்தின் சத்தம்போல் இருந்தது. ஏறத்தாழ ஓராள் மட்ட உயரத்தில் பாய்ந்து வந்த மலை நீர், அவர்களை நெருங்கியதும் விஷ்ணுப்ரியா, ஹரிகிருஷ்ணனைக் கட்டியணைத்ததும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. இருள் உடைந்து பாய்ந்ததுபோல் வெள்ளம். விஷ்ணுப்ரியா, ஹரிகிருஷ்ணனுடன் மேற்புற மாக உயர்ந்து நீர்மட்டத்தின் மீது நின்றாள்.

அவர்களின் கால்களுக்குக் கீழே அப்போதும் வெள்ளம் இரைச்சலுடன் பாய்ந்து கொண்டிருந்தது.

ஒரு சில நிமிடங்களுக்குள் வந்த வெள்ளம் வடியவும் செய்தது. ''இதற்கு என்ன காரணம்?'' ஹரி கேட்டான்.

''இது இயற்கையான வெள்ளமல்ல; யாரோ விளையாடுகிறார்கள்!''

''நாம் இங்கிருப்பது வேறு எவருக்குத் தெரிந் திருக்கும்?''

''குறிப்பாக இன்னார்தான் என்று சொல்ல முடியாது. ஆனால், உங்களுக்கு எதிராக யாரோ வேலை செய்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமில்லையா?''

''தெரியும். ஒரு மந்திரவாதி. அவரிடம் கழுகு ஒன்றும் உள்ளது. ஒரு தடவை அதை எனக்கு எதிராக ஏவிவிடவும் செய்தார்!''

''அப்படியானால், இதுவும் அவரது வேலையாகத் தான் இருக்கும்.''

''இந்த அளவுக்கு மலை வெள்ளத்தைப் பாய வைக்க ஒரு மந்திரவாதியால் முடியுமா என்ன?''

''ஏன் முடியாது? கிழக்கு மலையின் அடிவாரத்தில், இந்த ஆறு உற்பத்தியாகிற இடம் உள்ளது. அங்கேயே பெருமளவு நீர் தேங்கியுள்ளது. பெரிய பெரிய பாறைகளுக்கு மத்தியில் மண் கட்டிகள் கிடந்து தண்ணீரை நிறுத்தி வைத்துள்ளன.''

''அப்படியானால், அந்தப் பாறைகள் மற்றும் மண்ணாங்கட்டிகளை அசைத்து விட்டால் போதும் இல்லையா?''

''அநேகமாக மாந்திரீக சக்தியால், யோகினிகளது உதவியால்தான் இப்படிச் செய்திருக்க வேண்டும். நான் இங்கிருந்து உடனே புறப்படுவது நல்லது.''

''உங்களுக்கு பயமாக இருக்கிறதா?''

''பயமென்று சொல்ல முடியாது. இன்னொரு தடவை அநாவசியமாக ஆபத்தில் சிக்கிக் கொள்ள வேண்டாமே என்றுதான். நாம் எச்சரிக்கையாக இல்லா விட்டால், இந்தச் சூழ்நிலையில் எதுவும் நடக்கலாம்.''

ஆறு, பழையபடி அமைதியடைந்தது. தண்ணீர் மீண்டும் சலசலத்தபடி சன்னமான சத்தத்துடன் பாய்ந்தது. இருவரும், அங்கிருந்து வந்த வழியே இல்லத்துக்குத் திரும்பினர்.

வழியெல்லாம் விஷ்ணுப்ரியா பாதையின் இரு புறங்களையும் கவனித்தவாறே வந்தாள். திரும்பவும் ஏதாவது ஆபத்து நேரிடலாம் என்று அவள் உள்மனம் எச்சரித்தது. அவளது முந்நூறு வருட கடந்த காலச் சிறை வாழ்க்கைதான் அவளது பயத்தின் அடிப்படை.

''விஷ்ணுப்ரியா, கோயில் மறைந்திருக்கும் பகுதிக்கு நாம் போகலாமா?''

"போக வேண்டும். கண்டிப்பாகப் போக வேண்டும்... அந்த ஆலமரத்தின் தளிர் இலையைப் பிடுங்கி என் உச்சந் தலையில் செருக வேண்டும்."

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

விஷ்ணுப்ரியா, ஹரிகிருஷ்ணனின் தோளைப் பிடித்தபடி நடந்தாள். நடப்பதில் அவள் மிகுந்த ஆர்வம் உள்ளவளாகத் தென்பட்டாள்.

"நான் இன்று எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன் தெரியுமா?"

"அதற்கு என்ன காரணம்?"

"எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு என் சொந்த உடல் திரும்பக் கிடைத்திருக்கிறது. ஒரு காலத்தில் தேவியுடன் எவ்வளவு மகிழ்ச்சியாக இது போல் காலாற நடந்திருக்கிறேன்!"

அவர்கள் ரப்பர் தோட்டத்தின் மையப் பகுதியை அடைந்தார்கள். கருகிக் கிடக்கும் ரப்பர் மரங்களின் நடுவே நிலவொளியில் ஆல மரத்தின் தளிர் இலைகள் பளபளப்பதை அவள் ஊன்றி கவனித்தாள். சட்டென்று மண்டியிட்டு வணங்கிய விஷ்ணுப்ரியா, அந்த தளிர் இலையிலிருந்து ஒன்றைக் கிள்ளி, தன் உச்சந் தலையின் முடிகளுக்குள் அதைச் செருகினாள்.

அப்படியும் அந்த இலை மேலும் பளபளத்தது.

"ஏறத்தாழ இங்குதான் கோயிலின் கருவறை இருக்க வேண்டும்... இல்லையா விஷ்ணுப்ரியா?"

ஹரி, குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சுட்டிக் காட்டிப் பேசினான்.

விஷ்ணுப்ரியா சற்று விலகி நின்று ஆலந்தளிர் பளபளக்கும் இடத்தையும், கருவறை இருக்கக் கூடிய பகுதி

என்று ஹரி சுட்டிக்காட்டிய பகுதியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''இல்லை... ஹரி! கருவறை இன்னும் சற்றுத் தள்ளி இருக்கிறது'' என்றபடி கிழக்குத் திசையில் மேலும் சற்று விலகி நின்று வேறோர் இடத்தைச் சுட்டிக் காட்டினாள். அங்கு தும்பைச் செடிகள் நிறைய வளர்ந்திருந்தன.

''இந்தத் தும்பைச் செடிகள், அந்தக் காலத்தில் கோயிலின் மதிலைச் சுற்றியும், கருவறை மற்றும் கோயில் சுவருக்கு இடைப்பட்ட பகுதியிலும் வளர்ந்திருந்தன!'' விஷ்ணுப்ரியா கூறினாள்.

அதே நேரம் இருண்டு கிடந்த ரப்பர் மரங்களுக்கு நடுவே ஒரு விசித்திரமான காட்சியை அவள் பார்த்தாள்.

அந்தரத்தில் ஏராளமான மின்மினிப் பூச்சிகள் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. அவை எண்ணிக்கையில் நூறோ... ஆயிரமோ அல்ல; லட்சக்கணக்கில் இருந்தன!

ஒரு பெரிய கோள வடிவில் அவை பறந்து கொண்டிருந்தன. ஏறத்தாழ ஐந்தடி விட்டமுள்ள ஒரு பெரிய கோளம். ரப்பர் மரங்களின் ஊடாகக் கூரிருட்டில் அந்தக் கோளம் காற்றில் மிதப்பது போல் உருண்டு கொண்டிருந்தது.

''அதைப் பார்க்கவே மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறதே, விஷ்ணுப்ரியா!'' ஹரி அவளைப் பார்த்துக் கேட்டான்.

''சற்றுப் பொறுங்கள். நாம் நினைப்பது போல் அது அழகான ஒரு பொருளல்ல!''

அப்போது அந்தக் கோளம் தரையில் விழுந்து ஒரு பந்து போல் எம்பி உயர்ந்தது.

சற்று நேரத்திற்குள் அந்தக் கோள வடிவ உருவம் மாறியது. அந்த நெருப்புத் துணுக்குகள் கண்ணுக்கு

முன்பாகவே ஆறு கைகள் கொண்ட பைசாசிக உருவமாக மாறியது.

ஹரி திடுக்கிட்டவனாகச் சற்றுப் பின்வாங்க முயன்ற போது, அவனைத் தடுத்துப் பிடித்தாள் விஷ்ணுபிரியா.

"இந்தப் பகுதியிலிருந்து நகராதீர்கள்! நாம் இப்போது நிற்பது கோயில் பகுதிக்குள்!"

சட்டென்று அந்த உருவத்தின் ஆறு கைகளில் ஒன்று தனியாகப் பிய்த்துக் கொண்டு அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தது.

விஷ்ணுப்ரியா, ஹரியை இழுத்துத் தன்னுடன் சேர்த்து நிற்க வைத்தாள்.

பிரிந்து வந்த அந்தக் கை, அவர்களுக்கு எதிரில் சுமார் மூன்றடி தொலைவில் நின்று விட்டது - யாரோ பிடித்து நிறுத்தியது போல்...

விஷ்ணுப்ரியா உடனே தரையிலிருந்து ஒரு தும்பைச் செடியைப் பறித்து அதை உதட்டோடு சேர்த்து வைத்து மந்திரித்தாள்.

சத்ரு சம்ஹார மந்திரத்தை அவள் உச்சரித்தாள். மலைகளையும், மஹாசக்தியையும் மஹாக்னியையும் மற்றும் மஹாபூமி, ஆகாயம் போன்றவற்றையும் தியானித்த பிறகு மந்திரத்தைத் தொடர்ந்தாள்.

"ஓம்... அம்... கம்... சம்... டம்... தம்... பம்...
ஃபாலோம் ஹரீம் ஹூம் ஸஹூம் ஃபட் ஸ்வாஹா."

அப்போது விஷ்ணுப்ரியாவின் கையிலிருந்த தும்பைச் செடி நெருப்பு போல் ஜொலித்தது.

அவர்களுக்கு முன்பாக அவர்களைப் பிடிப்பதற்குக் காத்திருந்த கைப் பகுதியை நோக்கி அவள் தன்னிடமிருந்த செடியை எறிந்தாள். சட்டென்று அங்கிருந்து புகைச்சுருள்

ஒன்று உயர்ந்தது. ஒரு சில விநாடிகளுக்குள் அந்தக் கை மறையவும் செய்தது. அதன்பின் மீதமிருந்த பைசாசிக உருவம் திரும்பவும் கோள வடிவமாக மாறி மேற்குத் திசையில் நகர்ந்து மறையவும் செய்தது.

''இனி அது திரும்பி வராது. வாருங்கள் போகலாம்.''

இருவரும் இல்லத்தை நோக்கி நடந்தனர். வராந்தாவை அடைந்து வீட்டுக்குள் நுழைய முற்பட்ட போது, தெருவாசல் பக்கமிருந்து சத்தம் ஒன்று கேட்டது.

தெருவாசற்கதவை யாரோ இழுத்து மூடுவது போலிருந்தது அந்தச் சத்தம்.

''என்ன சத்தம் அது?'' ஹரி கேட்டான்.

''நீங்கள் அந்தப் பக்கமாக கவனிக்க வேண்டாம்.''

இருவரும் படுக்கையறையின் கதவை மூடிய பிறகு, தெருவாசற்புறமிருந்த அந்த உருவம் வடக்குப் புறமாக நகர்ந்தது. இறுதியாக அது சென்று சேர்ந்து இடம் கறுப்பசாமியிடம்!

அதற்குள் அந்த உருவம் மாறிவிட்டது - ஓர் அழகான இளம் பெண்ணாக!

''போன விஷயம் என்ன ஆனது?'' கறுப்பசாமி, அவளிடம் கேட்டார்.

அவள் பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்ததால், கறுப்பசாமியின் கோபம் தலைக்கேறியது.

''இதற்குத்தான் உன்னை அனுப்பி வைத்தேனா? உனக்காக நான் இரண்டு உயிர்களை பலி கொடுக்க வில்லையா? இருந்தும் உன்னால் நான் சொன்ன வேலையை நிறைவேற்ற முடியவில்லையா? அவனைத் தொலைத்துக் கட்ட முடியவில்லையா?''

''முயற்சி செய்தேன். முதலில் மலைச்சரிவுத் தடாக நீரைத் திறந்து விட்டேன். அதிலிருந்து அவனுடன் இருப்பவள் அவனைக் காப்பாற்றி விட்டாள்!''

''பிறகு?''

''அவர்கள் இருவரையும் பயப்படுத்துவதற்காக எனது உண்மையான வடிவத்துடன் போய், என் கையை மட்டும் அவர்களை நோக்கி வீசினேன்.''

''அதையும் அவள் தடுத்து விட்டாள்... அப்படித் தானே?''

''அதுதான் உண்மை. ஒரு தும்பைச் செடியைப் பறித்து சத்ரு சம்ஹார மந்திரம் ஜபித்து என் மீது எறிந்தாள். என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை!''

''அப்படியானால், இனி மேல் எனக்கு உன்னால் எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. கருடா!'' கறுப்பசாமி அழைத்தார்.

அதுவரை எங்கோ மறைந்திருந்த விசித்திரப் பிறவி யான கழுகு, சட்டென்று பாய்ந்து வந்து அவரின் மணிக்கட்டில் அமர்ந்தது.

இறகுகள் இல்லாத அருவருப்பை ஏற்படுத்தும் அதன் கழுத்துப் பகுதியை வருடியவாறே அவர் கேட்டார்:

''உனக்குப் பசிக்கிறதா?''

''ஆமாம்.'' மனிதக் குரலில் அது பதிலளித்தது.

''இந்தா உனக்கான ஆகாரம்!'' என்றவாறு தன்னருகில் நிற்கும் இளம் பெண்ணைச் சுட்டிக்காட்டினார். அந்த வார்த்தையைக் கேட்பதற்காகவே காத்திருந்த மாதிரி, அந்தக் கழுகு உடனே அவள் மீது பாய்ந்தது.

அற்புதமான சக்திகள் உள்ளவளாக இருந்தாலும் அவளால் விகாரமான அந்த பறவையை வெற்றி கொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு வல்லமை நிறைந்ததாக இருந்தது அது.

ஒரு சில நிமிடங்களுக்குள் அந்தப் பெண் உருவத்தை கருடன் ஆகாரமாக்கிக் கொண்டது.

''கெட்டிக்காரி!'' மறுபடியும் தன் கைத்தண்டையில் அமர்ந்த கழுகின் உடலை வருடியவாறு கறுப்பசாமி பேசினார்: ''இது போல் நூற்றுக்கணக்கான யோகினிகளைச் சாப்பிட்டால் நீ யாராலுமே வெல்ல முடியாத ஒரு மாபெரும் சக்தியாவாய்! அதன் பிறகு இந்தப் பூவுலகில் உன்னை மிஞ்சியவர் எவரும் இருக்க முடியாது!''

கறுப்பசாமி உரத்த குரலில் வாய்விட்டுச் சிரித்தார்!

அந்தச் சிரிப்பைக் கேட்ட, நிலவிளக்கின் சுற்றுப் புறத்திலிருந்த சின்னஞ்சிறு உயிர்கள் எல்லாம் பயத்தால் பறந்து அகன்றன.

மறுநாள் மதியவேளையில் திரிவிக்கிரமன், கறுப்ப சாமியை சந்திக்க வந்தார்.

''அவன் சிக்கல்களை ஏற்படுத்துவான் என்று தோன்றுகிறது.''

''ஏன்... என்ன ஆனது?'' கறுப்பசாமி கேட்டார் கருடனை வருடியவாறு.

''கோயில் புனரமைப்புக் குழு என்ற பெயரில் சுவரொட்டிகள் நிறையத் தென்படுகின்றன. இதற்கு மேலும் என்னால் பொறுமையாக இருக்க முடியாது!''

சற்று நேரம் தீவிர யோசனையிலாழ்ந்த கறுப்பசாமி இறுதியில், ''நாளைக்கு இரவில் அவனுக்கு முடிவு கட்டலாம்!'' என்றார்.

# 15

மறுநாள் மாலை நேரத்தில் - சூரியன் மறைந்ததும் கறுப்பசாமி தனது பூஜையைத் தொடங்கினார். திரிவிக்கிரமக் குறுப்பின் காரியஸ்தர் ராமக்குறுப்பு வேலைக்காரர்களது துணையுடன் எட்டி மர சமிதுகளை ஹோமத்துக்காகத் தயார் செய்திருந்தார். கறுப்பசாமி ஹோம குண்டத்தில் அடுக்கி வைத்திருந்த சமிதுகளின் மீது நெய் ஊற்றி, எண்ணெய் விளக்கின் திரியால் தீ கொளுத்தினார். நெருப்பு ஜுவாலைகள் மேற்புறமாக உயர்ந்தபோது, கறுப்பசாமி மந்திரத்தை உச்சரித்தார்.

''ஓம் வனதுர்க்காய நம; ஓம் சுடலை பத்ராய நம;
ஓம் ரத்தப் பிசாசினீ நம; ஓம் தூமாவதீ நம;

நடுநடுவே அவர் ஹோமப்பொடியை குண்டத்துக்குள் எறிந்தார். நெருப்பு ஜுவாலைகள் அந்தரத்தில் சுமார் ஐந்து ஆள் உயரத்துக்கு எழும்பின. மந்திர உச்சரிப்பின் உச்சத்தில் நெருப்பு ஜுவாலைகள் ஒன்றாகச் சேர்ந்து ஓர் ஆள் வடிவமாக மாறியது. ரத்தச் சிவப்பு நிறஆடை அணிந்து, கழுத்தில் எலும்பு மாலை பூண்டு, செக்கச் சிவந்த இரு புறக் கடைவாய்களிலும் கூர்மையான நீண்ட பற்களுடன், தீப்பொறி பறக்கும் கண்களுடன், ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த பாம்புகளைப்போல் அவிழ்த்துவிட்ட கூந்தல் முடியிழைகள் அசைய... மொத்தத்தில் பயங்கரமான உருவமாக அது தென்பட்டது. தலையிலிருந்து முளைத்து வந்த விரல்களில் கூர்மையான வளைந்த நகங்கள் தெளிவாகப் பளபளத்தன. தேவைக்கும் அதிகமாக கனத்துத் திணறும் மார்பகங்கள். உட்புறத்தில் மறைவாக

உட்கார்ந்தபடி ஜன்னல் வழியாக இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ராமக்குறுப்பு அந்தப் பைசாசிக உருவத்தைப் பார்த்தவுடன் மயக்கமடைந்து தரையில் சரிந்தார். கறுப்பசாமி மீண்டும் ஹோமகுண்டத்துக்குள் ஹோமப் பொடியை வீசினார்.

சட்டென்று மேற்புறம் எழுந்த வெண்புகைப் படலமும், நெருப்பு ஜுவாலைகளும் அந்த உருவத்தை முழுவதுமாக மறைத்தன. சற்று நேரத்துக்குள் புகையும், ஜுவாலைகளும் கீழ்ப்புறமாக ஊர்ந்து மறைந்தன. முந்தைய உருவத்துக்கு பதிலாக இப்போது அச்சு அசலாக விஷ்ணுப்ரியாயே அங்கு நின்று கொண்டிருந்தாள்.

''இங்கே பார்... நீ அவன் ரத்தத்தை முழுவதுமாகக் குடித்து விட்டுத்தான் திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் நீயும் எனது கழுகுக்கு உணவாக வேண்டியதுதான். ஞாபகத்தில் வைத்துக் கொள்!'' கறுப்பசாமி எச்சரிக்கைத் தொனியில் கட்டளையிட்டார்.

அதைக் கேட்ட, அவரின் இடப்புறத் தோளில் அமர்ந்திருந்த கழுகு அட்டகாசமாகச் சிரித்தது.

இதை கவனித்த ஹோமக்குண்டத்தின் விஷ்ணுப்ரியா பயத்தால் மிரண்டாள்.

''சரி... போய் வா!'' கறுப்பசாமி விடை கொடுத்தார்.

**ஹ**ரி, முச்சந்தியிலிருந்த டீக்கடைக்குள் அமர்ந்து அந்த ஊர் இளைஞர்கள் சிலருடன் எழிமலைக்காவு கோயில் குறித்துப் பேசிக் கொண்டிருந்தான். 'கோயில் புனரமைப்புக் குழு'வின் கூட்டமும் அங்கு நடந்து கொண்டிருந்தது. டீக்கடைக்கார கோவிந்தன் கடவுள் நம்பிக்கை உள்ள ஒரு பக்தன். தவிர, இறந்துபோன அவர் தாத்தா, எழிமலைக்காவு கோயில் குறித்து அவரிடம் சொன்ன கதைகளை அடிக்கடி அவர் நினைத்துப் பார்ப்பதும் உண்டு. மண்ணுக்குள்

மறைந்து போன அந்தக் கோயிலைப் பற்றி அவர் எத்தனையோ கதைகளைக் கேட்டிருந்தார்.

வெகு காலமாகக் கேள்விப்பட்டிருந்த கதையாக இருப்பினும் இதெல்லாம் மிகவும் சமீபத்தில் நடைபெற்ற சம்பவமாகவே கோவிந்தனுக்குத் தோன்றியது.

''மனித முயற்சியால் அந்தக் கோயிலை வெளிக் கொண்டு வருவது நடக்கக் கூடிய காரியமா?'' கூட்டத்தி லிருந்த இளைஞன் வாசுதேவன் கேட்டான்.

''சாத்தியம்தான். அதற்காக நாம் சற்று அதிகமாகச் சிரமப்பட வேண்டியிருக்கும்... அவ்வளவுதான்!''

''அப்படியானால் உங்களது லட்சியம் என்ன?'' கேசவன் என்ற இளைஞன் கேட்டான். அவன் அந்த ஊர் நூல் நிலையப் பொறுப்பாளனும் கூட.

''முதலில் நாம் அந்த இடத்தைக் கைவசப்படுத்த வேண்டும். அதன் பிறகு ஊர் மக்களது ஆதரவுடன் கோயிலை வெளிக்கொண்டு வந்துவிடலாம்!''

''இதெல்லாம் நடைமுறையில் எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்று எனக்கு விளங்கவில்லை திருமேனி!'' என்று தயங்கினார் மாரார்.

மாரார், பக்கத்திலுள்ள மற்றொரு கோயில் ஊழியர். பரம்பரை பரம்பரையாக அந்தக் கோயிலுக்கு பூத்தொடுத்துக் கொடுப்பது அவர்கள் குடும்ப வழக்கம்.

''நீங்கள் கேட்டதன் அர்த்தம் எனக்குப் புரிகிறது'' என்ற ஹரி தொடர்ந்தான்:

''நான் சொல்வதில் பொருளாதார ரீதியான மற்றொரு விஷயமும் உள்ளது. கோயில் செலவுக்குத் தேவையான பணமும் நமக்கு அந்தக் கோயிலிலிருந்தே கிடைக்கும்!''

இதைக் கேட்டதும் எல்லோருக்கும் ஒரு வித ஆர்வம் பிறந்தது. அதுவரை அவர்கள் அப்படியொரு கோணத்தில்,

யோசித்ததில்லை. காணாமல் போன கோயிலின் பணம் மட்டும் எங்கிருந்து கிடைக்கப் போகிறதோ? வழக்கமாக இப்படிப்பட்ட காரியங்களுக்கு ஊராரிடமிருந்து பணம் வசூலிப்பது வழக்கம். அதுதான் அதுவரை நடந்திருப்பதும்! ஆனால், ஹரி, இதற்கான பணம் வேறு வழியில் கிடைக்கும் என்கிறான்.

''அந்தப் பணம் எப்படிக் கிடைக்கும் என்று எங்களுக்குச் சொல்ல முடியுமா?''

''அதுதான் இந்த விஷயத்திலுள்ள மிகப் பெரிய ரகசியம்...'' என்ற ஹரி அங்கிருந்த ஒவ்வொருவர் முகத்தையும் பார்த்தான்.

அங்கு கடைக்காரர் கோவிந்தனையும் சேர்த்துப் பன்னிரண்டு பேர் இருந்தனர். அவர்களிடம் இருந்த ஒரேயோர் ஒற்றுமையான அம்சம், அவர்கள் எவருக்குமே திரிவிக்கிரமக் குறுப்பைப் பிடிக்காது என்பதுதான்!

''கோயிலிலுள்ள தேவி சிலைக்கு முன்னால் ஒரு பெரிய பலிக்கல் உள்ளது. அதற்குக் கீழே பெரிய புதையல் ஒன்று உள்ளது. அதுதான் எனது நம்பிக்கைக்கு ஆதாரம்.''

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?''

''பிரஸ்னம் பார்த்தபோது தெரிந்தது.''

உடனே எல்லோரின் கண்களும் நம்பிக்கையுடன் மலர்ந்தன.

''அந்தப் புதையலில் எவ்வளவு பணம் தேறுமென்று நினைக்கிறீர்கள்?'' கோவிந்தன் கேட்டார்.

''அதில் இருப்பதெல்லாம் பழங்காலத்து நாணயங்களும், ஆபரணங்களும்தான். நமது இன்றைய கணக்குப்படி நிச்சயமாக அது மிகப்பெரிய ஒரு தொகையாக இருக்கும். ஒருவேளை நாம் எதிர்பார்ப்பதைவிட அதிகமாக லட்சக்கணக்கில் மதிப்புள்ளதாகவும் இருக்கலாம்.''

''அப்படியானால், கருவறையைச் சுற்றி கிணறு வெட்டுவது மாதிரி வட்ட வடிவமாகத் தோண்டினால் போதுமில்லையா?'' வாசுதேவன் கேட்டான்.

''நீங்கள் சொன்னது சரிதான். ஆனால், இதையெல்லாம் செய்வதற்கு முதலில் அந்த இடம் நமக்குச் சொந்தமாக வேண்டாமா? அந்த இடத்தை நமக்குத் தருவதற்கு விக்கிரமக் குறூப்பு சம்மதிப்பாரா?''

''இது யோசிக்க வேண்டியதும் கூட. இதெல்லாம் தற்சமயம் அவருக்குத் தெரியாமல் இருப்பதே நல்லது.''

''அதுதான் நல்லது!'' கோவிந்தனும் அதை ஆமோதித்தார்.

''முக்கியமான மற்றொரு விஷயம்...'' என்ற ஹரி தொடர்ந்தான்: ''அவர் ஒரு பெரிய மந்திரவாதியைத் துணைக்கு வைத்திருக்கிறார். அந்த மந்திரவாதி தரும் தொல்லைகள் நம்மால் தாங்க முடியாதது.''

''அப்படியானால், அவர் கதையை முடித்து விட்டால் என்ன?'' வாசுதேவன் அவசரமாகக் கேட்டான்.

''நல்லதுதான். ஆனால், அது நீங்கள் நினைப்பது போல் அவ்வளவு சுலபமல்ல. அவர் ஒரு பெரிய மந்திரவாதி. அதுவும் துர்மந்திரவாதி. நாம் உயிரோடு அவரை நேரடியாக எதிர்த்தால், நாம் தப்பிப்பதும் கஷ்டம்.''

''அப்படியானால், என்ன செய்யலாம்?''

''நீங்கள் எனக்குத் துணையாக இருந்தால், அதையெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்.''

கோவிந்தன் விளக்கின் திரியை உயர்த்தினான். விளக்கின் கண்ணாடிப் பரப்பில் புகை படிந்திருந்ததால் வெளிச்சம் குறைவாக இருந்ததுதான் காரணம்.

இரவு மணி எட்டைத் தாண்டியிருந்தது.

வெளியே சன்னமான வெளிச்சமிருந்தது.

கிழக்கு மலையின் மேற்புறத்தில் ஒரு தங்கத் தட்டை ஆகாயத்தை நோக்கிச் சாய்த்து வைத்த மாதிரி, நிலா உயர்ந்திருந்தது.

''சரி... நாம் புறப்படலாமா?'' என்ற ஹரிகிருஷ்ணன் எழுந்தான்.

''உங்களது வீடு வரை நாங்கள் யாராவது துணைக்கு வரட்டுமா?''

''வேண்டாம்! நான் வழக்கம்போல் போய்க் கொள்கிறேன். நன்றி.''

''என்ன தனியாகவா... அதுவும் ஆள் நடமாட்டம் இல்லாத அந்தப் பாதையில்.''

''அதற்கெல்லாம் நான் பயப்படுவதாக இருந்தால், இங்கியிருந்து நான் என்றைக்கோ வீட்டைப் பார்த்துக் கிளம்பியிருக்க வேண்டும்!''

எல்லோரும் அவரவர் பாதையில் பிரிந்தனர்.

ஹரிகிருஷ்ணன், மனைக்குச் செல்லும் பழகிய ஒற்றையடிப் பாதையில் நடக்கத் தொடங்கினான்.

அந்த வெளிச்சத்திலும் பாதை தெளிவாகத் தெரிந்தது.

நடந்து கொண்டே இருந்தபோது சற்றுத் தொலைவில், அவனுக்கு முன்புறமாக பாதையின் வளைவில் வெண் மேகம் போல் ஏதோவொன்று திட்டாகத் தெரிந்தது.

அருகில் நெருங்கியபோதுதான் அது விஷ்ணுப்ரியா என்று விளங்கியது.

''உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்!'' கிறக்கமாகச் சிரித்தபடி பேசினாள்.

''நான் தனியாக வந்துவிடுவேனே... எதற்கு இந்தப் புதிய பழக்கமெல்லாம்?'' ஹரி நடந்து கொண்டே பேசினான். அவள் அவனைப் பின்தொடர்ந்தாள்.

''நல்ல வேடிக்கை. இதற்கு முன்பு நாம் சந்தித்ததை யெல்லாம் மறந்துவிட்டீர்களா?''

''அந்த அளவுக்கு இது ஒன்றும் அகால நேரமாக வில்லையே?''

''தொல்லை கொடுப்பவர்களுக்கு நேரம் காலம் எல்லாம் ஒரு விஷயமா என்ன? பட்டப் பகலையும் நடு ராத்திரியாக்க முடிந்தவர்கள் நம் எதிராளிகள் என்பது ஞாபக மிருக்கட்டும்.''

''அதனால், எப்போதுமே நான் எச்சரிக்கையோடு தான் இருக்கிறேன்.''

அவர்கள் நடந்து கொண்டிருந்தனர்.

ஏறத்தாழ இல்லத்தை நெருங்கியாகி விட்டது.

தெருவாசற்படியிலிருந்து பார்த்தபோது வீட்டுக்குள் விளக்கு ஏற்றியிருக்கவில்லை.

''விளக்கேற்றவில்லையா விஷ்ணுப்ரியா, மறந்து விட்டாயா?''

''காற்றில் அணைந்திருக்கலாம்...''

இடுப்பிலிருந்து தீப்பெட்டியை எடுத்து உரசி, விளக்கைப் பற்ற வைத்தான். திரும்பிப் பார்த்தபோது விஷ்ணுப்ரியா, தென்புற அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

சட்டென்று ஹரிக்கு ஒரு விஷயம் தட்டுப்பட்டது. இன்று பௌர்ணமி! விஷ்ணுப்ரியா வழக்கமாகக் கோயிலுக்குச் செல்லும் நாள். ஒருவேளை சாப்பாடு போட்ட பிறகு போகிறாளோ என்னவோ!

ஹரி அறைக்குள் வந்தபோது சாதம் பரிமாறப்பட்டி ருந்தது. அங்கு விளக்கு ஒன்றும் எரிந்து கொண்டிருந்தது.

பரிமாறப்பட்டிருந்தவற்றின் மேற்புறம் மூடி போட்டு ஒவ்வொன்றும் மூடப்பட்டிருந்தது.

உட்புற முற்றத்தில் அறை வாசலை ஒட்டியபகுதியில் கிண்டியில் வழக்கம் போல் நீர் நிரப்பி வைக்கப் பட்டிருந்தது.

ஹரி கை கால் கழுவிவிட்டு வந்து சாப்பிட்டான்.

தனது வழக்கமான அறைக்கு வந்தவன், விளக்கு வெளிச்சத்தில் உட்கார்ந்து ஓலைச்சுவடியை வாசிக்கத் தொடங்கினான்.

சற்று நேரத்திற்குள் விஷ்ணுப்ரியா அந்த அறைக்குள் வந்தாள்.

''என்ன... இன்னும் தூங்குவதற்கு நேரமாக வில்லையா?''- அவள் கேட்டாள்.

''தூக்கம் வரவில்லை... அதுவரையில் படிக்கிறேனே.''

''தூக்கம் வரவில்லை என்றால், நான் தூங்க வைக்கட்டுமா?''

''இல்லை, கொஞ்ச நேரம் நான் படிக்கணும்.''

''இதையெல்லாம் பகல் நேரத்தில் படித்துப் புரிந்து கொள்வதுதானே நல்லது ராத்திரி நேரம் என்பது படிப்பதற்கான நேரமா என்ன?''

ஹரி சுவடியை அருகிலிருந்த மர மேஜை மீது வைத்தான். அதே நேரம், அவள், தன் வலக் கையை அவன் தலைக்கு மேலாக வீசினாள்.

சட்டென்று ஹரியின் கண்கள் மூடத் தொடங்கின. உட்கார்ந்தவாறே பின்புறமாகச் சரியத் தொடங்கியவனை, அவள் தாங்கிப் பிடித்துக் கட்டிலில் படுக்க வைத்தாள்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவளது உருவம் மாறிக் கொண்டிருந்ததை கண்கள் மூடியிருந்த ஹரியால் உணர முடியவில்லை!

# 16

பைசாசிக வடிவத்துக்கு மாறிய அந்த பயங்கரப் பெண் தன் வலக் கையை அவன் மார்புப் பகுதியை நோக்கி நீட்டினாள்.

திடுமென்று அவள் விரல்களின் நுனிகளிலிருந்து நகங்கள் வெளிப்புறமாக நீண்டன. அவை கழுகின் மேற்புற அலகுபோல் வளைந்தும், பளபளப்பாகவும், கத்தியின் கூர்மையான விளிம்பு போல் கூராகவும் மாறின.

அந்த நகங்கள் ஹரியின் மார்பில் படிந்தன. இருப்பினும் ஹரி கண்களைத் திறக்கவில்லை. அவளது மந்திரப் பிரயோகத்தின் சக்தியில், அவனின் சப்தநாடிகளும் அசைவற்றுப் போயிருந்தன. எனவே, அவளின் நெருக்கத்தையோ, அவளது நடவடிக்கைகளையோ அவன் உணரவில்லை.

கூர்மையான அவளின் நகநுனிகள் அவன் மார்பில் ஊடுருவ இருந்த அதே நொடியில், உண்மையான விஷ்ணுப்ரியா சட்டென்று, அங்கு தோன்றினாள். தான் பார்த்த காட்சியால் விஷ்ணுப்ரியா ஒரு நொடி திகைத்தாலும் மறுவிநாடி சுயநிலைக்குத் திரும்பி வந்தாள். கோர வடிவமான அந்தப் பிசாசின் பாம்புகள் ஊஞ்சலாடிய முடியைப் பின்புறமிருந்து கொத்தாகப் பிடித்து வெடுக்கென்று இழுத்தாள் உண்மையான விஷ்ணுப்ரியா!

எதிர்பாராமல் ஏற்பட்ட அந்த இழுப்பால் போலி விஷ்ணுப்பரியாவான கிராதகி நிலைகுலைந்து பின் வாங்கப்பட்டாள். தலையைத் திருப்பிப் பார்த்தாள். அந்த விநாடியில் அவளுக்குள் இருந்த பைசாசிக சக்தி விழித்துக்

கொண்டது. எனவே, ஒரு நொடியில் அவள் மீண்டும் விஷ்ணுப்ரியாவாக மாறினாள்.

ஒரே இடத்தில், ஒரே தோற்றத்தில்... இரண்டு விஷ்ணுப்ரியாக்கள்! இருவருக்கும் ஒரே உருவம்... ஒரே உடை... ஒரே வித நகைகள்!

ஹரிகிருஷ்ணனை எழுப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்று உண்மையான விஷ்ணுப்ரியா தீர்மானித்தாள். எனவே, அவள் தன் தலையிலிருந்து ஒரு பாலைப் பூவை உருவி ஹரியின் நெற்றி மீது எறிந்தாள். பூ பட்டதும் ஹரி கண்களைத் திறந்தான். தான் காண்பது கனவோ என்று ஒரு கணம் அவன் சந்தேகப்பட்டான்.

கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். கனவில்லை... நிஜம்தான்! தனக்கு முன்னால் இருவர், ஒரே மாதிரித் தோற்றத்தில்!

இதில் யார் உண்மையான விஷ்ணுப்ரியா என்று கண்டுபிடிப்பது எப்படி? அவனது மனவோட்டத்தை உணர்ந்த உண்மை விஷ்ணுப்ரியா அவனுக்கு முன்பாகத் தன் இரு கைகளையும் நீட்டினாள். அதைப் புரிந்து கொண்ட மற்றவளும் அதே போல் கையை நீட்டினாள்.

ஹரி, என்ன செய்வதென்று தெரியாமல் அந்த விநாடியில் குழம்பினான், யாரை நம்பி நெருங்குவது?

சரியான விஷ்ணுப்ரியாவும் அந்தக் கணத்தில் தவித்தாள். 'நான்தான் உண்மையானவள் என்று எப்படி நிரூபிப்பது?'

இருவரும் ஒரே மாதிரி கை நீட்டும்போது, தவறான ஒருவரை அணுகிவிட்டால் அதன் பிறகு தப்பிப்பது கடினமாகி விடலாம்.

''ஹரி, நான்தான் உண்மையானவள். என்னிடம் வாருங்கள்'' இடப் புறம் நின்றிருந்தவள் அழைத்தாள்.

''ஹரி, அவளை நெருங்காதீர்கள். அவள் ஒரு பிசாசு!'' மற்றவள் அலறினாள்.

சட்டென்று அவனுக்கு ஓர் உபாயம் தோன்றியது. 'ஆதிமந்திரம்... ஆதிசத்தம்... அதுதான் ஒரே வழி!''

சட்டென்று பாய்ந்து அந்த அறையின் வடமேற்கு மூலையில் சாத்தி வைத்திருந்த சூலத்தைக் கையில் எடுத்தான். இருவருக்கும் எதிரில் ஏறத்தாழ அவர்களுக்கு நடுவில் நின்று கொண்டு, சூலத்தால் ஓம் என்று எழுதினான்.

''ம்... இப்போது என்னிடம் வாருங்கள்!'' ஹரி இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கூறினான்.

உடனே உண்மையான விஷ்ணுப்ரியா ஓம் என்ற எழுத்தின் மீது உடல் படாமல் கவனமாக அவனை நெருங்கினாள். ஹரி மற்றொரு கையால் அவளின் தோளைத் தொட்டான். அவள், அவனுடன் நெருங்கி நின்றாள்.

''யார் நீ? உண்மையைச் சொல்!'' ஹரி மற்றவளிடம் விசாரித்தான்.

''நான்... கறுப்பசாமியால் ஏவப்பட்டவள்... ரத்தப் பிசாசினி.''

''மேற்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?''

''உங்களைக் கொல்லாமல் திரும்பிச் சென்றால் எனக்கு வேறு போக்கிடம் கிடையாது. எனவே, வந்த நோக்கத்தை நிறைவேற்றியே தீருவேன்...'' பேசிக் கொண்டே இருந்தவள் தனது சுய உருவத்துக்கு மாறினாள். அந்த பயங்கர உருவத்தைக் கண்ட ஹரி திடுக்கிட்டான்!

'இவள்தான் என்னுடன் உறவு கொள்ள வந்தவளா?' ''கடவுளே!'' ஹரி தன்னையும் மீறிக் கூவினான்.

''ஹரி, பயப்படாதீர்கள். நான் உங்கள் பக்கத்திலேயே இருக்கிறேனே'' என்ற விஷ்ணுப்ரியா தன் வலக் கையை அந்த உருவத்தை நோக்கி நீட்டினாள்.

அந்தக் கை நீண்டு வந்தது. பிசாசினியின் தலைப் பகுதியை நெருங்கியபோது, அந்தக் கை மேலும் பெரிதாகியது.

பாம்புகள் படமெடுத்து ஆடும் முடியைக் கொத்தாகப் பற்றியது. கையைச் சுழற்றித் தனது பிடியை இறுக்கிய விஷ்ணுப்ரியா, அந்த உருவத்தை அந்தரத்தில் உயர்த்தினாள். பிறகு சாவிக் கொத்தைச் சுழற்றுவதுபோல் சுழற்றினாள். சுழற்சியின் வேகம் விநாடிக்கு விநாடி அதிகரித்தது. விசையான ஒரு கட்டத்தில் விஷ்ணுப்ரியா சட்டென்று தனது பிடியை நழுவ விட்டாள்!

கறுப்பசாமி அப்போதும் ஹோமகுண்டத்தின் அருகிலேயே அமர்ந்திருந்தார். அவரின் உதடுகள் இடை விடாமல் மந்திரங்களை உச்சரித்தன. நெருப்பு ஜுவாலைகள் உயர்ந்து கொண்டிருந்த தீக்குண்டத்துக்குள் அவ்வப்போது அவரின் கை ஹோமப் பொடியைச் சொரிந்தது.

ஒரு கட்டத்தில் திடுமென்று நெருப்பு ஜுவாலைகள் குறுகி உள்வாங்கின. கண்ணிமைக்கும் நேரத்துக்குள் ஜுவாலைகள் கட்டைகளுக்குள் புகுந்து மறைந்தன.

கறுப்பசாமி மீண்டும் மீண்டும் ஹோமப்பொடியைச் சொரிந்தார். ஆனால், ஜுவாலையோ நெருப்போ மேலெழும்பவில்லை. ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறது என்பது உடனே அவருக்கு விளங்கியது!

அப்போது அந்த வீட்டின் முற்றத்தில் எதுவோ ஒன்று பொத்தென்று விழுந்த சத்தம் கேட்டது. அதுவும் சுழற்றி வீசியெறிந்ததுபோல் விசையுடன் விழுந்த சத்தம்!

கறுப்பசாமி துள்ளி எழுந்து வெளியே வந்தார். அங்கு கம்பளிப் போர்வையை வீசி எறிந்தது போல் விழுந்து கிடந்தாள் அவர் ஏவிய ரத்தப் பிசாசினி!

''என்ன... என்ன நடந்தது?'' கறுப்பசாமி பதற்றத்துடன் கேட்டார்.

''அவள் அங்கே இருக்கிறாள்!'' தரையில் பரவியிருந்த நிலையிலேயே அவள் முனகினாள்.

''உனது சக்திக்கு என்ன நேர்ந்தது?''

''நான் தோல்வியடைந்து விட்டேன். திரும்பவும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள். நிச்சயமாக அவனைக் கொன்றுவிட்டு வருகிறேன்!'' அவளது குரல் பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது!

கறுப்பசாமி யோசித்தார். ''அதற்கு என்ன உத்தரவாதம்?''

''இந்தத் தடவை மன்னித்து, எனக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பாருங்கள்!''

''கருடா!'' கறுப்பசாமி அலறினார்.

பாய்ந்து வந்த கருடன் என்ற கழுகு அவளின் மார்பகத்தைக் கொத்தியது. ரத்தம் பீய்ச்சியடித்தது.

''தயவு செய்து என்னைக் கொல்லாதீர்கள்!'' அவள் மன்றாடினாள்.

''நான் உன்னைக் கொல்லப் போவதில்லை. நீ செய்த தவறுக்கு ஒரு சிறிய தண்டனை... அவ்வளவுதான்'' கறுப்பசாமி தனது மந்திரக் கைத்தடியால் காயம்பட்ட இடத்தைத் தொட்டார். ரத்தப் பாய்ச்சல் சட்டென்று அடங்கியது.

அங்கிருந்து அவள் எழுந்தாள். இப்போது அவள் ஒரு வௌவாலாக மாறினாள். அப்படியே பறந்து உயர்ந்து இருளில் மறைந்தாள்.

ஹரிகிருஷ்ணன், விஷ்ணுப்ரியாவின் சீராட்டலில் மூழ்கியிருந்தான். அவளின் கைவிரல்கள், அவன் மார்புப்

பகுதியில் அளைந்தன. அவை மெதுவாக கழுத்து... கன்னம்... மூக்கு... என்று படிப்படியாக முன்னேறின.

ஹரி புளகாங்கிதத்தின் உச்சத்திலிருந்தான். அவளது சூடான மூச்சுக்காற்று அவன் கழுத்தில் பதிந்தது. அந்த உடல் வெண்ணெய் போல் வழுவழுப்பாக இருந்தது. பாலைப் பூவின் மணம் அவன் உடலிலும் ஒன்றிக் கலந்தது. அவளது வியர்வைத் துளிகள்கூட பன்னீர் போல் மணத்தன.

''உன் உடம்பில் மென்மையான பாலைப் பூவின் வாசனை!'' அவன், அவளின் முதுகுப் பகுதியை வருடியவாறு கிறக்கமான குரலில் பேசினான்.

''பாலைமரம் எங்கோ பூக்கத் தொடங்கியிருக்கிறது என்று அர்த்தம்!'' அவளின் இதழ்கள் அவன் கன்னக் கதுப்புகளை உரசிக் கொண்டே பேசியது.

அவளுடனான அந்த நிலை, அவன் ஆத்மாவையே இன்ப நிலைக்கு இழுத்துச் சென்றது. ஹரிகிருஷ்ணனின் நரம்புகளுக்குள் நெருப்பு நதியொன்று பாய்ந்து கொண்டிருந்தது. சொர்க்கீய நிமிடங்களுக்குள் அவர்கள் ஒன்றிணைந்து கரைந்தே போனார்கள்!

''நான் மட்டும் சரியான நேரத்துக்கு வராவிட்டால்...?'' எழுந்து கட்டிலில் உட்கார்ந்தபடி அவள் கேட்டாள்.

''என்னால் அதை நினைத்துப் பார்க்கக்கூட முடிய வில்லை விஷ்ணுப்ரியா!'' அவன், அவளின் கைவிரல் களுடன் தன் கை விரல்களைப் பின்னிப் பிணைத்தபடி பேசினான்.

''இன்று பௌர்ணமி நாள். நான் தேவியுடன் நெருங்கி யிருந்த வேளையில், அவர்தான் என்னிடம், 'விரைவாக இல்லத்துக்குத் திரும்பு!' என்றார்.''

''என்ன... யார்... தேவியா, உண்மையாகவா?''

''ஆமாம்... இது கார்த்திகை மாதப் பௌர்ணமி அல்லவா? இன்று அவரது பிறந்த நாளும் கூட!''

''ச்சே... இருந்தும் இன்றைக்குப் பார்த்து என்னால் ஒரு பூஜைகூடச் செய்ய முடியவில்லையே!''

''அதற்காக வருத்தப்படாதீர்கள். நான் பூஜை செய்து விட்டேன்!''

''அதன் பிறகுதான் தேவி உன்னிடம் பேசினாரா?''

''ஆமாம். அதனால்தான் சரியான நேரத்துக்கு என்னால் இங்கு வர முடிந்தது.''

''நல்ல வேலை செய்தாய். இல்லாவிட்டால் நாளைக் காலையில் எனது பிணத்தை அலங்கோலமான நிலையில் பார்க்க நேர்ந்திருக்கும்.''

''எதற்காக இன்னும் அந்த நினைப்புகள்? நான்தான் வந்துவிட்டேனே!''

''உண்மைதான். ஆனால், இதே போல் ஒவ்வொரு தடவையும் என்னைக் காப்பாற்ற நீ என் அருகிலேயே இருக்கப் போவதில்லையே...''

''உங்கள் அருகில் இல்லாவிட்டாலும் நான் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருப்பேன்.''

''திரும்பவும் தேவியிடம் போக வேண்டுமா?''

''இனி இன்று போக வேண்டியதில்லை; நான் அசுத்த மடைந்திருக்கிறேன்!'' அவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி பேசினாள்.

''அப்படியானால், நமக்கு இன்று எவ்வளவோ நேரம் உள்ளது...'' ஹரி, அவளின் கையைப் பற்றி இழுத்தான். சிணுங்கியபடி அவள், அவன் மார்பில் சரிந்தாள்.

**அ**தே நேரம் ராட்சத வௌவாலாக மாறிய ரத்தப் பிசாசினி, பனங்காட்டு இல்லத்தின் முன்புறமிருந்த பெரிய

ஆலமரத்தின் கொம்பில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தாள்.

அடிக்கடி இல்லத்தின் தென்புறமாகப் பறந்து சென்று பார்த்துவிட்டுத் திரும்பவும் வந்து அந்த மரக்கிளையில் தொங்கியது. அப்படிப்பட்ட ஒரு கணத்தில் தென்புற அறை யொன்றில் வெளிச்சம் தட்டுப்பட்டது.

திறந்திருந்த ஜன்னல் வழியாக அறைக்குள் எரியும் விளக்கிலிருந்து வந்த வெளிச்சம் அது. அந்த அறையை அருகில் சென்று பார்க்க விரும்பிய வௌவால் சட்டென்று உயர்ந்தது. இம்முறை கூர்மையான நகத்தால் திறந்திருந்த ஜன்னலில் கால்களைப் பதித்துக் கொண்டு உட்புறமாக எட்டிப் பார்த்தது அது.

அங்கே அது கண்ட காட்சி அந்தப் பிசாசினியையே மோகம் கொள்ள வைத்தது. அது கண்ணிமைக்காமல் உட்புறத்தைப் பார்த்தது.

பிறகு ஏதோ நினைவு வந்தது போல் மேற்புறமாகப் பறந்து மறுபடியும் தனது பழைய இடத்தில் வந்து தொங்கியவாறே ஆகாயத்தைப் பார்த்தது. பொழுது விடிய இன்னும் இரண்டரை நாழிகைகள் இருந்தன. வௌவால் தனது வாயைத் திறந்து சேவல் போல் கூவியது.

''பொழுது விடிந்து விட்டது. நான் வரட்டுமா?'' என்றபடி விஷ்ணுப்ரியா எழுந்தாள்.

## 17

''பொழுது விடியவில்லையே அதற்கு இன்னும் நேரமிருக்கிறது...'' ஹரி அவளை இழுத்து மார்புடன் அணைத்தவாறு கூறினான்.

திரும்பவும் சேவல் குரலெழுப்புவது போல் உரத்த குரலில் கூவியது வெளவால்.

''சேவல் கூவுவது கேட்கவில்லையா உங்களுக்கு? இனி மேலும் நான் இங்கிருக்க முடியாது!''

விஷ்ணுப்ரியா எழுந்து நடந்தாள். தெரு வாசற் படியைக் கடந்து மோகினி கோயிலை நோக்கி அவள் நடக்கத் தொடங்கியதும், அதற்காகவே காத்திருந்த மாதிரி வெளவால் மரத்திலிருந்து நழுவியது. இல்லத்தின் வராந்தாவிலிருந்த உத்திரக்கட்டைக்கு வந்து சேர்ந்த வெளவால், விரைவிலேயே வடிவம் மாறவும் செய்தது. வெளவால் மீண்டும் விஷ்ணுப்ரியாவாக மாறியது. ஹரி படுத்திருந்த அறைக் கதவைத் தள்ளித் திறந்து உள்ளே நுழைந்தது அந்தப் பிசாசினி.

ஹரி அதற்குள் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தான். அவள், அவனருகில் கட்டிலில் அமர்ந்தாள். 'அருமையான சந்தர்ப்பம்!' அவள் மனம் முணுமுணுத்தது. 'இவனைக் கொன்று ரத்தத்தை உறிஞ்சி, பச்சை ரத்தம் தோய்ந்த உதடுகளுடன் கறுப்பசாமியிடம் சென்றால்தான் இனிமேல் தான் வாழ முடியும்!'

அவளின் வலக் கை அவன் மார்பின் பக்கமாக நகர்ந்தது. விரல்களிலிருந்து நகங்கள் நீண்டன. ஆனால், அந்த விரல்கள் ஹரியின் மார்பை நெருங்கியதும் சட்டென்று கையைப் பின்னுக்கு இழுக்க நேர்ந்தது. திடுக்கிட்டவளாக அவள் சட்டென்று எழுந்தாள்.

அவன் மார்பில் சந்தனத்தால் 'ஓம்' என்று எழுதப் பட்டிருந்தது. விஷ்ணுப்ரியா, புறப்படுவதற்கு முன்னால் இதைச் செய்துவிட்டுப் போயிருந்தாள். இது வரை நடந்த சம்பவங்களின் தொடர்ச்சியாக ஏதாவது நடைபெறக் கூடும் என்று அவள் நினைத்ததே அதற்குக் காரணம். இந்தச் சூழ்நிலையில் தன்னால் மேற்கொண்டு எதுவும் செய்ய

முடியாது என்று உணர்ந்ததால், அவள் கட்டிலிலிருந்து மெல்ல எழுந்தாள். வெளியேறினாள்.

விடிந்தபின் ஹரி வழக்கம் போல் படுக்கையிலிருந்து எழுந்தான். சற்று நேரத்தில் குளத்தை நோக்கிப் புறப் பட்டான். குளத்தை நெருங்கியபோது குளக்கரையில் வேறு யாருடைய துணியோ இருப்பதை கவனித்தான்.

''அப்படியானால், இனி அங்கேயே தங்குவதென்று நீங்கள் தீர்மானித்துவிட்டீர்கள் அப்படித் தானே?''

ஹரி குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். குளத்தின் படிக்கட்டில் அறிமுகமில்லாத நபர் ஒருவர் அமர்ந்திருந்தார். துண்டு ஒன்றை இடுப்பில் கட்டிக் கொண்டு, மாவிலையால் பல் தேய்த்துக் கொண்டிருந்தார் அவர்.

''ஆமாம். சௌகரியமான வேறோர் இடம் அகப் படாததால், அங்கேயே தங்குவதென்று தீர்மானித்தேன். கூடாதா என்ன?''

அவரைப் பார்த்தால் அறுபது வயது மதிப்பிடலாம். தலைமுடி செழித்து வளர்ந்து ஜடையாகப் பின்னியிருந்தது. தாடியும் மீசையும் அடர்த்தியாக இருந்தன. நல்ல திடகாத்திரமான உடம்பு; நெஞ்சுப் பகுதியிலும் முடி நிறைய வளர்ந்திருந்தது. தீட்சண்ணியமான கண்கள். புருவங்களில் ஆங்காங்கே நரை முடிகள் தட்டுப்பட்டன. நீண்ட ருத்திராட்ச மாலையை இரண்டாக மடக்கிக் கழுத்தில் போட்டிருந்தார். மொத்தத்தில் ஒரு சந்நியாசி போல் தெரிந்தார்.

''உங்களது தைரியத்தைப் பாராட்டுகிறேன்'' பெரியவர் சொன்னார்.

''நீங்கள் இப்படிச் சொல்லக் காரணம்?'' ஹரி கேட்டான்.

''நான்கூட அந்த இல்லத்துக்குள் நுழைய பயப் படுகிறேன். அதை வைத்துப் பார்த்தால், நீங்கள் அசாதாரண மான தைரியசாலிதான்!''

''இன்னும் நீங்கள் யாரென்று சொல்லவில்லையே?''

''அதையெல்லாம் சொல்கிறேன். முதலில் வந்த வேலையைப் பாருங்கள். குளியுங்கள். அப்புறமாகச் சொல்கிறேன்!'' அவர் படிக்கட்டில் இறங்கி வாய் கொப்பளித்தார். கை கால்களைச் சுத்தமாகத் தேய்த்துக் கழுவத் தொடங்கினார். ஹரி, குளிர்ந்த நீரில் இறங்கிக் குளித்தான். குளித்து எழுந்ததும் புத்துணர்ச்சி தோன்றியது. முந்தைய நாள் சற்று அதிக நேரம் கண்விழித்த அலுப்பு சுத்தமாக நீங்கி விட்டது. அந்த ஆற்றுத் தண்ணீருக்கு ஒரு வித ஔஷதச் சக்தி இருப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

பெரியவர் சற்றுத் தள்ளிக் குளித்துக் கொண்டிருந்தார். குளித்து முடித்தவர் உடம்பைத் துவட்டாமல் அருகிலிருந்த பாறை மீது ஏறி அமர்ந்தார்.

''காற்றிலேயே உடம்பு உலர வேண்டும். அதுதான் நல்லது!'' பெரியவர் பேசினார்.

''பகல் நேரத்தில் இல்லத்துக்குப் போக வேண்டும் என்று தோன்றுவதுண்டா?'' குளித்துவிட்டு வந்த ஹரியிடம் கேட்டார் பெரியவர்.

''என்ன இப்படிக் கேட்கிறீர்கள்?'' ஹரி அவர் முகத்தைப் பார்த்தபடி கேட்டான்.

''நான் சொன்னதில் தவறு இல்லையே... பகலில் உங்களுக்காகச்சமையல் செய்ய அங்கு எவரும் இல்லையே?''

''நான் கடையில்தான் சாப்பிடுறேன்.''

''அப்படியானால் இன்று என் விருந்தாளியாக வாருங்களேன்...'' பெரியவர் அழைத்தார்.

''நீங்கள் எங்கு தங்கியிருக்கிறீர்கள்?''

''எதிர்க்கரையில்...''

''நீங்கள் இக்கரையில் வந்து குளிக்கக் காரணம்?''

''நீங்கள் இங்கு வருவீர்கள் என்று தெரியும். அதனால் தான்!''

ஹரி அவரைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

'யார் இவர்? ஒரு வேளை தன்னைக் கொல்வதற்காக யார் யாரையோ ஏவுகிற மந்திரவாதியோ?'

''நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். எழிமலைக்காவு பகவதி கோயிலைக் கண்டு பிடிக்கத்தானே?''

'இதெல்லாம் இவருக்கு எப்படிப் புரிந்தது?' ஹரி அவரை வியப்புடன் பார்த்தான்.

''வாருங்கள், போகலாம்!''

முன்பின் தெரியாதவரும், சந்தேகப்படத் தக்க விதமாகப் பேசுபவருமான இவரை நம்பிப் புறப்படுவது எப்படி? ஒரு கணம் யோசித்தாலும் இறுதியில், 'அவருடன் செல்வது' என்று தீர்மானித்தான்.

''நாம் எப்படி அக்கரைக்குப் போவது?'' மையப் பகுதியில் சுழித்தபடி பாயும் ஆற்றைப் பார்த்தபடி கேட்டான் ஹரி.

''அதற்கென்ன? அதுபாட்டுக்கு இருந்து விட்டுப் போகட்டுமே...'' என்றபடி சற்றுத் தொலைவிலிருந்த மலைவாழை மரத்திலிருந்து இலை ஒன்றைப் பறித்து ஆற்றுக்குள் எறிந்தார்.

ஹரி அவரது செயலையே பார்த்துக் கொண்டிருந் தான். பிறகு அந்த வாழை இலையின் மீது காலெடுத்து வைத்தார். இலை, அப்போதும் நீருக்குள் அமிழாமல் இருந்தது.

''இதற்குள் வந்து விடுங்கள். நாம் அக்கரைக்குப் போய்விடலாம்!'' பெரியவர் ஹரியின் பக்கம் கையை நீட்டினார்.

ஹரி அவர் கையைப் பற்றிக் கொண்டு இலை மீது ஏறினான். சற்று நேரத்தில் அந்த இலை ஒரு தெப்பம் போல், எதிர்க் கரையை நோக்கி நகர்ந்தது. பேரிரைச்சல் மற்றும் விசையான சுழியுடனும் நீர் பாய்ந்து கொண்டிருந்த பகுதிக்கு வந்த போதும் எந்த விதமான பாதிப்பும் இல்லாமல் இலை நகர்ந்துகொண்டே இருந்தது. இருவரும் எதிர்க்கரையை அடைந்தனர்.

''பக்கத்தில்தான் வீடு...'' என்ற பெரியவர் முன்புறமாக நடக்கத் தொடங்கினார். குறுஞ்செடிகள் புதராக மண்டி வளர்ந்திருந்த பாதையினூடாக அவர்கள் நடந்தனர். ஒற்றையடிப் பாதையில் சுள்ளிகள் இறைந்து கிடந்தன.

சற்றுத் தூரம் கடந்தபோது கரிய பனை மரங்கள் கூட்டமாக வளர்ந்திருந்த பகுதியின் மையத்தில் பழைய கட்டடம் ஒன்று தென்பட்டது. இடிந்து சிதிலமாகியிருந்த அந்தக் கட்டடத்தைச் சுட்டிக் காட்டிய பெரியவர் சொன்னார்: ''அதுதான் எனது வீடு.''

''இந்த வீடு யாருடையது?'' ஹரி கேட்டான்.

''உண்மையில் இங்கு குடியிருந்தவர் ஒரு மந்திரவாதி. சுமார் ஆறு மாதத்துக்கு முன்னால் அவர் சமாதியடைந்தார்!''

''நீங்கள் இங்கு வரக் காரணம்?''

''அதையெல்லாம் விளக்கமாகச் சொல்லத்தானே உங்களை அழைத்து வந்திருக்கிறேன். வாருங்கள். முதலில் சாப்பிடலாம்!'' பேசியபடியே அந்த வீட்டின் இளந்திண்ணை மீது ஏறினார். தாழ்வான மரச்சட்டத்தில் செருகி வைத்திருந்த பாயை எடுத்து வராந்தாவில் விரித்தார்.

பிறகு உட்புறமாகப் பார்த்துக் குரல் கொடுத்தார். ''நாகவதி.''

பதிலாக பெண் குரல் ஒன்று கேட்டது: ''என்னங்க?''

''நாங்கள் இரண்டு பேர் இருக்கிறோம்'' பெரியவர் தெரிவித்தார்.

ஹரி வியப்பு மாறாதவனாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்த வீட்டுக்குள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள் என்றுதான் அவன் நினைத்தான். ஆனால், ஒரு பெண்மணி இருக்கிறார்.

சற்று நேரத்தில், ''சாப்பிட வாங்க'' என்று அவள் குரல் கொடுத்தாள்.

இருவரும் எழுந்தனர்.

உட்புறத்தில் விசாலமான வராந்தாவும் பெரிய நடுமுற்றமும் இருந்தன. முற்றத்தின் நடுவில் துளசி மாடமும் அதில் சர்ப்பகந்திச் செடி ஒன்றும் செழித்து வளர்ந்திருந்தது.

தேக்குமர இலையில் பரிமாறப்பட்ட உணவை சாப்பிடாமல் பார்த்துக் கொண்டே இருந்தான் ஹரி.

''இது ஒரு வகையான காட்டுக் கிழங்கு. நமது இந்திரியங்களுக்கு வலுவூட்டும் ஓர் ஔஷதமும் கூட. சாப்பிடுங்கள்!'' பெரியவர் உபசரித்தார்.

அப்படிப்பட்ட உணவை ஹரி அப்போதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறான்.

''தயங்காமல் சாப்பிடுங்கள்...'' என்றவர் கிழங்கை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினார்.

அதைப் பார்த்ததும் சந்தேகம் விலகியவனாக அவனும் சாப்பிடத் தொடங்கினான்.

இதுவரை அவன் ருசித்தறியாத ஒரு பிரத்தியேக ருசியுடன் இருந்தது அந்தக் கிழங்கு. அவர்கள் சாப்பிட்டு

முடித்ததும் நாகவதி இரண்டு மரப் பாத்திரங்களில் காய்ச்சிய பாலுடன் வந்தாள்.

நாகவதி உண்மையில் பேரழகிதான். முகத்தை வைத்து வயதைக் கணிக்க முடியாது என்று தோன்றியது. பொருத்த மான உயரம், கச்சிதமான உடல். அந்தக் கண்களில் ஏதோ ஒரு சிறப்பு தெரிந்தது; ஒரு விதமான பளபளப்பு. அவள் திரும்பவும் வீட்டுக்குள் போய் ஏறத்தாழ இரண்டு தம்ளர் பால் கொள்ளும் ஒரு மரப்பாத்திரத்தில் பால் எடுத்து வந்தாள். அதை அவர்களுக்கு அருகில் வைத்தாள்.

சட்டென்று ஹரி திடுக்கிட்டுப் பின்வாங்கினான். அவளின் கை வித்தியாசமாகத் தெரிந்ததுதான் காரணம். கையில் நான்கு விரல்களே இருந்தன. ஹரி அவளுக்குத் தெரியாமல் அவளின் இடக் கையைப் பார்த்தான். அதிலும் நான்கு விரல்கள்தான். அவன் பார்வை அவளின் கால் பகுதியைக் கவனித்தது. பாதத்திலும் நான்கு விரல்கள்!

'இந்தப் பெண்மணி யாராக இருப்பாள்?' அவன் யோசனையில் ஆழ்ந்தான். மொத்தத்தில் அந்த உடம்பும், பார்வையும் அவள் மனிதப் பெண் அல்ல என்று நினைக்க வைத்தது.

''சாப்பிடுங்கள்... என்ன யோசனை?'' பெரியவர் கேட்டார்.

''ஒ... ஒன்றுமில்லை!'' மரப் பாத்திரத்தைக் கையில் எடுத்தபடி பேசினான்.

''நீங்கள், நாகவதி பற்றி யோசிக்கிறீர்கள் இல்லையா?'' அவர் நிதானமாகக் கேட்டார்.

ஹரி, நாகவதியைப் பார்த்தான். அவள் சட்டென்று அறைக்குள் நுழைந்து மறைந்தாள். சாப்பாட்டுக்குப் பிறகு இருவரும் வராந்தாவில் வந்து அமர்ந்தனர்.

''இனி, நான் என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்...'' என்றவாறு அந்த இடத்திலிருந்தே கையை நீட்டி அறைவாசலில் வைத்திருந்த ஒரு பாத்திரத்தை எடுத்துத் திறந்தார்.

அதற்குள்-

கறுப்பு வண்ணத்தில் எதுவோ ஒன்று வளைந்திருப்பதை ஹரி கவனித்தான்!

## 18

''இதற்குள் இருப்பது என்னவென்று உங்களுக்குப் புரிந்திருக்கும். என்ன சரிதானே?'' பெரியவர் கேட்டார்.

''புரிந்தது... நாகப்பாம்பு!'' ஹரி பதிலளித்தான்.

''ஓரளவுக்கு நீங்கள் சொன்னது சரி. இது ஓர் அசாதாரணமான பாம்பு. இப்போது இதன் நீளம் மிகவும் குறைவு அதிகபட்சம் ஒரு சாண் இருக்கலாம். இல்லையா?''

''உண்மைதான்.''

அவர் அதைத் தன் வலக் கையால் எடுத்துத் தரையில் விட்டார். மிகச்சிறிய பாம்பு.

கருநாகப் பாம்பின் குட்டி போலத் தோன்றிய அதன் முதுகுப்புறத்தைத் தன் சுண்டு விரலால் வருடினார்.

சட்டென்று அதன் வடிவம் மாறத் தொடங்கியது. பாம்பு நீண்டு கொண்டே போனது. கண்மூடித் திறப்பதற்குள் அது ஒரு ராஜநாகம் அளவுக்குப் பெரிதாகி விட்டது.

அதன் கண்கள் சிவப்பு நிறத்தில் இரண்டு நெருப்புத் துண்டுகள் போல் பளபளத்தன. படத்தை உயர்த்தியபடி அது பெரியவரைப் பார்த்தது.

பெரியவர் மீண்டும் அதன் உடலை வருடினார். பாம்பு உடனே, தனது முந்தைய அளவுக்குச் சுருங்கியது. அதை பழைய மரப்பாத்திரத்திலேயே போட்டு முன்பு இருந்த இடத்திலேயே வைத்தார்.

''சரி, இனிமேல் நாம் சில விஷயங்கள் குறித்துப் பேச வேண்டி உள்ளது!'' தனது நீண்ட தலைமுடியைக் கோதிய படியே பேசினார்: ''என் பெயர் காளிச்சரண். நான் மந்திரம் கற்றுக் கொண்டது என் அப்பாவிடமிருந்து. அவர் ஒரு மகாமாந்திரீகர். கூடுவிட்டுக் கூடு பாயவும், மற்றவர் மனத்தைப் படிக்கவும் அவரால் முடிந்தது!''

காளிச்சரண் தனது மடியிலிருந்து ஒரு சிறிய பையை எடுத்தார். அதற்குள் கையை விட்டு உலர்ந்த இலைச் சருகுகள் சிலவற்றை எடுத்துக் கையால் சுருட்டி வாயில் போட்டு மென்றார்.

மேற்கொண்டு அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற ஆவலில் ஹரி, அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீங்கள் இந்த இடத்துக்கு வந்திருப்பது எதற்காக?'' பெரியவர் கேட்டார். தனது உண்மையான நோக்கத்தை இவரிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று ஹரி ஒரு கணம் தயங்கினான்.

உண்மையைச் சொல்லாவிட்டால் அவர் தன்னைச் சந்தேகப்படுவதுடன்... அதனால் ஏதாவது பிரச்னைகள் விளையலாம் என்று தோன்றவே, உண்மையைச் சொல்லத் தீர்மானித்தான்.

''எழிமலைக்காவு பகவதி கோயிலைத் தேடி வந்திருக்கிறேன்.''

''அப்படித்தான் இருக்குமென்று நானும் நினைத்தேன்.''

''அப்படியானால் உங்களுக்கும் அந்தக் கோயிலைப் பற்றித் தெரியும் என்று நினைக்கிறேன்.''

''தெரியும். ஆனால், உங்களுக்குத் தெரிந்திருக்கிற மாதிரியில்லை, நான் தெரிந்து வைத்திருப்பது. முதலில் என் மனசுக்கு அது யதேச்சையாகத் தட்டுப்பட்டது.''

''புரியவில்லை...''

''இது போன்ற சுற்றுப்புறத்தில் அதோ தெரியும் அந்த மலைகளின் தாழ்வரையில் ஒரு கோயில் இருக்க வேண்டும் என்று தோன்றியது. சந்தேகம் தீர்க்க பிரஸ்னம் வைத்துப் பார்த்தபோது உண்மைதான் என்று தெரிந்தது!''

''அப்படியானால், நீங்களும் கோயிலைப் புனருத்தாரணம் செய்ய நினைக்கிறீர்களா?''

''இல்லை. என்னைப் போன்ற ஒரு மாந்திரீகனுக்கு அதெல்லாம் எதற்கு? அது எனது வேலை அல்ல!''

''கோயில் பகுதியில் புதையல் ஏதும் இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''இந்தச் சந்தேகம் பொருளற்றது. என்னைப் போன்ற வயோதிகன் ஒருவனுக்குத் தங்கமும் வைரமும் எதற்காக? அவற்றைக் கொண்டு நான் என்ன செய்ய முடியும்? நான் விரும்பினால் அவற்றை இப்பொழுதே அடைய முடியும்!''

''அப்படியானால், உங்கள் நோக்கம் என்ன? எதை அடைய விரும்புகிறீர்கள்?''

''அந்தக் கோயிலில் பலதும் உள்ளன. நீங்கள் விரும்புவதும், நான் விரும்புவதுமான எல்லாமும் இருக்கின்றன!''

''சற்றுத் தெளிவாகச் சொல்லுங்கள்.''

''கறுப்பசாமி என்கிற மாந்திரீகன் வந்திருப்பது அந்தக் கோயிலுள்ள புதையலை அடையத்தான். புதையலை எடுத்துக் கொண்ட பிறகு அவர் அந்தக் கோயிலை அழித்து விடுவார்!''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நாம் மூன்று பேரும் மூன்று வெவ்வேறு விஷயங்களுக்காகப் புறப்பட்டிருக்கிறோம். இதில் யாருடைய நோக்கம் நல்லதென்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்!''

''நன்மை - தீமை பற்றி நாம் யோசிக்க வேண்டியதில்லை. குறிப்பாக நான் முற்றிலுமாக யோசிக்க வேண்டாம். எனது நோக்கம் வேறொன்று.''

''என்னவென்று சொல்லுங்கள்!'' ஹரி வற்புறுத்தினான்.

''நீங்கள் இதில் மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாலும் உங்களால் மட்டுமே ஒரு முக்கியமான காரியத்தைச் செய்ய முடியும் என்பதாலும் சொல்கிறேன். நான் என்றும் இளமையை விரும்புகிறேன்.''

''யார் நீங்களா? இப்போதே வயதானவராகத்தானே இருக்கிறீர்கள்?''

''உண்மைதான். ஆனால், மரணத்தை வெற்றி கொள்ளவும், இளமையை நிலைநிறுத்தவும் உதவுகிற ஒப்பற்ற ஓலைச்சுவடி ஒன்று அந்தக் கோயிலில் உள்ளது.''

எத்தனையோ வகையான மந்திரச் சுவடிகளைக் குறித்து ஹரி கேள்விப்பட்டிருக்கிறான். மரணமடைந்தவனைக் கூட மீண்டும் உயிருடன் எழுப்பும் வல்லமை வாய்ந்த 'மிருத சஞ்சீவினி' மந்திரங்கள் வரை இருப்பது அவனுக்குத் தெரியும். ஆனால், இளமையை நிலைநிறுத்தும் மந்திரத்தைப் பற்றி அவன் இதுவரை கேள்விப்பட்டதே இல்லை!

''இப்படிப்பட்ட ஒரு மந்திரத்தை இப்போதுதான் முதல்முறையாகக் கேள்விப்படுகிறேன். அதைப் பற்றி விளக்க முடியுமா?''

''உங்களுக்குப் புரிய வைக்க முயல்கிறேன். அதன் சரியான மந்திர முறை எனக்குத் தெரியாது. என் அப்பா

வைத்திருந்த ஒரு சுவடி மூலமாகவே இதைத் தெரிந்து கொண்டேன்.''

தனக்குத் தெரியாத, தான் இதுவரை கேள்விப்படாத விஷயமானதால், ஹரி மிகவும் கவனத்துடன் கேட்டுக் கொண்டான். எப்படி இருந்தாலும் காளிச்சரணைச் சந்தித்ததும் ஒரு வகையில் நல்லதுக்கே என்றுதோன்றியது.

''சரி அதற்கு முன் உங்களுக்கு நான் ஒன்றைக் காட்ட விரும்புகிறேன்'' காளிச்சரண் எழுந்து வீட்டுக்குள் சென்றார்.

ஹரிகிருஷ்ணன் கனவில் அமிழ்ந்திருப்பவன் போல் அங்கேயே உட்கார்ந்திருந்தான். எப்படி இருந்தாலும் காளிச்சரணின் நோக்கம் அவ்வளவு நல்லதாகத் தெரிய வில்லை.

சற்று நேரத்துக்குள் காளிச்சரண் திரும்பி வந்தார். அவர் கையில் தோலாலான ஒரு மூட்டை இருந்தது. மான்தோலில் கட்டப்பட்டிருந்த அந்த மூட்டையைப் பிரித்தார்.

அதற்குள் மிகவும் பத்திரமாக வெள்ளிச் செப்பு ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அவர் அந்தச் செப்பைத் திறந்தார்.

சட்டென்று அந்த இடம் முழுவதும் ஒருவித ஒளி பரவியது. பகல் நேரமாக இருந்தும் நிழல் மறைவிலிருந்த அந்த வனாந்திரப் பகுதியில் கண்ணைக் கூசச் செய்யும் ஒளி பரவியது.

''இது என்னவென்று உங்களுக்குத் தெரியும் இல்லையா?'' காளிச்சரண் செப்புக்குள்ளிருந்து பளபளக்கும் அந்தப் பொருளை மூடியிருந்த பட்டுத் துணியை வெளியே எடுத்தார்.

''நாகமாணிக்கம்!''

''நாகமாணிக்கமேதான். இதன் பயன் உங்களுக்குத் தெரியுமில்லையா?''

''இது எந்த இடத்திலுள்ளதோ அந்த இடம் எல்லா விதமான ஐஸ்வரியங்களும் நிறைந்ததாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்!''

''ஆனால், நான் இதை, இருட்டு நேரத்தில் வெளிச்சம் காட்டுவதற்காகப் பயன்படுத்துகிறேன்.''

''புரியவில்லையே நீங்கள் சொல்வது?'' அதில் ஏதோ மர்மம் இருப்பதாகத் தோன்றியதால் ஹரி கேட்டான்.

''எழிமலைக்காவு பகவதி கோயில் இப்போது நிலத்துக்கு அடியில் அல்லவா இருக்கிறது. அங்கு ஒரே இருள்தான். அப்படிப்பட்ட இருளில் இந்த நாகமாணிக்கம் பயன்படும். ஆனால்...''

மீதி வார்த்தைகளைச் சொல்லத் தயங்குகிறவர் போல் அவர் சற்றுநேரம் மௌனமாக இருந்தார். நிதானமாக அந்த மாணிக்கத்தைப் பட்டுத் துணியால் மூடி செப்புக்குள் வைத்து அதையும் தோலால் முடிந்தார். பின்னர் அந்தத் தோல் மூட்டையுடன் திரும்பவும் அறைக்குள் நுழைந்தார்.

காளிச்சரண் எதையோ இலைமறை காயாகப் பேசுகிறார் என்று ஹரி நினைத்தான்.

அவர் திரும்பி வந்தார்.

''மேற்கொண்டு உங்களது உதவியும் கிடைத்தால் நாம் இந்த முயற்சியில் வெற்றி அடையலாம்!'' அவர் நெற்றியைச் சுருக்கி, கண்களைச் சிறிதாக்கியபடி ஹரியைப் பார்த்தார்.

''உங்களது சரியான நோக்கம்?''

''சொல்கிறேன். மண்ணைத் தோண்டிக் கோயிலை வெளிக்கொண்டு வருவது அசாத்தியமான ஒரு காரியம். அது நடக்கக் கூடியதாகதாகவும் தோன்றவில்லை. அது மட்டுமல்ல... திரிவிக்கிரமனும் அவரின் ஆட்களும் இதைக் கடுமையாக எதிர்ப்பார்கள்.''

''இருக்கலாம். ஆனால், எனது நோக்கம் அது அல்லவே?'' ஹரி இடைமறித்தான்.

''பிறகு?''

''அந்தக் கோயிலை வெளியே கொண்டு வருவதுதான் எனது லட்சியம். அதற்காக நான் பக்த ஜனங்களை அணி திரட்டுகிறேன்!''

''அது ரொம்பவும் ஆபத்தான விஷயம்.''

''ஏன்?''

''நீங்கள் சொல்வதுபோல் செய்தால் கோயிலுக்குள் இருக்கும் சுவடியையும், புதையலையும் நாம் எடுக்க முடியாமல் போகலாம். எனவே, நான் சொல்கிறபடி செய்யுங்கள்.''

''சொல்லுங்கள்!''

''இப்போதும் நம்மால் அந்தக் கோயிலுக்குள் செல்ல முடியும்.''

''எப்படி?'' ஹரி வியப்புடன் கேட்டான்.

''கோயிலை அடைய குகை வழி ஒன்று உள்ளது. ஆனால், அந்தப் பாதை ஒரு ருத்ர தேவதையின் இருப்பிடம்!''

''இருந்து விட்டுப் போகட்டும். நாம், நாம் பாட்டுக்கு அந்த வழியில் போக வேண்டியதுதான்.''

''அது முடியாது. அதற்கு அந்த தேவதையை முதலில் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும்!''

''அதற்கு என்ன வழி?''

''மனிதனுடன் உறவு கொண்ட ஒரு மோகினியை அந்த இடத்தில் பலி கொடுக்க வேண்டும். அவ்வளவுதான்.''

''அப்படிப்பட்ட ஒருத்தியை எங்கே போய்த் தேடுவது?'' ஹரி கேட்டான்.

''அதில் என்ன சிக்கல்? அதுதான் உங்களிடமே உள்ளதே!''

''நீங்கள் சொல்வது...''

''ஆமாம், விஷ்ணுப்ரியாவைத்தான். அவளை பலி கொடுத்தால் போதும்!''

ஹரி துள்ளி எழுந்தான்!

## 19

''இல்லை. ஒருபோதும் என்னால் அது முடியாது!'' ஹரி உரத்த குரலில் மறுத்தான்.

''நான் சொன்னது நம் இருவரது நன்மையையும் முன்னிட்டுதான். அதாவது ஒரே கல்லில் இரண்டு மாங்காய். உங்களது லட்சியமான கோயில் உங்களுக்கு... எனக்கு அந்த ஓலைச்சுவடி...'' காளிச்சரண், ஹரியை உற்சாகப் படுத்துவதற்காகச் சொன்னார்.

''இதற்காகத்தான் என்னை இங்கே அழைத்து வந்தீர்களா?''

''அமைதி... அமைதி! கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நான் எல்லாவற்றையும் சொல்கிறேன்'' பெரியூவர், ஹரியின் தோளைப் பிடித்தபடி பேசினார்.

அவரது வற்புறுத்தலுக்காக மீண்டும் உட்கார்ந்தான் ஹரி.

''அந்த ருத்ர தேவதையை மகிழ்ச்சியடையச் செய்து நீங்கள் சுவடியை எடுத்துக் கொண்ட பிறகு, கோயிலை எப்படி வெளியே கொண்டு வர முடியும்?'' ஹரி கேட்டான்.

பெரியவர் அதற்கு பதிலேதும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். என்ன பதில் சொல்வது என்பது பற்றிக்கூட அவர் யோசிக்கவில்லை.

''அதற்கான வழி கோயிலிலுள்ள சுவடியிலேயே இருக்கும் என்று நம்புகிறேன். மிகவும் ஆச்சரியகரமான முறையால்தான் அந்தக் கோயில் மண்மூடிப் போனது. எனவே, இப்போதைய சூழ்நிலையில் அதை எப்படி வெளியே கொண்டு வருவது என்பதை நிச்சயம் அங்குள்ள சுவடிகளில் ஏதாவது ஒன்று குறிப்பிடவே செய்யும்.''

''காளிச்சரண்! நம்புபவர்களை வஞ்சித்து எந்த விதமான பலனையும் அடைய நான் விரும்பவில்லை. எதற்காகவும் நான் அப்படிச் செய்ய மாட்டேன்!''

அதன் பிறகு ஹரி அங்கே நிற்கவில்லை. விறுவிறு வென்று நடந்து ஆற்றங்கரையை அடைந்தான்.

ஆறு, இப்போது அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. முன்பு போல் வெள்ளம் சீறிப் பாய்ந்து ஓடவில்லைதான். ஆனால், நீர் நிறைந்து ஓடியது.

ஆற்றில் ஆங்காங்கே கற்பாறைகள் உயர்ந்து நின்று கொண்டிருந்தன. கவனமாகக் காலெடுத்து வைத்துத் தாண்டினால், ஆற்றைக் கடந்து விடலாம். ஹரி சற்று நேரம் நின்றபடியே ஆற்றைக் கவனித்தான். பிறகு வலக் காலை எடுத்து மற்றொரு பாறை மீது வைத்தான்.

சட்டென்று ஏதோ நெரிபடும் சத்தம் கேட்டதால் மேற்புறம் பார்த்தான். எதிர்க்கரையில் உயரமாக வளர்ந் திருந்த பிரமாண்டமான புன்னை மரத்திலிருந்து பசுங்கொடி யொன்று சரசரவென்று கீழ்ப்புறமாக இறங்கியது. விநோதமான அந்தக் காட்சியை கவனித்த ஹரி அசைவற்று நின்று போனான்.

நிமிட நேரத்துக்குள் கைத்தண்டின் பருமனிலிருந்த அந்தக் கொடி தண்ணீரில் விழுந்து முன்னேறத் தொடங்கியது.

காலில் எதுவோ உரசியது போல் இருக்கவே திடுக்கிட்டுத் திரும்பினான். அந்தக் கொடி அவன் காலைச் சுற்றிக் கொள்ள முயன்றது. ஹரி காலை விசையுடன் உதறினான். கொடி தண்ணீருக்குள் விழுந்தது. ஹரி அதற்கடுத்த கல்லின் மீது தாவினான். அதற்கு அடுத்த கல், தாண்டும் தூரத்தை விடச் சற்றுத் தொலைவு தள்ளி இருந்தது. கவனமாகக் குதிக்க வேண்டும். இல்லாவிட்டால் தண்ணீரில் விழ வேண்டியதுதான்.

தண்ணீர் அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்தாலும் உள்ளுக்குள் நீரோட்டம் வலுவாக இருந்தது. சற்றுப் பெரிய கூழாங்கற்கள் தண்ணீருக்குள் உருளுவது தெளிந்த தண்ணீரில் தெரியவே செய்தது.

தண்ணீரில் விழுந்த கொடியின் தண்டு, இப்போது நம்ப முடியாதபடி தண்ணீரை எதிர்த்து அவனை நோக்கி வந்தது. ஒரு நீர்க்கோழி மாதிரி அவன் நின்று கொண்டிருந்த பாறையைப் பிடித்து மேலேறவும் செய்தது.

ஹரி பின்னால் திரும்பிப் பார்த்தான். அவன் சற்று முன்பு நின்ற பாறையைத் தண்ணீர் மூடிவிட்டிருந்தது. ஒன்று, அடுத்தபாறை மீது சரியாகக் குதிக்க வேண்டும். அல்லது தண்ணீரில் குதிக்க வேண்டும். வேறு வழி இல்லை. விரைவில் ஏதாவது ஒரு முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தான் ஹரி. காரணம் அந்தக் காட்டுக் கொடி உயிருள்ள ஒரு ஜீவன் போலவே அசைகிறது. ஆனால், பார்வைக்கு நீரின் போக்கிலேயே அது அசைவது போல் தோன்றியது.

சட்டென்று அது நிகழ்ந்தே விட்டது. கொடி ஹரியின் இடக் காலில் விழுந்து சுற்றிச் சுண்டி இழுத்தது. ஹரி நிலைதடுமாறி தண்ணீரில் விழுந்தான். கொடி ஹரியை

இழுத்துக் கொண்டு, மேற்குப்புறமாக எதிர்க்கரையை நோக்கி நகர்ந்தது. அந்தப் பகுதியில் பெரிய பெரிய பாறைகளும் ஆழமான பகுதிகளும் இருப்பது தெளிவாகத் தெரிந்தன. குறைந்தபட்சம் பதினைந்து முதல் இருபதடி ஆழம் வரையிலும் இருக்கலாம். முதலில் தண்ணீரில் விழுந்த ஹரி ஏதாவது ஒரு பாறையைப் பிடித்து தொற்றிக் கொள்ளக விரும்பினான். முடியவில்லை. அந்தக் கொடி வலுவாக அவனைப் பிடித்துக் கொண்டு விரைந்தது. சற்று நேரத்துக்குள் கொடி அவன் வலக் காலிலும் சுற்றிக் கொண்டது.

ஹரிக்குச் சட்டென்று ஒரு யோசனை. ஒருவேளை இதெல்லாம் காளிச்சரணின் சூழ்ச்சியாக இருக்குமோ? அப்படியே இருந்தால்கூட இந்தச் சூழ்நிலையில் அதிலிருந்து தப்பிப்பது முடியாத காரியமாகத் தோன்றியது.

ஹரி, கொடியின் போக்கிலேயே சென்றான். கண்ணைத் திறந்து பார்த்தபோது சற்றுத் தொலைவில் செங்குத்தான பள்ளம். உடனடியாக ஏதாவது செய்யா விட்டால் மரணம் நிச்சயம்! எச்சரிக்கையுடன் பார்த்த ஹரி, பள்ளத்துக்கு முன்பாக ஒரு தூண் போன்ற பாறையைக் கண்டான். இரண்டு கைகளையுகம் அகல விரித்து அதைக் கட்டிப் பிடித்தான். கொடி ஹரியை வலுவாக இழுத்துக் கொண்டிருந்தது. நீரின் வேகம், கொடியின் இழுப்பு இரண்டினாலும் ஹரியின் கை வலிக்கத் தொடங்கியது.

மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் ஹரி தவித்தபோது ஏதோ ஒரு பேரிரைச்சல் கேட்டது. தலையைத் திருப்பிப் பின்புறம் பார்த்தான். காட்டாறாக இருந்ததால் தொலைவில் ஆற்றுப் பரப்புக்கு மேல் பத்தடி உயரத்தில் நீர்த்திரை நகர்ந்து வருவது தெரிந்தது. அதுவும் தன்னை நெருங்கிவிட்டால், தனது கதை அவ்வளவுதான். அதைப் பற்றி யோசித்தபோது யாரோ அவன் கையைப் பிடிப்பதை உணர்ந்து திரும்பினான்.

விஷ்ணுப்ரியா!

''வாருங்கள்!'' அவள் அழைத்தாள்.

ஹரி, பாறையின் பிடியை விட்டான். அவனை இழுத்தபடியே நகர்ந்தாள் அவள். காலில் சுற்றியிருந்த கொடி அப்போதும் அவனை வலுவுடன் இழுத்தது.

விஷ்ணுப்ரியா அவனை மறுகரைக்குக் கொண்டு வந்து சேர்த்தாள். கொடி சுற்றியிருந்த கால் பகுதி, கன்றிச் சிவந்திருந்தது. விஷ்ணுப்ரியா அவன் கால் பகுதியில் கை வைத்து வருடினாள்.

''சரி... போகலாம் வாருங்கள்!''

ஹரி, அவளைப் பின்தொடர்ந்தான். இல்லத்தை அடைந்த பிறகு, அவளிடம் நடந்ததையெல்லாம் கூறினான் ஹரி.

''அவர் பேசியிருப்பதை வைத்துப் பார்த்தால், நாம் இனி அவர் விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது!'' விஷ்ணுப்ரியா கூறினாள்.

''எதற்காக நாம் அவருக்கு பயப்பட வேண்டும்?''

''அவர் அசாதாரணமான சக்திகள் நிறைந்த ஒரு மாந்திரீகன். அவர் நினைத்தால் மோகினி வசிய மந்திரத்தைப் பயன்படுத்தி என்னைக் கவர்ந்து கொள்ள முடியும். அப்படிச் செய்துவிட்டால், அதன் பிறகு அவரது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வது, அதாவது என்னை பலி கொடுப்பது அவருக்குச் சுலபமும் கூட!''

''ஐயோ, அதைத் தடுக்க என்ன வழி?''

''பயப்படாதீர்கள்... வழியிருக்கிறது! அவரால் அந்த மந்திரத்தைத் தொடர்ந்து சரியாக உச்சரிக்க முடியாது. அது ஒரு மாதிரியான சிக்கலான மந்திரம். எந்த விநாடியிலும் அதை அவர் மறந்து போகலாம். அப்படி ஏதாவது நடந்தால்,

அந்த மந்திரத்தை ஹோமாக்னியில் பார்த்தே தொடர வேண்டும். அதையும் ஒருவர் தமது வாழ்நாளில் ஒரு தடவை தான் செய்ய முடியும்.''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய் விஷ்ணுப்ரியா?''

''சுலபம். காளிச்சரணிடம் இருக்கும் அந்த மந்திரத்தையே நாம் எடுத்து வந்துவிட வேண்டும்.''

''அதெப்படி முடியும்?''

''நீங்கள் மறுபடியும் அந்த வீட்டுக்குச் செல்ல வேண்டும். அவரிடம் நட்பைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்!''

''இவ்வளவு நடந்த பிறகுமா?''

''அதற்கென்ன... பரவாயில்லை. எப்படியாவது அந்த மந்திரத்தை நீங்கள் எடுக்க வேண்டும். நான் அவ்வளவுதான் சொல்ல முடியும்.''

ஹரிகிருஷ்ணன் எவ்வளவு யோசித்தும் வேறு எந்த யோசனையும் பிடிபடவில்லை. கடைசியாக என்ன நடப்பதானாலும் அன்றிரவு அந்த வீட்டுக்குப் போவதென்று தீர்மானித்தான்.

மாலைநேரம் கடந்தது.

விஷ்ணுப்ரியா, ஹரியுடன் அமர்ந்திருந்தாள். அவள் மனத்திற்குள் சந்தேக அலைகள் உயர்ந்து கொண்டே இருந்தன. எந்த நேரம் என்ன நடக்குமோ என்கிற பதைப்பு. இதற்கு முன்னர் தான் சிறைப்பட மட்டுமே செய்தோம். ஆனால், இந்த முறை தனது வாழ்வே முடிந்து விடுமோ என்கிற பயம் அவளுக்குத் தோன்றியது.

''என் உயிர் உங்கள் கையில்தான் உள்ளது.'' அவள், அவன் தோளில் கன்னத்தைப் பதித்தபடி பேசினாள்.

''உனது நிலைமை எனக்குப் புரிகிறது...'' கையால் அவளது கூந்தலை வருடியபடி பேசினான்.

''நீங்கள் இங்கேயே என் கையால் சாப்பிட்டு விடுங்கள். அங்கு போய் எதையும் தொடாதீர்கள்!'' என்றவள் எழுந்து வீட்டுக்குள் போனாள். சற்று நேரத்தில் அவள், அவனைச் சாப்பிட அழைத்தாள்.

''அப்பளம் இப்போதுதான் பொரித்தது மாதிரி எப்படி இவ்வளவு சூடாக இருக்கிறது?''

''அதையெல்லாம் அப்புறம் சொல்கிறேன்... முதலில் சாப்பிடுங்கள்!''

சாப்பிட்ட பிறகு அவன் காளிச்சரணது வீட்டுக்குப் போகத் தயாரானான்.

அவன் ஆற்றங்கரையை அடைந்தபோது அங்கு நாகவதி நின்று கொண்டிருந்தாள்.

''உங்களை அழைத்துச் செல்வதற்குத்தான் காத்திருக்கிறேன்!'' நாகவதி கூறினாள்.

## 20

''**நா**ன் உங்களது வீட்டுக்குத்தான் வருகிறேன் என்று உனக்கு எப்படி தெரிந்தது?'' ஹரி கேட்டான்.

''அவர்தான் சொல்லி அனுப்பினார்'' நாகவதி வசியமாகச் சிரித்தாள்.

நாகவதியிடமிருந்து காளிச்சரண் பற்றிய ரகசியங்களைத் தெரிந்து கொள்ள முடியுமென்று ஹரிக்குத் தோன்றியது. அதற்குச் சுலபமான ஒரு வழி, அவளைக் கைக்குள் போட்டுக் கொள்வதுதான்.

அழகும், வாட்ட சாட்டமான உடலும் அவளுக்கு இருந்தது. தவிர அவள் கண்களில் காமதேவனின் மலரம்புகள் மறைந்திருந்தன. அவளது பார்வை தன் இதயத்தைத் துளைத்து இறங்குவதை ஹரி உணர்ந்தான்.

ஹரி பாறைகளின் மீது கால் வைத்து மறுகரையை அடைய நினைத்தான். ஆனால், நாகவதி தன் கையை அவனை நோக்கி நீட்டினாள்.

அழகான விரல்கள். அவை பளிங்கின் பளபளப்புடன் இருந்தன. ஹரி அந்தக் கையைப் பிடித்தான். பட்டுப் போன்ற உறுதியும் வெண்ணெய் போன்ற வழுவழுப்பும் கொண்ட கைகள். இருவரும் மறுகரையை அடைந்தனர்.

''காளிச்சரண் வீட்டில் இருக்கிறாரா?'' ஹரி, அவளிடம் கேட்டான்.

''இல்லை. பூஜா திரவியங்கள் சேகரிப்பதற்காக வெளியே போயிருக்கிறார்.''

''எப்பொழுது திரும்புவார்?''

''சொல்ல முடியாது. எப்போது வேண்டுமானாலும் வருவார். ஆனாலும், உடனே வந்துவிடுவார் என்று சொல்ல முடியாது!''

''ஒருவேளை நள்ளிரவும் ஆகலாம் இல்லையா?''

''ஆகலாம்... வாருங்கள் போகலாம்.''

ஹரி அவளுடன் நடக்கத் தொடங்கினான். காளிச்சரணது இருப்பிடத்தை அடைந்தனர். நாகவதி அவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.

வராந்தாவைக் கடந்து, முன்னர் உள்ளே போக வில்லை ஹரி. அப்போது வெளியே உட்கார்ந்துதான் பேசினான்.

நாகவதி, ஹரியை அவளது அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''என்ன இதெல்லாம்?'' அறைச்சுவர்களை ஒட்டி பல வித வடிவ பொம்மைகள் இருந்தன. அவற்றைப் பார்த்த வாறு கேட்டான்.

''இதெல்லாம் மோகினிகள்.''

''இத்தனையுமா?''

''ஆமாம்... இதில் பயங்கரமான வடிவமுள்ளவையும் அழகானவையும் உண்டு. ஒரு புறம் அப்சரஸ்களைத் தோற் கடிக்கக் கூடிய அழகு என்றால், மறுபுறம் பைசாசிகத்தின் உச்சம் என்றே அவற்றைக் கூறலாம்.''

''இவற்றையெல்லாம் அசையச் செய்ய அவரால் முடியும் இல்லையா?'' ஹரி கேட்டான்.

''முடியும்!''

ஹரி ஒவ்வொன்றையும் உன்னிப்பாக கவனித்தான். ஏறத்தாழ ஆறங்குலம் முதல் ஒன்றரையடி உயரம் வரையில் இருந்தன அவை. கல்லாலான பொம்மைகள்... சிலைகள்! அவை பாறையில் வடிக்கப்பட்டு எத்தனையோ காலமாகிறது என்பது புரிந்தது. செதில்கள் போன்று கல் துணுக்குகள் அவற்றின் மீது ஒட்ட வைக்கப்பட்டிருந்தன.

''இதையெல்லாம் பெரியவர் எங்கிருந்து சேகரித்தார்?''

''பெரும்பாலானவற்றைக் கோயில்களிலிருந்து... அதுவும் குகைக்கோயில்களிலிருந்து!''

''ஒருவேளை இவற்றை அவரே வடித்திருப்பாரோ என்று நினைத்தேன்.''

''இவ்வளவு சிலைகளை வடிக்க யாரால் முடியும்? அதுவும் பல்வேறு வடிவங்களில்...'' நாகவதி சற்று முன்புறமாக நகர்ந்து நின்றாள். சிங்க முகமுள்ள ஒரு சிலையை, சுவருடன் சேர்த்து வைத்துக் கொண்டு பேசினாள்.

''அவர் வடிக்கவில்லை என்றால், பிறகு எப்படி அவரால் இவற்றுக்கு சலன சக்தியை வழங்க முடிகிறது?''

''நீங்கள் கெட்டிக்காரர்தான். இங்கு வரும் வேறு யாரும் இப்படிப்பட்ட கேள்விகளை கேட்க மாட்டார்கள்!'' சொல்லியபடி நாகவதி சிரித்தாள்.

''தவறாகக் கேட்டுவிட்டேனா?''

''கேட்கக் கூடாத கேள்விகள்! இவற்றை அசைய வைப்பதற்கென்றே தனி மந்திரங்கள் உள்ளன.''

''அது எனக்கும் தெரியும். அதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், அவர் வடிக்காத சிலைகளை எப்படி அவரால் மந்திரம் சொல்லி அசையச் செய்ய முடிகிறது? அதற்கான மந்திரங்கள் அவருக்கு எங்கிருந்து கிடைக்கின்றன?''

''அர்த்தமில்லாத கேள்வி. அவை ஒவ்வொன்றுக்கு மான மந்திரங்கள் அவரிடம் உண்டு.''

''எழுத்து வடிவில் உள்ளவையா அல்லது காது வழியாகக் காப்பாற்றப்பட்டு வருவதா?''

''எழுத்து வடிவில் ஓலைகளில் உள்ளன.''

''உண்மையாகவா?'' ஹரி வியப்புடன் கேட்டான்.

''ஆமாம், இந்தக் கற்சிலைகளை எப்படிப்பட்ட வடிவத்திலும் செயல்படுத்தச் செய்யும் வல்லமை வாய்ந்த மந்திரங்கள் அடங்கிய சுவடியும் அவரிடம் உள்ளது!''

தான் எதிர்பார்க்கும் எல்லாமும் அங்கு இருக்கின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட இந்தச் சிலைகளுக்கு உயிரூட்டவும், இந்த மோகினிகளை வசப்படுத்தி தமது விருப்பப்படி செயல்படுத்தச் செய்யக்கூடியதுமான மந்திரங்களை மட்டும் கைப்பற்றிவிட்டால், தனது லட்சியம் சுலபமாக நிறைவேறி விடும் என்பது ஹரிக்குச் சந்தேகமறத் துலங்கியது.

ஆனால், தனது நடவடிக்கைகளில் எங்காவது முடியிழை அளவு தவறு நிகழ்ந்தாலும்கூட, இவற்றில் ஏதாவது ஒரு மோகினியே தன்னைத் தொலைத்துக் கட்டி விடும் என்பதையும் ஹரி மறக்கவில்லை. எப்படி இருந்தாலும் முதலில் நாகவதியை மகிழ்ச்சிப்படுத்துவது என்ற முடிவுக்கு வந்தான் ஹரி.

நாகவதி அவனை மற்றோர் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

பெரிய அறையென்று சொல்ல முடியாத அதன் மரச்சுவர்களில் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த ஒரு கட்டில். அதற்குப் பொருத்தமான மேஜை, நாற்காலிகள் என்று பலதும் இருந்தன. ஒரு சுவரலமாரியும் இருந்தது. கட்டில் மீது மான் தோலால் தைக்கப்பட்ட ஒரு மெத்தை கிடந்தது.

''அப்படி உட்காருங்கள்...'' கட்டிலைச் சுட்டிக் காட்டினாள். அவன் அமர்ந்தான்.

''இதோ வந்து விடுகிறேன்'' என்ற நாகவதி மற்றோர் அறைக்குள் நுழைந்தாள்.

சற்று நேரத்துக்குள் திரும்பி வந்தாள். அவள் கையில் சுரைக்குடுக்கை ஒன்று இருந்தது. ,அதற்குள்ளிருந்து அருமையான மணம் கமழ்ந்தது.

''இந்தாருங்கள், இதைக் குடியுங்கள்'' அவள் சுரைக்குடுக்கையை அவனிடம் கொடுத்தாள்.

''என்ன இது?'' குடுக்கையின் உட்புறத்தைப் பார்த்தபடி கேட்டான்.

அதற்குள் இளஞ்சிவப்பு நிறமான திரவம் இருந்தது. கூடவே இது வரை அனுபவித்தறியாத மணம்...

''பஞ்சேந்திரியங்களையும் உற்சாகப்படுத்தும் ஒரு ரசம் இது. சோமபானம் என்பார்கள்.''

''இது இப்பொழுது எதற்காக?''

''நல்ல கேள்வி. நான்தானே கொடுத்திருக்கிறேன். முதலில் குடியுங்கள். மற்றதை அப்புறம் பேசிக் கொள்ளலாம். உங்களைக் கொல்வதற்கு அதில் எதுவும் இல்லை என்று சத்தியம் செய்கிறேன்!'' குடுக்கையை அவனிடமிருந்து வாங்கி அதிலிருந்து அவள் ஒரு மிடறு குடித்தாள்.

மேற்கொண்டு அவளை நம்பாமல் அலுப்படைய வைப்பது, தனது நோக்கத்துக்கு உகந்ததல்ல என்று நினைத்தவனாக... ஹரி அதிலிருந்த திரவம் முழுவதையும் குடித்தான்.

''ஓ...'' ஹரி தன்னையும் மீறி குரல் கொடுத்தான். திரவம் வயிற்றுப் பகுதியை அடைந்திருக்குமோ இல்லையோ... அதற்குள்ளாக அது ரத்தக் குழாய்களுக்குள் ஊடுருவியது போல் தோன்றியது. ஒவ்வொரு ரத்தக் குழாய்க்குள்ளும் அது வித்தை காட்டியது. அது ஒரு வகையான புது அனுபவமாக இருந்தது ஹரிக்கு. கால் விரலிலிருந்து உச்சந்தலை வரை... ஒவ்வொரு அவயவத்தின் நுனிவரையிலும் அதன் சக்தி பிரவாகித்தது.

அவன் கண்களில் ஒரு வித ஒளி தோன்றியது.

ஹரி, நாகவதியைப் பார்த்தான். அவள் உடலிலிருந்த உடைகள் ஒவ்வொன்றாக நழுவின. மார்புக் கச்சையும் இடுப்புத் துணியும் இடம் மாறத் தொடங்கின.

கோயில் சுவர்களில் தென்பட்ட எதையும் மறைக்காத அழகியாகத் தெரிந்தாள் நாகவதி இப்போது. எல்லா வகையிலும் முழுமையானவளாக இருந்தாள். அங்கங்களில் முழுமை. அந்த முழுமை அவனை 'வா வா' என்று அழைத்தது. அவளின் கண்களில் தாகம். மூக்கில் வியர்வை முத்துகள்!

தாமரைப்பூவின் மகரந்த மணம் அவளிடம் தேங்கியிருந்தது. அது அவன் உடலிலும் பரவிப் படிந்தது. ஒவ்வொரு மயிர்க்கால் வழியாகவும் அது அவனை ஊடுருவியது.

அவளது மூச்சுக் காற்றுக்குக் கூட நல்ல மணமிருந்தது. அவன் குடித்திருந்த சோமபானத்தின் சக்தி அப்போதும் அவனை விட்டு அகலவில்லை!

''எனக்கு உங்களை மிகவும் பிடித்து விட்டது!'' நாகவதி கூறினாள்.

''எனக்கும் கூடத்தான்...'' அவளைத் திருப்திப்படுத்துவதற்காக அவனும் மந்திரித்தான்.

''நான் ஒன்று சொல்லட்டுமா? காளிச்சரணை நீங்கள் ஒரு போதும் நம்பக் கூடாது!'' நாகவதி கூறினாள்.

''ஏன்? நீ கூட அவரைச் சேர்ந்தவள்தானே?'' ஹரி கேட்டான்.

''உண்மைதான்! அதற்குக் காரணம் நான் அவரின் அடிமையாக இருப்பதுதான். இந்த அடிமைத்தளையிலிருந்து நான் விடுதலை பெற விரும்புகிறேன்...''

''அதுதான் உனது நோக்கமென்றால் அதற்கு என்னால் முடிந்த உதவி செய்யக் காத்திருக்கிறேன். பதிலாக நீயும் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்.''

''நிச்சயமாக! இதோ உறுதியளிக்கிறேன்.''

''எனது முதல் தேவை, காளிச்சரண் கைவசமுள்ள மோகினி ஹோம மந்திரம்தான்!''

''மோகினி ஹோம மந்திரமா?'' அவள் பீதியுடன் கேட்டாள்.

''ஆமாம்... அதுவேதான்! தற்சமயம் எனது தேவை அது ஒன்றுதான்.''

''அது அவளைக் காப்பாற்றுவதற்காகத்தானே?''

''ஆமாம். நான் பொய் சொல்ல விரும்பவில்லை. குறிப்பிட்ட காலம் வரை, அவளுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படக் கூடாது. அதன் காரணத்தை நீயே பிற்பாடு தெரிந்து கொள்வாய்.''

''மோகினி ஹோம மந்திரம் இருப்பது காளிச்சரணின் இடுப்பிலுள்ள தாயத்துக்குள். ஒரு நாகப்பாம்பை அரைஞாண் கயிறாகக் கட்டி அதில்தான் அந்தத் தாயத்தை வைத்திருக்கிறார்.''

''என்ன உண்மையா!'' ஹரிகிருஷ்ணன் வியப்புடன் அவளிடம் கேட்டான்.

## 21

**கா**ளிச்சரணின் இடுப்பில்தான், மந்திரம் எழுதிய தாயத்து உள்ளது என்பதை அறிந்தவுடன் ஹரிகிருஷ்ணனின் மனம் சற்றுத் தளர்வடைந்தது. அது மட்டும் தன் கைக்கு வராவிடில், விஷ்ணுப்ரியாவின் கதியை நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

பல வகையிலும் தன்னைக் காப்பாற்றிய அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால், அதன் பிறகு, தான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பெருமளவு பாதிப்படையும் என்பது ஹரிக்குத் தெரிந்தே இருந்தது.

எனவே, எப்படியாவது நாகவதியை கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தான். அவளது உதவி கிடைத்து விட்டால், இந்த வேலை சுலபமாகி விடும். ஆனால், நாகவதியால் அதை நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகமும் கூடவே எழுந்தது.

''என்ன யோசிக்கிறீர்கள்?'' நாகவதி கேட்டாள்.

''அந்த மந்திரத்தைப் பற்றித்தான்! எப்படியும் நான் அதைக் கைப்பற்றியே தீர வேண்டும்.''

நாகவதி அவன் முகத்தை ஊன்றி கவனித்தாள். அந்தப் பார்வை அவன் உடலை வழித்துக் கொண்டு இறங்கியது.

''என் தலையைத் தொட்டு நீங்கள் சத்தியம் செய்யத் தயாராக இருந்தால், நான் அதை உங்களுக்கு எடுத்துத் தருகிறேன்.''

''என்ன சத்தியம்?''

''வேறு ஒன்றுமில்லை. எனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் காப்பாற்றுவேன் என்றுதான்!''

''ப்பூ... அவ்வளவுதானே? அதை நீ என்னிடம் கேட்க வேண்டியதே இல்லை. எனக்கு உதவி செய்பவருக்கு ஏதாவது ஆபத்து என்றால், அதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற என் உயிரைக்கூடக் கொடுப்பேன். அப்படி இல்லாவிட்டால் நான் உயிருடன் இருந்து என்ன பயன்?''

''அப்படியானால், நான் அதை எடுத்துத் தருகிறேன். அதிலும் ஒரு நிபந்தனை! அதைத் திரும்பவும் அங்கேயே வைத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அவருக்குச் சந்தேகம் ஏற்படும்.''

'அதை எப்படி வைப்பது?' ஹரி யோசித்தான்.

'மந்திரம் எழுதிய தாயத்தை எடுத்து... அதற்குள் இருக்கும் மந்திரச் சுருளை விரித்துப் பார்த்த பிறகு எப்படி அதை அவரிடமே திரும்பவும் வைப்பது? அதற்கு என்ன வழி?'

''நாகவதி முதலில் அதை எடுத்துத் தா. திரும்ப வைப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.''

''அப்படிச் சொன்னால் போதாது. அதைத் திரும்பவும் அங்கு வைப்பதற்கான வழியை முதலில் சொல்லுங்கள்.

அப்புறம் எடுத்துத் தருகிறேன். இல்லையென்றால், வரிசையாக நின்றுகொண்டிருக்கின்றனவே மோகினிகளின் சிலைகள்... அதில் நானும் ஒன்றாக மாறிவிட வேண்டியது தான். பிறகு காளிச்சரண் மனம் வைத்தால்தான் நான் இந்த உருவத்துக்குத் திரும்பி வர முடியும்!''

ஹரி, விஷ்ணுப்ரியாவை மனத்துள் தியானித்தான். சற்று நேரங்கழித்து வெளியே செம்போத்து ஒன்று குரல் கொடுத்தது.

''நான் இதோ வந்து விடுகிறேன்...'' என்ற ஹரி வெளியே ஓடி வந்தான். சற்றுத் தொலைவில் மோகினிப் பாலை மரத்தடியில் விஷ்ணுப்ரியா நிற்பதை ஹரி கவனித்தான். அவளருகே சென்றான்.

''நான் எதற்காக உன்னை அழைத்தேன் தெரியுமா?''

''தெரியும்! மந்திர விஷயமாகத்தானே?''

''ஆமாம்!''

''அதற்கும் ஒரு வழி உண்டு. மந்திரம் உங்கள் கையில் கிடைத்ததும் ஒவ்வொரு வரியிலும் ஒவ்வொரு எழுத்து வீதம் அழித்து விடுங்கள்.''

''அழித்து விட்டால்...?''

''அது போதும்! நான் இங்கு நிற்பது நல்லது அல்ல. நாளை இரவு உங்களுக்காக இல்லத்தில் காத்திருப்பேன்.''

''நாளைக்கே நான் அங்கு வந்து சேருவேன் என்று உறுதியளிக்க முடியாது. ஒருவேளை நாளை இரவே காளிச்சரண் ஹோமத்தைத் தொடங்கி விட்டால், என்ன செய்வது? நான் செய்த தவறுக்கு என்ன தண்டனை என்பது உனக்கும் தெரியுமில்லையா?''

''சரி... நான் வரட்டுமா?'' விஷ்ணுப்ரியா அவசர அவசரமாக அங்கிருந்து கிளம்பினாள்.

திரும்பி வந்தபோது நாகவதி விவரம் கேட்டாள்.

''செம்போத்து கூவியது இல்லையா? என்னவென்று பார்க்கப் போனேன். சுபசகுனம்தான்!'' ஹரி பதிலளித்தான்.

''எனக்கும் அப்படித்தான் தோன்றியது.''

அதே நேரம் வீட்டின் உட்புறத்திலிருந்து சிறகடிக்கும் சத்தம் கேட்டது.

''என்ன அது?'' என்ற நாகவதி திரும்பிப் பார்த்தாள்.

நடுமுற்றத்திலிருந்த துளசி மாடத்தின் மேற்புறம் கழுகு ஒன்று தனது இறக்கைகளால் காற்றைக் கீறியபடி மெதுவாகத் தாழ்ந்து வந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்த ஹரிகிருஷ்ணனின் முகபாவம் மாறியது.

''என்ன கழுகைப் பார்த்தவுடன் பயம் வந்து விட்டதா?'' நாகவதி கேட்டாள்.

''பயப்படவில்லை. இருந்தாலும் இது ஓர் அசுபமான சகுனம். இது அந்த மாந்திரீகனது கழுகு.''

''ஓகோ... அவ்வளவுதான் விஷயமா? நானும் பார்க்கிறேனே அதை!'' நாகவதி நடு முற்றத்துக்கு வந்தாள்.

சட்டென்று கழுகின் வடிவம் மாறத் தொடங்கியது. படிப்படியாக அது பெரிதாகியது. ஹரி அதையே பார்த்துக் கொண்டிருந்தான். நாகவதி வீட்டுக்குள் போனாள்.

''என்ன செய்வது நாகவதி?'' ஹரி கேட்டான்.

''கருட மந்திரம் ஜபிப்பதைத் தவிர வேறு வழியில்லை!''

ஹரிகிருஷ்ணனுக்கு அந்த மந்திரம் மனப்பாடமாகி யிருந்தது. ஸ்ரீதேவிக்குட்டி அதை அவனுக்குக் கற்பித்திருந் தாள்.

'ஓம் நமோ பகவதே தத்வ கருடாய
அம்ருதகலக ஸம்பவாய
விஷ்ணு வாஹனாய
வஜ்ரநக வஜ்ரதுந்த வஜ்ர பக்ஷாலம்
க்ருத சரீரியாய ஏற்யேஹி மகா கருட
துஷ்ட நாகன் சிந்த சிந்த
அவே சயாவே சய ஹூம்... பள்'

ஜபித்து முடித்ததுமே சிறகடியோசை கேட்டது. ஹரி கை கூப்பித் தொழுதான்.

'என்னை அழிக்க வந்திருக்கும் மோசமான கழுகிட மிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்!'

கருடனின் சிறகடியோசை நெருங்கி நெருங்கி வந்தது. தொலைவிலிருந்து வரும் சூறைக்காற்று போலிருந்தது அதன் சத்தம். சத்தம் நெருங்க நெருங்க கழுகின் உருவம் சிறிதாகிக் கொண்டே வந்தது.

''கழுகு சிறியதாகிறது?'' ஹரி கூறினான்.

''உண்மைதான்.''

அவர்களுக்கு முன்பாக அந்தக் கழுகு ஒரு சிறிய பறவை போல் ஆனது.

கருடன் பாய்ந்து அதை நெருங்கியது. கண்மூடித் திறப்பதற்குள் துளசி மாடத்தில் பதுங்கியிருந்த கழுகை கூர்மையான கால்விரல் நகங்களால் கௌவிக் கொண்டு மேற்புறமாக உயர்ந்தது கருடன்.

''நல்லவேளை தப்பித்தேன்!'' ஹரி நாகவதியிடம் கூறினான்! ''இனி அடுத்தகட்ட நடவடிக்கை உன்னைப் பொறுத்ததுதான்.''

''கவலையை விடுங்கள்...'' நாகவதி உறுதியுடன் கூறினாள்.

அதே நேரம் அந்த அறை வாசலில் இருந்த பல்லி குரல் எழுப்பியது.

''காளிச்சரண் வருகிறார்'' நாகவதி பல்லியின் சத்தத்தை கவனித்து விட்டுச் சொன்னாள்.

''பல்லி குரல் கொடுக்கக் காரணம் என்ன?'' ஹரி கேட்டான்.

''நான்தான் அதைக் காவலுக்கு வைத்தேன். நாம் அறைக்குள் இருக்கும்போது அவர் வந்தால், நாம் இருவருமே சாம்பலாகிப் போவோம். எனவே, அவரது வருகையைத் தெரிவிக்குமாறு பல்லியிடம் கூறியிருந்தேன்.''

நாகவதி சொன்னது உண்மைதான். ஒரு சில நிமிடங் களுக்குள் காளிச்சரண் வீட்டுக்குள் நுழைந்தார்.

''ஹரிகிருஷ்ணன் திரும்ப வருவார் என்று எனக்குத் தெரியும்!'' உள்ளே நுழைந்த காளிச்சரண் கூறினார்.

**அ**தே நேரத்தில் எதிராளிகள் கூடாரத்தில் மற்றொரு சம்பவம் நடந்தது.

கறுப்பசாமியின் அருகே திரிவிக்கிரமன் அமர்ந் திருந்தார். அவரது வேண்டுகோளை ஒட்டியே தனது பாசப்பறவையான கழுகை ஏவியிருந்தார் கறுப்பசாமி!

''எனது செல்லக் குழந்தை வந்து விட்டால் எல்லா விவரமும் தெரிந்துவிடும். அதன் அடிப்படையில் நாம் மேற்கொண்டு செயல்பட வேண்டியதுதான்!'' கறுப்பசாமி, திரிவிக்கிரமனிடம் கூறினார்.

அவர்கள் பொறுமையுடன் காத்திருந்தனர்.

சற்று நேரத்தில் வெகு தூரத்திலிருந்து ஏதோ ஒன்று பறந்து வருவதுபோல் தோன்றியது.

மரத்தின் மேற்புறக் கிளைகள் பேயாட்டம் போல் அலைக்கழிந்தன.

கறுப்பசாமி தங்கியிருந்த வீட்டுக்கு முன்புறமிருந்த எட்டி மரத்தின் பெரிய கிளையொன்று, சடசடவென்று உடைந்து விழுந்தது.

ஆகாயத்தில் ஒளி சிந்திய நிலவு சட்டென்று மறைந்தது. கறுப்பசாமி, வியப்புடன் அந்த திசையில் பார்த்தார்.

கீழ்ப்புற முற்றத்தில் ஏதோ ஒரு நிழல் தட்டுப்பட்டது.

கறுப்பசாமியின் முகத்தில் வியப்பும் திகைப்பும் கலந்து தோன்றின.

திரிவிக்கிரமன் பயத்துடன் பார்த்தார்.

திடுமென்று ஏதோ ஒன்று தரையில் விழுந்த சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து முற்றத்தில் விழுந்த நிழல் மறையவும் செய்தது.

''தூமாவதித்தாயே!'' என்றபடி கறுப்பசாமி தன் நெஞ்சில் கை வைத்தார். முற்றத்துக்குப் பாய்ந்து வந்தார்.

அவரது செல்லக் குழந்தையான கழுகு தரையில் விழுந்து கிடப்பதைப் பார்த்தார்.

''உனக்கு என்ன ஆச்சு தங்கமே?'' என்றபடி அதைக் கையில் எடுத்துப் பரிசோதித்தார்.

'கருடன்' என்ற பெயர் கொண்ட அந்தக் கழுகால் சத்தம் எழுப்பக்கூட முடியவில்லை. அதன் உடலின் பல பகுதிகளிலிருந்தும் ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது.

''யாரோ வஞ்சகம் புரிந்திருக்கிறார்கள்!'' கறுப்பசாமி கோபத்துடன் உறுமினார்.

''ஒருவேளை அவன்தான் செய்திருப்பானோ?'' திரிவிக்கிரமன் கேட்டார்.

''அப்படித்தான் இருக்க வேண்டும்! ஆனால், அவனால் மட்டும் இப்படிச் செய்ய முடியாது. அவனுக்குப்

பின்னால் வேறு யாரோ இருக்கிறார்கள். அதை அப்புறம் பார்ப்போம். முதலில் நமது கழுகைக் குணப்படுத்த வேண்டும்!''

கறுப்பசாமி கை நிறைய விபூதி எடுத்துக் கழுகின் உடல் மீது பூசினார். கூடவே காயங்கள் ஆறுவதற்கான மந்திரத்தையும் உச்சரித்தார்.

சற்று நேரங்கழித்துக் கழுகு நிமிர்ந்து நின்றது!

''நீ எங்கிருந்து வருகிறாய்?'' கறுப்பசாமி கேட்டார்.

''காளிச்சரணது வீட்டிலிருந்து வருகிறேன்.'' கழுகு பதில் சொன்னது.

''காளிச்சரணா? அவர் எங்கே வந்தார் புதிதாக?''

''ஆற்றின் மறுகரையில் வசிக்கிறார்.''

''என்ன!'' கறுப்பசாமிக்கு அது ஒரு புதிய செய்தியாக அல்ல... ஓர் இடி விழுந்ததாகவே தோன்றியது.

## 22

**த**ன்னைப் போலவே மாந்திரீக சக்தியுள்ள மற்றொரு நபர், வெகு அருகிலேயே செயல்படுகிறார் என்ற தகவல் அப்போதுதான் கறுப்பசாமிக்குத் தெரிந்தது.

'அவரது நோக்கம் என்னவாக இருக்கும்?'

கறுப்பசாமி யோசனையில் ஆழ்ந்தார்.

அது எதுவாக இருந்தாலும், நிச்சயமாகத் தனது லட்சியத்துக்கு எதிரானதாகவே இருக்கும் என்று அவருக்கு உறுதியாகத் தெரிந்தது. திரிவிக்கிரமக் குறூப்பின் எண்ணம் என்ன காரணத்தினாலும் ஒரு போதும் கோயில் வெளியே வரக் கூடாது என்பது. அப்படி ஏதாவது நடந்துவிட்டால்,

இப்போது அவரிடமுள்ள நிலத்தின் பெரும்பகுதி கோயில் சொத்து என்று ஒதுங்கிவிடும். அந்த நஷ்டத்தைத் தாங்க அவர் தயாராக இல்லை!

கோயில் கண்டுபிடிக்கப்பட்டால், ஊரில் உள்ள மொத்த ஜனமும் அதன் பின்னால் அணி திரளுவார்கள். கோயிலைப் புனருத்தாரணம் செய்ய அமைப்பும், திட்டங்களும் போடப்படும். தான் ஒரு தனி மனிதனாக அதை எதிர்ப்பது நடக்காத விஷயமாகி விடும்!

அப்படியே எதிர்த்தாலும் அவர்களுக்கு முன்னர், தான் ஒதுங்கி நிற்க நேரிடும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தன் உயிருக்கே கூட ஊறு ஏற்படலாம். எனவே, எந்தக் கோணத்தில் பார்த்தாலும் கோயிலை வெளியே வர விடாமல் செய்வதுதான் ஒரே வழி! கோயிலை வெளிக் கொணர முற்படுபவர்களைத் தொலைத்தே தீர வேண்டும்!

''ஐயா கறுப்பசாமி, நிலைமை இப்படியே போனால், நமக்குத் தாங்காது. என்னால் தோல்வியைத் தாங்க முடியாது. இது வரை முயற்சி செய்த காரியம் நடக்கா விட்டால், நீங்கள் பாட்டுக்குத் துண்டை உதறித் தோளில் போட்டுவிட்டுப் போய்விடுவீர்கள்!'' திரிவிக்கிரமக் குறுப்பு பேசினார்.

''உங்கள் ஆதங்கம் புரிகிறது. அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? நான் உங்களுக்கு உதவ முயற்சி செய்யாமல் சும்மாவா உட்கார்ந் திருக்கிறேன்?''

கறுப்பசாமியின் நோக்கமும் அதுதானே! பூமிக்கு அடியில் மறைந்துள் கோயிலில் புதையல் உண்டு என்பது அவருக்குத் தெரியும். அதைக் கைப்பற்றுவது அவரது முக்கியமான நோக்கம்!

கோயிலில் தேவி சிலையின் அடிப்புறத்தில் லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்க - வைர நகைகள் உள்ளன

என்று அவருக்கும் தெரியும். ஆனால், அதை எப்படி வெளியே கொண்டு வந்து கைப்பற்றுவது என்பது கறுப்பசாமியின் ஊடு சிந்தனை.

இந்த இருவரது நோக்கங்களும் வெவ்வேறாக இருந்தாலும் லட்சியம் ஒன்றுதான்! கோயில் வெளியே வரக் கூடாது என்பதில் கறுப்பசாமிக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. கோயில் வெளிப்பட்டால், அவர் மனத்தில் நினைத்துள்ள காரியங்கள் எதுவும் நடக்காது!

''இதற்கு நான் ஒரு மாற்று வழி கண்டுபிடித்திருக் கிறேன்'' என்று கூறிய கறுப்பசாமி தனது செல்லப் பறவையான கழுகைக் கையில் எடுத்தார்.

அந்தக் கழுகுக்குக் காயம் பட்டிருப்பதே அவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பிசாசுகளையே பலகாரம் போல் சாப்பிடும் வல்லமை வாய்ந்த கழுகுக்கே இப்படி யொரு நிலைமையா?

அப்படியானால், தன் எதிராளி சாதாரணமானவன் அல்ல என்பது தெளிவாகிறது!

''இனி, உங்களது அடுத்த முயற்சி என்ன?'' குறூப்பு கேட்டார்.

''நம் எதிராளிகள் இருவரையும் மிச்சம் மீதியில்லாமல் தீர்த்துக் கட்டுவதுதான்!'' கறுப்பசாமி தன் கறுத்த - கனத்த மீசையை நீவிவிட்டவாறு கூறினார்.

''அதற்கு என்ன வழி?''

''அது சற்றுக் கஷ்டமான காரியம்தான். இருந்தாலும் ஒரு தடவை அதைப் பிரயோகித்துப் பார்ப்பது என்று தீர்மானித்து விட்டேன்!'' கறுப்பசாமி தனது துணி மூட்டை யிலிருந்து ராசிப் பலகை மற்றும் சோழிகளை வெளியே எடுத்தார்.

சரியாக அதே நேரத்தில்தான் காளிச்சரண் தனது வீட்டுக்கு வந்தார்.

நாகவதியுடன் ஹரிகிருஷ்ணனைப் பார்த்தபோது அவர் மகிழ்ச்சி அடைந்தார்.

''நான் ஆளனுப்பாமலே நீங்கள் வந்ததும் நல்லது தான்!'' காளிச்சரண், ஹரியைப் பார்த்துப் பேசினார்.

''உங்களை மறுபடியும் பார்க்க வேண்டுமென்று தோன்றியது... கிளம்பி வந்துவிட்டேன்!'' என்றவன் அவர் இடுப்பை கவனித்தான்.

காளிச்சரண் இடுப்பில் அணிந்திருந்த காவி உடைக்குள் உடம்பின் வலப் புறம் உடம்போடு ஒட்டிப் பிடித்தபடி இருந்தது அந்தத் தாயத்து. பளபளக்கும் தாயத்தை ஹரி ஓரக் கண்ணால் கவனித்தான்.

தாயத்து கோக்கப்பட்டிருக்கும் அரைஞாண் கயிறான தங்கப்பாம்பு அவனைச் சங்கடப்படுத்தியது. மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அந்தத் தாயத்தை ஒரு போதும் தான் அங்கிருந்து எடுக்க முடியாது என்பது ஹரிக்குப் புரியவே செய்தது. ஆனால், நாகவதி உதவுவாள் என்ற நம்பிக்கை அவனுக்கு ஆறுதலளித்தது.

''நாளைக்கு அமாவாசை! சூரியன் மறைந்து ஆறரை நாழிகையில் நாம் ஹோமம் தொடங்க வேண்டும். நாகவதி, ஹோமத்துக்குத் தேவையான சமிது தயாராக இருக்கட்டும். மற்ற ஏற்பாடுகளையும் மறக்காதே!'' காளிச்சரண் கட்டளையிட்டார்.

''அதற்காக நான் ஏற்கெனவே இரண்டு மோகினிகளை அனுப்பி வைத்திருக்கிறேன்!'' நாகவதி கூறினாள்.

''ம்...ம்...'' என்று ஆமோதித்த அவர் ஹரிகிருஷ்ணனைப் பார்த்தார்.

காளிச்சரணது மனத்தில் வேறு ஒரு திட்டம் உருவாகி யிருந்தது. விஷ்ணுப்ரியா என்ற மோகினி, ஹரியின் காதலி என்பது அவருக்குத் தெரியும் எனவே, இப்போது அவன் தன்னை அணுகியிருப்பது, நிச்சயமாக நல்ல நோக்கத்துடன் அல்ல என்பது அவருக்கு விளங்கவே செய்தது.

எனவே, ஹரியின் வருகை அவனது சுயநலம் சார்ந்ததாகவே இருக்கும். அப்படித்தான் அவரால் நினைக்க முடிந்தது.

அன்று மாலை நேரத்தில் ஹரி குளிப்பதற்காக ஆற்றுக்குப் புறப்பட்டபோது, காளிச்சரண் நாகவதியை அழைத்தார்.

''நாகவதி... இப்படி வா!''

அவள் ஹோமம் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் மூழ்கியிருந்தாள்.

''என்னங்க?'' அவள் குரல் கொடுத்தாள்.

''இங்கே வா!''

அவள் வந்தபோது, காளிச்சரண் தன் இடுப்பிலிருந்த் தாயத்து கட்டிய அரைஞாண் கயிற்றை மெதுவாக வருடிக் கொண்டிருந்தார்.

''ஹரிகிருஷ்ணன் இங்கு எதற்காக வந்திருக்கிறார்?'' அவள் முகத்தை உற்றுப் பார்த்தபடி கேட்டார்.

நாகவதியின் மூளை, சட்டென்று புத்திசாலித்தனமாக வேலை செய்தது.

''எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், அவருக்கு என்னை மிகவும் பிடித்து விட்டதாகத்தான்!'' வெட்கத்துடன் கூறினாள்.

பெண்களின் சாகசத்தில் பிரம்மாவுக்கே சந்தேகம் ஏற்படாத நிலையில், காளிச்சரண் மட்டும் விதிவிலக்காக முடியுமா என்ன? அந்த பதிலை அவரும் நம்பவே செய்தார்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன்!''

சூழ்நிலைக்குத் தக்கபடி பதிலளித்ததில் நாகவதிக்கு, திருப்தி தோன்றியது.

''நல்லதுதான். இப்படிப்பட்ட ஒரு பிணைப்பினால் தான் அந்த மோகினி அவரைக் கட்டிப் போட்டு வைத்திருக் கிறாள். நீ கெட்டிக்காரியாக இருந்தால், அவரை நழுவ விடக் கூடாது. நீயும் வேண்டுமானால், ஆற்றங்கரைக்குப் போகலாம்!'' காளிச்சரண் அவளுக்கு அனுமதி அளித்தார். அனுமதி பெற்ற நாகவதி, ஹரி குளிக்கும் இடத்தைத் தேடி அடைந்தாள்.

''என்ன சொல்கிறார் உன் தலைவர்?'' ஹரி கேட்டான்.

''அவர் நம்புவது மாதிரி பதில் சொல்லியிருக்கிறேன். பயப்படும்படி எதுவுமில்லை!''

''நாளை இரவு அவர் ஹோமத்தைத் தொடங்குவதற்கு முன்பாக அந்தத் தாயத்தை...'' ஹரி ஞாபகப்படுத்தினான்.

''அதை ஞாபகத்திலேயே வைத்திருக்கிறேன். கவலைப்படாதீர்கள்!'' என்றவள், அவனுக்கு அருகே ஆற்றில் இறங்கிக் குளிக்கத் தொடங்கினாள்.

தெளிந்த நீரில் அவள் குளிக்கும்போது, ஹரி கரைப் பக்கம் பார்த்தான். அவள் அணிந்திருந்த காவி உடை கரையிலேயே இருந்தது. உடையற்ற அவள் உடல் கழுத்து வரை நீருள் மூழ்கியிருந்தது. அடர்ந்த அவளது தலைமுடி தண்ணீரில் பரவிக் கிடந்தது.

அவர்கள் இருவருக்கிடையே, சுமார் ஆறடி இடைவெளி இருந்தது. ஹரி நீருக்குள் மூழ்கினான்.

அவன் கண்ணைத் திறந்து நீருக்குள் பார்த்தான். நீரில் அவள் உடம்பு தெரியவில்லை. மாறாக அவளின் உடம்பு இருந்த பகுதி, வெற்றிடம்போல் அதனூடாக மறுபுறத்தின் அடிப்பரப்பி லிருந்த கூழாங்கற்கள் தெரிந்தன.

'ஏன் அவளின் உடல் தெரியவில்லை?' ஹரி யோசனையில் ஆழ்ந்தான்.

மேற்புறம் வந்த ஹரி, அவளை மீண்டும் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' நாகவதி கேட்டாள்.

''சும்மாதான்!'' ஹரி விட்டேத்தியாக பதிலளித்தான்.

''என் உடம்பைப் பார்க்க முயற்சி செய்தீர்கள் இல்லையா?'' கண்களில் குறும்புடன் கேட்டாள்.

''ஆமாம்!''

''நான் இதே இடத்தில்தான் நின்று கொண்டிருந்தேன். வேண்டுமானால் பாருங்கள்!'' என்றபடி தன் கால்களை நீர்ப்பரப்புக்கு மேல் உயர்த்திக் காட்டினாள்.

ஹரியால் அதை நம்ப முடியவில்லை!

குளித்து முடித்து ஹரி கரையேறினான்.

நாகவதி அவனைப் பின்தொடர்ந்தாள்.

காளிச்சரண் வராந்தாவில் தனியாக உட்கார்ந்திருந்தார். சிமிழுக்குள் நிறைத்த கஞ்சாவைப் புகைத்துக் கொண்டிருந்தார் அவர். கடுமையான அதன் மணம் அந்தப் பகுதி முழுவதிலும் பரவியிருந்தது.

அவர் அன்று இரவில் எதுவும் சாப்பிடவில்லை. வராந்தாவில் அப்படியே படுத்துக் கொண்டார்.

நாகவதி, ஹரிக்கு உணவு பரிமாறினாள்.

அவனுடன் அவளும் படுத்துக் கொண்டாள்.

நடுநிசிப் பறவையொன்று குரல் கொடுத்தபோது, ஹரி அவளை எழுப்பினான். அவளும் உறங்காமல் படுத்திருந்தாள்.

''நான் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்கிறேன்'' என்றவள் எழுந்தாள். சத்தம் எழுப்பாமல் நடந்து வெளியே வந்தாள். நின்றாள்.

காளிச்சரண் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். அவர் கட்டியிருந்த வேட்டி இடுப்புப் பகுதியில் சற்று விலகிக் கிடந்தது. அவரது குறட்டைச் சத்தம், சுவர்களில் மோதிக் கடுமையாக எதிரொலித்தது.

நாகவதி மெதுவாக வராந்தாவில் கால் எடுத்து வைத்தாள். அவரை நெருங்கியவள் அவர் இடுப்பின் மேற் புறம் தன் வலக் கையை நீட்டினாள். உடனே அவர் இடுப்பிலிருந்த அரைஞாண் கயிற்றின் இயல்பு மாறத் தொடங்கியது.

அது மெதுவாக அசையத் தொடங்கியது.

ஒரு முடிச்சு அவிழ்வதுபோல் தானாகவே அது நகர்ந்தது. கடைசியில் அது ஒரு தங்கநிற நாகமாக மாறியது!

## 23

**நா**கவதி, சுருள் அவிழும் நூல் போன்று தோன்றிய அந்தத் தங்க நிறப் பாம்பையே பார்த்தாள். அவள் கை நீட்டினாள். சட்டென்று பாம்பு படம் உயர்த்தியபடி அவளைக் கொத்த முயன்றது. நாகவதி உடனே கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். அந்த நாகம் தனது தலையைப் பின்புறமாகச் சாய்த்து காளிச்சரணின் உடலில் படுத்தது. அவள் மீண்டும் ஒரு முறை பரிசோதித்துப் பார்த்தாள். அப்போதும் பலன் முந்தைய தடவை போலவே இருந்தது!

சற்று நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவள், தன் கழுத்தில் கிடந்த வைடூரிய மாலையைக் கழற்றித் தரையில் எறிந்தாள்.

தரையில் விழுந்ததும் அந்த மாலை ஓர் உக்கிரமான நாகமாக மாறியது. அது மிகவும் மந்தமாக ஊர்ந்து காளிச்சரணின் இடுப்பிலிருந்த பாம்புடன் இணைந்தது. அவை இரண்டும் உடலால் இணையப் போகின்றன என்பதை உணர்ந்த நாகவதி மெதுவாக அவர் இடுப் பிலிருந்த தாயத்தின் மீது கை வைத்தாள்.

காளிச்சரணின் இடுப்பிலிருந்த பாம்பு தலையை உயர்த்தியது. ஆனால், நாகவதியின் மாலையிலிருந்து உதித்த பாம்பு, அந்தப் பாம்பின் படத்தை அழுத்தித் தாழ்த்தியது.

அந்த ஒரு கணத்தைப் பயன்படுத்தி, அவள் தாயத்தை மெதுவாக அவிழ்த்து எடுத்தாள்.

தங்கத் தகடால் செய்யப்பட்டிருந்த அந்தத் தாயத்தை எடுத்துக் கொண்டு அவள் மிகவும் விரைவாக ஹரிகிருஷ்ணனை நெருங்கினாள்.

அவன் அதைக் கையில் வாங்கினான். நேரத்தை வீணாக்காமல் அந்தத் தாயத்தின் வட்ட வடிவமான மூடியைத் திறந்து, அதற்குள் இருந்த மந்திரம் எழுதிய செப்புத் தகட்டை வெளியில் எடுத்தான். ஒரு தடவை வாசித்தான்.

ஆமாம், மோகினி ஹோம மந்திரமேதான்! மந்திரத்தின் முக்கியமான உச்சரிப்பான 'ஹம்' என்பதற்கு பதிலாக, அதை அழித்துவிட்டு 'ஹ்ரிம்' என்று எழுதினான்.

எல்லா 'ஹம்'மையும் மாற்றிவிட்டோமா என்று சரி பார்த்துவிட்டு, அந்தத் தகட்டைச் சுருட்டி தாயத்துக்குள் போட்டுப் பழையபடி மூடினான்.

நாகவதியிடம் கொடுத்தான். நாகவதி தாயத்துடன் காளிச்சரணை நெருங்கினாள். அப்போதும் அவர் கஞ்சாவின் போதையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

நாகவதி நிதானமாகத் தாயத்தை அவர் இடுப்பில் பழையபடி வைத்தாள். எல்லாம் முடிந்த பிறகு தனது வைடூரிய மாலைக்கு நேராகக் கையை நீட்டினாள். நாகம் ஊர்ந்தவாறே அவளை நெருங்கி மறுபடியும் மாலையாக மாறியது.

அதைக் கழுத்தில் போட்டுக் கொண்ட அவள் ஹரியிடம் வந்தாள்.

''எல்லாம் முடிந்து விட்டதா?'' ஹரி கேட்டான்.

''தற்சமயம் பிரச்னை எதுவும் இல்லையென்று சொல்லலாம்!''

''ஏன் தற்சமயத்துக்கு?''

''நமது இந்த ஆறுதலும் பாதுகாப்பும் தற்சமயத்துக்கு மட்டுமே. மந்திரம் பலிக்காவிட்டால், எதனால் என்று யோசிப்பார். யார் காரணம் என்று கண்டுபிடிக்க அவர் முயற்சி செய்வார்.''

''அப்படி எதுவும் நடக்குமா?''

''கண்டிப்பாக! மோகினி ஹோம மந்திரம் உச்சரித்தால், சாதகன் எந்த மோகினியைக் குறித்து ஹோமம் நடத்துகிறானோ, அந்த மோகினி ஹோமாக்னியில் விழுந்து வெண்ணீறு ஆகவேண்டும். அப்படி நடக்கவில்லை யென்றால் சந்தேகம் தோன்றுவது இயல்புதானே?''

அதைக் கேட்ட ஹரியின் நெற்றி சுளிவடைந்தது. அவன் முகத்திலிருந்த நிம்மதி சட்டென்று விலகியது.

''அப்படியானால், அதற்கு நாம் என்ன வகையான மாற்று ஏற்பாடு செய்யலாம்?'' ஹரி வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டான்.

''அதற்குப் பரிகாரம் என்ன என்பதை நாம் விரைவில் கண்டு பிடித்தே தீர வேண்டும்!'' நாகவதி பதிலளித்தாள்.

''என்ன நடந்தாலும் இன்று பொழுது விடிவதற்குள் அதற்கான பரிகாரத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இது தள்ளிப்போடும் சந்தர்ப்பம் அல்ல!'' என்றபடி ஹரி கட்டிலிலிருந்து எழுந்தான்.

''எங்கே போகிறீர்கள்?'' எழுந்து அவனைத் தடுத்து நிறுத்தியவாறு கேட்டாள்.

''நான் போய்விட்டு வருகிறேன். கண்டிப்பாகத் திரும்பி வருவேன். நான் வராமல் இருக்க முடியாது. விடிவதற்கு முன் நிச்சயம் இங்கு இருப்பேன். என்னை நம்பு!'' ஹரி, அவளை விலக்கி ஒதுக்கியவனாக நடக்கத் துவங்கினான்.

''அப்படியானால், நானும் உங்களுடன் வருகிறேன்.''

''அதுதான் தவறு! ஒரு வேளை சட்டென்று காளிச்சரண் விழித்துக் கொண்டால், முதலில் உன்னைத் தேடுவார்!''

ஹரி சொல்வதும் சரிதான் என்று நாகவதிக்குத் தோன்றியது.

''சரி, காத்திருக்கிறேன்... மறக்காமல் வந்து விடுங்கள்!''

ஹரி அங்கிருந்து புறப்பட்டான். நேராக ஆற்றங்கரைக்கு வந்தான். மறுகரையை அடையும்போது, அங்கு விஷ்ணுப்ரியா காத்திருப்பாள் என்று தோன்றியது.

ஆற்றின் தெளிந்த நீர்ப்பரப்பில் நிலவு அசைந்து கொண்டிருந்தது. கற்பாறைகள் நீரின் மேற்புறம் திட்டுத்திட்டாக நின்று கொண்டிருப்பது தெரிந்தது. நீர் மட்டமும் அதிகமாக இல்லை. இரைச்சல் இல்லாமல் அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்தது ஆறு.

ஹரி முதல் பாறை மீது காலை வைத்தான். இரண்டாவதன் மீது கால் வைக்க முயன்றபோது, யாரோ அங்கு நிற்பதாகத் தோன்றியது.

''யாரது?'' ஹரி கேட்டான்.

''ஹரிதானே? நான் ஸ்ரீதேவிக்குட்டி!''

அதைக் கேட்ட ஹரி ஒரு கணம் திடுக்கிட்டான். தான் எதிர்பாராத ஒரு நபரைச் சந்தித்ததில் மனம் வருந்தியது. தனக்கும் விஷ்ணுப்ரியாவுக்கும் இடையிலான உறவை இவள் தெரிந்து கொண்டால் ஒருவேளை ஆபத்து ஏதாவது ஏற்படுமோ? தெரிந்து விட்டால்... நிச்சயமாக ஆபத்துதான்! ஸ்ரீதேவி பழையபடி விஷ்ணுப்ரியாவை மந்திரத்தால் கட்டிப்போட்டு விடுவாளோ? என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.

''ஆமாம்... ஹரிதான்.''

''எங்கே போயிருந்தீர்கள்?''

''இங்கு பக்கத்தில் ஓரிடம் வரை போயிருந்தேன்.''

''நீங்கள் எதற்காக அந்தக் கரைக்குப் போனீர்கள்?''

''அங்கு, நான் ஒருவரைப் பார்க்க வேண்டியிருந்தது.''

''சரி இல்லத்துக்குத்தானே, வாருங்கள் போகலாம்!''

ஸ்ரீதேவியின் அழைப்பை அவனால் மறுக்க முடியவில்லை. மறுத்தால், அவள் சந்தேகப்படலாம். அது மட்டுமில்லாமல், ஸ்ரீதேவியுடன் கருத்து வேறுபாடு கொள்ளவும் அவன் மனம் இடம் தரவில்லை.

''நானும் இல்லத்துக்குத்தான் புறப்பட்டுக் கொண் டிருந்தேன்...'' ஹரி அவளிடம் ஒரு பொய்யைச் சொல்லி வைத்தான்.

ஸ்ரீதேவி நீட்டிய கையை, ஹரி பற்றிக் கொண்டான். அவர்கள் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

''நான் ஓரிடத்துக்குப் போக வேண்டி இருந்தது...'' நடந்து கொண்டே ஹரி கூறினான்.

''எதற்கும் ஒரு சந்தர்ப்பம் வாய்க்கும்... வாருங்கள்!'' ஸ்ரீதேவி வற்புறுத்திக் கூறினாள்.

இல்லத்துக்கு வந்து சேர்ந்த போதிலும் ஹரியின் மனம் எழிமலைக்காவு கோயிலையே சுற்றிச் சுற்றி வந்தது. அங்குதான் எங்காவது விஷ்ணுப்ரியா இருப்பாள். எப்படியும் அவளிடம் விவரத்தைக் கூற வேண்டும்.

வராந்தாவில் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் ஹரி, ஸ்ரீதேவியை கவனித்தான். சில நாட்களது பிரிவு அவளிடம் ஏமாற்றத்தை ஏற்படுத்தி யிருந்தது. வாட்டம் தெரிந்தது. அவள், அவனை நெருங்கினாள்.

''நீங்கள் எதைப் பற்றியோ யோசிக்கிறீர்கள்?''

''உண்மைதான்! நீங்கள் களைப்பாக இருக்கிறீர்கள்... சற்று நேரம் ஓய்வெடுங்கள். நான் உடனேயே திரும்பி வருகிறேன்!'' ஹரி எழுந்தான்.

''நீங்கள் எங்கே போகிறீர்கள்?'' ஸ்ரீதேவி தடுத்தவாறு அவனிடம் கேட்டாள்.

''கோயில் இருக்கும் இடம் வரை போய்விட்டு, உடனே வந்து விடுகிறேன்.''

''இப்போதா... இந்த நடு இரவிலா...''

''ஆமாம்...இந்த நேரத்தில் தேவியின் சைதன்னி யத்தை அந்த இடத்தில் என்னால் உணர முடியும்!''

''ஓகோ... அப்படியானால், நானும் உங்களுடன் வருகிறேன்!'' - அவளும் எழுந்தாள்.

ஹரி என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினான். இப்போது கோயிலுக்குப் போகாமல் இருக்கவும் முடியாது; போகவும் முடியாது என்ற தர்மசங்கடமான நிலை. 'போகாவிட்டால், ஸ்ரீதேவி சந்தேகப்படலாம். ஸ்ரீதேவி உடன் வந்தால் அங்கே அவள் விஷ்ணுப்ரியாவைச் சந்திக்க நேரும். என்ன செய்யலாம்?'

கடைசியில் பகவதி ஏதாவது ஒரு நல்ல வழி காட்டுவாள் என்ற நம்பிக்கையுடன் அவளுடன் நடக்கத்

தொடங்கினான். ரப்பர் தோட்டம் வழியாக அவர்கள் நடந்தனர்.

கோயிலின் அருகே வந்தபோது நிலவொளி, புதைந்திருந்த ஆலமரத்தின் தளிர் இலைகளை வருடுவது தெரிந்தது. வெள்ளி நூல்கள் காற்றில் மின்னி அசைவது போல் அவை பளபளத்தன.

இருவரும் அதை நெருங்கினர். சட்டென்று ஏதோ ஒன்று 'ஸ்ஸ்' என்ற சத்தத்துடன் பாய்ந்து வருவதை உணர்ந்த ஹரி, மின்னும் ஆலிலைகளுக்கு அருகில் நகர்ந்து சாஷ்டாங்கமாக விழுந்தான்.

''ஐயோ!'' என்ற அலறலுடன் ஸ்ரீதேவி எதிர்பாராமல் தரையில் விழுந்தாள்.

''என்ன... என்ன ஆயிற்று?'' என்றவனாக ஹரி துள்ளியெழுந்தான்.

ஸ்ரீதேவியின் மார்பில் சூலம் ஒன்று பாய்ந்திருந்தது. தரையில் மட்ட மல்லாக்க விழுந்திருந்தாள். ஹரி அவள் நெஞ்சிலிருந்து சூலத்தை உருவ முயன்றான். ஆனால், அதை யாரோ கீழ்ப்புறமிருந்து வலுவாகப் பிடித்திழுப்பது போல் அசையாமல் இருந்தது. அதே நேரம் ஹரி மற்றொரு காட்சியையும் கண்டான்.

ஸ்ரீதேவிக்குட்டியின் உடல் மெதுவாக மறைந்து கொண்டிருந்தது - காற்றில் கரைவது போல். பனி மூட்டம் ஒன்று சுற்றுப்புறத்துடன் ஒன்றிக் கலப்பது போல் அவளது ஸ்தூல உடம்பு மறைவதை, ஹரி வருத்தத்துடன் பார்த்துக் கொண்டே, நின்றான். கடைசியில் அவளின் நெஞ்சில் பாய்ந்த அந்தச் சூலம் மட்டுமே மீதமானது.

திடுமென்று மற்றொரு சத்தம் கேட்டது!

# 24

ஹரி, சத்தம் வந்த திசையில் பார்த்தான். ரப்பர் மரங்களுக்கு நடுவே நின்றிருந்த வேறு ஏதோ மரம் ஒன்று, வலுவாக ஆடியது. அகன்று பருத்து வளர்ந்திருக்கும் அதன் தண்டுப் பகுதியை யாரோ பிடித்துக் குலுக்குவது போல் தோன்றியது.

'அந்த மரத்தை நெருங்கிச் செல்!' என்று மனதுக்குள் ஏதோ ஒன்று உந்தியது. அவனுக்குக் கொஞ்சம் கூட பயம் தோன்றவில்லை. ஹரி நிதானமாகவும் கவனமாகவும் நடந்து மரத்தை நெருங்கினான். ஹரி வந்ததும் அந்த மரம் அமைதியடைந்து, அசைவற்று நின்றது!

''யாரது?'' ஹரி குரலைத் தாழ்த்தியபடி கேட்டான்.

''நான்தான்!'' பெண் குரல் ஒன்று கேட்டது. ஆனால், அதில் கம்பீரமும் மிடுக்கும் தெரிந்தன.

'யாராக இருக்கும்!' ஹரி வியப்பு நிரம்பிய விழிகளுடன் இருளை ஆவாஹித்து நிறுத்தியிருக்கும் அந்த மரத்தின் அடிப்பகுதியை கவனித்தான். எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் அந்த மரத்தின் தண்டுப் பகுதியில் அல்லது அதற்குள்... அல்லது அதன் சுற்றுப் புறத்தில் அஞ்ஞாதமான ஏதோ ஒரு சக்தி உறைந்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

''ஓம்... ஓம்... ஓம்!''

வர்ணனைக்கு அப்பாற்பட்ட அழகும் இனிமையும் சேர்ந்த அந்த சக்தி மிகுந்த வார்த்தை, அவன் காதுகளுக்குள் ஒலித்தது. உலகத் துவக்கத்தின் சூசகமான அந்த தெய்வீக

ஸ்வரம்... தேவதுந்துபிக்கு முன் புறப்படும் அந்த பிரணவ ஒலி!

''ஓம்... ஓம்... ஓம்...''

ஹரி கை கூப்பினான்.

அதோ நிற்கிறது. ஹரியின் கண்கள் அந்தக் காட்சியைக் கண்டதும் திவ்வியத்துவத்தில் திளைப்பதாக... இறைமை யின் நெருக்கம்! ''தேவி மகாமாயே...'' தன் இதயப்பகுதி சூனியமாகி விட்டதாக உணர்ந்தான். தன் இதயம் தேவியின் திருவடியில் அர்ப்பிதமாகி விட்டதாகவும் தோன்றியது.

நிமிடங்கள்... நிமிடங்கள்... எத்தனையோ நிமிடங்கள்! ஹரிகிருஷ்ணன் கற்சிலைபோல் அப்படியே அசைவற்று நின்று விட்டான்.

''ஹரி, உனது முயற்சிகள் வெற்றி பெறட்டும்!'' இசையே வார்த்தைகளானது போல், அவன் காதில் இன்பத்தேன் பாய்ந்தது. சற்று நேரத்துக்குள் எல்லாம் மறுபடி பழையது போல் ஆகிவிட்டன. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தனது லட்சியங்கள் ஒருபோதும் தோல்வியடையாது என்பது அவனுக்கு உறுதியானது. ஆனால், ஸ்ரீதேவிக் குட்டியை இல்லாமல் ஆக்கியது யார்... அல்லது எந்தச் சக்தி என்பது மட்டும் அவனுக்கு விளங்கவே இல்லை!

**அ**தே நேரம் கறுப்பசாமி குரோதத்தில் முதிர்ந்தவராக அவரது வீட்டின் முற்றப் பகுதியில் விசையாக உலாவிக் கொண்டிருந்தார்.

அவரது அன்புக்குரிய பறவையான கழுகு, கருகிப் போன துளசி மாடத்தின் மீது உட்கார்ந்திருந்தது.

''இது எப்படி நடந்தது?'' திரிவிக்கிரமன் கேட்டார்.

''மாந்திரீக வித்தை மூலம் அந்தச் சூலத்துக்கு நான் எவ்வளவு சக்தி ஏற்றியிருந்தேன் தெரியுமா உங்களுக்கு?

அதற்காக எவ்வளவு பாடுபட்டேன்? சே!'' கறுப்பசாமி புலம்பினார்.

நடந்தது இதுதான்:

அதிபயங்கரமான ஹோமம் ஒன்றின் மூலம் கறுப்பசாமி, வனதுர்காவை மகிழ்ச்சிப்படுத்தினார்.

கோழியின் ரத்தத்துடன் தன் கட்டை விரலிலிருந்தும் ரத்தத்தை ஹோம குண்டத்தில் சொரிந்தார். கடைசியாக, எல்லா வகையிலும் மகிழ்ந்த வனதுர்கா, மிகவும் சக்தி வாய்ந்த சூலம் ஒன்றை அவரிடம் கொடுத்தாள். அதை ஏவி விட்டால், ஏவிய வேலையைக் கண்டிப்பாக முடித்தே தீரும் என்ற உறுதியையும் வனதுர்கா வழங்கியிருந்தாள்.

'இம்முறை கண்டிப்பாக அவன் தப்பிக்க முடியாது' என்கிற திடமான முடிவுடன் கறுப்பசாமி அந்த சூலத்தை ஹரிகிருஷ்ணனை நோக்கி மந்திரம் மூலம் ஏவவும் செய்தார்.

அந்தரத்தில் அந்த சூலம் பாய்ந்தது... இல்லை பறந்தது!

அப்போது எழிமலைக்காவு பகவதி, ஹரி நிற்கும் இடத்துக்கு அருகில் எதிர்பாராமல் வெளிப்பட்டார்.

பாய்ந்து வரும் அந்தப் சூலம் யாரையாவது பழிவாங்காமல் - எவரின் உயிரையும் பறிக்காமல் திரும்பாது என்பதையும் தேவி அறிவார்.

வனதுர்கா வழங்கிய சூலத்தை அவமானப்படுத்தவும் கூடாது. அதே நேரம் ஹரிகிருஷ்ணனுக்கு அதனால் எந்த விதமான ஆபத்தும் ஏற்படக் கூடாது என்று நினைத்த தேவி, தன் கண்ணசைவால் சூலத்தின் திசையைச் சற்று மாற்றி விட்டார். அதனால் அந்த சூலம் பாய்ந்தது ஸ்ரீதேவிக் குட்டியின் மார்பில்!

வனதுர்காவின் சூலம் வாங்கி ஸ்ரீதேவியின் வாழ்க்கையை முடிக்க வேண்டும் என்பது விதியாக

இருந்ததால், பகவதி அதிலும் எந்த விதத் தவறும் காணவில்லை!

''நடக்க வேண்டியது நடந்துதானே தீரும்!'' பகவதி, புகையாக மறைந்த ஸ்ரீதேவிக்குட்டி கிடந்த இடத்தைப் பார்த்தவாறு கூறினார்.

ஹரி இதையெல்லாம் பார்த்து வியப்பின் வசப்பட்டு மெய்ம்மறந்து நின்றிருந்தபோது, அவனுக்கு அருகே துணியின் சலசலப்புக் கேட்டது. திரும்பினான். விஷ்ணு ப்ரியா நின்று கொண்டிருந்தாள்.

''நீ இங்கேயா இருந்தாய்?'' ஹரி கேட்டான்.

''ஆமாம், எல்லாவற்றையும் பார்க்கவும் செய்தேன்!''

''பகவதியைக் கூடவா?''

''ஆமாம்... இந்த அளவுக்கு தேஜோ மயமாக நான் ஒரு போதும் தேவியை சந்தித்ததே இல்லை!'' விஷ்ணுப்ரியா கூறினாள்.

''மேற்கொண்டு என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை...'' ஹரி கூறினான்.

''முதலில் இங்கிருந்து புறப்படுவோம். நாம் இந்த இடத்தில் தாமதிக்கக் கூடாது. அந்த மாந்திரீகன் நடந்ததை அறிந்திருப்பார். அவர் உடனடியாக அடுத்த நடவடிக்கையைத் தொடங்குவதற்குள் நாம் இங்கிருந்து புறப்பட்டு விட வேண்டும்.''

அதுவும் சரிதான் என்று ஹரிக்குத் தோன்றியது. 'இந்த அளவுக்கு அற்புதமான ஏவல் ஒன்றைச் செய்தும் தான் தோல்வியடைந்து விட்டோமே' என்ற ஆற்றாமை அவரைச் சும்மா இருக்க விடாது. எனவே, நிச்சயம் அவர் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளத் தொடங்கியிருப்பார்!

அவர்கள் இருவரும் பனங்காட்டு இல்லத்துக்குத் திரும்பினர். ஸ்ரீதேவிக்குட்டி இல்லாத அந்த இல்லம்

வெறுமையானதாகத் தோன்றியது. என்னதான் இருந்தாலும் ஸ்ரீதேவிக்கு நேர்ந்த விபத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அவன் மனம் வருந்தியது.

'ஒருவேளை அப்படிப்பட்ட மரணம்தான் அவளது விதியாகக்கூட இருக்கலாம்!' என்ற முடிவுக்கு வந்தவனாகச் சற்று ஆறுதலடைந்தான்.

''என்ன யோசிக்கிறீர்கள்?'' விஷ்ணுப்ரியா கேட்டாள்.

''ஸ்ரீதேவியைப் பற்றித்தான்...''

''அதில் வருத்தப்பட எதுவுமில்லை!''

''ஏன், உன்னைச் சிறை வைத்ததால் இப்படிப் பேசுகிறாயா?''

''இல்லை. ஒருபோதும் நான் அப்படி நினைக்க வில்லை. அதுதான் அவரது ஜாதக விதி. விதியைத் தடுக்க எவரால் முடியும்?''

''பிறகு?''

''அவர் உயிருடன் இருந்தால், உங்களது லட்சியம் நிறைவேறியிருக்காது!''

''உளறாதே! அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு?''

''அவர் தனது சொந்த விஷயத்தைச் சீராக்கிக் கொள்ளத்தான் பார்ப்பார். எழிமலைக்காவு கோயிலைப் புனருத்தாரணம் செய்வதில் அவருக்கு எந்த விதமான ஈடுபாடும் இருக்காது.''

''பிறகு?''

''அந்தக் கோயிலில் மறைந்திருக்கும் மாந்திரீகச் சுவடிகள் மட்டும் கிடைத்து விட்டால், அதன் உதவியால் எத்தனையோ யுகயுகாந்திரங்கள் வாழ முடியும்!''

''உண்மையாகவா? ஆனால், எனக்கு அதெல்லாம் தேவையே இல்லை!''

''அது உங்களுக்குத் தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால், தீயவர்கள் தமது ஆயுளை நீட்டித்துக் கொண்டு சுகமாக வாழவே நினைப்பார்கள்.''

''சரி... அதெல்லாம் போகட்டும். நான் வந்த காரியத்தை இது வரை உன்னிடம் சொல்லவில்லையே! அங்கே காளிச்சரண் உன்னை ஹோமிக்கப் போகிறார். நான் நாகவதியின் உதவியுடன் அந்தத் தாயத்திலுள்ள மந்திரத்தைத் திருத்தி விட்டேன்.''

''நல்ல வேலை செய்தீர்கள். தற்காலிகமாக நான் தப்பிக்க அது உதவும். காளிச்சரணுக்குச் சந்தேகம் தோன்றினால், அவர் நிச்சயமாக மாற்று வழியைப் பற்றி யோசிப்பார்.''

''அதைக் கேட்கத்தான் வந்திருக்கிறேன். நாம் அதற்கு என்ன செய்யலாம்?''

''அதற்கு இன்னும் காலம் இருக்கிறது.''

விஷ்ணுப்ரியா சற்றுச் சமாதானமடைந்தவளாகக் கூறினாள்.

ஹரி அன்றைய இரவை அங்கேயே கழிக்கத் தீர்மானித்தான்.

**அ**தே இரவில் கறுப்பசாமி தனது அன்புப் பறவை கழுகை காளிச்சரணது வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அங்கு என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்பினார்.

தனக்கு எதிராக மற்றொரு மனிதனும் செயல்படத் தொடங்கியிருப்பதை அறிந்தபோது, கறுப்பசாமியின் தீவிரம் அதிகரித்தது. அது மட்டுமன்றி, இதுவரை தான் நம்பிக் கொண்டிருந்த புதையல் மட்டுமல்ல, அற்புதமான ஸித்திகளை வழங்கும் ஓலைச்சுவடி உட்பட வேறு

எவ்வளவோ, விஷயங்களும் அந்தக் கோயிலுக்குள் உள்ளன என்றும் விளங்கியது அவருக்கு.

கழுகு, காளிச்சரணின் இருப்பிடத்தை அடைந்தது. அந்த வீட்டின் நடு முற்றத்திலிருந்த துளசி மாடத்தில் அமர்ந்தது. உட்புறத்தில் காளிச்சரண் உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. கழுகு அவரையே பார்த்தவாறு அமர்ந்திருந்தது.

காளிச்சரண் ஒரு தடவை புரண்டு படுத்தார். அப்போது அவர் இடுப்பில் ஏதோ ஒன்று பளபளப்பதைக் கழுகு கவனித்தது. அவரின் இடுப்பைச் சுற்றியிருந்த காவித்துணி சற்று விலகியிருந்தது.

கழுகு ஊன்றி கவனித்தபோது, அந்தப் பளபளப்பு மெதுவாக அசையத் தொடங்கியது.

காளிச்சரணின் இடுப்பிலிருந்த அரைஞாண் கயிறான நாகம், கழுகின் பார்வையால் பயந்தது. எனவே, எப்படியாவது அதன் பார்வையிலிருந்து மறைய விரும்பியது.

நாகம் அசையத் தொடங்கியது. கண்ணுக்குத் தெரியாத இரண்டு கைகள், அவர் இடுப்பிலிருந்த நாகத்தை அவிழ்த்து எடுப்பதுபோல் தானாகவே அது அவிழத் தொடங்கியது.

கழுகைப் பொறுத்தவரை, அது ஓர் அதிசயமான காட்சியாக இருந்தது.

கழுகு மெதுவாகப் பறந்து உட்புற அறைக்கு வந்தது.

காளிச்சரணின் இடுப்பிலிருந்து முற்றிலுமாக அவிழ்ந்து நாகம் தரையில் விழுந்தபோது, அதையே கவனித்த கழுகின் கண்களில் அதனோடு இணைந்திருந்த தாயத்து தட்டுப்பட்டது. அபூர்வமான அந்தப் பொருளைப் பார்த்ததும் சட்டென்று பாய்ந்து வந்த கழுகு அந்த நாகத்தைத் தனது அலகால் ஒரே கொத்தாகக் கொத்தியெடுத்தது!

# 25

கழுகின் கொத்து சரியாக நாகத்தின் நடு உடலில் பட்டதால், அது வேதனையால் நெளிந்தது. திடுமென்று காளிச்சரண் கண் விழித்தார். கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தார். தனது அரைஞாண் கயிறான நாகத்தைத் தன் கண் முன்பாகவே கழுகு ஒன்று அலகால் குத்தி இழுக்கிறது. அதைப் பார்த்தவுடன் அவருக்குத் தோன்றியது வியப்புதான்! இந்தக் கழுகு எப்படி இங்கு வந்தது? இது யாருடையது? முதல் பார்வையிலேயே இது ஒரு சாதாரணக் கழுகல்ல என்பது அவருக்கு விளங்கியது.

கழுகுக்கு நேராகத் தன் கையை நீட்டினார் காளிச்சரண்.

கழுகு சட்டென்று நகர்ந்து விலகியது.

காளிச்சரண் சிரித்துக் கொண்டார்.

பிறகு மீண்டும் கையை நீட்டினார்.

அதிசயம்!

அவரின் கை விரல்கள் நீண்டு வந்தன. விரலிலிருந்த நகங்களும் அத்துடன் நீண்டன. கழுகின் கால்விரல் நகங்களைப் போலவே, காளிச்சரணின் கைவிரல் நகங்களும் நீண்டு வளர்ந்தன. அவரின் கைப்பகுதி கழுகை நெருங்கிய போது, கை மேலும் மேலும் பெரிதானது. அந்தக் கையின் அருகே, கழுகு ஒரு கோழிக்குஞ்சுபோல் தென்பட்டது.

காளிச்சரண் அதைக் கையில் எடுத்தார். கழுகு அவர் உள்ளங்கைக்குள் அடங்கியது.

''உனது பெயர் என்ன?'' காளிச்சரண் கேட்டார்.

''கருடன்...''

''பரவாயில்லையே. எதிர்மாறான பெயர்தான். இருந்தாலும் உனக்குப் பொருத்தம்தான். நீ எவரது ஊழியன்?''

''மாந்திரீகர் கறுப்பசாமி!''

''ஓகோ! அப்படியொரு மாந்திரீகர் இந்தப் பகுதியில் இருக்கிறாரா?''

கழுகு தலையாட்டி 'ஆம்' என்றது.

''எதற்காக அவர் உன்னை இங்கு அனுப்பி வைத்தார்?''

''இங்கு நடக்கும் செய்திகளை அறிந்து வருவதற்காக...''

''அதாவது என்னை எதிர்ப்பதற்காகவா?'' என்று கேட்ட காளிச்சரண் தனது கைப்பிடியைச் சற்று இறுக்கினார், விளையாட்டுக்காக!

''ஐயோ... அதெல்லாம் இல்லை. இந்த இடத்துச் செய்திகளை அறிந்து வருவதற்கு மட்டும்தான்!''

''அதற்கு மட்டும்தானா?''

''அதற்கு மட்டும்தான்...''

''அப்படியென்றால், நானே நேரடியாக அங்கு வரவா... அல்லது கறுப்பசாமி இங்கு வருவாரா?''

''நீங்கள் விரும்பியபடி எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். இப்போது என்னை இங்கிருந்து கிளம்ப அனுமதித்தால், நான் போய் செய்தியைச் சொல்லிவிட்டு வருகிறேன்.''

''அப்படியானால், முடிந்தால் அவரிடம் இங்கு வரச் சொல்!''

''அப்படியே!''

காளிச்சரண் தனது பிடியைத் தளர்த்தினார். சுதந்திர மடைந்த கழுகு மிகவும் விரைவாக உயரப் பறந்து பார்வை யிலிருந்து மறைந்தது.

சில நிமிடங்களுக்குள் கழுகு கறுப்பசாமியை நெருங்கி, அவரின் கைத்தண்டில் அமர்ந்து கொண்டது.

''என்ன சேதி?''

''ஆள் பெரிய மாந்திரீகர்தான். கையை நீட்டி என்னை ஒரு கோழிக்குஞ்சு மாதிரி அமுக்கிப் பிடித்துக் கொண்டார். அப்போது அவரின் விரல்கள் மிகவும் பெரிதாக மாறின.''

''வேறு என்ன சொன்னார்?''

''அவர் இங்கு வருவதானாலும் வருகிறாராம்; அல்லது நீங்கள் அங்கு வேண்டுமானாலும் போகலாம். உங்கள் சௌகரியப்படி செய்யலாம்.''

''அப்படிச் சொன்னாரா என்ன?''

''ஆமாம்!''

''சரி... நானே போகிறேன். அதுதான் நல்லது.''

'அவர் இங்கு வந்தால் திரிவிக்கிரமனுக்கு விஷயம் தெரிந்துவிடும். அது தனது பெயருக்கு ஊறு விளைவிக்கலாம்!'

''நேரம் ஏதாவது குறிப்பிட்டாரா?'' கறுப்பசாமி சற்று யோசித்த பிறகு கேட்டார்.

''இல்லை. எப்போது வேண்டுமானாலும் போகலாம்.''

''அப்படியானால், பொழுது விடிந்த பிறகு குளித்து விட்டுப் போக வேண்டியதுதான்!''

மறுநாள் காலை கறுப்பசாமி தென்புறமாக ஓடும் ஆற்றுப் பக்கம் வந்தார்.

சற்றுத் தொலைவில் வலப் புறத்தில் மிகவும் பழைய வீடு ஒன்று தென்பட்டது.

தெரு வாசலில் நின்றபடி உட்புறம் பார்த்தார்.

உள்ளே எவரும் இருப்பதாகத் தெரியவில்லை.

''இந்த இடம் எது?'' கறுப்பசாமி தனது செல்லப் பறவையிடம் கேட்டார்.

''இங்குதான் அவர் குடியிருக்கிறார்.''

''யார்?''

''ஹரிகிருஷ்ணன்!''

''ஓகோ!'' என்றவர், உட்புறமாக எடுத்து வைக்கப் போன காலை சட்டென்று பின்னுக்கு இழுத்தார். திரும்பி ஆற்றை நோக்கி நடந்தார்.

ஆற்றில் தண்ணீர் நிறைய இருந்தது. ஆனால், கறுப்ப சாமி அதற்கெல்லாம் அசருபவராகத் தெரியவில்லை.

அணை போட்டுத் தடுத்த வெள்ளத்தை, திடுமென்று திறந்து விட்டது போலிருந்தது நீரின் வேகம்.

கழுகிடம் பறந்து செல்லுமாறு சொல்லிவிட்டு துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு ஆற்றில் இறங்கினார் கறுப்பசாமி.

சரியான வேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தது ஆறு.

யானையே கால் இடறுகிற மாதிரியான வெள்ளத்தின் பாய்ச்சல். ஒரு தடவை மூழ்கி எழுந்தபோது மூன்றடி தூரம் தள்ளப்பட்டிருந்தார். கறுப்பசாமிக்குக் கோபம் வந்தது.

ஒரு கை தண்ணீரை எடுத்துக் கரைப் பக்கமாக விசிறினார்.

உடனே மூன்றடிச் சுற்றளவுக்கு நீர் அசையாமல் தளம் கட்டி நின்றது. பாய்ந்து வந்த வெள்ளமும், மிதந்து வந்த மரக் கொம்புகளும் அந்த வட்டப் பரப்பைக் சுற்றிக் கொண்டு சென்றன.

அதைப் பார்த்த கழுகு தலையாட்டியது.

கறுப்பசாமி உடம்பைத் தேய்த்துக் குளித்தார்.

ஆற்றிலிருந்து அவர் கரையேறியபோது ஆற்றின் மொத்த நீரோட்டமும் அசைவற்றுப் போயிருந்தது.

கறுப்பசாமி ஒரு தடவை சிரித்துக் கொண்டார். அந்தச் சிரிப்பின் பொருள், தன்னை யாரோ சோதித்துப் பார்த்திருக்கிறார்களே என்பதால் எழுந்த பெருமிதம்தான்!

தலையை நன்றாகத் துவட்டி விட்டு நிமிர்ந்தபோது, மறு கரையில் தன்னைப் போலவே ஜடாதாரியாக நிற்கிறார் மற்றொரு நபர்.

காளிச்சரண்!

''சின்னதாக ஒரு வேடிக்கை காட்டினீர்கள்... அப்படித் தானே!'' கறுப்பசாமி கேட்டார்.

''நீங்களும்தானே?'' காளிச்சரண் திருப்பிக் கேட்டார்.

ஆற்றில் உயர்ந்து நிற்கும் பாறாங்கல்லில் கால் வைத்தவுடன், எதிர்க்கரையிலிருந்து நீண்டு வந்தது காளிச்சரணின் வலக் கை.

கறுப்பசாமி கொஞ்சமும் தயங்கவில்லை.

அவரும் கை நீட்டினார்.

ஆற்றின் நடுவில் இரண்டு கைகளும் ஒன்றையொன்று பற்றிப் பின்னிக் கொண்டன.

இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களல்ல என்பதுதான் அந்தச் சிரிப்பின் பொருள்!

மறுகரைக்கு வந்த கறுப்பசாமியை, காளிச்சரண் தனது இருப்பிடத்துக்கு அழைத்துப் போனார்.

அந்தப் பழைய காலக் கட்டடம் கறுப்பசாமிக்கு மிகவும் பிடித்துப் போனது.

''இது யாருடையது?'' கறுப்பசாமி கேட்டார்.

''இது ஒரு காலத்தில் இந்தப் பகுதியின் ராஜ குடும்பம் வசித்த இடம். மிச்சம் மீதியுள்ள பொருள்களிலிருந்து நான், அவர்களில் ஒரு சிலரது பெயரைத் தெரிந்து கொள்ள முடிந்தது.''

கறுப்பசாமி யோசனையில் ஆழ்ந்தார்.

''தளத்தில் (குடும்பப் பெயர்) இரயிம்மன் பாஸ்கர வர்மாவின் குடும்பத்தாருடைய்துதானே?''

அதைக் கேட்ட காளிச்சரண் வியப்பினால் மலைத்தே போனார்.

'இவ்வளவு துல்லியமாக இதை எப்படி இவர் கண்டு பிடித்தார்?' காளிச்சரண் யோசித்தார்.

''இதெல்லாம் எனக்குத் தெரிந்த இடம்தான். நான் மறந்து போயிருந்தேன். ஆயிரம் வயதான அரண்மனை இது. ஒரு காலத்தில் மிகவும் பரபரப்பாகவும் பிரதாபத்துடனும் விளங்கிய இடம். இதன் பக்கத்திலேயே ஒரு சிவன் கோயில் இருக்க வேண்டுமே?'' கறுப்பசாமி கேட்டார்.

''சிவன் கோயிலா? அப்படி ஒன்று இருப்பதாகத் தெரியவில்லையே!''

''இருந்தது. இங்குள்ள சிவனின் சக்தி அபரிமித மானது. அந்தச் சக்தி, தற்போதும் இங்குதான் உள்ளது!'' கறுப்பசாமி உறுதியுடன் கூறினார்.

''உண்மையாகவா? அப்படியானால் அது தாண்டவம் ஆடும் மூர்த்தமாக இருக்க வேண்டுமே...'' காளிச்சரண் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார்.

''அதிகம் யோசிக்காமலேயே எனக்குப் புரிந்து விட்டது!'' என்ற கறுப்பசாமி தனது பறவையைப் பறந்து செல்ல அனுமதித்தார்.

கழுகு அவரிடமிருந்து பறந்து சென்று, சற்றுத் தொலைவில் உள்ள ஒரு பாலை மரத்தின் கிளையில் அமர்ந்தது.

''நாம் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அது கூட வேடிக்கைதான்!'' காளிச்சரண் கூறினார்.

''எல்லாவற்றுக்கும் ஒரு காரணம் வேண்டாமா?'' கறுப்பசாமி கேட்டார்.

''நான் ஒரு ஹோமம் நடத்துவதற்கான ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் வந்து சேர்ந்ததும் ஒரு விதத்தில் நல்லதுதான்'' காளிச்சரண் ஹோம குண்டத்துக்கு அருகே குவிந்திருந்த சமிதுகளைச் சுட்டிக்காட்டியபடி கூறினார்.

''ஏதாவது குறிப்பிட்ட காரணத்துக்கான ஹோமமா?'' கறுப்பசாமி விசாரித்தார்.

''நான் ஒரு மோகினியை ஹோமிக்க வேண்டியுள்ளது. அதை நடத்திவிட்டால், எழிமலைக்காவு கோயிலுக்குச் செல்லும் பூமியின் வாசல் தட்டுப்படும்!''

''உண்மையாகவா? அப்படியானால் நம் இருவரது லட்சியமும் ஒன்றுதான்!''

''அது எனக்கும் தெரியும். நாம் இருவரும் ஒற்றுமையாக இருந்தால் அதைச் சுலபமாகச் சாதிக்கலாம்.''

''அப்படியானால், இப்போது உங்களைச் சந்திக்க நேர்ந்ததற்கு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.''

''நமக்கு உதவுவதற்கு ஒரு சீடனும் கிடைத்திருக்கிறான்.''

''யார் அந்தச் சீடன்?''

''ஹரிகிருஷ்ணன்.''

''ஐயோ... அவனா? அவன் நமது எதிராளி...'' கறுப்பசாமி எச்சரித்தார்.

''அவன் ஒரு பொருட்டே அல்ல; அவனுக்கு நாம் பயப்படவும் தேவையில்லை. நமது விஷயத்தில் அவன் குறுக்கே வர மாட்டான் என்றே தோன்றுகிறது. அப்படியே வந்தால், அது அவனது அழிவுக் காலம் என்பதைத் தவிர வேறென்ன சொல்ல?''

''ஹோமத்தை எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள்?''

''இன்றைக்குச் சாயந்திரம்! நீங்களும் வந்து விட்டீர்கள். அந்தச் சீடனும் வருவான். பார்க்கலாமே!''

'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்று கறுப்பசாமி மனத்தில் கணக்கிட்டார். கூடவே, தாண்டவம் நடந்த போது, வெளிப்பட்ட பயங்கரமான சக்தி வாய்ந்த சிவனையும் மனத்தில் நினைத்துக் கொண்டார்.

'சிவனின் கையிலுள்ள திரிசூலம்!' கறுப்பசாமி சிரித்துக் கொண்டார்.

## 26

''அந்தக் கோயிலிலுள்ள சிலைகளுக்கு ஒரு சிறப்பு உண்டு!'' - காளிச்சரணது அறைவாசலை ஒட்டியிருந்த கட்டிலில் சாத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய சூலத்தை, கறுப்பசாமி கையில் எடுத்தபடி பேசினார்.

காவடி தூக்கும் பக்தர்கள் தங்களின் இரு புறக் கன்னங்களையும் துளைத்துப் பொருத்திக் கொள்ளும் சூலம் போல இருந்தது அது.

''மிகுந்த கோபக்காரரான சிவன் தனது உக்கிர நடனமான தாண்டவத்தை ஆரம்பித்தார். அந்தத் தாண்டவம் உச்ச கட்டத்தை அடைந்தால், அவரின் ஜடாமுடியின் முனைகள் பூமியில் பட்டால், பூமி அழிந்து போகும்

என்பதால் உலக மாதாவான பார்வதி, அவர் காலில் விழுந்து மன்றாடும்போது சிவன் சூலத்தை ஓங்கும் வடிவத்தைத்தான் அங்கு பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்!''

கறுப்பசாமியின் கண்களில் அந்த உருவம் விநாடிக்கு விநாடி தெளிவடைந்து வந்தது.

உக்கிர ரூபியான சிவன்!

மகேஸ்வரனின் கையிலுள்ள திரிசூலம்!

எப்படிப்பட்ட பொருளையும் தகர்த்துவிடும் வல்லமையுள்ள சூலம்!

''அந்த விக்கிரம் சுயம்பு என்று சுவடியொன்றில் படித்திருக்கிறேன்!'' - காளிச்சரண் இடை புகுந்தார்.

''போதும்... நிறுத்துங்கள்!'' - கறுப்பசாமி தன்னையும் மீறிக் கூவினார்.

கறுப்பசாமியின் இந்தத் திடீர் மாற்றம் காளிச்சரணை ஆச்சரியப்பட வைத்தது.

''எதற்காகக் கோபிக்கிறீர்கள்'' - காளிச்சரண் கேட்டார்.

''சட்டென்று உணர்ச்சிவசப்பட்டு விட்டதால் என்னையும் மீறிப் பேசிவிட்டேன்!'' - கறுப்பசாமி கூறினார்: ''சரி, இப்போது எங்கே இருக்கிறது அந்தக் கோயில்?''

''உங்களுக்குக் காட்டுகிறேன். முதலில் இன்று மாலையில் தொடங்கும் ஹோமம் நல்லபடியாக முடியட்டும். ஹோமம் வெற்றி பெறும்வரை என்னால் நிம்மதியாக இருக்க முடியாது!'' காளிச்சரண் அறிவித்தார்.

''சரி, ஹோமம் முடிந்த பிறகே பார்த்துக் கொள்ளலாம். நிறைய நேரம் இருக்கிறதே!''

மாலை நேரத்தில் ஹரிகிருஷ்ணனும் வந்து சேர்ந்தான்.

அப்போது நாகவதி மட்டும் அங்கு இருந்தாள். காளிச்சரணும், கறுப்பசாமியும் குளிக்கச் சென்றிருந்தனர்.

''புதிய செய்திகள் நிறைய உண்டு!'' நாகவதி, ஹரியை வரவேற்றபடி பேசினாள்.

''அவற்றை நான் தெரிந்து கொள்ளலாமா?'' ஹரி கேட்டான்.

கறுப்பசாமி வந்ததையும் அந்தப் பகுதியிலுள்ள சிவன் கோயிலைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டதையும் நாகவதி அவனிடம் கூறினாள்.

''எங்கே இருக்கிறது அந்தக் கோயில்?'' - ஹரி விசாரித்தான். அவன் குரலில் ஆர்வம் அதிகம் இருந்தது.

''இங்கிருந்து நேர்கிழக்கில் ஐந்தாவது மைலில் உள்ளது. இப்போது கோயிலின் கருவறை மட்டுமே மீதமுள்ளது.''

''அதனால் என்ன?''

''கோயிலுக்குள் நுழைய முடியாது.''

''ஏன்?''

''அதைச் சுற்றி நான்கு புறமும் மிகவும் பெரிய நான்கு ஆலமரங்கள் உள்ளன. அவற்றின் பிரமாண்டமான விழுதுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து கோயிலை, வெளியுலகிலிருந்து மறைத்துள்ளன.''

''ஆலமரத்தின் இடைவெளி வழியாக உள்ளே போக முடியாதா?''

''இல்லை. அங்கு மரமும் விழுதுகளும் நெருங்கி வளர்ந்திருக்கிறது. வெட்டி வழி ஏற்படுத்துவது அவ்வளவு சுலபமல்ல!''

''பிறகு எதற்காக அவர்கள் அந்தக் கோயிலைப் பற்றி பேசிக் கொண்டார்கள்!''

''அவர்கள் மாயாஜாலம் தெரிந்தவர்கள் அல்லவா?''

''அதாவது அந்த மாயாஜாலத்தை என்னால் செய்ய முடியாது என்பதுதானே உனது எண்ணம்?''

''ஆமாம்... நிச்சயமாக உங்களால் இந்தச் சந்தர்ப்பத்தில் அப்படிச் செய்ய முடியாது...'' - நாகவதி பேசிக் கொண்டிருக்கும்போதே காளிச்சரணும், கறுப்ப சாமியும் வீட்டை நெருங்கி விட்டதை அறிந்து வீட்டுக்குள் சென்றாள்.

''ஹரிகிருஷ்ணன், வந்துவிட்டீர்களா?'' காளிச்சரண் கேட்டார்.

''இப்போதுதான் வந்தேன். நீங்களும் வந்து விட்டீர்கள்!'' - ஹரி பதிலளித்தான்.

கறுப்பசாமி தன் எதிராளியை கவனமுடன் ஏற இறங்கப் பார்த்தார். ஹரியும் அவரைக் கூர்ந்து கவனிக்கவே செய்தான். இருவரின் கண்களும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன.

'இந்த இடத்தில் இவனுடன் எதையும் பேச வேண்டாம்!' என்று கறுப்பசாமி நினைத்தார். ஹரியும் அதையே நினைத்தான்.

ஹோமத்துக்கு எல்லாம் தயாரானது. முதலில் சமிதுகளை ஹோமகுண்டத்தில் அடுக்கினார் காளிச்சரண்.

மந்திரங்களை உச்சரித்தபடி ஹோமத்தைத் தொடங்கினார் அவர். சற்று நேரம் கழித்து காளிச்சரண் தன் இடுப்பிலிருந்து தாயத்தை அவிழ்த்து எடுத்தார்.

தகட்டைப் பிரித்தார்:

''ஓம் யக்ஷிஸ்வாஹா
ஓம்... ஹ்ரீம்... ஹ்ரீம்...ஓம்!''

மந்திரங்கள் ஓலைச் சுவடியில் தெளிவாகத் தெரியவில்லை.

''என்ன நடந்திருக்கிறது என்றே தெரிய வில்லையே...'' - காளிச்சரண் பரபரப்படைந்தார்.

இது வரை இப்படியோர் அனுபவம் அவருக்கு ஏற்பட்டதில்லை. ஒரு போதும் அவரிடம் மந்திர உச்சரிப்புத் தவறியதே இல்லை. இப்போது இது என்ன புதுக்குழப்பம்?

நெய்யை ஹோம குண்டத்துள் சொரிந்தபடி மீண்டும் மந்திரங்களை உருவிட்டார்.

இல்லை... மந்திரம் வேலை செய்யவில்லை!

எங்கேயோ ஏதோவொரு தவறு நடந்திருக்கிறது.

காளிச்சரண் கோபத்துடன் தன் கையிலிருந்த செப்புக் தகட்டை ஹோமகுண்டத்தின் நெருப்பில் வீசி எறிந்தார்.

''பூம்'' என்ற சத்தத்துடன் அது தீக்கொழுந்துகளால் தழுவப்பட்டுக் கனலில் பதிந்தது. அவர்கள் கண் எதிரிலேயே அந்தத் தகடு நீலநிற ஜுவாலையுடன் எரியத் தொடங்கியது.

''அதிலிருந்த மந்திரம் தவறானது!'' கறுப்பசாமி கூறினார்.

''ஆமாம். அதனால்தான் அந்தக் தகட்டை நெருப்பில் போட்டேன். இல்லாவிட்டால் எப்படிப்பட்ட நெருப்பிலும் அந்தத் தகடு உருமாறாமல் அப்படியே கிடந்திருக்கும்!''

''மேற்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?''

''மோகினியை ஹோமிப்பதற்கு வேறு சில வழிகளும் உள்ளன. முதலில் நாம் அந்தக் கோயிலுக்குள் நுழைய வேண்டும்!'' கறுப்பசாமி அங்குள்ள சிலையை மனத்தில் நினைத்தவராகக் கூறினார்.

''அதற்கான முதல் கட்டம்தான் இப்போது தோல்வி யடைந்திருப்பது?''

''புரியவில்லையே?''

''இதோ... இந்தச் சிலையில்லையா?'' காளிச்சரண், ஹோமகுண்டத்துக்கு முன்னால் சிவப்பு நிறப் பட்டுத் துணியால் பொதியப்பட்டிருந்த சிலை ஒன்றை கறுப்பசாமியிடம் சுட்டிக் காட்டினார்.

அதற்கு ஒன்றரையடி உயரம் இருந்தது. ஆனால், பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாகக் காட்சியளித்தது.

கழுத்தில் மண்டையோடும் கை - கால் எலும்புகளும் கோத்த மாலை. கை - கால் எலும்புகளால் ஆன ஆடை இடுப்பில். நடுநெற்றியில் ஒரு கண். ஆறு கைகள். இவற்றைத்தான் கறுப்பசாமி கவனித்தார்.

''இந்த தேவதைகளுக்கு முன்பாக ஒரு மோகினியை ஹோமித்தால் எல்லாவற்றுக்குமான வழி பிறந்துவிடும். இந்த தேவி மட்டும் நமக்கு அருள் புரிந்து விட்டால், ஆல மரத்தின் ஊடாகவே வழி தெரியும்!'' - பேசியவாறே காளிச்சரண் நடுநடுவே ஹரிகிருஷ்ணனை கவனித்தார். அதன் பெருள் ஹரிக்குப் புரியவும் செய்தது.

விஷ்ணுப்ரியாவைப் பற்றித்தான் ஹரி நினைத்தான். 'ஹோமம் தோல்வியடைந்ததில் தனக்கும் பங்கு உண்டு என்பதை காளிச்சரண் இதற்குள் புரிந்து கொண்டிருப்பார்!' ஹரி நினைத்தான்.

''எனது மந்திரத்துக்கு என்னவோ ஒரு தடை ஏற்பட்டுள்ளது. நான் இன்னும் ஒரு தடவை முயற்சி செய்யப் போகிறேன்!'' காளிச்சரண் கூறினார்.

இவ்வளவுக்கும் நடுவில் கறுப்பசாமியின் மனத்தில் திரிசூலம் மட்டுமே சுழன்று கொண்டிருந்தது. எப்படியாவது அதைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற பிடிவாதம் அவருள் விநாடிக்கு விநாடி உயர்ந்து கொண்டிருந்தது.

''சாப்பாடு போடம்மா!'' காளிச்சரண், நாகவதியிடம் கூறினார்.

மூவருக்கும் அவள் பரிமாறினாள்.

''ஹரிகிருஷ்ணனை மறுகரையில் கொண்டுபோய் விட்டுவிட்டு வா நாகவதி!'' காளிச்சரண் உத்தரவிட்டார்.

அவர்கள் இருவரும் புறப்பட்டனர்.

ஆற்றில் நீர் மட்டம் குறைந்திருந்தது.

''கொஞ்ச நேரம் உட்காருங்கள். நான் உங்களிடம் பேச வேண்டியுள்ளது.'' ஹரி, ஆற்றைக் கடக்க முற்பட்டபோது நாகவதி கூறினாள்.

அவன் பாறை ஒன்றின் மீது அமர்ந்தான்.

ஆற்றுத் தண்ணீரில் நிலவு அசைந்து கொண்டிருந்தது. அலைகளில் பிரதிபலித்த நிலவொளி, அவர்களின் முகங்களில் ஒளியலைகளைப் படைத்தன.

''இப்போது உங்களின் விரோதிகள் இருவரும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். ஒருவருக்கு ஒருவர் போட்டியிட்டுச் சீக்கிரமாக வெற்றியடைய முற்படுவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் சும்மா இருந்தால், நிலைமை விபரீதமாகி விடும்!''

''எனக்கும் அது புரிகிறது!''

''இன்னுமொரு எச்சரிக்கை! அவர்கள் உங்களைக் கொலை செய்யக்கூட முயற்சி செய்யலாம்!''

''அதற்கும் வாய்ப்பு உள்ளது. சொல்லப் போனால், ஒரு வகையில் நான்தானே அவர்களின் முக்கியமான எதிரி.''

''இதுவரை அவர்கள் உங்களைக் கொல்லாமல் இருந்தது, தேவியின் அருளால்தான்.''

''அந்த தேவிதானே என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்ததும்!''

''அது எனக்கும் தெரியும்!'' நாகவதி தண்ணீரில் வலக் கையை அளைந்தபடி பேசினாள். அவளின் விரல்கள் தாழ்ந்த பகுதிகளில் தண்ணீர் விரல்களைச் சுற்றிக் கொண்டு ஓடியது.

''அதெப்படித் தெரிந்தது?'' ஹரி வியப்புடன் கேட்டான்.

''ஹரிகிருஷ்ணன் அன்றொரு நாள் இரவில் நிலவிளக்கின் முன்பாக உட்கார்ந்து புராதனமான கோயில்களைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தபோது, தேவி ஓர் ஓலை கொண்டு வந்து தரவில்லையா?''

''ஆமாம்... தந்தார்?'' ஹரி, இமைக்க மறந்தவனாக அவளையே பார்த்தான்.

'இவள் எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருக்கிறாளே!' ஹரியின் மனம் அவளை சிலாகிக்கவும் செய்தது.

''அதை எழுதிக் கொடுத்தவளே நான்தான்!''

''என்ன!'' - ஹரி திடுக்கிட்டான்.

'தான் ஏதாவது ஒரு கட்டத்தில் நாகவதியைப் பற்றித் தவறாக நினைத்திருந்தால், அப்படி நினைத்ததுதான் தவறு!' - என்பது ஹரிக்குப் புரிந்தது.

''அப்படியானால் உண்மையிலேயே இந்த நாகவதி யார்?'' - ஹரி கேட்டான்.

''நான் யார் என்பதைச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது சொல்கிறேன். இப்போது அதை நான் சொல்ல முடியாது!''

''அப்படியானால் சொல்ல வேண்டாம்! அந்தக் கோயிலைப் பற்றிச் சொன்னாயே...''

''அந்தக் கோயிலுக்குப் போகும் வழியைக் கண்டு பிடிக்க வேண்டும். நானும் அதற்கு முயற்சி செய்கிறேன். சிவனின் கையிலுள்ள திரிசூலம் மட்டும் உங்கள் கைக்கு வந்துவிட்டால், அதன் பிறகு நீங்கள் இவர்களைப் பார்த்து

பயப்பட வேண்டியதில்லை. மாறாக அது அவர்களுக்குக் கிடைத்து விட்டால் உங்களின் நிலைமை ஆபத்தாகிவிடும்!''

''சரி... எங்கிருக்கிறது அந்தக் கோயில்?'' - ஹரி ஆவலுடன் கேட்டான்.

''வாருங்கள், காட்டுகிறேன்!'' - என்ற நாகவதி, உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தாள்.

## 27

''வாருங்கள்... காட்டுகிறேன். நீங்கள் கோயிலைத் தெரிந்து கொள்ளாமல் இருந்தால், அதுவே ஒரு தோல்வி தான்!'' நாகவதி ஆற்றங்கரை ஓரமாகக் கிழக்குத் திசையில் நடக்கத் தொடங்கினாள்.

ஒற்றையடிப் பாதைகூட இல்லாத அந்தப் பகுதியில் ஆங்காங்கே சிதறிக் கிடந்த பாறைகளின்மீது கால் வைத்துத் தாவித் தாவி முன்னேறினர் அவர்கள்.

அவ்வப்போது ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு வந்து கரையோரத்தில் போட்டிருந்த மரங்களும், கிளைகளும் குறுக்கும் நெடுக்குமாகக் கிடந்தன.

ஏறத்தாழ இரண்டு மைல் தூரம் நடந்த பிறகு வலப் புறமாகத் திரும்பினர். அங்கும் வழி இருப்பதாகத் தெரியவில்லை. புதர்கள் ஏகத்துக்கும் மண்டிக் கிடந்தன.

''ம்... அதோ பாருங்கள்...'' - நாகவதி சற்றுத் தொலைவிலுள்ள பகுதியைச் சுட்டிக்காட்டினாள்.

அந்த இடத்துக்குப் பிறகு கருங்கல் துண்டுகள் பாவிய பாதை இருந்தது.

''இந்தப் பாதை முடிவடையும் இடம்தான் கோயில்!'' நாகவதி கூறினாள்.

அதன் பிறகு நடைபயணம் கடினமாக இருக்க வில்லை. நாகவதி முன்னால் நடந்தாள். மேலும் அரை மைல் தூரம் நடந்தபோது தனிமைப்பட்டிருந்த குறுங்காடு போன்ற ஒரு பகுதி தென்பட்டது.

அது, இருளடைந்த ஒரு பிரதேசம்.

''அதோ தெரிகிறது பாருங்கள். அதுதான் நான் குறிப்பிட்ட இடம்!''

''அதுவாகத்தான் இருக்குமென்று நானும் யூகித்தேன்.'' ஹரி அவளுடன் நடந்தவாறு பேசினான்.

அவர்கள் ஆலமரங்களை நெருங்கினர்.

''பார்த்தீர்களா? இவை, ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து வளர்ந்திருப்பதை!''

நிலவொளியின் பிரகாசத்தில் ஹரி அந்தப் பகுதியைப் பார்த்தான்.

எத்தனையோ நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த பிரமாண்டமான ஆலமரங்கள் கிளை கிளைகளாகப் பிரிந்து, முக்கியத் தண்டு எது, விழுது எது என்று தெரியாத அளவுக்குப் பின்னிப் பிணைந்து வளர்ந்திருந்தன.

''நீங்கள் ஒரு மனிதனானதால் இந்தச் சூழ்நிலையில் அதற்குள் நுழைவது மிகவும் கடினமான காரியம்தான்!'' - நாகவதி கூறினாள்.

''அப்படியானால் நீ?''

''நான்... நானா... அது... அப்படியொரு சூழ்நிலையில் வளர்ந்து, அமானுஷிகமான பலவற்றையும் சொந்தமாக்கிக் கொள்ள நேர்ந்தது!''

''ஓகோ, அப்படியா?''

காளிச்சரண் என்ற மாந்திரீகனுடன் வாழ்ந்து அவளும் மந்திரங்கள் பலவற்றைக் கற்று வைத்திருக்கிறாள் என்பதை

ஹரி அவளிடமிருந்தே கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தான். ஆனால், அவள் ஒரு மனிதப் பெண் அல்ல என்ற உண்மையை, அவன் இன்னும் புரிந்து கொள்ளவே இல்லை!

''ஹரி, இங்கேயே இருங்கள். இதோ வந்து விடுகிறேன்!'' - நாகவதி இடப் புறமாக நடந்து இருட்டில் மறைந்தாள்.

ஹரி நிலவொளியில் நின்று கொண்டிருந்தான்.

கிழக்குத் திசையில் கம்பீரமாகத் தலையை நிமிர்த்தி நின்றிருந்த மலைப்பகுதிகளை கவனித்தான். ஏறத்தாழ அந்த மலை முகட்டுக்குச் சற்று மேற்புறமாக நிலவு ஒளி சொரிந்து கொண்டிருந்தது.

அந்த மலையின் தாழ்வாரப் பகுதிகளில் மஞ்சள் தூளை விசிறிவிட்டது போல் ஒளி பரவிக் கிடந்தது. உயர்ந்த பாறைகளின் அடிப்புறங்களிலும் இடுங்கிய பகுதிகளிலும் நிழல் ஒளிந்திருந்தது, ஓர் ஓவியம் போல் தென்பட்டது.

நிலவொளியும் நிழலும் கலந்து தென்பட்ட அந்தக் காட்சி வெகு அழகாக இருந்தது. அமைதியான, யாருமற்ற அந்தப் பகுதியில் எங்கிருந்தோ இரவுப் பறவையொன்று குரல் எழுப்பியது.

இருட்டில் நாலைந்து காலடிகள் எடுத்து வைத்த நாகவதி, அவளது யதார்த்தமான பாம்பு வடிவத்துக்கு மாறினாள். ஆலமரத்தின் மீது ஊர்ந்து உட்புறம் நுழைந்தாள். வேர்களின் ஊடாக அவள் சரசரவென்று முன்னேறினாள்!

போகும் வழியெல்லாம் ஹரிகிருஷ்ணன் இந்த வழிகளில் நடந்து வர முடியுமா என்பதையும் கவனித்தாள். அப்படிப்பட்ட ஒரு வழியைக் கண்டுபிடிப்பது தான் அவளது லட்சியமாக இருந்தது.

நாகவதி பாம்பாக மாறியபோது, அவள் வாயிலிருந்த நாகமாணிக்கம் ஒளிரத் தொடங்கியது. அதன் வெளிச்சத்தில்

தான் அவள் முன்னேறினாள். வேர்களின் ஊடாகச் செல்லும்போது ஏறத்தாழ ஒன்றரையடி அகலத்தில் பொந்து ஒன்று தென்பட்டது. ஏறத்தாழ அதே உயரமும் இருந்தது அந்தப் பொந்துக்கு. அதற்குள் நுழைந்தாள்.

வளைந்து வளைந்து சென்றது அந்த வழி. அந்தப் பாதையின் கடைசிவரை அவள் உடல் கடந்து வர முடியுமா என்று பரிசோதிப்பதுதான் அவளது நோக்கம். அந்தச் சோதனை வெற்றிகரமானதாக அமைந்தது.

கடைசியில் புராதனமான சிவன் கோயிலின் சந்நிதிக்கு முன்பாக வந்து சேர்ந்தாள் அவள். அங்கும் ஒருவர் நின்று கொள்வதற்கான இடம் இருந்தது. அங்கிருந்தபடி சுற்று முற்றும் பார்த்தாள். கோயில் கர்ப்பக்கிரகத்துக்குள் சிவனது விக்கிரகம் தென்பட்டது. மிகவும் சன்னமான ஒளியில்தான் அவள் அதைப் பார்த்தாள். உடனே அந்த ஒளி எங்கிருந்து வருகிறது என்று கவனித்தாள்.

அவள் உடல், ஒரு கணம் திடுக்கிடவே செய்தது.

தாண்டவ நடனமாடும் சாக்ஷாத் பரமசிவனின் கழுத்தில் சுற்றியிருந்த பாம்பின் வாயிலிருந்துதான் அந்த வெளிச்சம் வருகிறது.

பாதாளம் வரை வெளிச்சம் பாய்ந்து செல்லத் தக்க ஒரு நாகமாணிக்கம் அந்தப் பாம்பின் வாயில் இருந்தது.

வாழ்க்கையில் சாபம் நீங்கியவளைப் போல் அவள் சிவனின் வடிவத்தைப் பார்த்தபடி நின்றாள்.

பரமேஸ்வரனின் ஒளி சொரியும், தேஜோ மயமான முகம், எப்படிப்பட்டவற்றையும் சம்ஹரிக்கும் சக்திமிக்க மூன்றாவது திருக்கண்! அந்தக் கண் மூடியபடி இருந்தது. அந்தக் கண் மட்டும் திறந்திருந்தால் - அது விக்கிரகமாக இருந்தால் கூட - அதன் முன்பாக எப்படிப்பட்டவரும் நிற்க முடியாது என்பது அவளுக்குத் தெரியும்.

பரமேஸ்வரனின் கையிலிருந்த திரிசூலத்தை அவள் கவனித்தாள். அதை எதிர்க்க இந்த உலகத்தில் எந்தவொரு சக்தியும் கிடையாது என்பதும் அவளுக்குத் தெரியும்.

ஆனால், எப்படி அதை எடுப்பது?

அதை எடுக்கும்போது ஹரிகிருஷ்ணனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்...

எது எப்படி இருப்பினும் எதிர்பார்த்து வந்த பொருள் அங்கு இருப்பது அவளுக்குத் திருப்தி அளிக்கவே செய்தது.

அவள் மீண்டும் பாம்பானாள். வந்த வழியே சரசர வென்று ஊர்ந்தாள். மறுபடியும் நாகவதியாக மாறி ஹரி கிருஷ்ணனை நெருங்கினாள்.

''என்ன நாகவதி, போன காரியம் வெற்றிதானே?''

''சந்தேகமே வேண்டாம். நாம் எதிர்பார்த்ததெல்லாம் அங்கு உள்ளன!''

''நான் அவற்றைப் பார்க்க முடியுமா?''

''தாராளமாக! மேற்குப் புறத்தில் ஒரு வழி உள்ளது. அதைத் தேடிக் கண்டுபிடிக்கத்தான் நேரம் அதிகமானது. அதன் வழியாக நீங்கள் உள்ளே போக முடியும்!''

''அப்படியானால், நான் முயற்சி செய்கிறேன்!'' என்ற ஹரி, நாகவதி சுட்டிக்காட்டிய திசையில் முன்னேறினான்.

வேர்களுக்கு இடையில் அவன் மெதுவாக ஊர்ந்து நகரத் தொடங்கினான்.

வளைந்தும் நெளிந்தும் முன்புறம் விரிந்த பாதை, கோயிலின் முன்புறம் வரை அவனைக் கொண்டு சென்றது.

ஹரி, தன்னையும் மீறிச் சட்டென்று கை கூப்பினான்.

''எப்படி அந்த சூலத்தை எடுப்பது?'' - ஹரி கேட்டான்.

அப்போது கருவறைக்கு முன்புறமிருந்த கிளி ஒன்று குரல் கொடுத்தது. அதன் பொருள் ஹரிக்கு விளங்கவில்லை.

''அதற்கு என்ன அர்த்தம்?'' - ஹரி, நாகவதியிடம் கேட்டான்.

''வாருங்கள், போகலாம்!''

வந்த வழியே திரும்பினார்கள்.

''கிளி சொன்னது என்ன நாகவதி?''

''அந்த விக்கிரகத்திலிருந்து விரல் தானாக நெகிழ்ந்தால் அல்லாமல், நாம் சூலத்தை எடுக்க முடியாது!''

''என்ன!'' - ஹரி திக்பிரமை பிடித்தவனாக அப்படியே அசைவற்றுப் போனான்!

# 28

''ஆமாம். அதுதான் அந்தக் கிளி சொன்னதன் அர்த்தம்!'' - நாகவதி விவரித்தாள்.

''அதாவது...?''

''அந்தச் சிலையில் இழைந்து கொண்டிருக்கும் பாம்பு தொல்லை தரும். அதன் தாக்குதலிலிருந்து எவராலும் தப்பிக்க முடியாது!''

ஹரிகிருஷ்ணனுக்கு ஏமாற்றமாக இருந்தது. இவ்வளவு கஷ்டப்பட்டு இங்கு வந்து சேர்ந்த நிலையில், அந்தச் சூலம் கிடைக்காவிட்டால், தனது நோக்கம் என்னாவது?

''நாம் கடந்து வந்த குறுகிய பாதையில், ஆலமர வேர்களுக்கிடையில் எக்கச்சக்கமான மனித எலும்புகள் கிடந்ததை கவனித்தீர்களா?''

''மனித எலும்புகளா, கவனிக்கவில்லையே?''

இதையெல்லாம் கேட்கக் கேட்க... ஹரியின் ஏமாற்றம் அதிகரித்தது. அந்தத் திரிசூலத்தைப் பார்க்காமலே இருந்திருக்கலாம் என்றுகூடத் தோன்றியது.

''இந்த நிலையில் வேறு என்ன செய்வது?'' - ஹரி தவிப்புடன் கேட்டான்.

''ஏதாவது மாற்றுவழி இருக்கும். இல்லாமல் போகாது. நான் முயற்சி செய்து பார்க்கிறேன்!'' - நாகவதி ஆறுதலாகச் சொன்னாள்.

அங்கிருந்து புறப்பட்டவர்கள் நேராக ஹரியின் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

''நாகவதி, நீயும் இங்கு வந்துவிட்டால், உன்னை அவர் தேட மாட்டாரா?'' ஹரி அவளிடம் கேட்டான்.

''கண்டிப்பாகத் தேடுவார். தேடட்டுமே! எனக்கு இதைத் தவிர வேறு வழி இல்லை. இவ்வளவு தூரத்துக்கு நிலைமை வந்துவிட்ட பிறகு, உங்களுக்கு உதவுவது என்று முடிவெடுத்து விட்டேன்.'' அவள் குரலில் உறுதி தொனித்தது.

அவளது வார்த்தைகளைக் கேட்டதும் ஹரியின் ஏமாற்றம் பஞ்சாகப் பறந்து போனது. அவனுக்குப் புதிதாக உற்சாகம் தோன்றியது.

''சரி படுத்துக் கொள்ளுங்கள். ஓய்வு தேவை. மிச்சத்தைக் காலையில் பார்த்துக் கொள்ளலாம்!'' - நாகவதி கூறினாள்.

ஆலமரத்தின் வேர்களுக்கு இடையில் உடலைக் குறுக்கிப் பயணம் செய்ததால் அவனுக்கு மிகவும் களைப்பாக இருந்தது. உடம்பெல்லாம் வலித்தது. அவன் கட்டிலில் பாய் விரித்துப் படுத்தான்!

வெகுநேரமாக நாகவதியைக் காணாமல் போகவே, காளிச்சரணுக்கு முதல் தடவையாகச் சந்தேகம் தோன்றியது!

கறுப்பசாமியும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கெண்டிருந்தார்.

''நாகவதி இன்னும் திரும்பி வராமல் இருப்பதில் ஏதோ சிக்கல் உள்ளதே. ஒருவேளை அவள் அங்கு போயிருப்பாளோ?'' காளிச்சரண் கேட்டார்.

''எங்கே?'' கறுப்பசாமி எதிர்க் கேள்வி கேட்டார்.

''சிவன் கோயிலுக்கு.''

''அங்கு போய் அவன் ஏதாவது செய்து தொலைத் திருக்கப் போகிறான்!''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. இன்னும் நாகவதி திரும்பி வரவில்லை. நேரம் மதியமாகி விட்டதே!''

''உங்களது சந்தேகங்கள் ஒருவேளை உண்மையாக இருக்கலாம். நாம் அங்கேயே போய் பார்த்துவிட்டு வந்தால் என்ன?''

கறுப்பசாமி கோயிலைப் பார்ப்பதிலேயே குறியாக இருந்தார். அந்தக் கோயிலைப் பற்றிக் கேள்விப்பட்டதில் இருந்து அதை எப்படியும் பார்த்துவிட வேண்டுமென்று துடியாகத்துடிப்பவர் அவர். கறுப்பசாமியின் மனத்தில் மற்ற எல்லாவற்றை விடவும் தாண்டவம் நடத்திய சிவனின் கையிலிருக்கும் திரிசூலமே வளைய வளைய வந்து கொண்டிருந்தது!

அத்துடன் அவர் மனத்தில் மற்றோர் எண்ணமும் சேர்ந்து கொண்டது. அது. கோயிலை அடைந்த பிறகு செய்ய வேண்டியது...

முதலில் சிவன் கோயிலுக்குச் சென்று, காளிச்சரணை விட்டு திரிசூலத்தை எடுக்க வேண்டும். அதன் பிறகு காளிச்சரணது கதையை முடிக்க வேண்டும். அப்படிச்

செய்தால்தான் அதிகச் சிரமமில்லாமல் தனது லட்சியத்தை அடைய முடியும்!

''அப்படியானால் நாம் மேலும் தாமதம் செய்வது நல்லதல்ல. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் போவது நல்லது!'' கறுப்பசாமி, காளிச்சரணை கிளப்புவதையே முக்கியமான விஷயமாகக் கருதினார்.

''அப்படியே செய்யலாம்!''

காளிச்சரண் புறப்படத் தயாரானார். கையில் ஒரு பெரிய அரிவாளை எடுத்துக் கொண்டார்.

''இது எதற்கு நமக்கு?''

''தேவைப்படும். எதற்கும் இருக்கட்டும்!''

அவர்கள் அங்கிருந்து வெளியேறினர். ஆற்றங் கரையை அடைந்து, கிழக்குத் திசையில் திரும்பினர். பகல் நேரமாக இருந்ததால் அந்தப் பாதையில் நடப்பது, இரவில் நடப்பதைப்போல் அவ்வளவு கடினமாக இல்லை.

வெகுதூரம் நடந்து வந்த பிறகு அவர்கள் மலைச் சரிவில் ஆலமரங்கள் கூட்டமாக வளர்ந்திருப்பதை கவனித்தனர். பகல் நேரத்திலும்கூட அந்தப் பகுதியில் இருள் மண்டியிருந்தது.

''அதோ தெரிகிறது பாருங்கள்... அதுதான்!'' காளிச்சரண் சுட்டிக்காட்டினார்.

கல் பாவிய தரையில் நடந்து அவர்கள் ஆலமரக் கூட்டத்தை நெருங்கினர்.

''இந்த மரங்களுக்குள் புகுந்து செல்ல வேண்டும். முதலில் அதற்கான வழியை கண்டுபிடிக்க வேண்டும்!'' காளிச்சரண், கறுப்பசாமியிடம் கூறினார்.

இருப்பினும் அதற்காகக் காத்திருக்காமல் ஆல மரத்தின் மெல்லிய விழுதுகள் சிலவற்றை அரிவாளால்

வெட்டத் தொடங்கினார். இரண்டு மூன்று துண்டுகளை வெட்டிப் போட்டபோது ஏதோ ஒன்று உடைந்து நொறுங்கி, விழும் சத்தம் கேட்டது.

காளிச்சரண் சட்டென்று விலகினார்.

பொத்தென்று எதுவோ ஒன்று தரையில் விழுந்தது.

''மனித எலும்புக் கூடு!'' கறுப்பசாமி கூவினார்.

காளிச்சரண் வெட்டுவதிலிருந்து பின்வாங்கினார். இப்படி ஒரு பொருளை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை என்று தெரிந்தது.

''ஆலம் விழுதுக்கு மத்தியில் எப்படி மனித எலும்புக் கூடு வந்திருக்கும்?'' கறுப்பசாமி கேட்டார்.

''இந்த மேற்புற வேர்கள் வளர்வதற்கு முன்னால், பெரிய விழுது ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்தபடி அந்த மனிதன் இறந்து போயிருக்கலாம்!'' காளிச்சரண் பதிலளித்தார்.

''இந்த நிலை நமக்கு ஏற்படாது என்று சொல்ல முடியுமா என்ன?''

''இப்படியெல்லாம் யோசனை செய்தால், நாம் ஒரு போதும் கோயிலுக்குள் நுழைய முடியாது!'' காளிச்சரண் தைரியத்துடன் பேசினார்.

''சற்றுப் பொறுங்கள். நான் ஒரு வித்தை செய்து பார்க்கிறேன்.'' கறுப்பசாமி, கையால் சைகை செய்து கழுகை வரவழைத்தார்.

''கருடா, நீ கிளம்பிப் போய், நாங்கள் உட்புறம் செல்ல ஏதாவது வழி இருக்கிறதா என்று தெளிவாகப் பார்த்துவிட்டு வா!'' - கழுகிடம் கட்டளையிட்டார்.

கழுகு ஒரு முறை ஆலமரத்தைச் சுற்றி வட்டமடித்த பிறகு, மேலெழும்பிப் பறந்தது. கடைசியில் அது, ஒரு குகையின் வாய் போன்ற வேர்களின் இடைவெளி வழியாக

உள்ளே நுழைந்தது. கவனமாகச் சுற்றுமுற்றும் பார்த்தபடி நிதானமாக நடந்து கோயில் வாசலை அடைந்தது.

உட்புறம் வந்த பிறகு கருவறைக்குள் எட்டிப் பார்த்தது. அதோ தாண்டவமாடும் சிவன்!

கையில் பிநாகம் என்கிற திரிசூலம்.

கழுத்திலும், புஜங்களிலும் நெளியும் உயிருள்ள பாம்புகள். கழுத்தில் கிடந்த நாகம் தலையை உயர்த்திக் கழுகை ஒரு தடவை முறைத்துப் பார்த்தது. பிறகு படம் விரித்தபடியே நின்றது.

தரையில் ஊர்ந்து வந்த சிறிய நாகம் ஒன்று, கழுகின் காலைச் சுற்றியது. கழுகு அதைக் காலால் கௌவியபடியே, வந்த வழியே திரும்பியது.

கறுப்பசாமியின் முன்பாக வந்த கழுகு அந்த நாகத்தைத் தரையில் போட்டது. கீழே விழுந்த பாம்பு, படம் எடுத்தபடி தலையை உயர்த்தி நின்றது.

''என்ன இது?'' கறுப்பசாமி கேட்டார்.

''இதுபோல் அங்கு ஏராளமாக உள்ளன!'' - கழுகு பதிலளித்தது.

''அப்படியென்றால்...?'' காளிச்சரண் கேட்டார்.

''எத்தனை பாம்புகள் இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டுமே. கருட மந்திரம் சொன்னால் கருடன் வரும். பாம்புகள் அத்தனையும் தானாகவே மறைந்துவிடப் போகின்றன!'' கறுப்பசாமி, நண்பருக்கு தைரியம் ஊட்டினார்.

''அப்படியானால் நமக்கு எந்தத் தடையுமில்லை. என்கிறீர்கள். சரி... உங்கள் கழுகு சிஷ்யன் கண்டுபிடித்த வழியிலேயே நாமும் உள்ளே போக வேண்டியதுதான்!''

இருவரும் கழுகு முன்னேறிய பாதையிலேயே தவழ்ந்து செல்லத் தொடங்கினர்.

''பாருங்கள்... வழியெல்லாம் மண்டையோடுகள்... எலும்புகள்!'' கறுப்பசாமி சுட்டிக்காட்டினார்.

போகும் வழியெல்லாம் அதுபோல் ஏராளமாகச் சிதறிக் கிடந்தன.

மிகவும் பழைமையான மண்டையோடுகள்கூட அங்கு கிடந்தன. ஒரு சில மண்டையோடுகளின் கண் பகுதிகளில் விழுது இறங்கி மண்டையோடு உடைந்து அதற்குள் அழுந்தியிருந்தன. மனிதர்களை பயப்படச் செய்யும் ஒரு காட்சி அது!

சூரிய ஒளி வெண்மையான பொட்டுகளாக அந்தப் பகுதிகளில் சிதறிக் கிடந்தது. இலை, விழுது, கிளைகள் எல்லாம் வடிகட்டி அனுப்பிய அந்தச் சன்னமான வெளிச்சம் அவர்களுக்கு ஓரளவு பாதையைப் பார்த்து நடக்க உதவியது.

கடைசியில் ஒரு வழியாக இருவரும் சிவன் கோயில் கருவறைக்கு முன்பாக வந்து சேர்ந்தனர்.

அங்கேயும் எலும்புக் கூடுகள் சிதறிக் கிடந்தன.

''இவர்கள் எல்லோருமே அந்தச் சிலையில் உள்ள திரிசூலத்தை நாடி வந்தவர்கள்தான்!'' காளிச்சரண் கூறினார்.

''அப்படியானால்?'' கறுப்பசாமி சந்தேகத்துடன் இழுத்தார்.

''அந்தத் திரிசூலத்துக்கு சாக்ஷாத் பினாகத்தின் சக்தி உண்டு என்பது பொருள். ஒரு தடவை தட்சனது யாகத்தைச் சின்னாபின்னப்படுத்தித் திரும்பி வந்தது இந்த பினாகம்!'' காளிச்சரண் விவரித்தார்.

'இது மட்டும் நம் கைக்கு வந்துவிட்டால் நம்மை யாரும் நெருங்க முடியாது. எப்படியும் அதைக் கைப்பற்றியே தீர வேண்டும்... அத்துடன் நம் எதிரிகளை ஒட்டு மொத்தமாக அழித்து விடலாம்!' கறுப்பசாமி,

காளிச்சரணுக்குத் தெரியாமல் அவரைப் பார்த்தபடி மனதுக்குள் மருகினார்.

''இவர்கள் எப்படி இறந்திருப்பார்கள் என்று உங்களுக்குத் தெரிகிறதா?'' ஒரு மண்டையோட்டைக் கையில் எடுத்த காளிச்சரண் கேட்டார்.

''அதுதான் தெளிவாகத் தெரிகிறதே. மண்டை யோட்டின் நீல நிறமே அதன் கதையைச் சொல்கிறதே. அந்த விக்கிரகத்தின் கழுத்திலுள்ள கருநாகத்தின் விஷம்தான் காரணம்!'' கறுப்பசாமி பேசும்போது, காளிச்சரணின் உடல் ஒரு முறை சிலிர்த்தது. ஒரு கணம் திடுக்கிட்டார்.

''பயப்படாதீர்கள். நாம் அதற்கும் ஒரு வழி செய்யலாம். நான் கருட மந்திரம் ஜபிக்கிறேன்!'' கறுப்பசாமி தைரியம் கொடுத்தார். சொன்னது மட்டுமின்றி, கருவறை யின் முன்பாகச் சப்பணமிட்டு அமரவும் செய்தார். பிறகு இடுப்பிலிருந்து செப்புத் தகடு ஒன்றை எடுத்து கருட மந்திரத்தை அதில் எழுதத் தொடங்கினார்.

பஞ்சகோணம், அஷ்டதளம், இரண்டு வட்டம், பூரூபம் போன்றவற்றை முதலில் வரைந்தார்.

அதன் பிறகு நடுவில் பிரணவமும் ஸாதா நாமமும், பஞ்ச மூலைகளில் 'க்ஷிப ஓம் ஸ்வாஹா' என்பதன் ஒவ்வொரு எழுத்தையும், அஷ்டதளத்தில் 'ப்ரோம் ந்த்ரீம் றம்வம்ஹம்ஸ: ஸோஹம்' என்கிற எழுத்துகளையும் வெளிப்புற வட்டத்தில் **'ஓம் நமோ பகவதே தத்வ கருடாய அம்ருத கலச ஸம்பவாய விஷ்ணு வாஹனாய வஜ்ரநகவஜ்ரதுந்த வஜ்ர பக்ஷாலம்கிருத சரீராய ஏஹேஹி... மகா துஷ்ட நாகால் ச்சி ருச்சிந்த'** என்கிற தத்வ கருட மந்திரத்தையும் இரண்டாம் வட்டத்தில் தாய் மந்திரத்தையும் எழுதினார்.

'தகடைப் பூர்த்தி செய்து, அதைக் கையில் ஏந்தியபடி சிலையை நெருங்கி, திரிசூலத்தை எடுத்தால் அதன் பிறகு எப்படிப்பட்ட நாகமும் தன்னை எதுவும் செய்ய முடியாது!' என்ற நம்பிக்கை கறுப்பசாமிக்குத் தோன்றியது. அசைக்க முடியாத நம்பிக்கைதான்!

ஆனால்...

## 29

கறுப்பசாமி கருட மந்திரத்தை எழுதி முடித்தார்.

தகட்டில் பூருபம் போக மீதமுள்ள இடங்களில் **'மத்யநந்தகது நோஸி யதிவானந்தகஸ்வயம் ஸ சரதி ஸசரன்த்தல்காரி மல்காரி விஷநாஸினி விஷம் நஷ்டம் விஷம் ஹதம் இந்த்ரஸ்ய வஜ்ரேன்னு ஹதம் பிராஹ்மண ஸ்வாஹா'** என்ற மந்திரத்தை எழுதினார்.

மிகவும் சக்தி வாய்ந்த இந்த மந்திரத்தின் மகிமை கறுப்பசாமிக்கு நன்றாகத் தெரியும். இந்த மந்திரம் எழுதிய தகடு எங்கிருந்தாலும் பாம்புகள் அதன் அருகிலேயே செல்லாது.

இதை உடம்பில் ஒருவர் அணிந்து கொண்டால், பாம்பு அவரைத் தீண்டாது. காரணம் இது கருடனைப் ப்ரீதிப் படுத்தும் மகா மந்திரம். இந்த மந்திரத்தைப் பயன் படுத்துபவனை கருடன் ஒருபோதும் கைவிட மாட்டார். அப்படிப்பட்டவனை, பாம்புக் கடியிலிருந்து காப்பது கருடனின் கடமை!

கறுப்பசாமி மந்திரத்தைப் பூர்த்தியாக்கி அதைக் கழுத்தில் அணிந்து கொண்டார். அப்போது அங்கு அதிசயமான ஒரு சம்பவம் நடைபெற்றது.

நாகங்கள் ஒவ்வொன்றாக அங்கிருந்து மறைந்தன. மெதுவாக அவை ஊர்ந்து ஆலமர வேர்களின் ஊடாக வெளியேறி, மறைந்தன!

அந்தக் காட்சியை மாந்திரீகர்கள் இருவரும் கவனிக்க செய்தனர்.

விக்கிரகத்தின் மீதிருந்த நாகங்களும் அங்கிருந்து வெளியேறிய பிறகு, கறுப்பசாமி மெதுவாக எழுந்து கருவறை வாசலில் கால் வைத்தார். ஐந்து படிகளைத் தாண்டி ஆறாவது படியில் கால் எடுத்து வைத்தபோது, கறுப்ப சாமிக்கு ஏதோவொரு சந்தேகம் தோன்றியது. பாம்புகள் வெளியேறிய பிறகு கருவறையின் உட்புறம் வெளிச்சமின்றி இருளாக இருந்தது.

ஏதோ ஒரு சத்தம்... நெரிபடும் சத்தம்!

'விளக்கைப் பற்ற வைக்க வேண்டியதுதான்!' - கறுப்பசாமி தீர்மானித்தார்.

''நண்பரே நிலவிளக்கைக் கொளுத்தித் தாருங்களேன்!'' - கறுப்பசாமி, காளிச்சரணிடம் கூறினார்.

காளிச்சரண் தோள்பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்து விளக்கேற்றினார்.

கறுப்பசாமி விளக்குடன் கருவறைக்குள் நுழைய முயன்றார்.

இப்போது அந்தச் சத்தம் வலுவாகக் கேட்டது.

கறுப்பசாமி, விளக்கின் ஒளியால் சத்தம் வரும் பகுதியைப் பார்த்தார். புகைப் படலம் போன்று தெளிவற்றுத் தோன்றிய பகுதியில் சூலத்துடன் ஒரு கை மேற்புறமாக உயர்ந்தது.

கறுப்பசாமி திடுக்கிட்டார்!

இன்னும் ஒரு விநாடி தாமதித்திருந்தால் அந்தச் சூலம் தன் கழுத்துப் பகுதியில் பாய்ந்திருக்கும். நல்லவேளையாக கறுப்பசாமி, பின்பக்கமாக வேகமாக நகர்ந்தார்.

''என்ன... என்ன நண்பரே?'' - காளிச்சரண் ஒன்றும் புரியாதவராகக் கேட்டார்.

''மேற்கொண்டும் என்னென்னவோ சிக்கல்கள் இருப்பதாகத் தோன்றுகிறது... யோசிக்க வேண்டும்!'' கறுப்பசாமி மிரண்டு போனவராகப் பேசினார்.

''என்ன செய்ய வேண்டும்... சீக்கிரம் சொல்லுங்கள்!'' காளிச்சரண் வற்புறுத்தினார்.

''முதலில் நாம் இங்கிருந்து வெளியேற வேண்டும். அப்புறம்தான் மற்ற எதைப் பற்றியும் யோசிக்க முடியும்!'' - கறுப்பசாமி பேசியபடி வெளியே போகும் வழியில் நடக்கத் தொடங்கினார்.

அவரது செயல் காளிச்சரணுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்று தோன்றியது. எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த இடத்துக்கு வந்திருக்கிறோம். இங்கு வந்த பிறகு ஏதேதோ காரணங்கள் சொல்லி, வெறுங்கை யுடன் திரும்பிப் போவது எவ்வளவு ஏமாற்றமான விஷயம்!

ஆனால், அந்தச் சூழ்நிலையில் கறுப்பசாமியைப் பின் தொடர்வதை தவிர வேறு வழியில்லை. கறுப்பசாமி வெளியேறி விட்டால், மாயமாக மறைந்த நாகங்கள் உடனேயே கூடத் திரும்பி வரலாம். எனவே, கறுப்பசாமியைப் பின் தொடர்வதுதான் நல்லது.

இருவரும் ஒரு விதமாக அந்த ஆலமரக் கூட்டத்திலிருந்து வெளி வந்தனர்.

''நாம் திடுமென்று பின்வாங்க வேண்டிய காரணம்?'' காளிச்சரண் விசாரித்தார்.

''இங்குள்ள மூர்த்தியின் வல்லமையைக் குறைவாக மதிப்பிடக் கூடாது! உக்கிரமானவர். இதன் மேற் புறமாகப் பறவைகள்கூடப் பறப்பதில்லை. நான் விக்கிரகத்தை நெருங்கும்போது சூலத்துடன் ஒரு கை மேற்புறமாக

உயர்ந்தது!'' கறுப்பசாமி கனவில் பேசுவது மாதிரிப் பேசினார்.

''என்ன... உண்மையாகவா!'' - காளிச்சரண் வியப்பு மிகுந்தவராகக் கேட்டார்.

''ஆமாம். அதனால் நாம் முதலில் அதற்கான பரிகாரத்தைக் கண்டறிய வேண்டும். அப்போதுதான், அந்தச் சூலம் நமக்குச் சொந்தமாகும்!''

''அதற்குள் ஒரு வேளை அவர்கள் முந்திக் கொண்டு விட்டால் என்ன செய்வது?'' - காளிச்சரண் சந்தேகம் எழுப்பினார்.

''தற்காலிகமாக அவளை அவனிடமிருந்து பிரிக்க வேண்டும். இல்லாவிட்டால், நிச்சயமாக அவள் அவனுக்கு உதவுவாள். அதில் எந்த விதமான சந்தேகமும் வேண்டாம்!'' - கறுப்பசாமி தனது கருத்தைத் தெரிவித்தார்.

''அது சுலபமான காரியமாகத் தோன்றவில்லை. உங்களது கருட மந்திரத்துக்கு முன்னால் அவளால் எதுவும் செய்ய முடியாது என்று நினைக்கிறேன். எனவே, இங்கு எங்காவது அதை ஸ்தாபிதம் செய்தால் நல்லது!''

''ஏன்... அவளும் நாகமா என்ன?''

''ஆமாம்! அவள் நாக கன்னிகைதான். நான் எனது தேவைகளுக்காக அவளுக்கு அப்படியொரு வடிவம் கொடுத்திருக்கிறேன். அழகான இளம் பெண் ஒருத்தியின் உடம்பில் அவளை ஏவி விட்டிருக்கிறேன்!''

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் கறுப்பசாமி தன் கையிலிருந்த கருட மந்திரத் தகடை எடுத்து, தான் வந்த வழியின் ஆரம்பத்திலேயே சட்டென்று கண்ணுக்குப் புலப்படாத ஓரிடத்தில் மறைத்து வைத்தார்.

காளிச்சரணது இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்த இருவரும், தாங்கள் உடனே மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குத் தயாராயினர்.

''முதலில் நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், அந்தக் கோயிலிலுள்ள மூர்த்தியின் உக்கிரத்தைக் குறைப்பது தான்!'' - கறுப்பசாமி மந்திரிப்பது போலப் பேசினார்.

''அப்படிச் செய்ய முடியுமா என்ன?''

''இந்த உக்கிர மூர்த்தியைக் கையாள சாக்ஷாத் பரமேஸ்வரியான பார்வதியால் மட்டுமே முடியும். வேறு எவரும் எதுவும் செய்ய முடியாது. எனவே, நாம் அபசாரமான ஏதாவது ஒரு பொருளால் அந்த விக்கிரகத்துக்கு முன்னால் 'பலி' கொடுத்தால் ஒருவேளை விக்கிரகத்தின் சக்தி குறையலாம்!''

''நீங்கள் இப்போது சொல்வது ஒரு நல்ல திட்டம். ஆனால், அப்படிப்பட்ட ஒன்றை நாம் எங்கே தேடிக் கண்டுபிடிப்பது?''

கறுப்பசாமி யோசனையில் ஆழ்ந்தார்: 'அபசாரமான பொருள் எங்கிருந்து நமக்குக் கிடைக்கும்?'

கடைசியில் கறுப்பசாமியே அதற்கான வழியையும் கண்டுபிடித்தார்.

அதாவது திரிவிக்கிரமக் குறூப்பிடம் விசாரித்தால் வழி தவறிய பெண் எவராவது கிடைக்க மாட்டார்களா என்ன? எனவே, அதையும் தானே பார்த்துக் கொள்வதாகக் கூறி விடை பெற்றுக் கிளம்பினார்.

அன்று மாலை நேரத்தில் கறுப்பசாமி திரிவிக்கிரம னுக்கு ஆளனுப்பி வரவழைத்தார்.

பூஜைச் சடங்குகளுக்குத் தங்களுக்கு உதவ ஒரு பெண் வேண்டும் என்றும் முடிந்த அளவு வழுக்கி விழுந்த ஒருத்தியாகவோ அல்லது விபசாரம் புரிபவளாகக் கூட அவள் இருக்கலாம் என்றும் கறுப்பசாமி, அவரிடம் தெரிவித்தார்.

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. பூஜைக்கு உதவச் சுத்தமான பெண்மணிதானே தேவைப் படுவாள்? ஆனால், மாறாகக் கேட்கிறீர்களே!''

''ஒரு சில பூஜைகளுக்கு இப்படிப்பட்ட பெண்கள் தேவைப்படுகிறார்கள்!'' - கறுப்பசாமி விளக்க மளித்தார்.

''அப்படியானால் இன்று இரவு அப்படிப்பட்ட ஒருத்தியை உங்களிடம் அனுப்பி வைக்கிறேன்.'' - திரிவிக்கிரமன் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

மாலை நேரம் தாண்டி இருட்டு படர்வதற்கு முன்னதாகத் தன் காரியஸ்தரை அழைத்தார்.

''என்ன வேய், கல்யாணிக்குட்டியை நாம் சந்தித்து வெகு நாளாகிறதே. ஒரு நடை போய்விட்டு வரலாமா?'' - திரிவிக்கிரமன் கேட்டார்.

''நீங்கள் அங்கு போவது எனக்கு நல்லதாகப் படவில்லை. வேண்டுமானால், வழக்கம் போல் அவளை இங்கு வரச் சொல்கிறேனே!'' - காரியஸ்தர் சொன்னார்.

''நீ சொல்வதும் சரிதான். ஆனால், அவளை இங்கே வரச் சொல்லாதே. நமது மனைக்கு வரச் சொல். நான் அங்கு காத்திருக்கிறேன்!''

''அங்கு இப்போது யாரும் குடியிருக்கவில்லையே எஜமான்?''

''அந்த மந்திரவாதிதான் இருக்கிறார்... இருக்கட்டும் பரவாயில்லை!''

''அப்படியானால் அப்படியே செய்கிறேன்!''

திரிவிக்கிரமன் அங்கிருந்து பயணமானார்.

கறுப்பசாமி அவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் கேட்டார்.

''சொன்ன காரியம் பழம்தானே?''

''ஆள் இப்போது வந்துவிடும்!''

அந்த வார்த்தையே கறுப்பசாமிக்கு திரிசூலத்தைப் பெற்றுவிட்டதைப் போன்ற மகிழ்ச்சியை அளித்தது. திரிசூலம் தன் கைக்கு வந்த மறுவிநாடியே காளிச்சரணை அங்கேயே பலியிடுவது என்று அவர் ஏற்கெனவே தீர்மானித் திருந்தார்.

அதே நேரம் ஹரிகிருஷ்ணனும் நாகவதியும் சேர்ந்து அந்தத் திரிசூலத்தை எப்படிக் கைப்பற்றுவது என்பது குறித்து யோசித்தனர்.

''அந்த மூர்த்திக்கு அபாரமான சக்திகள் உள்ளன. உக்கிரப் பிரதாபி. எனவே, முதலில் அதை அமைதிப்படுத்த வேண்டும். அதை நாம் வெற்றிகரமாகச் செய்துவிட்டால் திரிசூலத்தைச் சுலபமாகப் பெற்று விடலாம்!'' நாகவதி கூறினாள்.

'அதற்கு என்ன வழி?' - ஹரி யோசனையில் ஆழ்ந்தான். அந்தத் திரிசூலத்தைத் தான் கைப்பற்ற நினைப்பதற்கு ஒரேயொரு காரணம்தான் இருந்தது. அதாவது அதைத் தன் எதிராளிகள் கைப்பற்றி விடக் கூடாது என்பதே அது.

மிகவும் சக்தி வாய்ந்த அந்தத் திரிசூலம் மோசமானவர்களான அவர்கள் கைக்குச் சென்றுவிட்டால், தனக்கும் அது ஆபத்து. மட்டுமின்றி, தான் எண்ணியிருப்பதற்கு எதிர்மாறான காரியத்துக்கு அவர்கள் அதைப் பயன்படுத்துவார்கள்!

எனவே, அந்தத் திரிசூலத்தைத் தான் எடுக்காவிட்டால் கூடப் பரவாயில்லை. ஆனால், அது கண்டிப்பாக அவர்கள் கைக்குப் போய்விடக் கூடாது. அதுதான் முக்கியம்!

''சரி நாம் ஒன்று செய்தால் என்ன? அதைப் பற்றித் தெரிந்து கொள்ள பிரஸ்னம் பார்த்தால்...?'' - நாகவதி கேட்டாள்.

''அதுதான் நல்லது. நானும் அதைப் பற்றித்தான் யோசித்தேன்'' என்ற ஹரி தனது படுக்கையறைக்குச் சென்று சோழி மற்றும் கட்டம் வரைந்த ராசிப் பலகையை எடுத்து வந்தான்.

நிலவிளக்குக்கு முன்னால் ராசிப் பலகையை வைத்தான்.

குரு ஸ்தானங்களில் சோழிகளைப் பரப்பினான். அதன் பிறகு 'பரல்கள்' என்கிற சிறு சோழிகளை வாரியெடுத்தான். மனத்தில் மந்திரம் ஓதினான்.

**'மூர்த்தியே பரிகல்பித:**
**சசப்ரதெள வர்த்தமா புனர்சன்மனாம்**
**ஆல்மய்தாத்ம விதாம்...**
**... ... ... ...**
**த்ரைலோக தீ போரவி...'**

மூன்று தடவை உருவிட்டான். நூற்றியெட்டு சோழிகளை மூன்றாகப் பிரித்தான். எட்டு எட்டுச் சோழிகள் வீதம் மாற்றி வைத்து சிஷ்டம் வரவழைத்தான்.

மறுபடியும் மந்திரம் சொன்னான்.

கடைசியில் மெதுவாகத் தெளிவடையத் தொடங்கியது காட்சி. தெளிவற்ற ஓர் உருவம்.

ஒரு பெண்ணுருவம் என்பது மட்டும் புரிகிறது. ஆனால், அது தெளிவாகத் தெரியவில்லை.

''பிரஸ்னத்தில் தெரியவில்லை. நாம் அக்னி நிமித்தம் பார்த்தால் என்ன?'' - நாகவதி, ஹரியின் தவிப்பை உணர்ந்தவளாகக் கேட்டாள்.

''அக்னி நிமித்தமா?'' ஹரி கேட்டான்.

''ஆமாம். அக்னி நிமித்தம்! அதில் தெளிவாகத் தெரியும். நான் அதற்கான சமிதுகள் கொண்டு வருகிறேன். இதோ வந்துவிடுகிறேன்!'' என்றபடி இருளுக்குள் இறங்கி மறைந்தாள் நாகவதி.

# 30

நாகவதியின் யோசனைப்படி அக்னி நிமித்தம் பார்ப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்வதற்காக ஓலைச்சுவடியைப் புரட்டத் தொடங்கி னான் ஹரிகிருஷ்ணன். நாகவதி திரும்பி வருவதற்குள் அதைத் தெரிந்து வைத்துக் கொண்டால், உதவியாக இருக்குமே என்று நினைத்தான் அவன்.

மாலை நேரத்தில் நாகவதி சமிதுகளுடன் வந்தாள்.

இல்லத்தின் கன்னி மூலையில் ஹோமத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை இருவரும் சேர்ந்தே செய்தனர்.

ஹோமம் தொடங்கியது. சமிதுகளில் நெய் ஊற்றினான். மந்திரோச்சாரணங்கள் முழங்கின.

சமிதுகளில் நெருப்பு பற்றியது. நெருப்பு ஜுவாலை கள் உயர்ந்தன. இறுதியாக நெருப்பு ஜுவாலைகளுக்குள் மங்கலாகத் தென்படத் தொடங்கிய உருவங்கள் பின்னர் மெதுவாகத் தெளிவடையத் தொடங்கின.

அதோ... தாண்டவ நடனமாடும் திரிலோக நாதனான சிவன்.

சிவனின் கையில் திரிசூலம்.

சட்டென்று அது அசைவற்றது.

ஆலமரங்களுக்கிடையே இருந்த கோயில் தென் பட்டது; அதற்குள் இருந்தது விக்கிரகம்.

அதை நோக்கி இரண்டு பேர் வருகின்றனர். அவர்கள் கறுப்பசாமியும், காளிச்சரணும் என்பது இருவருக்கும் விளங்கவே செய்தது.

அவர்களுடன் ஒரு பெண்மணியும் இருந்தாள்.

''அவள் சுத்தமில்லாதவள் - அதாவது நல்ல நடவடிக்கைகள் இல்லாதவள்!'' - நாகவதி கூறினாள்.

''அவளை எதற்காகக் கொண்டு போகிறார்கள்?''

''பலி கொடுப்பதற்காக!''

''பலியா?''

''ஆமாம். அவளை பலி கொடுத்தால் கோயில் அசுத்த மடையும். அப்போது அங்குள்ள மூர்த்திக்குச் சக்தி குறையும். அந்தச் சந்தர்ப்பத்தில் சூலத்தைச் சுலபமாக எடுக்கலாம் என்பது அவர்களது நோக்கமாக இருக்கும்!''

''அப்படியானால்...?'' - ஹரி பதைப்புடன் கேட்டான்.

''பயப்படாதீர்கள். நாம் அதைத் தடுக்கவும் ஒரு வழி இருக்கிறது. அவர்கள், அவளை பலி கொடுப்பதற்கு முன்பே நாம் அந்தச் சூலத்தைக் கைப்பற்ற வேண்டும்!''

''இந்த நேரத்தில் அதெப்படி?''

''மண்ணுக்குள் மறைந்த எழிமலைக்காவு பகவதி கோயிலுக்குள் நுழைய வேறொரு வழியும் உள்ளது. அதன் வழியாக நாம் தேவியை நெருங்கினால், அந்த விக்கிரகத்தின் முன் புறம் உள்ள பலிக் கல்லின் கீழே ஓலைச் சுவடி ஒன்று உள்ளது. நாம் அதை எடுக்க வேண்டும்!''

நாகவதி பேசி முடித்ததும் அக்னி நிமித்தத்தில் எழிமலைக்காவு பகவதி கோயில் தெளிவடைந்து தெரிந்தது.

அந்தக் கோயிலுக்குள் இருந்த தேவியின் சிலை ஹரியின் கண்களுக்குத் தட்டுப்பட்டது. மனத்தைக் கவரும் தேவியின் தெய்வீக வடிவத்தை ஹரி கண்ணார தரிசித்தான்.

வெட்டியெடுத்த - ரத்தம் சொரியும் மனிதத் தலை, வாள், அபய - வரத முத்திரைகள் தாங்கிய கைகளும்,

முகத்தில் கோப உணர்வு கொப்பளிக்க, மனிதத் தலைகளான மாலையைக் கழுத்தில் அணிந்தவளாக, அள்ளி முடியாத கூந்தலுடன், இரு புறக் கடைவாயிலும் கோரைப் பற்களுடன் ரத்தம் வடியும் உதடுகளுடன் இரு புறக் காதுகளிலும் சிங்கத்தையும், யானையையும் சுமந்து கறுத்த தேக ஒளியுடன் நின்று கொண்டிருந்த அந்த விக்கிரகம் பயமேற்படுத்தக் கூடியதாக இருந்தது.

அதிபயங்கரமான சக்தி குடிகொண்டிருக்கும் அந்த தேவியின் விக்கிரகம் தகுந்த காரணமில்லாமல் இப்படி மண்ணுக்குள் மறைந்து போகாது என்று ஹரிகிருஷ்ணனுக்குத் தோன்றியது.

கோயிலைப் பார்த்த அந்த விநாடியிலேயே அதை மீட்டு எடுக்க வேண்டும் என்றும், பழையபடி அதைப் புனருத்தாரணம் செய்து நிலை நிறுத்த வேண்டும் என்றும் ஹரி உறுதியாகத் தீர்மானித்தான்.

ஆனால், அதை எப்படி நிறைவேற்றுவது? மனித முயற்சியால் அது சாத்தியமா?

கோயிலின் மீது படிந்துள்ள மேற்புற மண்ணின் அளவு மனிதர்களால் அகற்றக் கூடியதா?

இதை எல்லாம் எடுத்துச் சொன்னால் ஜனங்கள் நம்புவார்களா? ஒருவேளை அதற்கான ஆதாரம் எதையாவது காட்டினால் ஒப்புக் கொள்ளலாம். அதன் பிறகு அவர்கள் எனக்கு இந்த விஷயத்தில் உதவலாம்.

''சரி நான் மேற்கொண்டு செய்ய வேண்டியது என்ன?''

''நமது தேவை அந்த ஓலை. அது தேவியின் முன்புற முள்ள பலிக்கல்லின் அடியில் உள்ளது. அதை முதலில் எடுக்க வேண்டும்!''

''அதில் எனது பங்கு என்ன?''

''சொல்கிறேன். இன்று அமாவாசை; சரியான நாளும்கூட. வாருங்கள் உடனே போகலாம்!'' - நாகவதி கூறினாள்.

நெருப்பு ஜுவாலைக்குள் தெரிந்த உருவங்கள் படிப்படியாக மறைந்தன. அவை முழுவதுமாக மறைந்த பிறகு நாகவதி கூறினாள்: ''ஹோமத்தீயை அணைத்து விட்டுப் புறப்படுவோம். யாராவது இதைப் பார்க்க நேர்ந்தால், நாம் அக்னி நிமித்தம் பார்த்ததைத் தெரிந்து கொள்வார்கள். பிறகு அவர்களும் அதைப் பரிசோதிப் பார்கள்!'' - நாகவதி எச்சரித்தாள்.

அவள் சொன்னவாறு முறைப்படி ஹோம குண்டத்தை அணைத்துவிட்டு ஹரி, நாகவதியுடன் அங்கிருந்து புறப் பட்டான்.

வடகிழக்குத் திசையில் இருவரும் இருட்டில் தங்களது பயணத்தைத் தொடங்கினர்.

ஆகாயத்தில் கண் சிமிட்டிய நட்சத்திரங்களின் அரண்ட வெளிச்சம் அந்தப் பிராந்தியத்தில் பரவியிருந்தது. தெளிவற்றிருந்த அந்த ஒற்றையடிப் பாதையில் இருவரும் நடந்தனர்.

ரப்பர் தோட்டத்துக்கு அவர்கள் நுழைந்தபோது சற்றுத் தொலைவில் பளபளக்கும் ஆலமரத்தின் இளந்தளிர் இலைகளை கவனித்தனர்.

''பார்த்தீர்களா, இந்த அரண்ட வெளிச்சத்தில்கூட அந்த இலைகள் பளபளக்கின்றன!'' நாகவதி சுட்டிக் காட்டியப் பேசினாள்.

''ஆமாம். தேவியின் சக்தி அவ்வளவு மகத்தானது!'' - ஹரிகிருஷ்ணன் அதையே கவனித்தபடி நின்றான்.

''அதோ தெரிகிறதே, அந்த மலையடிவாரத்துக்கு நாம் போக வேண்டும்!''- நாகவதி ஓர் இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டினாள்.

''நீ காட்டிய பகுதி வெட்டி எடுக்கலாம் போன்ற மையிருட்டுப் பகுதியல்லவா? எனக்கு எதுவும் தெரிய வில்லை!''

''பரவாயில்லை. அங்கு போவோம்.''

ஆலந்தளிர்கள் பளபளத்த பகுதிக்கு வந்தவர்கள் அங்கிருந்து கிழக்குத் திசையில் நீங்கினர்.

நடக்கும்போதே இருட்டின் அடர்த்தி அதிகமாவது போல் தோன்றியது அவர்களுக்கு. ஹரியின் கால் ஏதோ ஒன்றில் மோதியது. அவன் வலியால் துடித்தான்.

''உங்களால் சுத்தமாகவே பார்க்க முடிய வில்லையா?'' - நாகவதி கேட்டாள்.

''இல்லை... ஒன்றுமே தெரியவில்லை! இருட்டு கண்ணை மறைக்கிறது!'' - இருட்டில் தட்டுத் தடுமாறியவனாகக் கூறினான் ஹரி.

''அப்படியானால், கொஞ்ச நேரம் அங்கேயே நில்லுங்கள். அதற்கு நான் ஓர் ஏற்பாடு செய்கிறேன்'' என்ற நாகவதி மேலும் சற்றுத் தொலைவு நடந்தாள்.

அவள் திரும்பி வந்தபோது அவள் கையில், கண்ணைப் பறிக்கும் ஒளி சொரியும் ஏதோ ஒரு பொருள் இருப்பதை ஹரி கவனித்தான்.

''என்ன இது... விளக்கு மாதிரித் தெரியவில்லையே?'' - என்றவாறு வியப்புடன் ஹரி கையை நீட்டினான்.

''வேண்டாம். இதைத் தொடாதீர்கள்!'' அவள் சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

''அது என்னவாக இருக்கும்?'' - ஹரி யோசித்தவாறே நடந்தான்.

''நான் உங்களிடம் எதையும் மறைத்து வைக்க விரும்பவில்லை. இது நாகமாணிக்கம்!''

''என்ன நாகமாணிக்கமா?'' - ஹரி சற்று நேரம் அதைப் பார்த்துவிட்டுத் திரும்பியபோது, கண்ணுக்குத் தட்டுப்பட்ட பகுதியிலெல்லாம் அதன் ஒளிபட்டுப் பிரதிபலிப்பதாகத் தோன்றியது.

அந்த ஒளியில் இருவரும் நடந்தனர்.

''இப்போது பாதை தெரிகிறதா ஹரி?''

''நன்றாகத் தெரிகிறது.''

இறுதியாக அவர்கள் மலையின் அடிவாரத்தை அடைந்தனர். அந்தப் பகுதிக்கு வந்தவுடன் நீர்வீழ்ச்சியிலிருந்து அருவி கொட்டுவது போன்ற சத்தம் கேட்டது.

''பக்கத்தில் எங்காவது அருவி இருக்கிறதா என்ன?'' - ஹரி கேட்டான்.

''அருவியை நோக்கித்தான் நாம் போகிறோம்!'' - நாகவதி கூறினாள்.

நடக்க நடக்க அருவியின் இரைச்சல் நெருங்கி வந்தது. மலை உச்சியிலிருந்து நீர்விசையாகப் பாய்ந்து கொண்டிருந்தது.

அதை நெருங்கினர்.

''அருவியை இப்போது நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றபடி நாகமாணிக்கத்தை அருவிக்கு நேராக நீட்டினாள்.

மிகவும் தெளிவாக ஹரிக்குத் தெரிந்தது. அருவி மேற்புறப் பாறையிலிருந்து வழியும் நீர் கீழ்ப்புறம் விழுந்து ஒரு குகை வழியாக மறைந்து கொண்டிருந்தது.

''இந்தத் தண்ணீர் பாய்ந்து செல்வது கோயிலின் வலப்புற வழியாகத்தான்.'' - நாகவதி புன்சிரிப்புடன் கூறினாள்.

''நீ சொல்வதைப் பார்த்தால்...''

''இப்படி ஒரு வழி இருப்பது எவருக்கும் தெரியாது.''

''கோயிலுக்கான வழியா?''

''ஆமாம். தண்ணீர் போகிற வழியிலேயே நாமும் தொடர்ந்தால் கோயிலின் வலப் புறத்தை அடையலாம். அங்கு ஒரு கிணறு உள்ளது. அந்தக் கிணறின் அடிப்பரப்பு தான் இந்தத் தண்ணீர்!''

நாகவதியின் வார்த்தைகள் ஒரு தொடர் படம் போல் அவன் மூளையில் பதிந்தன.

''அப்படியானால் நான் போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா?''

''இந்த நாகமாணிக்கத்தின் ஒளி உங்களுக்கு முன்பாக இருந்து கொண்டே இருக்கும். அதைப் பின்பற்றி நீங்கள் நடந்தால் போதும். புறப்படத் தயாராகுங்கள்!'' நாகவதி ஒரு நிமிடம் நாகமாணிக்கத்தைக் கையால் மூடிக் கொண்டாள்.

திடுமென்று மீண்டும் வெளிச்சம் பரவியபோது நாகமாணிக்கம் அருவித் தண்ணீரிலிருந்து ஒளி சொரிந்து கொண்டிருந்தது.

ஹரி அருவியில் இறங்கினான். மெதுவாக நகர்ந்தான். தண்ணீரில் அவன் நீந்த வேண்டிய தேவையே இருக்க வில்லை. நாகமாணிக்கம் மறைந்தும் தெளிந்தும் அவனுக்கு முன்பாகச் சென்று கொண்டே இருந்தது.

சற்றுத் தூரம் சென்ற பிறகு நாகமாணிக்கத்தின் வெளிச்சம் மறைவதை ஹரி கவனித்தான்.

எங்கும் அந்தகாரம் சூழ்ந்தது.

தண்ணீர் விசையாகப் பாய்ந்து கொண்டிருந்தது.

ஹரி பாசி பிடித்திருந்த வழுவழுத்த பாறை மீது இரண்டு கைகளையும் ஊன்றி, அதைக் கெட்டியாகப் பிடித்தபடி நின்றான்.

தொலைவில் எங்கிருந்தோ திவ்வியமான சத்தம் கேட்டது.

''ஓம்... ஓம்... ஓம்...''

# 31

ஹரிகிருஷ்ணன் ஒரு கையால் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தான்.

எதுவும் தெரியவில்லை. தான் சரியான இருட்டில் நிற்கிறோம் என்பது அப்போதுதான் விளங்கியது. விசையாக நீர் பாயும் சத்தத்துடன் ஆதி ஒலியான ஓங்காரமும் உயர்ந்து கொண்டிருந்தது.

தான் வந்திருப்பது எதிர்பார்த்த இடத்துக்குத்தான் என்பது ஹரிக்குப் புரிந்தது. ஆனால், நாகமாணிக்கத்தின் ஒளி எப்படி மங்கியது.

''நாகவதி... நாகவதி...'' - ஹரி உரத்த குரலில் அழைத்தான்.

சற்று நேரத்துக்குப் பிறகு, ''என்ன ஹரி?'' என்ற நாகவதியின் குரல் கேட்டது.

மீண்டும் அழைத்தான்.

''நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் தயங்காமல் முன்னேறுங்கள்!'' - அவள் குரல் இப்போது தெளிவாகக் கேட்டது. ஹரி ஆறுதலடைந்தான்.

அவன், அவளது உத்தரவின்படி முன்புறமாக நகர்ந்தான். தான் பயணமாவது ஒரு குகை வழி என்பது ஹரிக்குத் தெரிந்தே இருந்தது. குகைக்குள் இடுப்பளவு தண்ணீர் இருந்தது. மேற்புறம் கையை உயர்த்தினால் பாறை தட்டுப்படுகிறது.

தண்ணீரின் ஓட்டம் தன்னை எங்கேயாவது இழுத்துச் செல்லுமோ என்ற பயம் அவனுள் எழுந்தது. இருப்பினும்

அவ்வப்போது எழுந்த நாகவதியின் குரல் அவனுக்கு தைரியம் அளித்தது. ஏறத்தாழ இருபதடி தூரம் சென்ற பிறகு, மேற்புறப் பாறை கைக்கு எட்டாமற் போனது.

சன்னமான வெளிச்சம் எங்கிருந்தோ வருகிறது. மேற்புறம் வட்டவடிவமாகத் தெரிந்தது.

''எட்டிப் பிடித்துக் கொண்டு மேலேறுங்கள்!'' - நாகவதியின் குரல் கேட்டது.

ஹரி, மூச்சைப் பிடித்துக் கொண்டு இரண்டு கைகளையும் உயர்த்தி மேற்புறமாகத் தாவினான். கைகள் இரண்டும் ஏதோ ஒரு பாறையின் மீது படிந்தன. மேற்புறமாக எம்பினான்.

அதோ நாகமாணிக்கம் ஒளி வீசுகிறது. கண்ணைக் கூசச் செய்யும் அதன் ஒளி ஹரியின் தன்னம்பிக்கையை அதிகப் படுத்தியது. பாதை, சரிவாக மேலேறியது. படிக்கட்டுகளாக இல்லாமல் பாறை ஒழுங்கற்று இருந்தது.

மேலேறி வந்தபோது, அது ஒரு குகைக்கோயில் என்று விளங்கியது ஹரிக்கு.

நாகவதி கொண்டு வந்த நாகமாணிக்கம் கோயிலின் விக்கிரகத்துக்கு முன்னால் இருந்த ஏழு திரிகளுள்ள விளக்கின் மேற்புறத்தில் இடம்பெற்று ஒளி சொரிந்தது.

அதன் அருகில் நாகவதி நின்றிருந்தாள்.

பீதியேற்படுத்தும் அந்த விக்கிரகத்தை கண்ணிமைக் காமல் பார்த்த ஹரியின் கைகள் அனிச்சையாக மேலெழும்பி, இணைந்து வணங்கின.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் அந்த விக்கிரகத்தை வடித்த சிற்பியை ஹரி மனதாரப் பாராட்டினான்.

''இது சுயம்பு!'' நாகவதி கூறினாள் - அவன் மனத்திலுள்ளதைத் தெரிந்து கொண்டவளைப் போல்.

''அதெப்படி இருக்க முடியும்?''

''இயற்கையே கொடுத்த வடிவம். அதாவது, சக்தியின் வடிவம்!''

''இந்த எழிமலைக்காவு பகவதியையா சுயம்பு என்கிறாய்?'' - ஹரி வியப்புடன் கேட்டான்.

''ஆமாம்... இதுதான் உண்மையான சுயம்பு விக்கிரகம். ஆனால், பக்தர்கள் பூஜை செய்த தேவி விக்கிரகம் இதற்கு நேர் மேலாக இருக்கிறது.''

''ஓகோ!'' ஹரி மேற்புறமாகக் கண்ணை ஓட்டினான்.

குறிப்பிட்ட வடிவம் இன்றி அங்கிங்காகப் புடைத்தும் தாழ்ந்தும் பாறைகள் பொங்கி வழிந்தது போல் தென் பட்டன. பாறை முனைகள் பனிக்கட்டிகள் போல் கூர்மை யாகக் கீழ் நோக்கி கொட்டப் போவது போல் தொங்கின. ஆனால், அவை உறுதியானவையாக இருந்தன.

''இந்த விக்கிரகத்தை முதன் முறையாகப் பார்க்கும் மனிதர் நீங்கள்தான்!''

''உண்மையாகவா!'' - வியப்படைந்த ஹரி, கண்கள் மலரக் கேட்டான்.

''நாம் இப்போது வந்த வழியைத் தவிர இந்த இடத்துக்கு வர வேறு வழி கிடையாது!''

''அப்படியானால், மேற்புறத்திலுள்ள விக்கிரகத்தை வடித்தது யார்?''

''ஒரு சிற்பிதான்!''

ஹரி சுற்றுமுற்றும் பார்த்தான். ஏறத்தாழப் பதினெட்டு அடி ஆரமுள்ள வட்ட வடிவமான குகைப் பகுதி. உயரம் இரண்டு ஆள் மட்டமிருக்கும்.

விக்கிரகத்துக்கு முன்னால் வலப் புறத்தில் கல்விளக்கு ஒன்று இருந்தது. தேவிக்கு நேர் முன்பாக பலிக்கல்.

தேவி சிலைக்கு முன்பாக - வாடாத, அப்போதுதான் பறித்தது போன்ற புதிய பூக்களைக் கண்டதும் ஹரி வியப்படைந்தான்.

கல்தாமரை மற்றும் செண்பகம்!

''இந்தப் பூக்கள் எப்படி இங்கு வந்தன?'' ஹரி கேட்டான்.

''இங்கு பூஜை செய்பவர்கள் மோகினிகள், கந்தர்வர்கள் மற்றும் பூத கணங்கள்!'' நாகவதி பதிலளித்தாள்.

''ஓம்... ஓம்... ஓம்...'' எங்கிருந்தோ ஒலி ஒரு பின்னணியாக ஒலித்தது.

ஹரி மேகத்தில் மிதப்பது போல் நிலை கொள்ளாமல் தவித்தான்.

சொர்க்சீயமான ஆனந்தம் அவனுக்குச் சுற்றிலும் சூழ்ந்திருப்பதாகத் தோன்றியது. தான் நிற்பது அப்படிப் பட்ட ஓர் இடத்தில் என்பதும், இந்த இடத்துக்கு இது வரை மனிதர்கள் எவரும் வந்ததில்லை என்பதையும் அறிந்த போது, அவன் மனமெல்லாம் மகிழ்ச்சியாலும், தெய்வீக இன்பத்தாலும் நிறைந்தன.

''ஹரி, நாம் அதிக நேரம் இங்கிருப்பது நல்லதல்ல. வந்த நோக்கத்தை மறந்து விடாதீர்கள்...ம்... சீக்கிரம் ஆகட்டும்!'' நாகவதி நினைவூட்டினாள்.

ஹரி பலிக்கல்லைப் பார்த்தான். முன்புறமுள்ள இரண்டடிக்கு இரண்டடியிலான சதுரமான பலிக்கல்லுக்கு அடியில் ஓலைச்சுவடி உள்ளது. அதை எடுக்க வேண்டு மானால், பலிக்கல்லை சற்று நகர்த்த வேண்டும்.

ஹரி நிலைமையை உணர்ந்தவனாக தேவியின் முன்பாக சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினான். ''பலிக்கல்லை நகர்த்த எனக்கு அனுமதி தாருங்கள் தாயே!'' என்று மனமுருகிப் பிரார்த்தித்தான்.

பிறகு எழுந்து பலிக்கல்லைத் தொட்டான். பலிக்கல்லை இழுத்து நகர்த்துவது கூடாது என்பதால், தனது பலம் முழுவதையும் கைக்குக் கொண்டு வந்து தேவியை மனத்தில் நினைத்தபடி ஒரே மூச்சில் பலிக்கல்லை உயர்த்தி, சற்று வலப் புறமாக வைத்தான்.

அதுவரை பலிக்கல் இருந்த இடத்தில், இப்போது வட்ட வடிவமான ஒரு பள்ளம் இருந்தது.

சரியாக அதே நேரம் காளிச்சரண், நாகவதியை நினைத்தார். நாகவதி இங்கிருந்து போய் எவ்வளவு நேரமாகிறது? அவர் கறுப்பசாமியைப் பார்த்துக் கேட்டார்: ''அவனை வழியனுப்பப் போன நாகவதி இன்னும் திரும்பி வரவில்லையே!''

''அவனைப் பற்றி எனக்கு எந்த விதமான கவலையும் இல்லை. ஆனால், அவள் வராமல் இருப்பது வருத்தமாக இருக்கிறது!'' - கறுப்பசாமி தனது கருத்தைத் தெரிவித்தார்.

''அவளைக் கண்டுபிடித்து உடனே இங்கு வரவழைக்க என்ன வழி? வேண்டுமானால், நான் ஒரு நடை போய்விட்டு வரட்டுமா?'' காளிச்சரண், கறுப்பசாமியைப் பார்த்தார்.

''அதற்கு நான் வழி செய்கிறேன்!'' கறுப்பசாமி சற்றுத் தள்ளி அமர்ந்து, அவரையே பார்க்கும் கழுகின் பக்கம் திரும்பினார். கழுகும் உடனே விஷயத்தைப் புரிந்து கொண்டது.

தலையை ஆட்டிவிட்டு உடனே அது பறக்கத் தொடங்கியது.

கழுகு மனையை அடைந்தது. வீட்டுக்குள் பறந்து அங்கெல்லாம் நாகவதியைத் தேடியது. காணவில்லை என்பதை அறிந்ததும் தாமதிக்காமல் சட்டென்று திரும்பி வந்தது.

போன விரைவிலேயே திரும்பிவந்த கழுகின் சிறகடி யோசை கேட்ட கறுப்பசாமி மகிழ்ச்சியடைந்தார்.

கழுகு பறந்து வந்து அவரின் மணிக்கட்டில் அமர்ந்தது.

''போன காரியம் என்ன ஆனது?''

''அந்த இல்லத்தில் ஈ காக்கை கிடையாது!'' கழுகு பதிலளித்தது.

''அப்படியென்றால்...?'' - கறுப்பசாமி சந்தேகத்துடன் காளிச்சரணை பார்த்தார்.

''கண்டுபிடிக்கலாமே!'' - காளிச்சரண் வீட்டுக்குள் போனார்.

''என்ன செய்யப் போகிறீர்கள்?'' - கறுப்பசாமி கேட்டார்.

''இனி அவளை விட்டு வைக்கக் கூடாது; உடனே கண்டுபிடிக்க வேண்டும்!''

''மை போட்டுப் பார்ப்போம்.'' - கறுப்பசாமி ஆலோசனை கூறினார்.

உடனே கறுப்பசாமி ஓலை ஒன்றில் எதையோ கிறுக்கி அதைக் கழுகின் கையில் கொடுத்தார்.

கழுகு ஓலையைச் சுமந்து கொண்டு திரிவிக்கிரமக் குறூப்பின் வீட்டை நோக்கிப் பறந்தது.

அவர் வெளி வராந்தாவில் உட்கார்ந்திருந்தார். நிலை வாசல் அருகே நிலவிளக்கு ஒளி சொரிந்தது. அவருக்கு அருகே சற்றுத் தள்ளி அவர் மனைவி தூணில் சாய்ந்தது வெற்றிலையில் சுண்ணாம்பு தேய்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் கழுகு பறந்து வந்து அவர் காலுக்கு அருகில் அமர்ந்தது. அசிங்கமான அந்த உருவத்தைப் பார்த்த திரிவிக்கிரமக் குறூப்பு சட்டென்று துள்ளியெழுந்தார்.

''கடவுளே... என்ன இது?'' - அவர் மனைவி அலறினாள்.

''பயப்படாதே. இது கறுப்பசாமியின் செல்லப் பறவை. அதன் அலகில் ஓலை ஒன்று இருக்கிறதே... கவனித்தாயா?'' மனைவிக்கு ஆறுதல் கூறினார்.

ஒரு தாவு தாவிய கழுகு, சாய்வு நாற்காலியின் கை மீது அமர்ந்தது. பிறகு அவரை நோக்கிக் கழுத்தை நீட்டியது.

திரிவிக்கிரமன் கழுகின் அலகிலிருந்த ஓலையை எடுத்தார்.

''மகேஸ்வரி, அந்தக் கண்ணாடியை எடும்மா!''

அவள் எழுந்து உள்ளே போனாள்.

ஓலையை அவர் எடுத்ததும் கழுகு அங்கிருந்து உடனே பறந்தது.

கண்ணாடியை மாட்டிக் கொண்டு அவர் ஓலையைப் படித்தார். 'பன்னிரண்டு வயதுள்ள பெண்குழந்தை ஒன்று அவசரமாகத் தேவை!'

''இந்த ராத்திரியில் எங்கு போய் பன்னிரண்டு வயசுப் பெண்ணைத் தேடுவது?'' அவர் எவரிடம் என்றில்லாமல் - தனக்குத்தானே பேசிக் கொண்டார்.

''மந்திரவாதி கேட்கிறாரா?'' அவர் மனைவி, அவரிடம் கேட்டாள்.

''ஆமாம். ஆனால், விஷயம் என்னவென்று குறிப்பிடவில்லை. நம் வேலைக்காரியின் பெண்ணுக்குப் பன்னிரண்டு வயது இருக்கும் இல்லையா?'' மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

எல்லா விவரத்தையும் தெரிந்து வைத்திருந்த மகேஸ்வரி, உடனே வேலைக்காரி லட்சுமியுடன், அவளது வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

சற்று நேரத்துக்குள் அந்தப் பெண்ணை அழைத்து வந்தார்கள். அதற்காகவே காத்திருந்த திரிவிக்கிரமன் சற்றும் தாமதிக்காமல் அவளுடன் இல்லத்தை நோக்கிப் புறப்பட்டார்.

'மை போட்டுப் பார்ப்பதற்குத்தான் பெண்' என்பதை அறிந்தவுடன் ஆறுதல் அடைந்தார்.

காளிச்சரண் அவளின் உள்ளங்கையில் வட்ட வடிவத்தில் மையைத் தேய்த்தார். பிறகு கைவிரல்களை நெற்றியோடு சேர்த்து வைக்குமாறு கூறினார்.

அவள் அப்படியே செய்தாள். அவள் கண்கள் வட்டவமாக உள்ளங்கையிலிருந்த மைப் பரப்பை கவனித்தன.

அதிலிருந்த கறுப்பு நிறம், படிப்படியாக மறைந்து அங்கு ஏதோ வெளிச்சம் பரவியது போல் இருந்தது.

அவள் உற்றுப் பார்த்தாள்.

பார்த்தவள், சற்று நேரத்தில் அலறத் தொடங்கினாள்!

## 32

"என்னம்மா, என்ன தெரிகிறது?" கறுப்பசாமி ஆவலுடன் கேட்டார்.

"நாக்கை நீட்டியபடி ஒரு உருவம். அதன் கையில் வெட்டியெடுத்த ஒரு தலை இருக்கிறது..." அவள் தன் தலையைப் பின்னுக்கு இழுத்தபடி பேசினாள்.

"தலையைத் திருப்பக் கூடாதும்மா. கண்ணைத் திருப்பாமல் அங்கேயே பார். ஏன் பயப்படுகிறாய்? நாங்கள் உன் பக்கத்தில்தானே இருக்கிறோம்?" காளிச்சரண் அந்தப் பெண்ணுக்கு தைரியம் ஊட்டினார்.

இருப்பினும் அவள் பயத்தால் கண்களை மூடியே அமர்ந்திருந்தாள்.

''பாரம்மா. நீ பயப்படுவதற்கு இதில் என்ன இருக்கிறது? நீ நேரில் பார்க்கவில்லையே. மை மூலமாகத் தான் பார்க்கிறாய்? உன் கண்ணுக்கு என்ன தெரிகிறதோ, அதைச் சொல் போதும்!'' கறுப்பசாமி நயமாகக் கூறினார்.

அவள் கண்களைத் திறந்தாள்.

''முன்னால் விளக்கு எரிகிறது!'' அவள் மீண்டும் பார்த்தபடி கூறினாள்.

''விளக்கா தெரிகிறது?'' கறுப்பசாமி கேட்டார்.

''விளக்குதான். ஆனால், திரி எதுவும் அதில் எரியவில்லை. ஆனால், ஏதோ ஒன்று பளபளப்பான வெளிச்சம் கொடுக்கிறது!''

''வேறு என்னவெல்லாம் தெரிகிறது?''

''அதற்கு முன்பாக ஒருவர் நிற்கிறார். அவர் அந்த விளக்கின் நேர் கீழே இருக்கிற கல்லை நகர்த்துகிறார். அதற்கு அடியிலிருந்து எதையோ எடுக்கிறார்!''

''அது என்ன பொருள் என்று கவனமாகப் பார்த்துச் சொல்லம்மா!''

அவள் மைவட்டத்தை உற்றுப் பார்த்தாள். குகைக் கோயிலுக்குள் துர்கா தேவியின் முன்பாக ஹரி நிற்பதைத் தான் அவள் பார்த்தாள். ஆனால், மையில் நாகவதி தெரிய வில்லை. அவளது உண்மை வடிவமான பாம்பு வடிவம் கல்விளக்கின் மிக அருகே இருந்ததால், அந்தப் பகுதி நிழல் படிந்து இருந்தது. எனவே, அந்தப் பெண் குழந்தையால் நாகவதியைக் காண முடியவில்லை!

''அது ஒரு ஜாதகம்!'' பெண் மீண்டும் பார்த்தபடி பேசத் தொடங்கினாள்.

''ஜாதகமா?'' காளிச்சரண் கேட்டார்.

''ஆமாம். பனை ஓலைகளில் எழுதியுள்ள எனது ஜாதகக் குறிப்பு போன்ற ஒன்று!'' அவள் தனது ஜாதகத்தை நினைத்துக் கொண்டு கூறினாள்.

விஷயம் என்னவென்று காளிச்சரணுக்கும் கறுப்பசாமிக்கும் புரிந்தது. ஏதோ ஒரு காளி கோயிலுக்கு முன்னால் உள்ள பலிக்கல்லின் அடியிலிருந்து ஹரி ஓலைச் சுவடி ஒன்றை எடுப்பதாக அவர்களுக்குப் புரிந்தது. ஆனால், அங்கு நாகவதியைக் காணாதது, அவர்களது சந்தேகத்தை அதிகப்படுத்தியது!

'ஒருவேளை, நாகவதி இல்லாமல் ஹரி மட்டும் தனியாகப் போயிருப்பானோ?' காளிச்சரண் யோசனையில் ஆழ்ந்தார்.

''நன்றாகப் பாரம்மா... வேறு யாராவது உடன் இருப் பார்களே... இருக்க வேண்டுமே!'' கறுப்பசாமி உற்சாகப் படுத்தினார்.

''இல்லை, வேறு யாரும் தெரியவில்லை!'' அந்தப் பெண் உறுதியாகக் கூறினாள்.

''சரி, போகட்டும். கவனமாக அதையே பார்த்துக் கொண்டிரு. அந்த ஆள் வேறு என்னவெல்லாம் செய்கிறார்?'' காளிச்சரண் கேட்டார்.

ஹரி ஓலைச் சுவடியைக் கையில் எடுத்து அப்படியும் இப்படியுமாகப் புரட்டிப் பார்த்தான்.

''இந்தா நாகவதி!'' நாகவதியிடம் அதை நீட்டினான் ஹரி.

''அது உங்களிடமே இருக்கட்டும். சரி நாம் சீக்கிரமாகப் புறப்பட வேண்டும்!'' நாகவதி அவசரப் படுத்தினாள்.

ஹரி உடனே ஓலைச்சுவடியுடன் கிணற்றுப் பக்கம் வந்தான். குனிந்து பார்த்தான். நாகவதியின் கையிலிருந்த

நாகமாணிக்கத்தின் ஒளியில் சட்டென்று குதித்தான். தொடர்ந்து நாகவதியும் பாய்ந்தாள்.

தண்ணீரிலிருந்து மேலெழும்பி நாகமாணிக்கத்தை உயர்த்திப் பிடித்தாள்.

ஏறத்தாழ ஒரு மணி நேரம் எதிர்நீச்சல் போட்டவன், பழைய பாதை வழியாக வெளியே வந்தான்.

மேற்புறம் நட்சத்திரங்கள் இப்போது தெளிவாகத் தெரிந்தன.

''நாம் ஒரு பெரிய காரியத்தைச் சாதித்திருக்கிறோம்!'' நாகவதி கூறினாள்.

''இந்த ஓலைச்சுவடியில் என்ன இருக்கிறது நாகவதி?'' ஹரி கேட்டான்.

''எல்லாம் நமக்குத் தேவையானதுதான்!''

அவர்கள் இல்லத்தை அடைந்தபோது சேவல் கூவியது!

''ராத்திரி முழுவதும் கண்மூடவே இல்லை! சரி, இந்தச் சுவடியை எங்கே வைப்பது?'' - ஹரி, நாகவதியிடம் கேட்டான்.

''வழக்கம்போல் உங்கள் அறைக்குள்தான். அதைத் தவிர வேறு எங்கு வைப்பது? நாகவதி அறைவாசலின் மேற்புறம் கையைவிட்டு, சாவி ஒன்றை வெளியில் எடுத்தாள்.

''இந்தச் சாவி இருக்குமிடம் உனக்கு எப்படித் தெரியும்?'' ஹரி கேட்டான்.

''எல்லாம் ஒரு யூகம்தான்!'' நாகவதி சமத்காரமாக பதிலளித்தாள்.

ஹரி கதவைத் திறந்தான்.

''ஹரி இன்னொரு விஷயம். அந்த அறைக்குள் இடப் புறமாக மற்றொரு ரகசிய அறை உள்ளது. சுவடியை அதற்குள் பத்திரமாக வையுங்கள்!''- நாகவதி ஆலோசனை கூறினாள்.

ஹரி கதவைத் திறந்து அதற்குள் நுழைந்தான். அவள் சொன்னவாறு அதற்குள் சிற்றறை ஒன்று இருந்தது. ஓலையை அதற்குள் வைத்துவிட்டு மூடினான். அதை விட்டு வெளியே வந்து அந்த ரகசிய அறையைப் பழையபடி பூட்டினான்.

''சாவியை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!'' - நாகவதி கூறினாள்.

ஹரி தனது படுக்கை அறைக்கு வந்து கட்டில் காலைச் சற்று உயர்த்தி அதை, அதன் கீழே வைத்தான்.

இவ்வளவையும் மை பார்த்த அந்தப் பெண்ணுக்கும் தெரியவே செய்தது. பார்த்ததை எல்லாம் அவள் அவ்வப் போது சொல்லவும் செய்தாள்.

''அப்படியானால், அந்த ஓலைச்சுவடியில் ஏதோ ரகசியம் உள்ளது!'' - காளிச்சரண் கூறினார்.

ஓலைச்சுவடியை அவன் ஓர் அறைக்குள் கொண்டு போனான் என்பதைச் சிறிய பெண்ணும் பார்த்துச் சொன்னாள். ஆனால், அதன் சாவி அவள் கண்களுக்குத் தெரியவில்லை.

''ஏம்மா சாவி ஏதாவது தெரிகிறதா?'' - கறுப்பசாமி கேட்டார்.

''அங்கெல்லாம் ஒரே இருட்டாக இருக்கிறது. வேறு எதுவும் தெளிவாகத் தெரியவில்லை!''

நாகவதி வராந்தாவில் நின்றிருந்தாள். அப்போதுதான் ஹரி படுக்கை அறைக்குள் நுழைந்தான். விளக்கேற்றாமல் இருட்டில் நடந்து போய் அவன் சாவியை மறைத்து வைத்தான். எனவே, அதை அந்தப் பெண்ணால் பார்க்க முடியவில்லை.

''அப்படியானால் ஒன்று செய்யலாம். அவன் அதைத் தனது படுக்கையறையில் வைத்திருக்க வேண்டும். அதைச் சரியாகக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு...?''

''என்ன செய்யலாம்?'' - கறுப்பசாமி கேட்டார்.

''அதை அப்புறம் யோசிக்கலாம்.'' காளிச்சரண் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

மை பார்த்த பெண்ணை பத்திரமாக அவளது வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

''எப்படியாவது நாகவதியை இங்கு வரவழைக்க வேண்டும்!'' - கறுப்பசாமி பல்லைக் கடித்தபடி கூறினார்.

''நானும் அதைப் பற்றித்தான் யோசிக்கிறேன். அவளிடமிருந்து எல்லா ரகசியங்களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு அவளை நெருப்பில் ஹோமிக்க வேண்டும்!'' - காளிச்சரண் முற்றத்துக்கு வந்தார்.

விழுந்து கிடந்த பனை மட்டையிலிருந்து ஓலையின் ஒரு கீற்றை எடுத்து அதில் ஏதோ மந்திரத்தை எழுதி அந்தரத்தில் எறிந்தார் அவர்.

அது ஒரு பறவை மாதிரி வடக்குத் திசையில் பறந்தது. நாகவதி சங்கரமங்கலத்தின் வாசலில் அமர்ந்திருந்தாள். ஹரி நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

அவனது அறைக்கு முன்பாக ஒரு காவல்காரி மாதிரி கண்களை மூடாமல் அவள் நிற்கும்போது ஏதோ ஒன்று முனகியபடி பாய்ந்து வரும் சத்தம் கேட்டது.

நெருப்பில் கனிந்த செப்புத் தகடு ஒன்று அவளை நோக்கிப் பாய்ந்து வந்தது. நாகவதி துள்ளி எழுந்தாள். சட்டென்று வீட்டுக்குள் செல்ல முற்பட்டபோது, அது அவளுக்கு முன்பாக வந்தது.

அவள் உடனே முற்றத்தில் குதித்தாள்.

காளிச்சரண் அனுப்பிய அந்த மந்திராஸ்திரமும் அவளைப் பின்தொடர்ந்தது. நாகவதி தெருவாசற் கதவுப் பக்கம் ஓடினாள். அங்கேயும் அது அவளைப் பின் தொடர்ந்தது.

அவளை யோசிக்க விடாமல் துரத்திய ஓலை, காளிச் சரணது வீட்டின் முன் அவளைக் கொண்டு வந்து நிறுத்தியது.

சட்டென்று சுய உருவான பாம்பு வடிவத்துக்கு மாறிய நாகவதி, ஆற்றங்கரைப் பக்கம் விரைந்து நீருக்குள் அமிழ்ந்தாள்.

உடனே அந்த அஸ்திரம் கழுகின் வடிவம் எடுத்தது. அது ஒரு விதமான ஒலியெழுப்பியபடி நீருக்குள்ளும் பாய்ந்தது. அவளைத் துரத்தியது. அவள் என்னென்ன மோவெல்லாம் செய்து பார்த்தாள். அப்படியும் தப்பிக்க வேறு வழியே புலப்படவில்லை.

கழுகு, நாகவதியை கொத்திக் கொண்டு மேற் புறமாகப் பாய்ந்தது.

காளிச்சரணுக்கு முன்பாக வந்து நின்ற கழுகு, அவளைத் தரையில் விட்டது.

''நாகவதி!'' - காளிச்சரண் அழைத்தார்.

அதற்குள் அவள் மனித வடிவத்துக்கு மாறி விட்டிருந்தாள்.

''அந்த ஓலைச்சுவடி எங்கே?'' - காளிச்சரண் கேட்டார்.

''அறைக்குள் இருக்கிறது!''

''அறையின் சாவி எங்கே?''

''ஹரியிடம் உள்ளது!''

''அந்த ஓலைச்சுவடியை நீ இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்!''

''அது என்னால் முடியாதே!''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. அதை நீ கொண்டு வந்தே தீர வேண்டும். இல்லாவிட்டால், உனக்கு விமோசனமே கிடையாது!'' என்ற காளிச்சரண் வலப் புறமாகக் கையைச் சுட்டிக் காட்டினார்.

அந்தத் திசையில் பார்த்த நாகவதி பயந்து நடுங்கினாள். அவள் உடல் வியர்த்தது.

அங்கு இரும்புக் கூண்டு ஒன்றுக்குள் அசாதாரணமான பருமனுடன் கூடிய கீரியொன்று இருந்தது.

# 33

அசாதாரணமான அந்தக் கீரிப் பிள்ளையைக் கண்டதும் நாகவதி பயந்து நடுங்கினாள்.

பயத்தால் வெளிறிய அவள் முகத்தை கறுப்பசாமி கவனித்தார். ஆனால், அவருக்கு விஷயம் சட்டென்று பிடிபடவில்லை.

''உண்மையைச் சொல்கிறாயா... அல்லது அந்தகனை அவிழ்த்து விடவா?'' - காளிச்சரண் கேட்டார்.

அந்தகன் என்ற பெயருள்ள அந்தக் கீரி, பாம்புகளைக் கண்டால் பாய்ந்து குதறித் துண்டு துண்டாக்கிவிடும் என்பதை நாகவதி அறிந்திருந்தாள். காளிச்சரணது கட்டளை கிடைத்து விட்டால், அது எப்படிப்பட்ட பெரிய பாம்பின் மீதும் பாய்ந்துவிடும். அந்தக் கீரி அதிசயமான சக்திகள் வாய்ந்தது.

அதன் கழுத்தில் கட்டியிருந்த கறுப்புக் கயிற்றில் எத்தனையோ வகையான பாதுகாப்பு மந்திரங்கள் பொறித்த தாயத்துகள் தொங்கிக் கொண்டிருந்தன. எனவே, அந்தக் கீரிப்பிள்ளையிடமிருந்து தப்பிப்பது சுலபத்தில் நடக்காத காரியம். திவ்வியமான சக்திகள் வாய்ந்த தாயத்துகள் அதனிடம் இருப்பதால், அதை எதிர்ப்பதும் நடக்கக் கூடிய காரியமல்ல!

என்ன செய்வது என்ற புரியாதவளாக நாகவதி குழம்பி நின்றாள்.

அந்தச் சூழ்நிலையில் உடனடியாக யாராவது வந்து தன்னைக் காப்பாற்றாவிட்டால், தனது நிலைமை அவ்வளவு தான் என்று புரிந்தது.

'யார் வந்து காப்பாற்றுவார்?' நாகவதி யோசித்தாள்.

உடனே அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் தலையிலிருந்து முடி ஒன்றைப் பறித்து 'காப்பாற்றுங்கள்!' என்ற வேண்டுகோளுடன் வீசியெறிந்தாள்.

அது காற்றில் பறந்தது.

கூட்டுக்குள் அங்குமிங்குமாக உலவிய கீரியின் தவிப்பை வேடிக்கை பார்த்த காளிச்சரணும் கறுப்பசாமியும் அவள் செய்ததை நல்ல வேளையாக கவனிக்கவில்லை.

அந்த முடி சென்று விழுந்த இடம் ஹரிகிருஷ்ணனின் முகம். அவன் அதையெடுத்து இரண்டு விரல்களால் நீட்டிப் பார்த்தான். அந்த முடி ஆங்காங்கு சுருண்டு எழுத்துகளாக மாறியது. கூட்டு எழுத்தில் எழுதியிருந்த வார்த்தையை ஹரி படித்தான்.

'காப்பாற்றுங்கள்!'

ஹரிக்கு விஷயம் புரிந்தது. 'நாகவதி ஆபத்தில் சிக்கியிருக்கிறாள்!'

உடனே தனது தோள் பையை எடுத்து மாட்டிக் கொண்டு, காளிச்சரணது இருப்பிடத்தை நோக்கி நடந்தான். மிகவும் வேகமாக நடந்த ஹரி ஆற்றங்கரையை அடைந்தான்.

அப்போது கிழக்குத் திசையிலிருந்து வெள்ளம் இரைச்சலிட்டுப் பாய்ந்து வரும் சத்தம் கேட்டது. தன்னை ஆபத்துக்கு உள்ளாக்குவதற்காக காளிச்சரண் செய்யும் மந்திர வேலை இது என்பது அவனுக்கு விளங்கியது.

சற்றும் தயங்காமல், உயர்ந்து நிற்கும் பாறை மீது காலை வைத்தான். அதற்குள் வெள்ளமும் பாய்ந்து வந்தது. ஹரி அப்போதும் பதற்றமடையவில்லை.

தனது தோள்பையை இறுகப் பற்றிக் கொண்டு தைரியமாக ஆற்றில் இறங்கினான். ஆற்றில் நீர்மட்டம் அவன் தலைக்கு மேல் இரண்டு ஆள் உயரத்தில் பாய்ந்தது.

திவ்வியமான மந்திர ஓலைச்சுவடி அவனிடம் இருந்ததால், அவனுக்கு எதுவும் நேரவில்லை. மலையி லிருந்து பாய்ந்து வந்த வெள்ளம், அவன் உடலைத் தழுவிக் கொண்டு பாய்ந்தது.

ஆனால், 'ஹரி அந்த வெள்ளத்திலேயே அடித்துக் கொண்டு போகப்பட்டிருப்பான்!' என்று காளிச்சரண் நினைத்தார்.

''என்ன பதிலையே காணோம்?'' - காளிச்சரண் நாகவதியிடம் கேட்டார்.

''நான் அந்த அளவுக்கு என்ன செய்து விட்டேன்?'' - அவள் கீரியைப் பார்த்தபடி கேட்டாள்.

''நீ எதுவும் செய்யவில்லை இல்லையா? பூமிக்குள் இருக்கிற கோயிலிலிருந்து ஓலைச்சுவடியை எடுத்து என்ன செய்தாய்?''

''எந்த ஓலைச்சுவடி... நான் எடுத்தேனா?''

''என்னிடமே உனது வித்தையைக் காட்டுகிறாயா? நான் மை போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தேன் - நீ செய்த மொத்தத்தையும். தேவியின் கையிலிருந்து சுவடியை எடுத்த பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று எனக்குத் தெரிய வேண்டும்!''

''அது எனக்குத் தெரியாது!''

''உன்னையும்தான் மையில் பார்த்தேன். சொல்... அந்தச் சுவடி எங்கே?'' - காளிச்சரண், கீரி கிடக்கும் கூண்டை நெருங்கினார்.

கறுப்பசாமி அப்போதும் எதுவும் புரியாதவராக வேடிக்கை பார்த்தார். அப்போதுதான் காளிச்சரண் சொன்ன

நாகவதியின் பழைய கதை சட்டென்று அவருக்கு ஞாபகம் வந்தது. நாகவதி என்ற பெயர்தான் அவரது நினைவைக் கிளறியது. அதன் பிறகே அந்த ஓலைச்சுவடி எவ்வளவு மதிப்பு வாய்ந்தது என்பதும் விளங்கியது.

'ஓகோ அந்த மகத்தான சுவடிதான் ஹரியிடம் கிடைத்துள்ளதா? அது அவனிடம் இருக்கக் கூடாதே! அது மட்டுமா... தான் அந்தச் சுவடியைக் கைப்பறறவில்லையென்றால், நிச்சயம் காளிச்சரண் கைப்பற்றி விடுவார். அப்படி நடந்து விட்டால் அதன் உதவியால் அவர் தன்னையும் அழிக்க முடியும்!' கறுப்பசாமி தீவிரமாகவும் முன்னெச்சரிக்கையுடனும் யோசித்தார்.

'அதைத் தடுக்க உடனடியாக என்ன செய்வது?' - கறுப்பசாமியின் மூளை மின்னலாகச் செயல்பட்டது.

''நீ சொல்லவில்லை என்றால் இந்தக் கூண்டைத் திறந்து விட வேண்டியிருக்கும்!'' - என்ற காளிச்சரண் கூண்டைத் திறப்பது போல் நடித்தார்.

''கொஞ்சம் பொறுங்கள். அதற்கு வேறு ஒரு வழியும் உள்ளது!'' - என்ற கறுப்பசாமி தன் தோளிலிருந்த கருடனை, தன் இடப்புற மணிக்கட்டுக்குக் கொண்டு வந்தார்.

''இன்னுமென்ன பொறுமை வேண்டிக் கிடக்கிறது? எனக்கு அந்தச் சுவடி உடனடியாக வேண்டும்!'' - காளிச்சரண் திடுமென்று கூண்டைத் திறந்தார்.

உடனேயே கீரி நாகவதியை நோக்கிப் பாய்ந்தது. அதே நேரம் நாகவதி, பாம்பாக மாறினாள்.

கீரி, நாகவதியை நெருங்குவதற்குள் கழுகு பாம்பின் மீது பாய்ந்து அதை ராவிக் கொண்டு பறந்து மறைந்தது.

''எங்கே அந்தக் கழுகு?'' - காளிச்சரண் கோபத்துடன் கேட்டார்.

கழுகு, கெட்டிக்காரத்தனமாக பாம்பைத் தூக்கிச் சென்றதில் காளிச்சரணுக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை.

''அருவருப்பான அந்தக் கழுகைக் கூப்பிடுங்கள். நான் அவளிடமிருந்து உண்மையை வரவழைக்க வேண்டும்!'' - காளிச்சரண் முரண்டு பிடித்தார்.

''நீங்கள் அவரசப்பட்டு விட்டீர்கள்.''

''நான் அவ்சரப்பட்டு விட்டேனோ?''

''கீரியின் முன்னால் அவளைப் பாம்பாக மாற்றினால் கழுகு சும்மா இருக்குமா? அந்தக் கீரி பாம்பைப் பிடித்துத் தின்றுவிட்டால் அது முதலுக்கே மோசமில்லையா? ஓலைச்சுவடி போகட்டும். நாம் முதலில் அந்தச் சூலத்தைக் கைப்பற்ற வேண்டாமா? அதுதானே முக்கியம். அதன் பிறகு ஓலைச்சுவடியைக் கவனிப்போம்!'' - காளிச்சரணது கோபத்தை, கறுப்பசாமி மிக அழகாகத் திசைதிருப்பினார்.

இந்த வார்த்தைகளால் காளிச்சரண் அடங்கி விட வில்லை. கண்ணை மூடியபடி சற்று நேரம் தியானத்தில் ஆழ்ந்தார்.

மூடியுள்ள அவர் கண்களுக்கு முன்பாக இருட்டில் ஹரி தட்டுப்பட்டான்.

ஆற்றைத் தாண்டி வரும் ஹரியின் உடம்பு நனைய வில்லை! அந்தக் காட்சியை அவராலேயே நம்ப முடிய வில்லை. அதிசயமாக இருந்தது. 'இதில் எங்கே தவறு நடந்திருக்கும்?' காளிச்சரண் கண்ணை மூடி மீண்டும் தியானித்தார்.

ஹரி ஆற்றில் இறங்கிய பிறகு என்ன நடந்தது என்பதை ஞானதிருஷ்டியில் அறிய முயன்றார் அவர். அவ்வளவு தண்ணீரிலும் எதுவும் நடக்காதது போல் ஹரி சர்வ சாதாரணமாகப் பாறைகள் மீது நடந்து ஆற்றைக் கடந்தது தெரிந்தது. உண்மையிலேயே இந்தக் காட்சி காளிச்சரணை உலுக்கி விட்டது!

'ஒரு வேளை ஹரி, அந்த அளவுக்கு மந்திர ஸித்திகள் பெற்று விட்டானோ?

இதற்குப் பின்னால் ஏதோ ஆழ்ந்த ரகசியம் இருக்க வேண்டும்!' என்று அவர் மனம் எச்சரித்தது.

காளிச்சரண் கண்களைத் திறந்தபோது அவருக்கு முன்பாக ஹரி நின்றிருந்தான்.

சட்டென்று காளிச்சரணுக்கு ஓர் உத்தி தோன்றியது. அவர் கீரியின் பக்கமாகத் திரும்பினார். அதனிடம் சைகையால் ஏதோ விளக்கினார்.

உடனே கீரி, ஹரியின் மீது பாய்ந்தது.

அவன் விழிகளைப் பறிப்பது கீரியின் நோக்கமாக இருந்தது.

முகத்துக்கு நேராகப் பாய்ந்த கீரியை, ஓர் அணிலைப் பிடிப்பது மாதிரி லாகவமாகப் பிடித்து, அதன் கழுத்திலிருந்த கயிற்றைக் கையில் வாங்கிச் சுழற்றினான்.

கீரியின் கழுத்து கயிற்றால் இறுக்கமடைந்து கொண்டிருந்தது.

''ஐயோ எனது கீரி!'' - என்றபடி காளிச்சரண் அவனை நோக்கி வந்தார்.

''அசையாதீர்கள்! இன்னும் ஓர் அங்குலம் நகர்ந்தால் கூட, இந்தக் கீரியின் நிலைதான் உங்களுக்கும்! ஞாபகம் இருக்கட்டும்!'' - ஹரி, கீரியைத் தரையில் வீசினான்.

தரையில் விழுந்த கீரி ஒரு தடவை கால்களை உதைத்து விட்டுப் பின்னர் அசைவற்றுப் போனது!

சற்றும் எதிர்பார்க்காத ஒரு செயல் ஹரியிடமிருந்து வெளிப்பட்டதும், மாந்திரீகர்கள் இருவரும் வியப்பால் பேச்சு மூச்சற்றுப் போனார்கள்!

தங்களை விட வல்லமை வாய்ந்த ஏதோவொரு சக்தி ஹரிக்குக் கிடைத்திருக்கிறது என்று அந்த இருவருமே பயந்தனர்.

இந்த நிலையில், அவனிடம், அவனது உண்மையான பலம் தெரியாமல் மோதுவது உசிதமல்ல என்றும் நினைத்தனர்.

''நாகவதி எங்கே?'' - ஹரி கேட்டான்.

''அவள் இங்கு இல்லை!'' - காளிச்சரண் பதிலளித்தார்.

''தெரியும். ஆனால், அவள் என்னவானாள் என்று சொல்லாவிட்டால், அதனால் கஷ்டப்படப் போவது நீங்கள்தான்!''

இப்போதைய சூழ்நிலையில் ஹரியை அங்கிருந்து கிளப்புவதுதான் நல்லது. எனவே, சமரசக் குரலில் பேசத் தொடங்கினார்.

''நாகவதியை இங்கு வரவழைத்தது நான்தான். ஆனால், அவளை, கழுகு தூக்கிச் சென்று விட்டது!'' - காளிச்சரண் கூறினார்.

''என்ன, கழுகு தூக்கிச் செல்ல அவள் பாம்பா என்ன?'' - ஹரி கேலிக் குரலில் கேட்டான்.

''உண்மை அதுதான். நாகவதி ஒரு பாம்புதான்!'' - இப்போது கறுப்பசாமி வாய் திறந்தார்.

''உண்மையாகவா?'' - ஹரி வியப்பு நிறைந்த குரலில் கேட்டான்.

''ஆமாம்! அதனால்தான் அவளைக் கழுகு கொத்தியெடுத்துச் சென்று விட்டது. நாங்களும் இப்போது அவளைத்தான் தேடுகிறோம்!'' - கறுப்பசாமி கூறினார்.

''அது உண்மை என்றால், நானே அவளைக் கண்டுபிடிக்கிறேன்!'' ஹரி திரும்பி, வந்த வழியே வேகமாக நடக்கத் தொடங்கினான்.

''ஹரி!'' காளிச்சரண் அழைத்தார்.

# 34

ஹரிகிருஷ்ணன் தடைகளைத் தாண்டி இங்கு வந்தது மட்டுமின்றி, எதுவும் நடக்காதது போல் திரும்பிப் போவதையும் பார்த்த காளிச்சரணுக்கும், கறுப்பசாமிக்கும் சட்டென்று ஒரு சந்தேகம் தோன்றியது.

''அவனிடம் தற்போது அற்புதமான சக்தி ஏதோ ஒன்று இருக்கிறது!'' என்ற காளிச்சரண், கறுப்பசாமியின் முகத்தைப் பார்த்தார்.

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. இல்லையென்றால், அவனால் அந்தக் கீரியைக் கொன்றிருக்க முடியாது!'' கறுப்பசாமி, ஹரி சென்ற பாதையைப் பார்த்தபடி பேசினார்.

கறுப்பசாமியின் கவலை, கழுகைக் காப்பாற்றுவது பற்றியது. நாகவதியைக் கொத்திக் கொண்டு போயிருக்கிற நிலையில், ஹரி கழுகைப் பிடிக்க முயல்வான் என்பதில் அவருக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை!

பிடித்துவிட்டால், கழுகையும் அவன் கொன்று விடுவான்.

கழுகுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், அது கறுப்ப சாமியைப் பொறுத்தவரை அவரின் வலக் கையை வெட்டுவதற்குச் சமம். எனவே, கழுகைக் காப்பாற்றுவது எப்படி என்ற யோசனையுடன் அவர் அங்கிருந்து புறப்பட்டார்.

காளிச்சரண் தனிமையிலானார்.

அவர் மனம் அப்போதும் எப்படியாவது ஆலமரக் கூட்டத்துக்கு மத்தியிலுள்ள சிவன் கோயிலைச் சுற்றிச் சுற்றியே வந்தது. தாண்டவமாடும் நிலையிலுள்ள அந்த விக்கிரகத்தின் கையிலுள்ள சூலத்தை எப்படியும் கைப்பற்ற வேண்டும் என்பது அவரது லட்சியமாக இருந்தது.

தனது மந்திரப் பிரம்பை எடுத்துக் கொண்டு காளிச்சரண் வேகவேகமாக நடந்தார்.

அவர் ஆற்றங்கரையை அடைந்தபோது, அங்கு கறுப்பசாமி தென்படவில்லை. சரி... ஒருவேளை ஆற்றைத் தாண்டி அவரது இருப்பிடத்துக்குப் போயிருப்பார் என்று எண்ணியவராக காளிச்சரண் கிழக்குத் திசையில் நடந்தார்.

தான் தப்பிப்பதற்குக் கடைசியாக உள்ள ஒரே வழி, அந்தச் சூலத்தைச் சொந்தமாக்குவதுதான். வேறு வழியே கிடையாது!

வேகமாக நடந்தவர், விரைவிலேயே ஆலமரக் கூட்டத்தை நெருங்கினார்.

வேர்களுக்கு இடையில் நுழைந்தார். கவனமாக நடந்து கோயிலின் கருவறைக்கு முன்பு வந்து நின்றார். உட்புறம் பார்த்தபோது யாரோ ஏற்றி வைத்தது போல் நிலவிளக்கு ஒன்று அங்கு ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அந்த வெளிச்சத்தில் விக்கிரகத்தின் கையிலிருக்கும் சூலம் தெரிந்தது. அத்துடன் அதன் கழுத்தில் நெளியும் பாம்புகளும் தென்பட்டன.

பாம்புகள் கொத்துமோ என்பதைத் தெரிந்து கொள் வதற்காக, முன்னோட்டமாகத் தனது மந்திரப் பிரம்பை உட்புறமாக நீட்டிப் பார்த்தார்.

சட்டென்று அங்கு நிகழ்ந்தது ஓர் அதிசயம்!

காளிச்சரண் நீட்டிய மந்திரப் பிரம்பில் சட்டென்று பாய்ந்த பாம்பு அதில் தனது உடலை இரண்டுச் சுற்றுச் சுற்றி, விருட்டென்று அவரைக் கோயிலுக்குள் இழுத்தது. அதே நேரம் விக்கிரகத்தின் கையிலிருந்த சூலம் அவரின் நடு நெற்றியில் பாயவும் செய்தது!

காளிச்சரண் யாரோலோ பிடித்து தள்ளப்பட்டது போல் பின் புறமாகத் தெறித்து விழுந்தார். விழுந்த இடம்

வேர்களுக்கு நடுவில். உயிருள்ளதைப் போல அசையத் தொடங்கிய அந்த வேர்கள், அவர் மீது சுற்றி முறுக்கத் தொடங்கின.

காளிச்சரண், உயிர் தப்பிக்கும் வேட்கையில் அங்கிருந்து திமிற எழ முயன்றார். ஆனால், அந்த முயற்சி பலிக்கவில்லை. சற்று நேரத்துக்குள் திமிறிக் கொண்டிருந்த அந்த உடம்பு அசைவற்றுப் போனது!

கழுகு, நாகவதியைக் கொத்தியபடி பறந்து சென்றது, எழிமலைக்காவு பகவதி கோயிலின் நேர்மேலாகத்தான்.

மண்ணுக்குள் மறைந்திருந்த கோயிலின் எல்லையை அடைந்தபோது, கழுகு தடுமாறியது. பறக்க முடியாமல் தவித்தது. அதன் இறக்கைகள் சட்டென்று பறக்கும் சக்தியை இழந்து விட்டவை போல் தள்ளாடின.

வேறு வழியே இல்லாததால் கழுகு, நாகவதியை கீழே போட்டது.

கீழே விழுந்த நாகவதி உடனே மனித வடிவத்துக்கு மாறினாள்.

கழுகு திரும்பிப் பறந்தது.

கறுப்பசாமி தனது இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்த பிறகும் கழுகு வந்து சேரவில்லை.

கழுகு வராததால், கறுப்பசாமியின் கவலை கரை கடந்தது.

இரண்டு தடவைக்கு மேல் அவர் தமது செல்லக் கழுகை 'கருடா!' - என்று அழைத்தார். ஆனால், அதற்கு எந்த விதமான பதிலும் வரவில்லை. சரி திரும்பவும் வெளியேற வேண்டியதுதான் என்று அவர் நினைத்தபோது, கழுகின் சிறகடியோசை கேட்டது.

அவரின் கைத்தண்டில் வந்து அமர்ந்த கழுகைப் பார்த்ததும் அவர் சற்று ஆறுதலடைந்தார். 'நாகவதி எங்கே?' என்று விசாரித்தார். கழுகு தனது அனுபவத்தைக் கூறிய

போது, கறுப்பசாமி திடுக்கிட்டார். ''அது எந்த இடம்?'' என்றார்.

கழுகு அவர் கையிலிருந்து இறங்கி முன்புறமாக நடக்கத் தொடங்கியது.

சற்றுத் தூரம் சென்ற கழுகு ஓரிடத்தில் நின்றது. ''இதோ இந்த இடத்தில்தான்!'' - கழுகு சுட்டிக் காட்டியது.

கறுப்பசாமி அந்த இடத்தைச் சுற்றுமுற்றும் பார்த்தார். அவரின் கண்கள் பளபளத்தன.

அங்கு ஆலிலைத் தளிர்கள் மின்னின.

சந்தேகம் கொண்டவராக அவர் அந்த இடத்தை நெருங்கினார். மண்ணிலிருந்து சற்று உயர்ந்து நிற்கும் சிறிய உச்சிக் கிளையிலிருந்து முதிர்ந்ததும் பழுத்ததுமான தளிர் இலைகளைக் கண்டபோது அவருக்குள் சந்தேகம் உயர்ந்தது.

தனது மந்திரப்பிரம்பால் இலைகளின் அடிப் பகுதியைக் கிளறினார். ஏறத்தாழ அரையடி மண்ணைத் தோண்டிய பிறகும், வேரோ, ஆலமரத்தின் அடிப்பகுதி என்று சொல்வதற்கு உரிய எந்த விதமான அடையாளமோ தென்படவில்லை. கறுப்பசாமியின் சந்தேகம் நேரத்துக்கு நேரம் அதிகரித்தது.

அந்த இடத்துக்குச் சுற்றிலும் நின்றிருந்த ரப்பர் மரங்கள் அவரது பார்வையில் பட்டன. அவை வாடியும், கருகியும், மெலிந்தும் சோகை பீடித்தது போலுமிருந்தன.

மூன்று புறமும் நிலை கொண்டுள்ள மலைகளும், அவரது சிந்தனையைக் கிளறி, எழிமலைக்காவு பகவதி கோயிலின் வடிவத்தை அவர் கண் முன் கொண்டு வந்து நிறுத்தியது.

''இதே இடம்தான்!'' - அவர் தன் கையிலிருந்த பிரம்பைத் தரையில் ஓங்கித் தட்டினார். அதன் பிறகு தளிர் இலையிலிருந்து ஒன்றைக் கையால் கிள்ளினார்.

''வா... போகலாம்.'' - அவர் கழுகிடம் கூறினார்.

திரும்பி நடப்பதற்காக அவர் பிரம்பைத் தரையில் ஊன்றியபோது, பிரம்பு அவரையும் தரைக்குள் இழுப்ப தாகத் தோன்றியது. கறுப்பசாமி சட்டென்று பிரம்பைக் கைவிட்டார்.

சரசரவென்று கண்ணிமைப்பதற்குள் மண்ணுக்குள் இறங்கிய பிரம்பு, சற்று நேரத்துக்குள் மறைந்தது!

கறுப்பசாமியின் இதயம் படபடத்தது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ? அவ்வளவு சீக்கிரம் அங்கிருந்து புறப்படத் தீர்மானித்து, உடனே ஓடத் தொடங்கினார்.

அதன் பிறகு அவர் மூச்சு வாங்குவதற்காக நின்ற இடம் அவரது வீடுதான். வந்தவர் சட்டென்று ஓலை ஒன்றை யெழுதி அதைக் கழுகிடம் கொடுத்து அனுப்பினார். கழுகு நேராகத் திரிவிக்கிரமக்குறூப்பிடம் பறந்து போனது.

'உடனே வரவும்' என்ற குறிப்பைப் பார்த்தவுடன், ஏதோ முக்கியமான காரியமாக இருக்கும் என்று நினைத்த திரிவிக்கிரமன் தனது காரியஸ்தருடன் பறந்து வந்தார்.

''என்ன சேதி?''

கறுப்பசாமி நடந்ததை எல்லாம் விவரித்தார்.

''எது எப்படி இருந்தாலும் சரி, அந்தக் கோயில் மட்டும் வெளியே வரக்கூடாது, ஒரு போதும்! அதற்கு என்ன செய்ய வேண்டுமோ செய்யுங்கள்!'' - திரிவிக்கிரமன் வன்மத்துடன் பேசினார்.

''அந்தக் கோயில் வெளியே வராது. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால், ஹரிகிருஷ்ணன் சும்மா இருக்க மாட்டானே. அதுதான் பெரிய தலைவலி!'' கறுப்பசாமி பதிலளித்தார்.

''அவனால் என்ன செய்ய முடியும் என்று சொல்கிறீர்கள்? பனி படிந்துப் கிடக்கும் பத்து ஏக்கர் நிலம்!

அதுவும் ரப்பர் மரங்கள் வளர்ந்து நிற்கும் பகுதி. யார் என்ன செய்துவிட முடியும்? நீங்கள் சொல்வதன் பொருள் எனக்குப் புரியவில்லை!''

''அது சுலபமில்லைதான். ஒரு துர்நிமித்தத்தினால் தானே கோயில் இப்படி ஆனது. அதே போல் மற்றொரு காரணத்தால்...''

''அது சாத்தியமில்லை... அதெல்லாம் நடக்கும் என்று தோன்றவில்லை. அவனுடன் நாலைந்து சின்னப் பையன்கள் சுற்றுகிறார்கள். அவர்களால் என்ன செய்துவிட முடியும்?''

''நான் சொல்ல வந்தது அந்த அர்த்தத்தில் அல்ல...'' கறுப்பசாமி, திரிவிக்கிரமக் குறுப்பைப் பார்த்தார்.

''ஹரியை எப்படியாவது தொலைத்துக் கட்ட வேண்டும். அது நடந்து விட்டால், நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தால் போதும்!'' திரிவிக்கிரமக் குறுப்பு கூறினார்.

''சரி அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். பெரிய ஹோமம் ஒன்றை நடத்துவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்!'' - கறுப்பசாமி கேட்டுக் கொண்டார்.

''ஹோமம் எத்தனை வேண்டுமானாலும், எவ்வளவு பெரிதாக வேண்டுமானாலும் நடத்துங்கள். அதற்கெல்லாம் தயங்காமல் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கிறேன்.''

''இந்தத் தடவை ஹோமத்துக்கு நான்கு கறுப்புப் பூனைகள் வேண்டும். அதில் ஒன்று ஹரியாக மாறும்!'' கறுப்பசாமி உறுதியளித்தார்.

''புரிந்து விட்டது.'' - திரிவிக்கிரமன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

நான்கு பூனைகளில் ஒன்று ஹோமாக்னியில் வெந்து நீறாகும்போது, ஹரியும் சாம்பலாகி விடுவான். கறுப்பசாமி

சொன்னதன் பொருள் இதுதான் என்பது திரிவிக்கிரமனுக்குப் புரிந்தது.

ஹோமத்துக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருவதற்காக அப்போதே தன் காரியஸ்தரை அனுப்பி வைத்தார் திரிவிக்கிரமக் குறுப்பு.

ஹரிகிருஷ்ணன், நாகவதியுடன் நேராக சங்கரமங்கலம் இல்லத்துக்கு வந்தான்.

''தக்க நேரத்தில் நீங்கள் வரவில்லையென்றால்... நான் இப்போது உயிருடன் இருந்திருக்க மாட்டேன். கீரி என்னைத் தொலைத்துக் கட்டியிருக்கும்!'' நாகவதி கூறினாள்.

''அதனால் நான் நாகவதியை அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது இல்லையா?'' ஹரி, அவள் உடலை வருடியபடி பேசினான்.

''என் மீது உங்களுக்கு வெறுப்பு ஏற்படவில்லையா?''

''வெறுப்பா, எதற்கு?''

''உங்களுக்குப் புரிந்து விட்டது... இல்லையா?''

''எப்போதும் எனக்கு நாகவதியைப் பிடிக்கும். அதில் எந்த விதமான மாற்றமும் கிடையாது!''

''அது போதும்!''

''நாம் இந்த ஓலைச்சுவடியைப் பார்த்து விடலாமா?'' - ஹரிகிருஷ்ணன் பையில் கைவிட்டபடி கேட்டான்.

''கண்டிப்பாக! அதை எடுத்துப் படித்துப் பாருங்கள். அதில்தான் நமது மொத்தப் பேரின் எதிர்காலமும் இருக்கிறது!''

ஹரிகிருஷ்ணன் அந்த ஓலைச்சுவடியின் மேற்புற முள்ள கயிற்றைப் பிரித்தான்!

# 35

மிகவும் அதிகமான பக்தியுடன் ஹரிகிருஷ்ணன் ஓலைச்சுவடியின் மேற்புறப் பலகையைப் புரட்டினான்.

'ஓம்.'

இயற்கையின் உத்பவமான 'ஓம்'காரம்தான் அதில் முதன் முதலில் எழுதப்பட்டிருந்தது.

அதற்குக் கீழே ஓர் இயந்திரம் வரையப்பட்டிருந்தது. 'மகாசுதர்சன இயந்திரம்' என்ற பெயர் அதன் கீழே பொறிக்கப்பட்டிருந்தது.

அப்போதுதான் ஹரிகிருஷக்ணன் முதன் முதலாக மகா சுதர்சன இயந்திரத்தைப் பார்த்தான். ஆனால், சுதர்சன இயந்திரத்தை நிறையத் தடவை பார்த்திருக்கிறான்.

அதற்கு அடுத்ததாக உள்ள சுவடியின் ஐந்து தாள் களிலும், ஹரிக்குப் பழக்கமான இயந்திரங்களே இடம் பெற்றிருந்தன.

ஆறாவது தாளில் எந்த விதமான இயந்திரமும் இருக்கவில்லை. அதற்கு பதிலாக, அந்த இடத்தில் ஏதோ ஒன்று வெடித்துச் சிதறுவது போன்ற ஒரு படம் இருந்தது.

நட்சத்திரங்களும் விண்மீன்களும் விண்வெளியில் வெடித்துச் சிதறும் காட்சிகளை இதற்கு முன்பு அவன் பார்த்திருந்தான். ஆனால், ஓலைச்சுவடி ஒன்றில் இப்படிப் பட்ட காட்சியை இப்போதுதான் முதன் முதலாகப் பார்த்தான்.

''என்ன அது?'' நாகவதி கேட்டாள்.

''ஏதோ ஒன்று வெடித்துச் சிதறுவது மாதிரி...'' ஹரி, அந்தப் படத்திலிருந்து கண்ணை எடுக்காமலே பேசினான்.

''அப்படியானால், நாம் அதை கவனமாகப் பார்க்க வேண்டும்!'' நாகவதி எச்சரித்தாள்.

ஹரி, அந்தப் படத்தின் கீழே எழுதப்பட்டிருந்த சம்ஸ்கிருத எழுத்துகளை பரிசோதித்தான்.

படிக்கப் படிக்க அவன் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தன. ஹரிகிருஷ்ணனின் முகத்தில் ஏற்படும் உணர்ச்சி மாற்றங்களை நாகவதி ஊன்றி கவனித்துக் கொண்டிருந்தாள்.

''நீங்கள் இப்படி ஆச்சரியப்படும் அளவுக்கு அதில் என்ன இருக்கிறது?'' நாகவதி கேட்டாள்.

''நாம் வெகு நாளாக எதிர்பார்த்த பொருள்தான் இது!'' ஹரி பதிலளித்தான்.

''அது என்னவென்று சொல்லுங்கள். தெரிந்து கொள்ள மிகவும் ஆவலாக இருக்கிறேன்!'' என்றவாறு அவனை நெருங்கி உட்கார்ந்த நாகவதி, ஓலையின் குறிப்பிட்ட பகுதியை ஊன்றிப் பார்க்கவும் செய்தாள்.

தேவநாகரி எழுத்துகளின் மீது அவளது பார்வையும் நகர்ந்தது.

அசாதாரணமான ஒரு மந்திர வித்தை பற்றிய குறிப்பு அதில் இருந்தது.

குறிப்பிட்ட அந்தப் பக்கத்தைப் படித்து முடித்த போது, அந்த ஓலைச்சுவடியிலிருந்து நெருப்புத் துணுக்குகள் சிதறி வெளிப்படுவது போல் நாகவதிக்குத் தோன்றியது.

மொத்தம் இருபது ஓலைக்கீற்றுகள் மட்டுமே அந்தச் சுவடியில் இருந்தன.

மூன்று பக்கங்களைப் படித்தவுடன் சந்தேகம் கொண்ட ஹரி, சுவடியின் பின்புறத்தைத் திருப்பிப் பார்த்தான். சட்டென்று அவன் கண்களில் ஏமாற்றம் படிந்தது. காரணம் எழுத்துகள் அழிந்து போயிருந்தன.

''என்ன!'' ஹரி தன்னையும் மீறி ஒரு தடவை உச்சரித்தான்.

''பரவாயில்லை. முன்புறம் இருக்கிற மந்திரங்களை உடனடியாக மனப்பாடம் செய்யுங்கள்!'' நாகவதி ஆலோசனை கூறினாள்.

''மீதமுள்ளதற்கு என்ன செய்வது?'' என்று கேட்ட ஹரி குழப்பத்தில் ஆழ்ந்தான்.

''பயப்படாதீர்கள். அது எனக்குத் தெரியும். கடைசிப் பக்கங்களில் இருப்பது ஹோமத்துக்கான முறைகள். நான் ஏற்கெனவே அதை மனப்பாடம் செய்திருக்கிறேன்!''

அப்போதுதான் அது மிகவும் சக்தி வாய்ந்ததும் முக்கியமானதுமான சுவடி என்று ஹரிக்கு விளங்கியது. ஏனெனில், அந்தச் சுவடியை யாரும் ஒரு தடவைக்கு மேல் படிக்கக் கூடாது என்ற குறிப்பும் அதில் இருந்தது. அது, கண்டிப்பான ஒரு நிபந்தனையாகக் குறிப்பிடப் பட்டிருந்தது.

அந்த மந்திரங்கள் சுவடியில் எழுதியிருப்பது கூட, மந்திர வித்தையைப் பயன்படுத்தித்தான் என்று தெரிந்தது. படிக்கப் படிக்க, படித்த பக்கங்களிலுள்ள எழுத்து மறைந்து கொண்டே வந்தது. அதனால், மந்திரங்களை முதல் தடவை படிக்கும்போதே மனப்பாடம் செய்ய வேண்டியிருந்தது. அதன் பிறகு இருந்தவை அனைத்தும் மந்திரங்கள்தான். அதைச் சரியாகப் புரிந்து கொண்டு மனப்பாடம் செய்ய வில்லையென்றால், பிறகு அவற்றை ஒருபோதும் பயன்படுத்த முடியாது!

ஹரி ஒவ்வொரு ஓலைத் தாளையும் கவனமாகப் படித்து மனப்பாடம் செய்தான்.

அதே நேரத்தில் கறுப்பசாமி, ஹரிகிருஷ்ணனை அபாயத்துக்கு உள்ளாக்குவதற்கான ஹோமம் தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

அக்னி ஜுவாலைகள் கொழுந்து விட்டெரியும் ஹோமகுண்டத்துக்குள் முதல் தடவையாக கொழுத்த ஒரு கரும் பூனையை எறிந்தார்.

கண்மூடித் திறப்பதற்குள் ஒரு வெடிச் சத்தத்துடன் தீக்குள் விழுந்த பூனை எரிந்து மேற்புறமாக உயர்ந்தது.

மந்திரங்களை உச்சரித்தபடியே கறுப்பசாமி இரண்டாவது பூனையையும் ஹோமித்தார். அதன் கதியும் முந்தையது போலவே ஆனது. தான் வெற்றி பெற்று விட்டோம் என்ற நம்பிக்கையுடன் கறுப்பசாமி மூன்றாவது கரும்பூனையையும் ஹோமித்தார்.

அதற்குள் நெருப்பு மிகவும் வலுப்பெற்று உக்கிரமாக எரிந்ததால், அந்தப் பூனையும் வெகு விரைவில் சாம்பலானது!

''மேற்கொண்டு செய்யப் போவதுதான் முக்கியம்!'' கறுப்பசாமி தனக்குத்தானே பேசிக் கொண்டார்.

நாலாவதாகப் போடவிருக்கும் கரும்பூனையை ஹரிகிருஷ்ணுக்காகச் சமர்ப்பித்து, ஹோமிக்கத் திட்ட மிட்டிருந்தார்.

அந்தப் பூனைக்குள் ஹரிகிருஷ்ணனை ஆவாஹம் செய்வதற்கான மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினார். ஆனால், ஆரம்பத்திலேயே எங்கோ ஒரு தவறு நடந்து விட்டதால், தனது கணக்குகள் மாறுவதை கறுப்பசாமி சட்டென்று உணர்ந்தார்.

''பூனைக்குள் ஆவாஹம் செய்யக் கூடிய 'சன்னிவேச' மந்திரத்தை உச்சரித்த பிறகு, கறுப்பசாமி அந்தக் கரும் பூனையை அழைத்தார்.

''ஹரிகிருஷ்ணா... ஹரிகிருஷ்ணா...'

ஆனால், பூனை அவரைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. சந்தேகம் வலுத்த கறுப்பசாமி மீண்டும் மந்திரம் உச்சரிக்க முயன்றார். ஆனால், அவரால் அதைத் தொடர முடியவில்லை!

ஹரிகிருஷ்ணனின் கையில் புனிதமான அந்த ஓலைச்சுவடி இருந்ததுதான் காரணம். அதனால் கறுப்ப சாமியின் மந்திரம் அவனிடம் மட்டும் பலிக்காமல் போனது.

'கடைசி முயற்சி' என்ற மட்டில், அவர் மீண்டும் மந்திரத்தைத் தீவிரமாக உச்சரித்துவிட்டுப் பூனையை எடுத்து ஹோமகுண்டத்துக்குள் எறிந்தார்.

ஆனால், அப்போது நடந்ததோ மற்றொரு சம்பவம். நாலாவது பூனை எதிர்பாராத விதமாக ஹோமகுண்டத்தி லிருந்து வெளிப்புறமாகப் பாய்ந்தது. அந்தப் பூனையின் உடம்பு ரோமங்கள் தீ நாக்குகள் போல் பளபளத்தன. நெருப்பால் படைக்கப்பட்ட ஒரு பூனையைப் போல் அது அக்னி குண்டத்திலிருந்து விசையுடன் வெளியே பாய்ந்தது.

''ஓகோ, அப்படியா சங்கதி!'' என்றவாறு தனது இருக்கையிலிருந்து எழுந்தார் கறுப்பசாமி.

ஹோமகுண்டத்துக்கு அருகில் மண்ணில் குத்தியிறக்கி வைத்திருந்த நீண்ட வாளை கோபத்துடன் உருவியெடுத்தார் கறுப்பசாமி. பின்பு வெளிப்புறமாக ஓடினார்.

ஹரிகிருஷ்ணன் வசிக்கும் வீட்டை நோக்கிச் செல்வது அவரது திட்டம்!

அந்த வீட்டின் தெருவாசல்படியைக் கடந்ததுமே ஹரியையும், நாகவதியையும் அவரால் காண முடிந்தது.

வாளை ஓங்கியபடி அவர்களை நெருங்கினார்.

''ஹரி!'' நாகவதி அழைத்தாள்.

திடுக்கிட்டு விழித்த ஹரி நிமிர்ந்து பார்த்தான்.

தனக்கு முன்பாக வாளை ஓங்கியபடி நிற்கும் கறுப்பசாமி தென்பட்டார்.

ஹரியால் சட்டென்று எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால், நாகவதி கண்ணிமைக்கும் நேரத்துக்குள் பாம்பு வடிவத்துக்கு மாறினாள். தரையிலிருந்து எம்பி உயர்ந்தவள் கறுப்பசாமியின் கழுத்தில் மாலை போல் விழுந்து, அவர் கழுத்தைச் சுற்றிக் கொண்டு நெரிக்கத் தொடங்கினாள்.

ஆனால், அதற்கெல்லாம் சற்றும் பயப்படாத கறுப்பசாமி, தன் இடக் கையால் அந்தப் பாம்பை கழுத்திலிருந்து உருவி வீசி எறிந்தார்.

பின்பு அவசர அவசரமாக, கறுப்பசாமி தன் கையிலிருந்த வாளை ஹரியின் தலையை நோக்கி ஓங்கி இறக்கினார்!

அதிலிருந்து தப்பிக்க வேறு ஒன்றும் செய்யத் தோன்றாத ஹரி, கையிலிருந்த ஓலைச்சுவடியால் வாளைத் தடுத்தான்.

ஓலைச்சுவடியில் பட்ட வாள், இரண்டு துண்டாக உடைந்து தரையில் விழுந்தது. அந்த ஒரு கணத்துக்குள் சுதாரித்து எழுந்த ஹரி, கறுப்பசாமியின் நெஞ்சில் எட்டி உதைத்தான். ஆனால், கறுப்பசாமி லாகவமாக அதிலிருந்து விலகினார்.

அதே நேரம் எங்கிருந்தோ பாய்ந்து வந்த சூலம் ஒன்று விசையுடன் கறுப்புசாமியின் மார்பில் பாய்ந்தது. ஒரு கணம் நிலை தடுமாறிய கறுப்பசாமி, தள்ளாடியபடி சட்டென்று பின்புறமாக மண்ணில் சரிந்தார்.

அந்தச் சூலம் தாண்டவ ரூபத்திலுள்ள சிவனது கையில் இருந்ததுதான் என்பது நாகவதிக்கு விளங்கியது. மெதுவாக ஊர்ந்து வந்தவள், அந்தச் சூலத்தின் மீது தலை வைத்தாள். அத்துடன் நாகவதி மனித வடிவம் பெற்றாள்.

இந்த வடிவ மாற்றம் நிரந்தரமானது என்றும், நிஜமாகவே தான் ஒரு மனிதப் பெண்ணாகி விட்டோம் என்றும் அவளுக்குப் புரிந்தது. தான் இனிமேல் எப்படிப் பட்ட கீரியையோ, கருடனையோ பார்த்துப் பயப்பட வேண்டியது இல்லை என்றும் விளங்கியது.

ஒரு சில நிமிடங்களுக்குள் கறுப்பசாமியின் உடம்பி லிருந்து தானாக விடுபட்டு உயர்ந்த சூலம், அந்த

இல்லத்தைச் சேர்ந்த குளத்துக்குள் மூழ்கிச் சுத்தமடைந்து, அதன்பிறகு விசையாக வந்தவழியே பாய்ந்து சென்றது.

ஹரிகிருஷ்ணன் ஓலைச்சுவடி முழுவதையும் படித்து மனப்பாடம் செய்தான்.

''இனி நாம் நமது ஹோமத்தை ஆரம்பிக்கலாம் இல்லையா?'' ஹரி, நாகவதியிடம் கேட்டான்.

இருவரும் சேர்ந்து ஹோமத்துக்கான ஆயத்தங்கள் செய்தனர்.

ஹோமகுண்டத்தில் சமிதுகளைப் போட்டு, நெருப்பு பற்ற வைத்தனர்.

ஹவிஸுகளைஒவ்வொன்றாக முறைப்படி ஹோமத்தில் போட்டனர். ஹரி, மந்திரங்களை கவனமாக உச்சரிக்கத் தொடங்கினான்.

சட்டென்று அந்தப் பகுதியில் ஏதோ ஒன்று வெடித்துச் சிதறியது. அதைத் தொடர்ந்து வலுவாக மழை பெய்யத் தொடங்கியது.

ஆகாயத்தில் உருண்டு திரண்டு வந்த கருமேகங்கள் மொத்தமாக இடிந்து விழுவது போல், எழிமலைக்காவு கோயில் பகுதி மீது மொத்தமாக இறங்கின. அது மழை வெள்ளமாகப் பெருகி ஓடாமல் நேராக மண்ணுக்குள் இறங்கின.

மின்னலும் இடியும் மிகக் கடுமையாக இருந்தன. அவர்கள் இருந்த இல்லம் மொத்தமும் இடிந்து நொறுங்கி விழுந்து விடுமோ என்று கூட அவர்கள் நினைத்தனர்.

மலை மீது நேரடியாக விழுந்த மழைநீர் மலையின் உட்புறத்துள் ஒன்று சேர்ந்து உயரத் தொடங்கியது. மலை, மழை நீரை முழுவதுமாக உள் வாங்கிக் கொண்டது.

சற்று நேரத்திற்குள் ஒரு 'ஹூம்'காரம் கேட்டது. சுற்றுப்புறத்தை நடுங்க வைத்தபடி மலைக்குள் சென்ற

வெள்ளம், மலையின் மேற்புற மண் முகடுகளை - மண் திட்டுக்களை உடைத்துக் கொண்டு, நான்கு புறமும் பாய்ந் தோடத் தொடங்கியது.

பூமியே பிளந்து கொண்டு உடைபடுவது போன்ற சத்தம் நாற்புறமும் உயர்ந்தது. அதிபயங்கரமான வேகத் துடன் பாய்ந்த வெள்ளம், மலையின் அடிவாரத்திலிருந்த பொருட்களை அடித்து இழுத்துக் கொண்டு போனது.

இந்தக் களேபரம் மொத்தமும் ஒரு சில நிமிடங்களுக்குள் நடந்து முடிந்தன.

**ம**றுநாள் பொழுது விடிந்தது.

ஒரு புது யுகத்தின் பிறவி என்பது போல் எழிமலைக்காவு பகவதி கோயிலை எல்லோரும் பார்த்தனர்.

கோயிலின் தென்கிழக்கு மூலையிலிருந்த பிரமாண்ட மான ஆலமரம், எந்த விதமான சேதாரமுமின்றி நிற்பதையும் மக்கள் கண்டனர். பெரிசுகள் தங்கள் முன்னோர் சொன்ன கதைகளையும், சம்பவங்களையும் நினைவு கூர்ந்து, ஒப்பிட்டு அதெல்லாம் உண்மைதான் என்று மகிழ்ந்தனர்.

ஊர் மொத்தமும் ஒன்றாகத் திரண்டது. இளைஞர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எழிமலைக்காவு கோயில் திரு விழாவைக் கொண்டாடும் தீவிர முயற்சியில் ஈடுபட்ட

கோயில் வெளிப்பட்டது எப்படி என்பது ஊராருக விளங்கவில்லை என்ற போதிலும், அவர்கள் ஹரி கிருஷ்ணனையும், நாகவதியையும் மனமாரப் பாராட்டினர்.

நெடுங்காலமாக மண்ணுக்குள் புதைந்திருந்த எழிமலைக்காவு பகவதி கோயிலுக்கு இப்படியாக ஒரு விடிவு காலம் பிறந்தது!